# மட்டக்களப்பு வரலாறு

## ஒரு அறிமுகம்




**கவிக்கோ வெல்லவூர்க்கோபால்**

# மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்

## திருத்திய மூன்றாம் பதிப்பு

கவிக்கோ வெல்லவூர்க் கோபால்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் |
| ஆசிரியர் | : | கவிக்கோ வெல்லவூர்க் கோபால் (கலாபூஷன் எஸ்.கோபாலசிங்கம்) |
| விபரம் | : | ஆய்வு இலக்கியம் |
| பதிப்பு | : | 1ம் பதிப்பு 2005 - 1000 பிரதிகள்<br>2ம் பதிப்பு 2008 - 500 பிரதிகள்<br>திருத்திய 3ம் பதிப்பு 2011 - 600 பிரதிகள் |
| கணனி வடிவமைப்பு | : | குறிஞ்சாமுனை வே.பிரபாகரன் |
| பக்கங்கள் | : | 216 |
| விலை | : | ரூபா - 350/=<br>வெளிநாடு - $10 |

Manuvetha Publications
143/23,Boundary Road,
Batticaloa (Sri Lanka)
Phone: 065 2222993, 0718938367
0770662239, 0750584427
e'mail: manuvetha@gmail.com
Website: http://vellavoorgopal.weebly.com/
skype :gopal.manuvetha






மட்டக்களப்பு - பண்டாரியாவெளி
அமரர் ஞானமுத்து அலையப்போடி J.P

# நினைவு வெளியீடு



அனுசரணை :

திரு.ஞா.அ.நல்லரெத்தினம்
பாரிஸ், பிரான்ஸ்

## நூல் விநியோகம்

01.உள்ளூர்:
திரு.கண.ஆறுமுகம்
அகரம்
இல.07,ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.
தொ.பே:065 2223639

02. வெளிநாடு:
திரு.ஞா.அ.நல்லரெத்தினம்
Mr.G.A.Nallaratnam
37, rue des prévoyait
93120 la Courneuve
France
Tp no:0033 660038803





## முதலாம் பதிப்பின் அணிந்துரை(2005)

### பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள்
**B.A (Hons) M.A,Ph.D**

மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் என்பது இந் நூலின் பெயர். எழுதியவர் கவிஞர் வெல்லவூர்க் கோபால் என அறியப்பட்ட திரு.கோபாலசிங்கம். இவரது பிறந்த மண் வெல்லாவெளி. மட்டக்களப்பின் புராதன அழகிய கிராமங்களுள் ஒன்று வெல்லாவெளி.

வரலாறு என்பது எழுத்தாவணங்களையும் கல்வெட்டு, புதைபொருள் ஆவணங்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட வேண்டும் என்பதிலிருந்து வரலாறு வாய்மொழி மரபுகளையும் மக்களிடையேயுள்ள பயில் நிலைச் சடங்குகள், வாழ்வு முறைகளையும் கொண்டு எழுதப்பட வேண்டுமென்றும் வரலாறு என்பது மன்னர்களது ஆட்சி, போர்ச்சாதனை என்பனவற்றின் வரலாறு என்பதிலிருந்து அது மக்களின் வாழ்க்கை, முரண்பாடுகள் என்பனவற்றின் வரலாறு என்றும் அடித்தளத்தில் இருந்து எழுதப்படும் வரலாறு அடித்தள மக்களின் வரலாறு, புதிய வரலாறு , வாய்மொழி வரலாறு என்றும் வரலாற்றெழுத்தியல் (Historiography) பற்றி பல்வேறு சிந்தனைப் பள்ளிகள் (School of thoughts) உள்ளன.

வரலாறு என்பது கட்டமைக்கப்படுவது என்ற கருத்தும் உண்டு. கிடைக்கின்ற ஆவணங்களை தம் கொள்கை கோட்பாடு என முக்கியமாக, நலனுக்கு ஏற்ப விளக்கம் தருபவர்களே சரித்திர ஆசிரியர்கள். எனவே சரித்திரம் உண்மை பேசுவதில்லை என்ற கருத்துமுண்டு. இந் நிலையில் வரலாறு அவசியமா ? என்ற வினா எழலும் இயல்பானதே.

அனைத்துக் கற்கைகளும் தேவையானதே. மனிதனை மனித சமூகத்தைத் தெரிந்து கொள்ளவும் ஒருவரையொருவர் புரிந்தும் மதித்தும் அடக்குமுறையற்ற ஒரு உலகில் வாழ மனித குலத்தை இட்டுச் செல்லவும் வரலாறு பயன்படின் அது வரவேற்கத் தக்கது, அவசியமானது.

இப்பின்னணியிலேயே இலங்கை வரலாற்றையும் இலங்கைத் தமிழர் வரலாற்றையும் மற்றும் பிரதேச வரலாறுகளையும் நாம் நோக்க வேண்டும். இலங்கை வரலாறும் ஈழத்தமிழர் வரலாறும் எழுத்தாவணங்களையும் கல்வெட்டு , புதைபொருள் ஆவணங்களையும் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளன. மகாவம்சம் இலங்கை வரலாற்றின் எழுத்தாவணமானால் ஈழத்தமிழர் வரலாற்றின் எழுத்தாவணமாக யாழ்ப்பாண வைபவமாலை கொள்ளப் படும். பிரதேச எழுத்தாவணங்கள் பிரதேச வரலாற்றிற்கு பயன்படுத்தப்படும். இதற்கு உதாரணமாக மட்டக்களப்பு மான்மியம் அமையும்.

மகாவம்சமும் யாழ்ப்பாண வைபவமாலையும் மட்டக்களப்பு மான்மியமும் யாருடைய வரலாறு கூறுகின்றன? என்ற வினாவை எழுப்பின் அவை மன்னர்களையும் அவர்களது ஆட்சியினையும் அவர்கள் புரிந்த போரின் விபரங்களையுமே பெரும்பாலும் கொண்டுள்ளன என்பதே பதிலாக வரும்.

இந்த மன்னர்களின் வெற்றிக்கும் புகழுக்கும் பின்னின்ற மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? எவ்வாறு சமூகமாக இருந்தார்கள் என்பன பற்றிய விபரங்களை இவை தருவதில்லை. இது பற்றிய விபரங்களை கிடைக்கும் ஆவணங்களில் தேடுவதுடன் வெவ்வேறு இடங்களிலும் தேட வேண்டும். மக்களிடமிருந்து வரலாற்று சான்றுகளை திரட்ட வேண்டும். ஆவணம் இல்லையென்ற ஒரே காரணத்திற்காக வாழ்ந்து மடிந்து போன மக்களுக்கு வரலாறு





இல்லையென்று ஆகிவிடுமா? அவர்கள் ஆவணமாக இட்டுச் சென்ற பழைய மரபுக் கதைகள் , நொடிக்கதைகள், வழக்காறுகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், வாழ்க்கை முறைகள், சாதி ஆசாரங்கள் , சமூக அமைப்பு அவற்றிற்கிடையே காணப்படும் ஊடாட்டங்கள் (Interaction) என்பனவற்றிலிருந்து தகவல்களைத் திரட்ட வேண்டும். வரலாறு கட்டமைக்கப் பட்டுள்ளது. அது கட்டுடைத்து பார்க்கப்படவேண்டும். அப்படிப் பார்ப்பின் யாருடைய நலனுக்காக அது கட்டமைக்கப்பட்டது என்பது தெரியவரும். அதன்பின் புதிய பார்வையினும் அனைவருக்கும் பொருந்தும் வகையினும் வழிகாட்டும் வகையினும் வரலாறு மீள் கட்டமைப்புச் செய்யப்பட வேண்டும்.

வரலாற்றியல் சம்பந்தமான இப் பின்னணியில்தான் வெல்லவூர்க் கோபாலின் மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் என்ற நூலை நான் நோக்குகிறேன். மட்டக்களப்பின் வரலாறு பற்றி Monograph of Batticalao தொடக்கம் மட்டக்களப்புத் தமிழகம் ஊடாக மாகோன் வரலாறு , மட்டக்களப்பு குகன் குல வரலாறு, சீர்பாத குல வரலாறு, விசுவகர்மா வரலாறு, மட்டக்களப்பின் பூர்வீக சரித்திரம் எனப் பல வரலாறுகள் வந்து விட்டன. இவை யாவற்றையும் நாம் மன்னர்களின் வரலாறு, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வரலாறு என்ற ஒற்றை வரிக்குள் அடக்கிவிடலாம். பரந்து விரிந்து கிடந்த மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல்வேறு இனக் குழுக்கள் காலத்திற்கு காலம் குடியேறி தத்தமக்குள் ஒன்றாகியும் வேறாகியும் தனித்தும் வாழத் தொடங்கின. இவ் வகையில் மட்டக்களப்பின் வரலாறு என்பது பல்வேறு சாகியத்தாரதும் பல்லின மக்களதும் வரலாறாகவே அமைய முடியும். இப்பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு எவ்வாறு ஒரு சமூகமாக இவர்கள் வாழ்கின்றனர். அதன் சாதகபாதகங்கள் என்ன? என்பதனை ஆராயும் முகமாக வரலாறு அமையின் அது மனித குலத்துக்குப் பயன்தரும் ஆய்வாக அமையும். இவ்வகையில் இதுகாலவரை வந்த மட்டக்களப்பு வரலாறு கூறும் நூல்களில் இருந்து வேறுபட்டு காலத்துக்குக் காலம் குடியேறிய மக்கள் எவ்வாறு அரசமைத்து சமூகமைத்து முரண்பாடுகளை தவிர்த்து மட்டக்களப்புச் சமூகமாக மாறினர் என்பதனை கோடிட்டு காட்டுவதாக வெல்லவூர்க் கோபாலின் மட்டக்களப்பு வரலாறு அமைந்துள்ளமை பெருமைப்படத்தக்கது.

இயக்கர், நாகர், வேடர், வேடவெள்ளாளர், திமிலர், முக்குகர், வேளாளர், அந்தணர் , கரையார், சீர்பாதர், செங்குந்தர், கோயிலார், கம்மாளர்(பொற்கொல்லர்), தனக்காரர், பண்டாரப்பிள்ளைகள், சாணார் (பத்தினாச்சிகுடியினர்), நளவர் (நம்பிகள்), நாவிதர் (மருத்துவக்குடியினர்), கடையர், வண்ணார், பறையர்(வள்ளுவர்), மன்னம்பிட்டி மற்றும் வாகரையில் வாழும் பண்டைய மரபு வழிச் சமூகங்கள் , முஸ்லிம்கள், பறங்கியர், சிங்களவர், குடியேற்றச் சிங்களவர் என மட்டக்களப்புச் சமூகத்தை துல்லியமாகவும் உண்மையாகவும் புலப்படுத்துவதும் அச்சமூகங்கள் தமக்குள் ஒன்றுடனொன்று எவ்வண்ணம் இணைந்தும் பிரிந்தும் எடுத்தும் கொடுத்தும் தத்தம் தனித்துவங்களைப் பேணியும் வாழுந்தனரென்றும் மட்டக்களப்பின் பன்முகத்தன்மையை வெளிக் கொண்டு வருவதுதான் ஏனைய வரலாற்று நூல்களிலிருந்து இந் நூலைப் பிரித்துக் காட்டும் முக்கிய அம்சமாகும்.

எழுத்தாவணங்களை மாத்திரம் கொள்ளாது வாய்மொழிக் கதைகளையும் வழக்காறுகளையும் ஆதாரமாகக் கொண்டு மட்டக்களப்புச் சமூக உருவாக்கத்தை கூற நினைப்பது இந் நூலின் இன்னொரு முக்கிய அம்சமாகும். இந்த வகையில் வாய்மொழி வரலாறு அல்லது புதிய வரலாறு என்ற சிந்தனைப் பள்ளிக்குள் இவர் தம்மை இட்டுச் செல்கிறார். மட்டக்களப்புப் பிரதேசம் இந்தியாவினின்று வெகு தொலைவிலிருப்பதாலும் ஐரோப்பிய நாகரீகத்திற்குள்ளான இலங்கையின் பிரதான பகுதிகளில் இருந்து விலகியிருப் பதாலும் ஆரியமயமாக்கம், மேற்கு மயமாக்கம் என்ற இரண்டு பண்பாட்டுத் தாக்கங்களுக்குப் பெரிதும் உட்படாத பிரதேசமாகவே இருக்கின்றது. ஆரியமயமாகும் முன்னர் ஈழத்தமிழர்கள் இப்படித்தான் வாழ்ந்திருக்க வேண்டும். எனவே புராதன அடையாளங்களை தேடும் தமிழ்பண்பாட்டாளருக்கு அரிய சுரங்கமாக இருப்பது மட்டக்களப்புத்தான். புராதன இலங்கை பண்பாட்டின் எச்சங்களை கூட மட்டக்களப்பின் மிகப் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் காண முடியும்.

அத்தகைய ஒரு சிந்தனைக்கும் அத்தகைய நூல்களை ஆக்க விரும்புவோருக்கும் ஒரு தூண்டுதலைத் தரும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது. அதுவே இந்நூலின் வெற்றியாகும். இந்நூல் இன்னும் விரித்தும் ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் எழுதப்பட





வேண்டிய நூலாகின்றது. இத்தகைய ஒரு பெரு நூலுக்கு இது பிள்ளையார் சுழியாக அமைகின்றது.

இத்தகைய ஒரு நூலை ஆக்க சின்னஞ்சிறு கதைபேசி சமூக கட்டுக்குள் வாழ்பவர்களால் முடியாது. வெல்லவூர்க் கோபாலை அவரது பத்து வயதிலிருந்து நான் அறிவேன். நிறைய வாசிப்பது அவரது இயல்பு. தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் என்ற நூலை 2003 ல் வெளியிட்ட அவர் மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் என்ற நூலை இன்று வெளியிடுகின்றார். இவரது பரந்த சிந்தனையும் மானுடம் தழுவிய பார்வையும் சமத்துவ எண்ணங்களும் எல்லாரும் எல்லாமும் பெற்றுச் சமமாக வாழ வேண்டுமென்ற உயரிய நோக்குமே இத்தகைய நூல்கள் எழுத காரணமாய் அமைந்தன.

நான் அவரது முன்னைய நூல் ஒன்றில் குறிப்பிட்டதைப்போல பேச்சாளனாக ஆரம்பித்து கவிஞனாக அறியப்பட்டு இன்று ஆய்வாளனாகக் கனிந்துள்ளார். முதல் ஆய்வு நூலின் தேடல் அவரது இந்த இரண்டாவது ஆய்வு நூலைத் தந்திருக்கின்றது. இவ்விரு நூல்களுக்கும் தகவல்களைத் தேடி இலங்கையின் பல பாகங்களுக்கும் தமிழகத்தின் பல பாகங்களுக்கும் அவர் அலைந்ததை நான் அறிவேன். நூலகங்களுக்குள் மாத்திரம் தகவல்களைத் தேடாமல் சமூகத்திற்குள்ளும் தகவல்களை தேடும் அவரது பணிகள் மென்மேலும் தொடரவேண்டும். மக்கள் அனைவரையும் உயர் நிலைப்பட்டு சமமாக வாழவைக்க எண்ணும் அவர் எழுத்தின் சிந்தனைகள் மென்மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

-பேராசிரியர் சி.மௌனகுரு-
கிழக்குப் பல்கலைக் கழகம்
மட்டக்களப்பு.
(2005)

முதலாம் பதிப்பிற்கான ஆய்வுக் குறிப்பு(2005)

## மட்டக்களப்பு வரலாறு
## - ஒரு அறிமுகம் -

## ஆய்வுக் குறிப்பு

பேராசிரியர் இரா.சந்திரசேகரன் அவர்கள்

M.Sc, M.A, M.Lit, Ph.D

கடந்த ஐம்பது ஆண்டுகளில் வெளிவந்து கொண்டிருக்கின்ற வரலாற்று ஆவணங்களை நிரல் படுத்துகின்றபோது வரலாறை இனங்காண்பதில் பாரிய மாறுதல்கள் வெளிப்படுவதை அவதானிக்க முடிகிறது. ஆரம்ப காலத்தே எழுதப்பட்ட வரலாறுகள் பொதுவாக மன்னர்களையும் அவர்களது பரம்பரை வாரிசுகளையும் ஆட்சி அதிகாரங்கள் மற்றும் எதிர் நாடுகளில் மேற்கொண்ட படையெடுப்புக்களையும் அதில் புரிந்த வெற்றிச் சாதனைகளையும் காலத்திற்கு காலம் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட கோவில் குளங்களையும் முன்னிலைப் படுத்தியதாகவே அவை அமைந்தன. அதன் பின் அண்மைக்காலமாக இவை சற்று மாறுதல் அடைந்து தொல்லியல் ஆய்வுகள் மற்றும் நில அகழ்வுகள் ஊடான தேடல்கள் வரலாற்றை நிலைப்படுத்தும் முக்கிய சான்றுகளாக மாறின. இன்றைய வரலாற்று பரிணாம படி நிலை வளர்ச்சியானது இன்னும் சற்று விரிவடைந்த நிலையில் இதன் காரண கர்த்தாக்களாக கொள்ளப்படத்தக்க மக்களையும் அவர்கள் பாற்பட்ட சமூகக் கூறுகளையும் அவர்களின் வாழ்வியல் தன்மைகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும் முக்கியப்படுத்தி பதிவு செய்யும் நவீன வரலாற்று போக்கு இன்று இறுக்கமாகி வருகின்றது. மன்னர்களைவிட மக்களே ஒரு நாட்டின் வரலாற்று நாயகர்கள் எனும் இன்றைய வளர்ச்சி நிலை நம்மிலும் பார்க்க மேலை நாடுகளில் இன்னும் சற்று முன்னோக்கிச் செல்வதை அவதானிக்கலாம்.

வெல்லவூர்க் கோபால் அவர்களால் எழுதப்பட்ட மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் என்ற இந்நூல் நவீன





வரலாற்றுக் கோட்பாட்டினையே பெரும்பாலும் சாதகமாக்கி கொண்டுள்ளது.

எழுத்தின் பிறப்பு வாசனை முதலில் வாசகனை மயக்கும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பார்கள். ஆய்வாளர் கோபால் ஈழமும் தமிழகமும் அறிந்து கொண்ட ஒரு சிறந்த கவிஞர் என்பதால் அவரது கவித்துவ மொழியின் தீவிரத்தை இந்நூலில் நிகழ்த்திக்காட்டவும் அவரால் முடிந்திருக்கிறது. அத்தோடு மட்டக்களப்பின் வரலாற்றை வெளிக் கொணரும் தன்மையில் கோபால் ஒரு புதிய உத்தியைக் கையாள்வதும் தெரிகின்றது.

மட்டக்களப்பு பிரதேச வரலாற்றுத் தேடலை தொடர் நிலைப்பட்ட மட்டக்களப்பு பூர்வ சரித்திர ஆவணங்களைக் கொண்டு ஆரம்பிக்கும் தன்மையில் வரலாற்று நிகழ்வுகளோடு தொடர்பட்ட உறுதிப்பாட்டுக்கும் காலக் கணிப்புக்களை அடையாளப்படுத்தும் தன்மைக்கும் அவற்றோடு ஒத்த கால நிகழ்வுகளை இலங்கை நாட்டின் வரலாற்றோடும் பண்டைய நமது தென்னிந்திய வரலாறுகளோடும் இணைத்து பார்த்து எழுகின்ற சந்தேகங்களைக் களைவதில் கோபால் ஒரு சாதனையை நிகழ்த்தி காட்டியிருக்கிறார்.

ஆரியச் சுவடுகள் பதியாத பண்டைய தமிழர்களது சமூகத்தளத்தின் விழுதுகள் நிலமோடி வேர்களாகி நிலையாக நிலைத்துவிட்ட சிறப்பம்சம் மட்டக்களப்பு பிரதேசத்தின் தனித்தன்மை கொண்ட மண்வாசனையாக இருப்பதை கோபால் தெளிவு படுத்தியிருப்பது சமூக ஆய்வாளர்களுக்கு சுவை நிறைந்த விருந்தாகும். குறித்துச் சொல்லின் ஆய்வாளர்களின் சிந்தனைக்குரிய பல அம்சங்களை மட்டக்களப்புச் சமூகங்களும் அவற்றின் விரிவாக்கமும் என்ற அத்தியாயத்தில் கண்டு கொள்ள முடியும். இப் பிரதேசத்தின் நீண்டகால வரலாற்றுக்குரிய மேலாதிக்க சமூகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முற்குகரோடு பண்டைய பிரதான சமூகங்களாகக் கொள்ளப்பட்ட வேளாளர், கரையார், மற்றும் சீர்பாதர் பற்றிய சமூகத் தேடலானது மிகவும் முக்கியத்துவம் பெறுவதாகின்றது. நமது பண்டைய தமிழகத்தே காணப்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட தனிச் சமூகங்கள் இங்கே குடிகள் என்ற கூறுகளாகி இவை ஒன்றோடு ஒன்று பிணைப்புற்று இறுதியில் முக்கிய நான்கு சமூகங்களாக நிலைபெறுவதும் நம் சிந்தனையைத் தூண்டுவதாக அமைகின்றது. அங்கு காணப்படுகின்ற ஏனைய சமூகங்களும் கூட இத் தன்மை வாய்ந்தவையாகவே உள்ளன.

இதனை மென்மேலும் சுவைக்க தமிழ்நாட்டு சமூகவியலாளர்கள் அம்மண்ணில் அழைந்தும் புரண்டும் எழவேண்டும் என்பதே நம் அவாவாக உள்ளது.

தமிழக வரலாறும் பண்பாடும் என்பது ஈழத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் உள்வாங்காமல் என்றுமே முழுமையடையப் போவதில்லை. இதுஒரு நீண்டகாலக் குறையாகவே தொடர்கின்றது. குறிப்பிட்டுச் சொல்லப்போனால் ஈழத்து ஆய்வாளர்கள் தமிழ் நாட்டின் மீது கொண்டுள்ள கரிசனை போல் தமிழக ஆய்வாளர்களும் தங்களது தேடலில் ஈழத்தை ஒரு முக்கிய களமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்நூலைப் படிக்கின்றபோது அதன் உண்மைத் தன்மை புலப்படவே செய்யும்.

சோழராட்சியில் மட்டக்களப்பின் வடபால் மன்னன்பிட்டி எனும் பண்டைய தமிழர் பிரதேசத்தே அதிகார நிலையில் வாழ்ந்தவனும் தமிழகத்தில் திருமுக்கூடல் கல்வெட்டு பெருமைப்படுத்தும் படைத்தலைவனுமான குலசூரியத் தரையன் பற்றிய தகவல்களை இந்நூலில் தேடிப் பதிவாக்கியிருப்பது தமிழ் நாட்டு சோழராட்சி வரலாற்றுக்குள் காத்திரமான மேலதிக தகவல்களைப் பதிவு செய்ய ஏதுவாகின்றது. தமிழக வரலாற்றுக்குள் கொண்டுவரத் தக்க இதுபோன்ற இன்னும் பல அம்சங்களை இந்நூல் பதிவாக்கியுள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

பொதுவாக மட்டக்களப்புப் பிரதேச ஆட்சிமுறை அதுசார்ந்த நிர்வாகக் கட்டமைப்புக்கள் போன்றவற்றை பதிவு செய்யும் தன்மையிலும் அப்பிரதேசத்தே பரந்து வாழுகின்ற மட்டக்களப்பின் பண்டைய சமூகங்களை வரலாறாக்கிப் பார்ப்பதிலும் கோபால் கொண்டுள்ள மிகுந்த அக்கறையானது இன்றும் கூட தமிழகத்தின் சாதியக் குட்டைக்குள் ஊறிக் கிடக்கின்ற நமது ஆய்வாளர் பலருக்கு பெரிய சாட்டை அடியாகும். தமிழ் நாட்டின் பிற்படுத்தப்பட்ட சமூகங்களாகவும் தலித்துக்களாகவும் இங்கு பட்டியலிடப்பட்டுள்ள தமிழ் மண்ணின் உரிமைக் காரர்களான புராதன தமிழர்களை ஈழத்தே குறிப்பாக தனது மட்டக்களப்பு பிரதேசத்தில் கோபால் இனங்காண்பது காய்தல் உவத்தலற்ற அவரது உள்மன வெளிப்பாடாகவே கருதப்படும். சமூகங்கள் பற்றிய தனது தேடல்களை பதிவாக்கிக் கொள்வதில் அவர் கொண்டுள்ள நிலைப்பாடு ஆய்வாளனுக்கும் அப்பால் ஒரு சிந்தனையாளனாக அவரை அடையாளப்படுத்துகின்றது. வரலாற்று ரீதியாக





ஈழநாட்டையும் பலநூறு ஆண்டுகளாக அங்கு வாழும் தமிழர் சமூகங்களையும் தமிழக ஆய்வாளர்கள் இனியேனும் புறந்தள்ள முடியாது.

கி.பி 16ம் நூற்றாண்டு வரை ஒரு நீண்ட காலத்தே ஈழத்தின் பெரும் நிலப்பரப்பை நம் தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்பதுவும் காலத்தின் விளையாட்டால் அவர்கள் ஓரங்கட்டப்பட்ட கொடுமையையும் இந்நூலில் விரிவாகவே விளக்கப்பட்டுள்ளது. கடந்த நூறு ஆண்டுகளுக்குள் தமிழர் தாயகமான மட்டக்களப்பு பிரதேசத்தின் பெரும் நிலப்பகுதி பறிக்கப்பட்டும் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களாலும் பிற காரணங்களாலும் பெரும்பான்மை தமிழினம் சிறுபான்மை இனமாக சிதறடிக்கப்பட்டும் வருவதை மிகத் தெளிவாக இந் நூல் சித்தரிக்கின்றது.

பொதுவாகச் சொல்லப்போனால், ஆய்வாளர் வெல்லவூர்க் கோபால் அவர்களது பத்தாண்டு காலப் பெரு முயற்சியாக வெளிவருகின்ற மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் தமிழ் கூறும் நல்லுலகுக்குக் கிடைத்த சிறந்ததோர் வரலாற்று ஆவணம் என்பதால் அது ஈழத்தோடு நின்று விடாமல் தமிழகத்தின் ஆவணக் காப்பகங்களிலும் இடம்பிடிக்க எமது பண்பாட்டு மையம் உதவும்.

ஒரு சிறந்த கவிஞனாக ஆய்வாளனாக சிந்தனையாளனாக வியாபித்து நிற்கும் நண்பர் கோபால் தனது பணியை மென்மேலும் முன்னெடுக்கத் தமிழ்த்தாய் அருள்புரிவாள்.

**- இரா. சந்திரசேகரன்-**
இந்தியப் பண்பாட்டு மையம்
(2005)

# திருத்திய மூன்றாம் பதிப்பிற்கான என்னுரை

எனது பத்தாண்டுகால தொடர் முயற்சியின் அறுவடையை படையலாக்கி 2005ல் உங்கள் முன் வைத்தபோது அதற்குப் பெருவரவேற்பினை தந்தீர்கள். ஆயிரம் பிரதிகளும் விற்றுத் தீர்ந்துவிட்ட நிலையில் மீண்டும் ஐநூறு பிரதிகளை இரண்டாம் பதிப்பாக எந்தவித மாற்றமுமின்றி வெளியிட்டிருந்தோம். இந்நூல் மூன்று விருதுகளைப் பெற்றுத் தந்தமை ஒரு சாதனையாகக் கருதப்பட்டபோது மேலும் ஒரு சிறப்பாக, சர்வதேசத் தரம்வாய்ந்த நூலாகக் கணிக்கப்பட்டு தனியான இணையத் தளத்தில் பலராலும் படிக்கப்படுகின்ற ஒரு நூலாக இடம்பிடித்துக்கொண்டது. அத்துடன் இலங்கையின் முதல் பத்து இலக்கிய கர்த்தாக்களில் (ஆய்வு,கவிதை) ஒருவராக விக்கிப்பீடியா இணையத்தளத்தில் இடம் பெறும் வாய்ப்பையும் எனக்கு நல்கியது. இதன் முக்கியத்துவம் உணரப்பட்ட நிலையில் தற்போது மேலும் சில தகவல்களை உள்வாங்கிய மூன்றாவது திருத்திய பதிப்பாக இப்படையலை உங்கள்முன் வைக்கின்றோம்.

இதனை மட்டக்களப்பு வரலாற்றின் முழுமைபெற்ற ஆவணமாக இப்போதும் நான் கூறவில்லை. எனினும் அதற்கான அறிமுகமாகக் கொள்ள மிகப் பொருத்தமான காரணங்கள் இங்கே உள்ளதாகவே நான் கருதுகின்றேன். மட்டக்களப்புக்கென ஒரு தெளிவு மிக்க முழுமையான வரலாறு விரைவில் வெளிவரவேண்டுமென்ற ஆதங்கம் இன்னும் அப்படியேயுள்ளது.





தமிழகத்தில் நான் வாழ்ந்த சில ஆண்டுகள் ஒரு பொற்காலமாகவே அமைந்தது. பண்டைய தென் இந்திய வரலாற்றுத் தளத்துள் நமது மட்டக்களப்புப் பிரதேசமும் வேர்கொண்டிருப்பது வெளிப்பட்டபோது நமக்கென ஒரு முழுமையான வரலாற்றுப்பெருமை உண்டென்பதில் நான் நிமிர்ந்து நின்றேன். நம்மோடு தொடர்பு பட்ட தகவல்களுக்காக தமிழ்நாடு, புதுவை, கேரளா, ஒரிசா போன்ற மாநிலங்களின் ஆவணக் காப்பகங்களிலும் நூலகங்களிலும் தேடியும் அங்குள்ள பல வரலாற்றாய்வாளர்கள் மற்றும் கல்விமான்களை நாடியும் சில பல்கலைக் கழகங்களுக்குச் சென்றும் கிடைத்தவற்றைச் சேகரித்ததோடு நமது மட்டக்களப்பு பிரதேசக் கள ஆய்வுத் தகவல்களையும் இணைத்து இதுவரை தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும், மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்,மலையாளநாடும் மட்டக்களப்பும் ஆகிய நூல்களைத் தந்தபோது நம் மண்ணில் ஆர்வமுள்ள பலரும் பாராட்டவும் ஊக்கப்படுத்தவும் செய்தார்கள். ஈழத்தில் மாத்திரமன்றி இந்தியா மற்றும் கடல் கடந்த நாடுகளிலிருந்தும் நமது வரலாற்றை அறிய முற்படுகின்ற நூற்றுக்கணக்கானவர்களின் ஆர்வம் நம்மைப் பிரமிக்கவேசெய்கின்றது.அதன் தொடர்ச்சியாகவே இம்மூன்றாம் பதிப்பினை இன்று வெளியிடுகின்றோம்.

அரை நூற்றாண்டுக்கு முற்பட்டு மட்டக்களப்பின் ஒரு பகுதியாகவிருந்த மன்னம்பிட்டிப் பிரதேசத்தினுடைய சமூகத்தளத்தில் கி.பி 1070 வரை சோழ அரசின் தளபதியாகவிருந்து பின்னர் சோழரைப் போரில் வெற்றிகொண்ட விஜயபாகுவால் அவனது தளபதியாக நியமிக்கப்பட்டு- சிறப்பான ஆட்சிக்கு உறுதுணைபுரிந்தவனும் விஜயபாகுவால் மாத்தளை தென் பிரதேசத்தின்(கம்பஹாசிய பற்று) அம்பனையில் சுமார் 1100 ஏக்கர் நிலக்கொடை வழங்கிக் கௌரவிக்கப்பட்டவனும் தமிழகத்தின் திருமுக்கூடல் கல்வெட்டு சிறப்பிப்பவனுமான குலசூரியத் தரையன் எனும் குலசூரியனுடைய பரம்பரையினர் முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்கியமை வரலாற்றுப் பதிவாகவேயுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் யாதெனில் அக்காலகட்டத்தே குலசூரியனுக்கு நிலக்கொடையாகக் கிடைத்த காணியில் குடியேறிய மன்னம்பிட்டி தமிழ் சமூகத்தினர் காலப்போக்கில் சிங்கள சமூகத்தினராக மாற்றமுற்று இன்று குலசூரிய வம்சய எனும் குலப்பெயரைக் கொண்டிருப்பதுவும் நமது ஆய்வின் வெளிப்பாடாக அமைவதே.1960க்குப் பின்னர் மட்டக்களப்பிலிருந்து

பிரித்தெடுக்கப்பட்டு பொலநறுவையுடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட சுமார் ஆயிரம் ஆண்டுகள் வரலாற்றினையுடைய சோழர்காலத் தமிழ்க் கிராமங்களான மன்னன்பிட்டி, தம்பன்கடவை, சமனன்பிட்டி, முத்துக்கல், சொருவில், திரிகோணமடு, கருப்பளை, கண்டாக்காடு, கல்லூர், பிள்ளையாரடி போன்றவையும் இதே நகர்த்தலுக்குள் உள்வாங்கப்பட்டிருப்பதை நம்மால் இன்று அவதானிக்கமுடியும்.

கி.பி 1800 வரை முக்குகர் வரலாறு குறிப்பிடும் மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர்களாக விளங்கி அவர்களது வாழிடங்கள் வேறு மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டபின்னர் சிங்கள சமூகத்துடன் பிணைப்புற்று அதன்பின் தமிழ்பேசும் சிங்களராகி இன்று சிங்கள மக்களாவே அடையாளப்படுத்தப்படுகின்ற தமிழர்களின் தழும்புகளை கதிர்காமம், கட்டகாமம், முப்பனை (மொனறாகலை), அத்திமலை, தமணை, உகனை, மகாஓயா, புல்லுமலை போன்ற இடங்களில் இன்னும் அவதானிக்கமுடிகின்றது.

நமது முன்னோரின் வரலாறு மிக்க சுவர்சியமானது. இப்பிரதேசத்தினுடைய வேரின் விழுதுகளை ஏனைய பிரதேசங்களில் நாம் கண்டறிய முற்படுதல்போல இங்கு இன்று வேராகிவிட்ட விழுதுகளின் வேர்களையும் நாம் கண்டறிய முற்படவேண்டும்.இதில் பயனுள்ள ஒரு சம்பவத்தினை உங்களுடன் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

2006ல் சென்னை வேளச்சேரிப் பகுதியில் தொடர்மாடி விடுதியொன்றில் நான் தங்கியிருந்தேன்.அதனை ஒரிசாவைச் சேர்ந்த மோகன்சிங் முண்டா என்பவர் நடாத்திக் கொண்டிருந்தார். அவர் முண்டா இனத்தைச் சேர்ந்தவர். முண்டா இனம் பண்டைய கலிங்கத்தின் பழமை மிக்க உயர்ந்த சமூகம் என அவரால் விரிவாக அறிந்து கொள்ளமுடிந்ததும் இதனடிப்படையில் கலிங்கத்தின் ஏனைய ஆதிவாசிகள் தொடர்பில் எனது தேடல் இடம்பெற்றது. அங்குள்ள பதினைந்துவரையான திராவிட மொழிபேசிய பண்டைய உயர் சமூகத்தினரான ஆதிவாசிகளில் முண்டாவுடன் சம்பா, பாலி, பண்டாரி போன்ற சமூகத்தினர் இடம்பெற்றிருப்பது என்னைப் பிரமிக்க வைத்தது. பின்னர் இது ஒரு சமூக ஆய்வினுக்கும் வித்தாக அமைந்தது. இதன்மூலம் மட்டக்களப்புப் பிரதேசத்தின் பல கிராமங்களில் நீண்டகால வழக்கிலிருந்த போடிப் பெயர்களில்





முண்டாப் போடி, சம்பாப் போடி, பாலிப் போடி, பண்டாரிப் போடி போன்ற பெயர்கள் பண்டைய கலிங்க நாட்டுச் சமூகங்களின் பிணைப்பினை வலுப்படுத்துவதைக் காணமுடிந்தது. இதேபோன்ற தன்மையினை பண்டைத் தமிழகத்தோடும்(தமிழ் நாடு, கேரளம்) நம்மால் இணைத்துப்பார்க்க முடிகின்றது.

நமது வரலாற்றுத் தேடல்களை இந்த நாட்டோடு மட்டும் மட்டுப்படுத்தமுடியாது. இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நமது வரலாற்றுத் தகவல்கள் தேங்கியேயுள்ளன. வெளிநாடுகளில் வாழும் நம் மண்ணின் ஆர்வலர்கள் இப்புனித கைங்கரியத்தில் தங்களது முழு ஒத்துழைப்பினையும் நல்கவேண்டும். கோவா (இந்தியா) ஆவணக் காப்பகம், பிரித்தானியாவின் லண்டன் ஆவணக் காப்பகம் மற்றும் அங்குள்ள பிரதான நூலகங்கள், போர்த்துக்கல்லின் லிஸ்பன் ஆவணக் காப்பகம் மற்றும் பிரதான நூலகங்கள், நெதர்லாந்தின் ஹேக்கிலுள்ள ஆவணக் காப்பகம் மற்றும் பிரதான நூலகங்களிலுள்ள மட்டக்களப்புப் பற்றிய வரலாற்றுத் தகவல்களை முழுமையாகச் சேகரித்து உதவ அவர்கள் முன்வரவேண்டும்.

நம்மால் முடிந்தவரை நாம் ஒன்றிணைந்து இதற்காக உழைத்தலே நமது தலையாய கடமையாகும்.இந்த நம்பிக்கை வீணாகிவிட்டால் மேலும் பாரிய இடைவெளியை நாம் சந்திக்க நேரலாம்.அதற்காக இப்பிரதேசத்தின் வரலாற்றுத் துறையின் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், கல்விமான்கள், மாணவர்கள் அனைவருடனும் கைகோர்க்கவே நான் ஆசைப்படுகின்றேன்.

மிக்க நன்றி
என்றும் அன்பான
**- வெல்லவூர்க் கோபால் -**

Manuvetha Publications
143/23,Boundary Road,
Batticaloa (Sri Lanka)
Phone: 065 2222993, 0718938367
0770662239, 0750584427
e'mail: manuvetha@gmail.com
Website: http://vellavoorgopal.weebly.com/
skype :gopal.manuvetha

# நன்றி..

**மூன்றாம் பதிப்பின் அனுசரணையாளர் பிரான்ஸ்,**
**பாரிசில் வசிக்கும் - மட்டக்களப்பின் மைந்தன்**
**திரு.ஞா.அ.நல்லரெத்தினம் அவர்கள்**

**முன்னீடுகாரராய் முழு ஒத்துழைப்பு நல்கிய**
**இனிய நண்பர் முன்னாள் மக்கள் வங்கி**
**முகாமையாளர்**
**விபுலம் கண.ஆறுமுகம் அவர்கள்**

**என்னைத் தொடர்ந்தும்**
**ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கும்**
**கிழக்குப் பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி**
**பேராசிரியர் மா.செல்வராஜா அவர்கள்**

**கணனி வடிவமைப்பில் என்றும் உறுதுணை**
**புரியும் தம்பி குறிஞ்சாமுனை**
**வேலாப்போடி - பிரபாகரன் அவர்கள்**

**எனது அன்புக்குப் பாத்திரமான**
**என் குடும்பத்தினர்**

**...**





# உள்ளடக்கம்


அணிந்துரை - 05

ஆய்வுக் குறிப்பு - 10

என்னுரை - 14

அத்தியாயம் 01. நுழைவாயில் - 23

அத்தியாயம் 02.ஈழமும் அதன் மொழி வழிப்பாரம்பரியமும் - 27

அத்தியாயம் 03. மட்டக்களப்பின் எல்லைகளும் நில அமைவும் 36
01: எல்லைகள்
02: நில அமைவு
03: மட்டக்களப்பு

அத்தியாயம் 04. மட்டக்களப்பின் பூர்வீக குடிகளும் குடியேற்றங்களும் - 40
01: இயக்கர் - நாகர்
02: திமிலர்
03: கலிங்கக் குடியேற்றம்
04: சேர நாட்டுக் குடியேற்றம்
05: வன்னியர் (படையாட்சியர்) குடியேற்றம்
06: மண்முனைக் குடியேற்றம்
07: சீர்பாதர் குடியேற்றம்
08: சோழராட்சிக் குடியேற்றங்கள்
09: மாகோன் ஆட்சிக் குடியேற்றங்கள்

10: பட்டாணியர்
11: முஸ்லிம்களின் குடியேற்றம்
12: பறங்கியர் குடியேற்றம்

அத்தியாயம் 05. மட்டக்களப்பின் பிரதேச
-ஆட்சியாளர்களும் செயற்பாடுகளும் - 57
01: மட்டக்களப்பின் வரலாற்று
- ஆவணங்கள்
02: பண்டைய ஆட்சிப்பிரிவுகள்
03: ஆட்சியாளர்கள்
01: இராவணன் காலம்
02: கலிங்க அரசர்கள்
03: உலக நாச்சி
04: கி.பி 5ம் நூற்றாண்டு முதல் கி.பி 9ம்
- நூற்றாண்டு வரை
05: சோழப் பேரசும் மட்டக்களப்பும்
06: பொலநறுவை ஆட்சி
07: கலிங்க மாகோன் காலம்
08: பாண்டியப் படையெடுப்புக்கள்
09: கண்டி அரசு
10: போர்த்துக்கேயத் தொடர்புகளும்
- மட்டக்களப்புப் போடிகளும்
11: முற்குக தேச வழமைச் சட்டம்
12: போர்த்துக்கேயர் ஏற்படுத்திய
- மாற்றங்கள்
13: ஒல்லாந்தர் காலமும் மட்டக்களப்புப்
- போடிகளும்
14: மட்டக்களப்புப் பிரதேச ஊர்ப்போடிகள்
15: ஒல்லாந்தரின் பணிகள்
16: ஆங்கிலேயர் ஆட்சியும் மட்டக்களப்புப்
- போடிகளும்





17: ஆங்கிலேயர் ஏற்படுத்திய நிருவாக
- மாற்றம்
18: சுதந்திரத்தின் பின் மட்டக்களப்பு

அத்தியாயம் 06. மட்டக்களப்புச் சமூகங்களும்
அவற்றின் விரிவாக்கமும் - 127
01: பண்டைய சமூக நிலை
02: குக மரபுத் தோற்றம்
03: சமூகப்பிரிவுகளின் உருவாக்கம்
1: இயக்கர்
2: நாகர்
3: வேடர்
4: வேட வேளாளர்
5: திமிலர்
6: முக்குகர்
கலிங்கக்குடி(காலிங்கா குடி)
உலகநாச்சி குடி
படையாட்சி குடி
பணிக்கர் குடி
மழவர் குடி
கச்சிலார் குடி
மாதவி குடி
பெத்தான் குடி
கோபி குடி(கோப்பி குடி)
வல்லவராஜன் குடி
தனஞ்செயன்குடி
செட்டிகுடி (சட்டிகுடி)
சிங்களக் குடி
ஏனைய குடிகளும்
- வயிற்றுவாரும்

07. வேளார்
08. அந்தணர்
09. கரையார்
10: சீர்பாதர்
11. செங்குந்தர்
12. கோவிலார்
13. பொற் கொல்லர்(கம்மாளர்)
14. தனக்காரர்
15. ஏனைய பிரதான சமூகங்கள்
அ : பண்டாரப்பிள்ளைகள்
ஆ : சாணார் (பத்தினாச்சி குடியினர்)
இ : நளவர் (நம்பிகள்)
ஈ : நாவிதர் (மருத்துவக் குடியினர்)
உ : கடையர்
ஊ : வண்ணார்
எ : பறையர் (வள்ளுவர்)

அத்தியாயம் 07. மட்டக்களப்புச் சமூக அமைப்பிலிருந்து மாறுபடும் பண்டைய மரபு வழிச் சமூகங்கள் - 184
01. மன்னன்பிட்டிப் பிரதேசம்
02. வாகரைப் பிரதேசம்

அத்தியாயம் 08. மட்டக்களப்பின் மதவழிச் சமூகங்கள் - 194
01. முஸ்லிம்கள்
02. பறங்கியர்

அத்தியாயம் 09. சிங்களவர்கள் - 203
01 மரபுவழிச் சிங்களவர்
02. குடியேற்றச் சிங்களவர்





# நுழைவாயில்

வரலாறு என்பது சமுதாயத்தைப் பற்றியது. நாட்டையும் நாட்டவரையும் குறித்துக்கூறுவது. மானிடத்துக்கும் கால உறவுக்கும் உள்ள தொடர்பினைப் பதிவாக்குவது. பதிவுகளில் தவறு ஏற்படின் வரலாறும் தவறான வழிகாட்டியாகிவிடும். வரலாறு எழுதப்படுவதற்கென்று கொள்கைகளும் கோட்பாடுகளும் உள்ளன. அதற்கு மாறாக அதனை அமைக்க முற்பட்டாலோ அன்றேல் தவறான அர்த்தத்தில் பயன்படுத்தினாலோ வரலாறு திசை மாறிச் செல்வதோடு சமுதாயத்தில் பாரிய எதிர்மறைவான விளைவுகளையும் தோற்றுவித்துவிடும். பாரம்பரிய வியப்பூட்டும் தன்மை மிக்க வரலாற்றுத் தோற்றப்பாட்டின் தவறுகளை உணர்ந்திருந்தும் அதனால் பெறப்பட்ட முழுமையற்ற வரலாற்று முடிவுகளை நன்றாகத் தெரிந்திருந்தும் தெரிந்தவற்றை திசை திருப்ப முனைவதற்கென்றே சில புத்திஜீவிகள் தங்கள் உயர் கல்வித் தகைமையை சாதகமாக்கி புதிய வரலாற்றுப் பாதைக்குள் இன்னும் குறுக்கிடச் செய்கின்றனர். எனவேதான் தவறானதும் ஏமாற்றம் தரக்கூடியதுமான பழைய வரலாற்றுச் சட்டக்கூடு மேலும் தொடர வாய்ப்பாகின்றது.

தமிழக வரலாறு உட்பட பண்டைய இந்திய வரலாறுகள் அணுகு முறைகளில் நீண்ட காலமாகத் தடம் புரண்டு கிடந்ததைப் போல இலங்கையில் எழுதப்பட்ட வரலாறுகளும் அண்மைக்காலம் வரை பௌத்த சிங்களக் கோட்பாட்டுக் கொள்கைக்குள் கட்டுண்டு போனமையால் பல வரலாற்று உண்மைகள் திரிபுபட்டும் இருண்ட திரையால் மறைபட்டும் போயின.

மகாவம்சம், தீப வம்சம், சூள வம்சம், பூஜாவலிய, ராஜா வலிய, ராஜதரங்கனி போன்ற கதை சொல்லும் பாணியில் அமைந்த விருப்பு வெறுப்பின் சார்பினைச் சற்றும் தயங்காமல் இன உணர்வின் வெளிப்பாடாக்கிய நூல்களை முழுமைபெற்ற இலங்கையின் சரித்திர நூல்களாகக் கொண்டு பெருமைப்படுகின்ற வரலாற்று மயக்கம் முற்றாக மாறிவிட்டது என்று சொல்வதற்கில்லை. பொதுவாக தெளிவற்ற தன்மையைக் கொண்டிருந்த இலங்கையின் வரலாறு தேவநம்பிய தீசன் காலத்தின் பின் ஓரளவு முறைப்படுத்தப்படுவதாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர்.

கி.மு. 3ம் நூற்றாண்டின் பிற்பகுதியாக மகாவம்சம் குறிப்பிடும் தேவநம்பியதீசனின் ஆட்சிக் காலத்தில் நீண்ட காலமாக வழிபாட்டிலிருந்த மகேச ஆலயம் (சிவாலயம்) இடிக்கப்பட்டு அங்கே தூபராமசேத்தியம் (விகாரை) அமைக்கப்பட்டதை மகாவம்சமே ஒப்புக் கொள்கின்றது. போதிமர நடுகையின்போது தமிழ்ச் சிற்றரசர்களும் பங்கெடுத்துக் கொண்டதை குறிப்பிடும் அது ஈழத்தே பல பகுதிகளிலும் தமிழராட்சி நிலை நிறுத்தப்பட்டிருப்பதை வரலாறு உணரவும் வழிவிடுகின்றது. வடக்கு மட்டுமின்றி கிழக்கிலும் தெற்கிலும் (கதிர்காமம்) தமிழராட்சி இருந்ததை மகாவம்சம் உணர்த்தும். இவர்கள் கதிர்காம சத்திரியர்கள் என அழைக்கப்பட்டனர். துட்டகாமினியின் தாயான விகாரமகாதேவியும் கல்யாணிதீசன் எனும் ஒரு தமிழ் மன்னனின் மகளே என்பதுவும் தகவல்களாகவுள்ளன. எல்லாளன் (கி.மு. 145-101 ) என்ற தமிழ்ப் பேரரசனின் நீதி தவறாத ஆட்சியை மகாவம்சம் புகழ்ந்துரைப்பதைப் பார்க்கும்போது ஈழத்தில் எந்த ஒரு மன்னனையும் அது இப்படி விபரித்ததை அறிய முடியவில்லை. எனினும் முடிவாக பொய்யான நம்பிக்கையைக் கொண்ட ஒரு பைசாச மதத்தை (இந்துமதம்) நம்பும் இவனிடம் சிறப்பான ஆட்சியை எதிர்பார்க்க முடியாது என அது தனது வரலாற்று புரட்டுத் தன்மையை எடுத்த எடுப்பிலேயே முன்வைக்கின்றது.

இந்நூல்கள் எழுதப்பட்டகாலம் சிங்கள மொழி முழுமைபெறாத காலமாகும். தென்னிந்திய நாடுகளில் அசோகரின் சாத்வீக வழியில் வேர்விட்டுத் தழைத்த பௌத்தம் கிளைபரப்ப முடியாமல் கலிங்கம், தெலிங்கம், கன்னடம், சோழம், பாண்டி, சேரம்(ஒரிசா , ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா) போன்ற நாடுகளின் பண்டைய சிவவழிபாடு வீர சைவம் என்ற வேகம்





கொண்ட வெள்ளமாகப் பெருக்கெடுத்தபோது நிலை குலைந்து சரியத் தொடங்கியது. பௌத்தத்தை முதன்மையாக ஏற்ற கலிங்கமே அதனைத் தன்னிடமிருந்து விடுவிக்க முற்பட்டதும் அதன் உடனடித் தாக்கம் கலிங்கத் தொடர்பில் கட்டுண்ட ஈழத்திலும் பிரதிபலித்தது. கி.பி. 13ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கலிங்க மாகோன் இலங்கைக்கு வந்தபோது அது இன்னும் சூடுபிடிக்கலாயிற்று. வீர சைவத்தின் பாதுகாவலனாக அவன் தன்னை முழுமையாக வெளிக்காட்டியமை மறுபுறத்தே அவனை பௌத்தத்தின் எதிரியாகப் படம் பிடித்தது. இந்நூல்களைப் பொதுவாக பாளி மொழியில் எழுதிய பௌத்தத் துறவிகள் பெரும்பாலும் காஞ்சியிலே பௌத்த பாளிப் பள்ளியில் பயின்றவர்கள். வீரசைவமானது காஞ்சியையும் ஆக்கிரமித்துக் கொண்டதை முழுமையாக உய்த்து உணர்ந்தவர்கள். எனவேதான் வீரசைவனான கலிங்க மாகோனை எடுத்த எடுப்பிலேயே பொய்யான சமயத்தை உடையவன். நல்லவைகளை அழித்தவன், அட்டூழியங்களை புரிந்தவன், நல்லொழுக்கத்தை கெடுத்தவன், செல்வங்களை கொள்ளையடித்தவன், சைத்தியங்களையும் விகாரைகளையும் அழித்தவன் என்றெல்லாம் தங்களது ஆத்திரத்தின் வெளிப்பாட்டினை கொட்டித் தீர்த்து பல வரலாற்று உண்மைகளை மறைக்க முற்பட்டனர்.

பொதுவாக இந் நூல்கள் பௌத்த சிங்களத்தை ஏகாதிபத்தியத் தன்மைக்கு இட்டுச் செல்கின்ற பேரினவாதத்திற்கு அடித்தளமிட்டவை என்றே கொள்ள வேண்டும். இவற்றில் முதன்மையான ஒரு வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகின்ற மகாவம்சத்தையே நாம் எமது ஆய்வினுக்கு உட்படுத்துவது இவ் அத்தியாயத்திற்கு ஏற்புடையதாகும்.மகாவம்சத்தின் முதல் ஐந்து அத்தியாயங்களும் புத்த பகவானுடன் சம்பந்தப்பட்டதாகும். 6ம் 7ம் அத்தியாயங்கள் சிங்கள இனத்தின் முதல் குடி மகனாகக் கருதப்படும் விஜயன் சம்பந்தப்பட்டதாகும். விஜயனின் தோற்றுவாயே சிங்கள இனத்தின் தோற்றுவாயாகக் கொள்ளப்படுகின்றது. நம்பகத் தன்மை அற்றதும் மிதமிஞ்சிய கற்பனையின் பாற்பட்டதுமான இவ்வரலாறு இக் காலத்தே சாதாரண பாமரனையும் சிந்திக்க வைக்கும். 8ம் அதிகாரமான பாண்டுவசுவின் காலந்தொடக்கம் 37ம் அதிகாரமான மகாசேனன் வரலாறு வரை உள்ளவற்றை இயக்கர், நாகரது ஆட்சி அதிகாரத்தை விடுத்து ஒரு வரலாற்று காலத்துள்வைத்துப் பார்ப்பது பொருத்தமானதாக அமையும். தொடக்க காலத்தே ஒரு வரையறை செய்யப்பட்ட எதுவித எல்லையுமின்றி சிங்களவர்கள், தமிழர்கள்

என அடையாளப்படுத்தப்படுகின்ற இரு சமூகத்தினர். தங்களது சமூக, சமய, அரசியல் பின்னணிகளோடு இலங்கையெங்கும் வாழ்ந்திருப்பது தெரியவருகின்றது. சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் மாறி மாறி இந்நாட்டை ஆளும் உரிமையைக் கொண்டிருந்தனர். நாகர் மற்றும் திராவிடரின் கலப்பாகவும் காலத்துக்குக் காலம் தென்னிந்திய நிலப்பரப்பிலிருந்து வந்த கலிங்கர், தமிழர், மலையாளத்தவர்களின் சேர்வினமாகவும் தமிழர் உள்ளனர். இயக்கர், ஆரியர் மற்றும் தமிழரின் கலப்பினமாகச் சிங்களவர் உள்ளனர். இவர்களிடையே மொழியே இனத்துவத்தைப் பேணியது. பரந்துபட வாழ்ந்த தமிழினம் காலப்போக்கில் பல்வேறு காரணிகளால் தனது வாழ்விடத்தை வடக்குக் கிழக்காகக் குறுக்கிக் கொள்ள நேர்ந்தது. மட்டக்களப்பு போன்ற பெரியதொரு பிரதேசமே தனது அடையாளத்தை கட்டிக்காக்கத் தவறியது.

இவ்வாறாக காலக் கரைசலில் நீற்றுக் கிடக்கின்ற அல்லது இருண்ட திரைக்குள் மறைபட்டு விட்ட மட்டக்களப்பின் வரலாற்றினூடாக ஈழத் தமிழரின் வரலாற்றுப் பெருமையினை வெளிக்கொணர்வதும் ஆவணப்படுத்துவதும் இன்றுள்ள நமது முக்கிய கடமையாகின்றது.

தற்போது நமது கையில் கிடைக்கும் சான்றுகளும் தகவல்களும் ஒரு பிரதேச வரலாற்றினை நிலைப்படுத்த போதுமானவையாக அமையமாட்டாது.எனினும் வரலாற்றுக் கோட்பாடுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு வரலாற்றின் முதற்படி எனும் அறிமுக நிலையில் நின்று கொண்டு தொடர் நிலைத் தேடல் ஒன்றினை நோக்கிப் பயணிக்க இது வாய்ப்பளிக்கும். எனவேதான் வரப்போகும் அம்சங்கள் வரலாற்றின் அறிமுகமாகி நிற்கின்றன.





# ஈழமும் அதன் மொழிவழிப் பாரம்பரியமும்

நிலம் என்பது மனிதனின் வாழ்க்கைத் தோட்டம் எனவும் இயற்கை அமைவு அவனின் உயிரோட்டம் எனவும் கொள்ளப்படுகின்றது. இவற்றோடு பின்னிப் பிணைந்ததே மனித வாழ்வு. அதனைக் காலம் ஒன்றுதான் கட்டுப்படுத்தக் கூடியது. எனவே தான் நிலயியலாளர் றிச்சேட் ஹெக்லியூட் நிலயியலும் காலவரையறையும் மனித வாழ்வில் இரு கண்களுக்கு ஒப்பானவை என்று கூறுகின்றார்.

தமிழர்களின் பிறப்பிடமும் வாழ்வின் நிலைக்களமும் விரிந்த எல்லையைக் கொண்டிருந்தது. அதுவே குமரிக்கண்டம் என விளங்கியது. நாவல் மரங்களால் இந்நிலப்பரப்பு சூழ்ந்திருந்தமையால் நாவலந்தீவு என இதனை விட்டுணுபுராணம் கூறுகின்றது. மேற்கு நாட்டினர் இதனை கொண்டவனம் எனக் குறிப்பிட்டனர். லெமூர் என்ற குரங்கினம் இப் பகுதியில் பரவலாக தென்பட்டதால் லெமூரியா என்ற பெயரினை இது பெற்றதாக ஆய்வாளர்கள் கூறுவர்.

### பண்டைய குமரிக்கண்டம்

குமரிக்கண்டம் குறித்து தமிழகத்தின் சிறந்த வரலாற்றாய்வாளராகக் கருதப்படும் வே.தி.செல்லம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**அன்றைய மாபெரும் நிலப்பரப்பாகிய நாவலந்தீவு இந்திய துணைக்கண்டத்தை விட 190 மடங்கு பெரிதாக விளங்கியிருந்தது என இக்காலத்தில் தோன்றிய நாககுமார காவியம் ஒரு கணிப்பைக் கூறியுள்ளது. பரந்த பண்டைத்தமிழகம் பல கட்டங்களில் சிதைவுற்றுச் சுருங்கி இன்றைய வடிவம் பெற்றது என்பதை விட்டுணு புராணமும் பாரத காப்பியமும் பண்டைத் தமிழ் இலக்கியங்களும் விளக்குகின்றன. பெரு வெள்ளச் சேதத்தின்போது தமிழ் மன்னன் மனு பிழைத்ததை பாகவத புராணம் கூறுகின்றது. இந்தப் பரந்த தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய எல்லம் இன்று ஈழமாக வேறுபட்டுக்கிடக்கின்றது. அதன் பழந்தமிழ்க் குடிகளோ வரலாற்றின் விளையாட்டால் இலங்கைத் தீவின் ஓரத்தில் ஒதுக்கபட்டுள்ளனர்.**




குமரிக் கண்டம்

தமிழகத்தின் தென்திசை ஓடிய ப..றுளி ஆறு எல்லத்தை ஊடறுத்து ஓடி குணகடலில் கலந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. ப..றுளி ஆறே பின்னர் பற்றுளி ஆறானது. அதில் இருந்தே பிற்பட்ட காலத்தில் தெதுறு ஓயா (பல் - தெதுறு)எனச் சிங்கள மொழி மாற்றத்தை இவ்வாறானது பெற்றுக் கொண்டது. இந்நிலையே இலங்கை வரலாற்றில் தொடர் கதையாகி நிற்கிறது.

கி.மு 2378 ல் இறுதியாக நிகழ்ந்த கடற்கோளே எல்லம் பிரியக் காரணமாயிற்று என அண்மைய நில ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஈழம் வேறுபட்டபோது ஏற்பட்ட கடற்கோளில் பரந்து நீண்ட ப..றுளி ஆறே தடமற்றுப் போனதால் உயிரினங்கள் அழிந்தனவா இல்லையா என்பதற்கு சரியான முடிவுகள் இதுவரை எட்டப்படவில்லை உயிரினங்கள் அழிந்தன என்றால் இப்பொழுது வாழுகின்ற மக்கள் அனைவரும் இந்திய நிலப்பரப்பில் இருந்து வந்தவர்களாகவே இருக்க வேண்டும். இல்லையென்றால் இதன் ஆதி வாசிகள் பண்டைய தமிழ் மக்களாக இருந்திருக்க வேண்டும். அதுவும் இயக்கர், நாகர் என்ற திராவிட பழங்குடியினரே என்க.

பண்டைய திராவிடர்தம் மொழியாக தமிழின் முதல்வடிவான தாமிழியே இந்தியாவெங்கும் பரவியிருந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர். இயக்கர், நாகர் பேசிய மொழியும் அதுவாகவே இருந்திருக்க முடியும். அன்மைய நமது ஆய்வாளர்கள் சிலர் ஈழத்தில் இம்மக்கள்





பேசிய மொழி முண்டா என்ற பெயரைக் கொண்டிருந்ததாக குறிப்பிடுகின்றனர். மேலும் அம்மொழியானது திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது எனவும் கூறுகின்றனர். எதுவாயினும் அவை ஒரே அடியின் பாற்பட்டவை என்பதே உண்மையாகும்.

நிலயியல் ஆய்வாளர்கள் குறிப்பிடும் ஒரே காலப்பகுதிக்குரியதான கடற்கோள், மற்றும் இயற்கை மாற்றங்கள் ஐரோப்பாவிலும் அவுஸ்திரேலியாவிலும் ஏற்பட்டதைப்போன்றே குமரிக்கண்டத்திலும் ஏற்பட்டதாக அறிகின்றோம். அது குறித்து பாகவத புராணம் கூறும் கூற்றுக்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன.

நாலந்தீவில் ஏற்பட்ட ஊழிக்கால பெரு வெள்ளத்தின்போது தமிழ் நாட்டை நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்த மனு என்ற பாண்டிய வேந்தன் தனது மக்களை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி காப்பாற்றி வந்தான். எனினும் ஆயிரக்கணக்கான மக்கள் இதில் மடிந்தனரென அதில் விபரிக்கப்படுகின்றது. திராவிட அரசன் ஈஸ்வரன் கதையும் இவ்வாறே அமைகின்றது. இதே காலத்தைக் கொண்டதாக கிரேக்கத்தில் எனியாகு கதையும் சுமேரியாவில் சில்கமிசு கதையும் அமைவதோடு அவை உலகில் ஊழிமாற்றம் ஒன்று உருவாகியதாகவும் விபரித்துக் கூறுகின்றன.

மறுபக்கத்தே தென்னிந்திய மானிடவியல், நிலக்கூற்றியல் மற்றும் மொழி ஆய்வுகள் இவ்வாறு கூறுகின்றன.

குமரிக் கண்டத்திலிருந்து ஈழம் உருவாகிய காலத்தே ஏற்பட்ட கடல் பிரளயத்தில் பல நிலப்பரப்புக்கள் கடலுக்குள் அமிழ்ந்துபோக சில மேலெழுந்தன. அவ்வாறு கடலுக்குள் இருந்து மேலெழுந்த ஒரு நிலப்பரப்பே அன்று எல்லம் என வழங்கிய ஈழமெனக் கொள்ள முடியும்.

எதுவாயினும் இவ் ஈழத்தே மக்கள் கற்காலத்தினுள்ளோ (Mesolithic Age) அன்றேல் புதிய கற்காலத்தினுள்ளோ (Neolithic Age) வாழ்ந்திருக்க முடியும். இக்காலங்களிலும் சரி இதனைத் தொடர்ந்த பெருங் கற்குவைக் காலத்திலும் சரி ஈழம் உட்பட்ட இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் யார் என்பதுவும் அவர்கள் பேசிய மொழி எது என்பதுவும் இன்றைய ஆய்வுகளில் ஐயத்துக்கு இடமின்றி வெளிவருகின்றன.

ஆய்வாளர்கள் ஏ.எஸ்.ஹேடன், எஸ்.கே.சட்டர்ஜி போன்றவர்கள் ஆரியரின் வருகைக்கு முன்னர் இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள் திராவிடர்களே என்பதையும் தொல் நாகரீகத்தை உடைய இம்மக்கள் சிவனையும் தாய்க் கடவுளையும் வழிபட்டதோடு திருமாலை மாயோனாகவும் வழிபட்டனர் எனவும் கூறுகின்றனர். ஈழத்திலும் தமிழ நாட்டைப் போன்றே திராவிடப் பாரம்பரியமே இருந்தது என்பதற்கு தொல்லியலாளர் பேராசிரியர் பரணவிதானகேயின் குறிப்புகள் சான்றாகின்றன.

"These Megalithic sites and urn fields are found through – out the regions inhabited by Dravidin Speaking people. The burial customs to which they bear witness are referred to in early Tamil literature. It is therefore legitimate to infer that the people who buried their dead dolmens and used as well as large earthen ware, jars were Dravidians" - Paranavitana, 1967-

இந்திய நிலப்பரப்பை பொறுத்தவரை சாசனப் பதிவுகள் தொடர்பான ஆவணங்கள் கி.மு.3ம் நூற்றாண்டு முதல் பெறப்படுவதைப் போன்றே ஈழத்திலும் கிடைக்கப்பட்ட சாசனங்களை ஆய்வுபடுத்தி கால நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆதிப் பிராமிச் சாசனங்கள் என இவை குறிப்பிடப்படுகின்றன. கலிங்கம் உட்பட தக்கணப் பிரதேசத்தில் தமிழ் மொழியையும் பிராகிருத மொழியையும் பதிவு செய்யும் தன்மையிலும் தமிழ் நாட்டில் பண்டைய தமிழ் மொழியை விளங்கிக் கொள்ளும் வகையிலும் ஈழத்தில் தமிழையும் தொடக்ககாலச் சிங்களவர்கள் பேசிய "எலு" மொழியினையும் பதிவு செய்யும் தன்மையில் பிராமி பயன்பட்டது. பூநகரிப் பகுதியில் பெறப்பட்ட பிராமி பொறித்த மட்பாண்ட உடைவுகள் ஆதித்தமிழ் மொழியின் பரவலான பிரயோகத்தை வெளிப்படுத்துகின்றன.

ஈழத்தே தமிழ்ப் பிரதேசங்கள் தொண்ணூற்றொன்பது விழுக்காடும் தொல்லியல் ஆய்வுக்கு இதுவரை உட்படாத நிலையில் மட்டக்களப்பில் பெறப்பட்ட வேளிர் பற்றிய சாசனம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதே போன்ற சாசனமொன்று பூநகரியில் பெறப்பட்டு ஏற்கனவே ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் சங்ககாலத்தே வாழ்ந்திருந்த வேளிர்குல குறுநிலத் தலைவர்களைப் போன்றவர்களின் ஆட்சி அமைப்பு மட்டக்களப்பின் கரையோர பிரதேசங்களில கதிர்காமம் வரை காணப்பட்டதை இது





உறுதி செய்வதாகவே அமைகின்றது. பாண்டியருடைய குல ஆட்சி முறையான "பஞ்சவர் மரபு" என ஆய்வாளர்கள் குறிப்பிடும் தமிழருடைய ஆட்சி முறையொன்று கதிர்காமம் பகுதியில் நிலைபெற்றதை அங்கு பெறப்பட்ட மீன்சின்னம் பொறித்த தமிழ்ப்பிராமி சாசனத்தினூடே நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். மகாவம்மும் கதிர்காம தமிழச் சத்திரியர்கள் பற்றிக் குறிப்பிடுவதையும் இங்கு முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டும்.

பரணவிதான அவர்களின் முக்கிய கவனத்தை ஈர்த்த கி.மு 1ம் நூற்றாண்டுக்குரிய அனுராதபுரத்தில் பெறப்பட்ட தமிழ்க் கல்வெட்டொன்று தமிழ் வணிக கணத்தினர் பற்றியும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தே அங்கு நிலைபெற்ற தமிழர் பண்பாட்டு நிலைத் தளம் பற்றியும் நமக்கு சான்றளிக்கின்றது.

இலங்கையின் அகழ் ஆய்வு மற்றும் தொல்லியல் ஆய்வின் முன்னோடியாகக் கருதப்படும் ஆங்கில அறிஞரும் தொல்லியல் துறை ஆணையாளருமான எச்.சி.பி.வெல் அவர்கள் தனது பெரும் முயற்சியால் நாட்டில் பரந்து காணப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்பொருள் தடயங்களை பதிவாக வெளிப்படுத்தி உள்ளார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் பரணவிதான இப்பணியினை முன்னெடுத்தவராகின்றார். எனினும் பிராமிக் கல்வெட்டு வாசிப்பில் சிற்சில தவறுகளை பேராசிரியர் பரணவிதான விட்டிருப்பதை இன்றைய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்தியக் கல்வெட்டியல் சங்கத்தின் 17வது ஆண்டு மாநாட்டுக் கருத்தாடலில் இலங்கைக் கல்வெட்டுக்கள் தொடர்பாக பல கருத்துக்கள் முன்வைக்கபட்டிருப்பதையும் அவை தமிழ் நாட்டின் கல்வெட்டு இதழ்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடியும்.

இலங்கையும் இந்தியாவும் சிறு கடற் பரப்பால் பிரிக்கபட்டிருப்பினும் வரலாற்று ரீதியாக தொடர்ந்தாற் போல் சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு உறவுகளால் அவை பிணைக்கப்பட்டே உள்ளன. இந்தியாவைப் போன்றே இலங்கையிலும் பிராமி எழுத்து வடிவமே ஆரம்பம் முதலாக இருந்து வந்துள்ளமையை கிடைக்கும் சான்றுகள் வெளிப்படுத்தி உள்ளன. தென்பாண்டி நாட்டுப் பிராமியே காலத்தால் முந்தியது. இலங்கையில் கண்டறியப்பட்ட தொடர்காலப் பிராமியும் இத்தன்மையதே. அனுராதபுர அகழ்வில் பெறப்பட்ட பிராமி வரி வடிவங்கள் அசோகப்

பிராமி வரி வடிவத்திலிருந்து வேறுபடுவதோடு தென்பாண்டிப் பிராமியையே அவை ஒத்திருந்தன.

மேலும் மகா ஓயா ஆற்றுக்கும் கால ஓயா ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியை ஆய்வுக்குட்படுத்தி வரலாற்று வளர்ச்சியை கண்டறிந்த ஆய்வாளர்கள் இங்குள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பருமக என்ற பட்டம் பெற்றவர்களை பேராசிரியர் பரணவிதான இந்தோ ஆரிய மூப்பன்கள் என கண்டறிந்தமையை தவறென சுட்டிக்காட்டுவதுடன் இச் சமூக நிலை தென்னிந்தியாவில் இருந்தமையை குறிப்பிட்டு இந்தோ ஆரியச் செல்வாக்கு வருவதற்கு முன்னரே இலங்கையில் வாழ்ந்தவர்கள் இவர்கள் என்பதை தெளிவுபடுத்துகின்றனர். இதன் மூலம் அன்றைய காலகட்டத்தே தென்னிந்தியாவில் செல்வாக்குடன் வாழ்ந்த சமூகக் குழுக்களே இலங்கையிலும் வாழ்ந்தனர் என்பது உறுதிப்படுத்தப் படுவதாகின்றது.

ஆவணப்படுத்தப்பட்ட தஞ்சை மாநாட்டு அறிக்கைகளின்படி இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் சங்கத் தமிழ்ச் சொற்கள் கொண்டு தென்னிந்தியாவில் பெருங்கற் பண்பாடு நிலவிய காலத்தே இலங்கையும் அத் தன்மையைக் கொண்டிருந்தமையும் தொல்லியல் ரீதியாக இலங்கை இந்தியாவின் பகுதி எனவும் இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் ஒரே மொழி அடித்தளம் உள்ளதெனவும் இந்திய ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய நிலப்பரப்பில் தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்தும் மொழித் தடமான எழுத்தும் குறியீடும் கற்குகைக் காலம், அரப்பா யுகம் மற்றும் புதிய கற்காலம் வரையும் ஒரு பண்பாட்டுத் தொடரினை பற்றி நிற்கின்றன. இவை வேத மொழிப் பாரம்பரியத்திற்கும் சமஸ்கிருத மொழிப் பாரம்பரியத்திற்கும் முற்றிலும் வேறுபடவே செய்கின்றன. அரப்பா நாரிகம் ஆரியர்களால் (கி.மு. 1850) சிதறடிக்கப்பட்ட பின்னரும் கி.மு 1000 வரை ஒரே மொழியே பேசப்பட்டதாகவும் அதுவே தாமிழி எனவும் சுனித்குமார் சட்டர்ஜி விளக்கி உள்ளார். இவ் எழுத்து வடிவங்கள் தமிழகத்து கொற்கையிலும் ஈழத்தே யாழ்ப்பாணத்து ஆனைக்கோட்டையிலும் அண்மைக்கால அகழ்வாராய்ச்சியில் பெறப்பட்டுள்ளன. மாவீரர் காலத்திற்கு முன்னரேயே





தாமிழியிலிருந்து பாகதமும் அதன் எழுத்து வடிவமான பிராமியும் தோற்றம் பெற்றமை ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டனவாகும்



சங்க காலத்து இருமொழி நாணயம்

சாதவாகன மன்னரது நாணயத்தில் பாகதமும் தாமிழியும்

தமிழும் பாகதமும் ஒரு தாய் வயிற்றுதித்த இரட்டைக் குழந்தைகள் என்பதே மொழி ஆய்வாளர்தம் முடிந்த முடிவாகும். இவற்றையே பழைமையான கூத்தத் தாள நூலானது தென் தமிழ்-வட தமிழ் எனக் குறிப்பிடுகின்றது. தொல்லியலாளர்கள் இதனை தெற்கு திராவிட மொழி, வடக்குத் திராவிட மொழி எனக் கூறுவர். இரு மொழிகளையும் ஒப்பீடு செய்த மொழி ஆய்வு வல்லுனர்கள் தங்கள் தங்கள் ஆய்வுகளின் போது தமிழும் பாகதமும் சில இலக்கண விதிகளில் ஒன்றுபட்டு நிற்பதையும் 90 வீதமான உயிர் எழுத்துக்களின் ஒற்றுமையில் அவை இணைவு பெறுவதையும் கண்டறிந்தனர். உயிர் எழுத்துக்கள் முதல் எட்டும் (அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ) ஒரே தன்மையைக் கொண்டன என்பதையும் விளக்கினர்.

கங்கைச் சமவெளியில் அறியப்பட்ட தமிழ்ப்பூர், தமிழ்க்குடி, தமிழ்ப்பேடா, தாமுமுக் போன்ற பண்டைய ஊர்ப் பெயர்கள் இதன் சிறப்பினை உணர்த்தும். தனநந்தர் மற்றும் மோரியர் காலத்தில் தக்காணம் முழுவதும் தாமிழியே வழக்கில் இருந்தது. கி.மு 3ம் நூற்றாண்டில் சமண சூத்தங்களில் அது தாமிழி என அழைக்கப்பட

கி.மு 2ம் நூற்றாண்டில் பௌத்தர்களின் ஸளித வித்தாரத்தில் திராவிட லிபி என அழைக்கப்பட்டது.

சீனாவை ஆண்ட ஓயாந்தி என்ற பேரசனுடைய தூதன் தமிழகம் வந்து தாமிழியில் எழுதப்பட்ட நாடி நூலை பெற்றுச் சென்றதாக வரலாற்று குறிப்புகள் உள்ளன. சீன வரலாற்றின்படி ஓயாந்தி என்ற பெரு மன்னன் கி.மு. 2700 ல் சீனாவை ஆட்சி செய்தவனாக கணிக்கப்படுகின்றான்.

ஈழத்தில் வாழ்ந்த பண்டைய மக்கள் இயக்கர் மற்றும் நாகர் எனும் திராவிடர்கள் என்பது முடிவுறுத்தப்பட்டதாகும். இவர்கள் வலிமைமிக்க பிரிவினராவர். இயக்கரையே ஆரியர் அரக்கராக்கி காட்டினர்.ஈழத்தில் நிகழ்ந்ததாக கொள்ளப்படும் இராம, இராவண யுத்தம் ஆய்வுத் துறையில் பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவிப்பதாய் உள்ளது. பரத கண்டத்தின் தென் பகுதியில் ஆரியர்களின் வருகை குடியேற்றம் மற்றும் செல்வாக்கு போன்றவை கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்தவையாகும். ஆரியச் செல்வாக்கை நிலை நிறுத்தும் நோக்கிலேயே வடமொழிக் காவியமான இராமாயணத்தை வான்மீகி படைத்தார். இராம காவியச் செல்வாக்கு சோழராட்சிக் காலத்திலேயே தமிழ் நாட்டில் சூடு பிடித்தது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இயக்கரும் நாகரும் ஈழத்தில் வாழ்ந்தவராகின்றனர். கி.மு 543 இல் விஜயன் ஈழத்துக்கு வருகின்ற போது குவைனி என்ற இயக்கத் தலைவியே ஆட்சி அதிகாரத்திலிருந்தாள் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இதனூடே நாம் ஒரு தெளிவினுக்கு வர முடியும்.

பண்டைய தமிழகத்தோடு இணைந்திருந்த ஈழத்திலோ அன்றேல் கடல்கோள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் உருவாக்கப்பட்ட ஈழத்திலோ வாழ்ந்தவர்கள் அன்றேல் புகுந்தவர்கள் திராவிடர்களே என்பதுவும் அவர்கள் பேசிய மொழி தமிழின் முதல் வடிவான தாமிழி என்பதுவும் இதன் அடிப்படையில் ஈழத்தின் ஒரு அங்கமான மட்டக்களப்புக்கும் இது பொருந்துவதாக அமையும் என்பதுவுமே. இதன் ஆதிக்குடிகளை இயக்கர், நாகர், வேடர், திமிலர், குகர், என எவ்வாறு இனங்கண்டாலும் இச் சமூகத்தினர் அனைவரும் திராவிடரே. பண்டைய ஈழத்தவர் பேசிய மொழியும் தென் தமிழ் எனப்படும் தாமிழியே. தாமிழியின் படி நிலை வளர்ச்சியே நம் இனிய தமிழ்மொழி என்க.





## மட்டக்களப்பு

### பூர்வீக சரித்திரம் குறிப்பிடும் கி.மு 3ம் நூற்றாண்டின் மட்டக்களப்பு



# மட்டக்களப்பின் எல்லைகளும் நில அமைவும்

**எல்லைகள் :**

பண்டைய மட்டக்களப்புப் பிரதேசம் ஈழத்தின் கிழக்குப் பகுதியில் வடக்கே வெருகலாறு தொடக்கம் தெற்கே கதிர்காமத்து மாணிக்க கங்கை வரையும் வியாபித்து இருந்ததைப் பல்வேறு சான்றுகள் சுட்டி நிற்கின்றன. கி.பி 1ம் நூற்றாண்டில் காணப்பட்ட மட்டக்களப்பின் தென்பிரிவுக் குறுநில அரசான உன்னரசுகிரியின் தெற்கெல்லையாக மாணிக்க கங்கை குறிப்பிடப்படுகின்றது. அப்போதிருந்த குறுநில மன்னர்கள் மாணிக்க கங்கையிலிருந்து வாய்க்கால் வெட்டி வயல் நிலங்களுக்குப் பாசனம் செய்தாகவும் வரலாற்று குறிப்புகள் உண்டு. கி.பி 13ம் நூற்றாண்டுக்கு உரியதான குளக்கோட்டன் கல்வெட்டு பாடலில் (கலிங்க மாகோன் காலம்) அனால் மானியங்கள் வழுங்கப்பட்ட பண்டைய மட்டக்களப்பு பிரதேச ஆலயங்களுள் மாணிக்க கங்கை என்று கதிர்காமம் குறிப்பிடப்படுகின்றது. சோழராட்சிக் காலத்தில் மட்டக்களப்பின் ஆட்சிப் பிரதிநிதி ஒருவன் கட்டகாமத்தில் இருந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் வரை பதவி வகித்த மட்டக்களப்பு வன்னியர்களின் தங்குமிடமாகவும் சுற்றுலா வாசஸ்தலமாகவும் கட்டகாமம் வன்னியர் வீடு விளங்கியமையும் அம்பிளான்துறையில் மணம் செய்த எதிர்மன்னசிங்க வன்னியன் தனது சுற்றுலா வதிவிடமாகக் கட்டகாமத்தை வைத்திருத்தமையும் அறியப்பட்டதாகும்.

பண்டைய மட்டக்களப்பின் எல்லைகளாக வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே மாணிக்க கங்கையினையும் கிழக்கே வங்காள விரிகுடாவினையும் மேற்கே ஊவா மலைத் தொடர் - வெல்லசைப் பிரிவினையும் கோடிடலாம். இப் பிரதேசமானது சுமார் 140 மைல் நீளத்தையும் சராசரியாக 48 மைல் அகலத்தையும்





ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக தன்னுள் கொண்டிருந்தது. நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி ஆகிய நானில அமைப்போடு கூடிய இயற்கை வளம் மிக்க பிரதேசமாக இது விளங்கியது. மேற்கு ஊவா குன்றுகளின் தொடர் பகுதிகளை விடுத்துப் பார்த்தால் இதன் நில அமைவின் உயரம் கடல் மட்டத்திலிருந்து பெரும்பாலும் 30 அடிக்கு உட்பட்டதாகவே அமையும்.

**மட்டக்களப்பு :**

தொடக்ககால மட்டக்களப்பு ஆட்சித் தளமானது இன்றைய சம்மாந்துறையில் அமைந்திருந்தது. இதற்கு சான்றாக சம்மாந்துறையின் மட்டக்களப்பு தரவை என்ற இடப் பெயரை கொள்ளலாம். மட்டமான களப்பு நிலப்பகுதி இது என்பதால் மட்டக்களப்பு என்ற பெயரினை இப் பகுதி பெற்றிருக்க முடியும். மணற்றிடரால் சூழப்பட்ட யாழ்ப்பாணம் முன்னர் மணற்றிடர் என அழைக்கப்பட்டது. மூன்று மலைப் பாகத்தை கொண்டு இணைந்த திரிகோணமலையும் இத் தன்மையினதே. மட்டக்களப்புப் பெயர்க் காரணம் தொடர்பான ஏனைய கூற்றுக்கள் கற்பனையின் பாற்பட்டவையாகவே கருத வேண்டும். சம்மாந்துறை என்பது மட்டக்களப்பின் பிற்பட்ட பெயராகும். வியாபாரப் பொருட்களை ஏற்றி வந்த சம்மான் என்ற சிறு நாவாய்களின் தரிப்பிடமாக (துறை) இவ் இடம் அமைந்ததால் சம்மாந்துறை எனப் பின்னர் இது அழைக்கலாயிற்று.

தமிழகக் குறிப்புக்களில் மட்டக்களப்புப் பிரதேசம் தென்னிலங்காபுரி எனக் குறிப்பிடப்படுவதைக் காண முடியும். மலையர்குகநாடு என்ற பெயரினையும் இது பெற்றிருந்தமை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மலையர் என்பது மலை நாட்டினரான சேரநாட்டு மக்களையும் குகர் என்பது கலிங்க நாட்டினரையும் குறித்து நிற்பதாகும்.

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தனித்துவம் மிக்க இயக்கர், நாகர் ஆட்சியில் யாழ்ப்பாணம் நாகதீவு எனவும் மட்டக்களப்பு நாகர் முனை எனவும் வழங்கப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. நாகர் முனை இன்றைய திருக்கோயிலை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது. இது துறைமுக நகராகவும் கோவில் நகராகவும் சிறப்புப் பெற்றிருந்தது. இயக்கர்கோன் இராவணனின் ஆட்சிபீடம் அமைந்திருந்த இடமும் இதுவே என்பர். அவனது கோட்டை கொத்தளங்கள் கிழக்குக் கடலுள் அமிழ்ந்துவிட்டதாக தகவல்கள்

கூறுகின்றன. இராவணன் பற்றிய தமிழ் நாட்டுக் குறிப்புக்களும் இலக்கியக் குறிப்புகளும் அவன் தென்னிலங்காபுரியிலிருந்து ஆட்சி செய்தவன் என்றே சித்தரிக்கின்றன.

மட்டக்களப்பு மூன்று சிற்றரசுகளாக வகுக்கப்பட்ட காலத்தே (கி.பி. 4ம் நூற்றாண்டு) தென்பகுதி உன்னரசுகிரியாகவும் சம்மாந்துறையை உள்ளடக்கிய நடுப்பகுதி மட்டக்களப்பாகவும் கல்லாறு தொடக்கம் வெருகலாறு வரையான வட பகுதி மண்முனையாகவும் பெயர் பெறலாயிற்று. இது ஒரு நீண்டகால அரசமைப்பாகவும் நிலை பெற்று விளங்கிற்று. பிற்பட்ட ஆட்சிக் காலங்களில் முழுப் பிரதேசமும் மட்டக்களப்பு என்றே அழைக்கப்படலாயிற்று.

போர்த்துக்கீசர் மட்டக்களப்பை மட்டக்கொளா என அழைத்தனர். மட்டக்கொளாவை பட்டிக்கலோ (Batticalao) என மாற்றியவர்கள் ஒல்லாந்தவராவர். டச்சு காரரின் வாயில் ம எனும் உச்சரிப்பு வராது என்பது ஒரு பொதுவான கூற்றாகும். ம(Ma) வை ப(Ba) வாக உச்சரிக்கும் போக்குடையவர்கள் அவர்கள். இவர்களால்தான் மியான்மர் -Burma (பர்மா) என்றும் மும்பை - Bambay (பம்பாய்) என்றும் தமிழகத்தின் கோயம்முத்தூர் - Coimbutore (கோயம்புத்தூர்) என்றும் மாறியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**நில அமைவு :**

இலங்கையில் நில இயல் ஆய்வுகளை விரிவாக மேற்கொண்ட டி.என்.வாடியா, எவ்.டி.அடம்ஸ் போன்றோர் இதனது நில அமைவில் மூன்று தளங்கள் தென்படுவதை முடிவாக கண்டறிந்தனர். இதனை ஒத்த நில அமைப்பு தமிழ்நாடு , ஆந்திரா மற்றும் ஒரிசாவின் கரைப் பிரதேசங்களில் காணப்படுவதையும் தங்கள் ஆய்வுகளுக்கு பக்கச் சான்றாக கொண்டனர். தொடர்பு பட்ட நிலப்பரப்பு ஒன்று பிரிவுபட்ட தன்மையை இது வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தது. பூமியில் ஏற்பட்ட மூன்று வெவ்வேறு இயற்கை உந்துதல்கள் இந்நில அமைப்பின் தோற்றத்தே தென்படுவதாக இவர்கள் குறிப்பிட்டனர். இதேபோன்ற கருத்தினையே குமரிக்கண்டம் தொடர்பான நில இயல் கூற்று ஆய்வுகளும் வெளிப்படுத்துகின்றன. கடல் கோள்களில் குமரிக் கண்டத்தின் பெருநிலப்பகுதி ஒன்று கடலுள் அமிழ்ந்து போனதையும் நீரடி நிலப்பகுதிகள் சில மேலெழுந்ததையும் அதன்





ஒரு பகுதியே ஈழம் என்பதையும் குமரிக் கண்ட ஆய்வுகள் விபரிக்கின்றன.

மட்டக்களப்புப் பிரதேசம் பற்றிய புவியியல் ஆய்வுகளின்படி மேலரும்பியதாகக் காணப்படும் பாறை நிலங்கள் பொதுவான அவதானிப்புக்குள்ளாகின்றன. இதனை நைசுப் பாறைகள் என புவியியலாளர்கள் குறிப்பிடுவர். கடலை அண்டியதாக சுமார் 105 கிலோமீற்றர் நீளத்திற்குப் பரந்த உப்பேரி மட்டக்களப்பு வாவி என்ற பெயரில் தென்படுகின்றது. வாவியை அண்டியதான ஆற்றுப் படுக்கைகளினும் தாழ்வு நிலப்பகுதிகளினும் வண்டற்படிவுகள் மற்றும் களி, மணல், பரல், படிவுகளைக் காணமுடியும். இப்படிவுகளானது காலப் போக்கில் இயற்கை மாற்றங்களினூடே ஏற்பட்ட நில அமைவு எனக் கூறப்படுகின்றது. இதன் கரையோரப் பகுதிகள் பொதுவாக உப்பேரிகளும் வாவிகளும் தொடுகைகளும் சதுப்பு நிலங்களும் பெருமளவு களப்புகளுமாகவே உள்ளன. இவற்றிற்கும் கடலுக்கும் இடைப்பட்ட பிரதேசம் நீண்டுபடிந்த மணல் திட்டுக்களையே கொண்டுள்ள. இதன் மேற்கு நோக்கியபகுதிகளில் பொதுவாக செம்மண், மற்றும் கிறவல்படிவுகளையும் சொறிக்கல் பாறைகளையும் காணமுடியும். அவற்றினூடாக பள்ளத்தாக்குகளும் குளிகளும் பாறைப் பிளவுகளும் பிதிர்களும் காட்சியளிக்கின்றன. இந்நில அமைப்பினை வண்டற் படிவுகள், களிமண் படிவுகள், மணல் படிவுகள் மற்றும் கூழாங்கல திட்டுக்கள் என வகைப்படுத்திச் செல்லலாம்.

பொதுவாக மட்டக்களப்புப் பிரதேசத்தினுடைய நில அமைவு என்பது கடற்கரை, மணற்திட்டுக்கள், முகத்துவாரங்கள், சதுப்பு நிலங்கள், களப்புகள், கரைச்சைகள் வண்டற்படிவுகள், களிமண் படிவுகள், செம்மண் திட்டுக்கள், செங்கற்படைகள், நைசுப் பாறைகள், குன்றுகள் என்ற மேல் நோக்கிச் செல்லுகின்ற இயற்கையோடியைந்த வளம் பொருந்திய சிறப்பான நில அமைப்பினை கொண்டதெனக் கொள்ளலாம். மறுபுறத்தே இதன் நில அமைவு நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என்ற நானிலங்களை உள்ளடக்கியதாகவே உள்ளது.

# மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளும் குடியேற்றங்களும்

ஈழத்தின் பூர்வீக வரலாறு பற்றி பலவாறு கூறப்பட்டாலும் அவை அனைத்தும் ஆய்வினுக்கு உரியனவாகவே இன்றும் உள்ளன. ஈழம் இந்திய நிலப்பரபிலிருந்து முற்றாக விடுபட்டு கடலிடை சூழ்ந்த காலமாக பொதுவாகக் கொள்ளப்படுகின்ற கி.மு 2378 னை புதிய கற்காலத்தினுள் கொண்டு வரலாம். இக் காலத்தின் தொடக்க நிலையில் வாழ்ந்த மக்கள் பற்றிய சரியான தகவல்கள் ஆய்வு ரீதியாக நமக்குக் கிடைக்கவில்லை. புராண இதிகாசங்களிலும் பண்டைய இலக்கியங்களிலும் சொல்லப்படுகின்ற குபேரன் காலம், இராவணன் காலம் பற்றியெல்லாம் போதிய தெளிவினை இதுவரை நாம் பெறவில்லை. பண்டைய வழிபாட்டு தலங்களான மாந்தை, திருகோணமலை, திருக்கோவில் போன்றவை ஈழத்து வரலாற்றுக் குறிப்புகளிலும் தமிழகத்து இலக்கியங்களிலும் பேசப்பட்ட போதினும் இப் பகுதிகளில் முறையான ஆய்வுகள் தொல்லியல் ரீதியாக இது வரை மேற்கொள்ளப்படாமை பெரும் குறைபாடாகவே உள்ளது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் அதன் வரலாற்று காலம் முதல் திருக்கோவில் பேசப்பட்டு வருகின்றது. தென்னிலங்காபுரி எனவும் நாகர் முனை எனவும் பண்டைய பெயர்களால் அழைக்கப்பட்ட பெருமை அதற்குண்டு. இங்கு கடலோரப் பரப்புகளில் அகழ்வாய்வும் நீரடி நில ஆய்வும் மேற்கொள்ளின் மட்டக்களப்பின் வரலாற்றை பதிவு செய்ய அது பெருந்துணை புரியும். ஈழத்தின் வரலாற்றினை சொல்ல முற்படுகின்ற இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் பலர் கலிங்க விஜயனுடைய (கி.மு 543) வரவை முன் வைத்து அதனை ஆரம்பிக்கின்றனர். அதுவே அவர்களுக்கு வசதியாகவும் தென்படுகின்றது. அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதான ஒரு அகண்ட வரலாறு ஈழத்திற்கு உண்டென்பதை அவர்கள் கவனத்தில் கொள்வதாயில்லை.

ஈழத்துப் புராதன மக்களாக இயக்கர் , நாகர், (வேடர்) என ஆய்வாளர்களால் பொதுவாக அடையாளப்படுத்தப்படும் நிலையில் மட்டக்களப்பு பற்றிய தெளிவான வரலாற்றுச் சான்றுகள் போதுமான அளவு எமக்குக் கிடைக்கவில்லை. **Monograph of the**





## இயக்கர், நாகர்.




இலங்காபுரி
ஆதி திராவிடர்களின்
குடியிருப்புகள்

## கி.மு 5ம் நூற்றாண்டின் பின்னர்








**Batticaloa District ,Landmark of ancient Batticaloa ,** மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், மட்டக்களப்புத் தமிழகம், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமுக வழமைகளும், மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி,சீர்பாதர்குல வரலாறு **Mukkuvar Vannimai,**மட்டக்களப்பு முற்குகர் வரலாறும் மரபுகளும், தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும்,மாகோன் வரலாறு,குளக்கோட்டன் தரிசனம்,**The Cult of Goddess Pattini, East Coast Sri Lankan Tamil Temple,** அக்கரைப்பற்று வரலாறு,**Palm Fringed Coast,** யாரிந்த வேடர், முற்குகர் தொடர்பான கல்வெட்டு பாடல்கள், திருக்கோவில் மற்றும் தான்தோன்றீச்சரம் தொடர்பான ஆவணங்கள், மாகோன் தொடர்பான கல்வெட்டு பாடல்கள், யாழ்ப்பாண வரலாற்று குறிப்புகள், மகாவம்சம், சூளவம்சம், தீப வம்சம், ராஜவலிய, பூஜாவலிய, போன்ற சிங்கள பௌத்த வரலாற்று நூல்கள், இலங்கை தொடர்பான தமிழக கேரள வரலாற்றுக் குறிப்புகள், புவனேஸ்வரில் (ஓரிசா) ஆவணப்படுத்தப்பட்டுள்ள பண்டைய கலிங்கம் பற்றிய குறிப்புகள், சங்க இலக்கியக் குறிப்புகள், வாய்மொழிக் கதைகள், ஈழத்து ஆய்வாளர்களது மட்டக்களப்புத் தொடர்பான கட்டுரைகள்,மிக முக்கியமாக மட்டக்களப்புப் பிரதேச கள ஆய்வில் பெறப்பட்ட தகவல்கள் போன்றவற்றின் துணைகொண்டு தொல்லியல் சார்பற்ற ஒரு தேடலை இவ் அத்தியாயத்தில் நிலைப்படுத்த வேண்டியுள்ளது.

இலங்கையின் ஆதிக் குடிகளை கண்டறிவதற்கு கி.மு. 500க்கு முற்பட்ட இலங்கையின் வரலாற்று தகவல்களும் இலக்கியங்களும் எமக்கு உதவுகின்றன. தீப வம்சம் ,மகாவம்சம் போன்றவையும் இது பற்றிய தகவல்களை முன் வைக்கின்றன. பண்டைய தொலமியின் தேசப்படமும் ஆதிக் குடிகளின் இருக்கைகள் தொடர்பான தரவுகளை ஓரளவு சித்தரிக்கின்றன. புத்தரின் முதலாவது வருகை தொடர்பான மகாவம்சத்தின் கூற்றில் போதி மர நிழலில் ஞான நிலையிலிருந்த புத்தருக்கு பௌத்த மதம் பெரு வளர்ச்சி அடையக்கூடிய இடம் இலங்கை எனவும் எனவே அங்கு வசித்து வருகின்ற இயக்கரை அங்கிருந்து அகற்றி அதனைப் புனிதப்படுத்த வேண்டுமென அவருக்குத் தோன்றியதாகவும் சொல்லப்படுகின்றது. மகாவலி நதிக்கரையில் 30 மைல் நீளமும் 10 மைல் அகலமும் கொண்ட இயக்கர்களின் மகா நாகத்தோட்டம் உள்ளதெனவும் (இது மையங்கனை எனக் கருதப்படுகின்றது) ஒரு குறிப்பிட்ட நாளில்

நாடெங்கிலுமுள்ள இயக்கர்கள் அங்கு வந்து கூடிச் செல்வது வழக்கமெனவும் அந் நாளில் புத்தர் இலங்கைக்கு வர எண்ணியிருந்தார் எனவும் மகாவம்சம் மேலும் குறிப்பிடுகின்றது. இதன்படி இலங்கையின் முக்கிய சமூகமாக இயக்கர் வெளிப்படுத்தப்படுவதைப் பார்க்கின்றோம். இயக்கர் குடியிருப்புக்கள் நாடு முழுக்கப் பரவியிருந்தமையும் மட்டக்களப்பு பிரதேசத்தே மாணிக்க கங்கை (கதிர்காமம்) மற்றும் விந்தனைப் பகுதிகளில் அவர்கள் பரவலாக வாழ்ந்துள்ளமையையும் தெரிகின்றது.

புத்தரின் இலங்கைக்கான 2ம் மற்றும் 3ம் வருகைகளில் நாகர்களே தொடர்புபடுகின்றனர். இரண்டாம் வருகை நாக தீபத்திலும் (யாழ்ப்பாணம்) மூன்றாம் வருகை கல்யாணியிலும் (களனி) இடம்பெறுகின்றது. இக் கால கட்டத்தே நாக மன்னர்கள் ஆட்சி செய்கின்றனர். இம் மக்களின் முக்கிய இருக்கைகளாக தேவிநுவரை, நாகர்கோவில், மணிபல்லவம் (நயினாதீவு) யம்புக்கோளம் (காங்கேசன்துறை), மிகிந்தலை, கதிரைமலை (கந்தரோடை), மகாதீர்த்தம் (மாந்தை) என்பவற்றோடு மட்டக்களப்புப் பிரதேசத்தே நாகர்பொக்கணை (மன்னம்பிட்டி), நாகர்முனை (திருக்கோயில்), நாகன்சாலை (மண்டூர்), சூரியத்துறை (மட்டக்களப்புப் பெருந்துறை) என்பவனவும் குறிப்பிடப்படுகின்றன. நாகர்பொக்கணை நாமல்பொக்கண என இப்போதும் அழைக்கப்படுகின்றது. நாகர்கள் மிகவும் நாகரீகமடைந்த சமூகத்தினராக அடையாளப்படுத்தப் படுகின்றனர். இயக்கரும் நாகரும் ஆதி திராவிட குடிகள் எனவும் ஈழத்தின் (மட்டக்களப்பின்) புராதன மக்கள் இவர்கள் எனவும் கூற முடியும்.

மட்டக்களப்புப் பூர்வீக சரித்திரம் தொடர்பாகப் பரவலாகப் பெறப்படுகின்ற ஏட்டுப்பிரதிகளும் மட்டக்களப்பு மான்மியம் நூலும் ஈழத்தின் ஏனைய முக்கிய அதிகாரப் பிரிவினரென சிங்கர், வங்கர், கலிங்கர் என்போரைக் குறிப்பிடுகின்றன. இவர்களையே முற்குகர் எனவும் இவை அடையாளப்படுத்துகின்றன. மட்டக்களப்பிற்கு முதன் முதல் வந்த மக்களாகவும் இவர்களை இவை அறிமுகம் செய்கின்றன. மகாவம்வம், சூளவம்சம் போன்ற வரலாற்று நூல்கள் இக்காலகட்ட சமூகத்தினரை சிங்களவர் எனவும் திராவிடர்கள் எனவும் சித்தரிக்கின்றன. யாழ்ப்பாண வரலாற்று ஆவணங்களும் பெரும்பாலும் இக்கருத்தையே கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலத்தே எழுதப்பட்ட சரித்திர





நூல்களும் மட்டக்களப்பில் இதுவரை வெளிவந்த வரலாற்றுத் தகவல்களும் சிங்கள வரலாற்று ஆவணங்களைச் சார்ந்தே பல வரலாற்று நிகழ்வுகளை பதிவு செய்திருக்கின்றன.

பண்டைய கலிங்கம் பரந்த ஒரு திராவிட பூமியாக விரிவுபட்டிருந்தது. சிங்கர், வங்கர், கலிங்கர் எனக் குறிப்பிடப்படுவோரும் அங்கிருந்தே ஈழம் வந்தவர்கள். இன்றைய ஒரிசாவில் (கலிங்கத்தின் ஒருபகுதி) ஆதிவாசிகளின் பட்டியலில் குறிப்பிடப்படுகின்ற பதிநான்கு இனக் குழுக்கள் பேசுகின்ற மொழி தமிழ் மொழியின் வேர்களைக் கொண்டிருக்கின்றதென்பது மொழியியல் வல்லுனர்களும் சமூகவியல் ஆய்வாளர்களும் ஒப்புக் கொள்ளப்பட்ட வையாகும். திராவிடரின் தாயகமாக மிளிர்ந்த கலிங்கம் தக்கணத்தின் கிழக்குக் கரையில் கோதாவிரிக்கும் மகேந்திர மலைத் தொடருக்கும் இடைப்பட்டதென சில ஆய்வாளர்கள் குறிப்பிடினும் உண்மையில் கி.மு. 10 ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 1ம் நூற்றாண்டு வரை குறிப்பிடப்படும் வடகலிங்கம் ஒரிசாவின் வடமேல் பகுதியுடன் வங்கத்தின் காளி கட்டம் (கல்கத்தா) வரை பரவியும் தென்கலிங்கம் ஒரிசாவின் பகுதிகளுடன் ஆந்திராவின் தென்கிழக்கு மற்றும் தொண்டை மண்டலம் வரை நீண்டிருந்ததாகவும் தெளிவுபடுத்தப்ப டுகின்றது. இதுவே மேற்குக் கலிங்கம் எனவும் கிழக்குக் கலிங்கம் எனவும் அழைக்கப்பட்டதென புவனேஸ்வர் வரலாற்று ஆவணக் காப்பகத்தில் (Ancient Historical Records of Kalingam) பத்திரப்படுத்தப்பட்டுள்ள தகவல்களால் கண்டறிய முடியும். சிங்கபுரம் என்பது வட கலிங்கத்தின் பெரு நகராகவும் பாடலி தென்கலிங்கத்தின் பொன்கொழிக்கும் எழில் நகராகவும் சிறந்து விளங்கியதென்பதை பல வெளிநாட்டுப்ப பயணிகள் தங்கள் பயணக் குறிப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளனர். கி.மு. 4ம் நூற்றாண்டில் பாடலிபுரத்திலிருந்து ஆட்சி செய்த திராவிட மன்னர்கள் நீண்ட மரபுவழிச் சிறப்பு மிக்கவர்களாக விளங்கினர் என்பதோடு தொல்லாய்வுக்குரியதான தமிழ் பிராமி எழுத்து முறை ஆதாரங்கள், தமிழ் மொழிப் பாரம்பரியம், வரலாற்றிடைப்பட்ட காலத்து (Proto Historic Period) நீண்ட வரலாற்று மரபுகள் போன்றவை பற்றியும் மெகஸ்தனிஸ் தனது குறிப்புகளில் சான்றளிக்கின்றார். கி.பி 1ம் நூற்றாண்டில் கலிங்கம் வந்த பிளிமியும் தாலமியும் பாடலி பற்றிக் குறிப்பிடும்போது அன்று அது பெரும் தலைநகராக விளங்கியதால் (பெருந்தலை -Pertalai)

என்றே அதனைக் குறிப்பிட்டுள்ளனர். மேல்நாட்டவர் பலரும் பாடலியை Pertalai என்றே எழுதியுள்ளனர்.

வடகலிங்கத்தின் சிங்கபுரம் இருந்து வந்தவர்களே மட்டக்களப்பு மான்மியத்தில் சிங்கர் எனக் குறிப்பிடப்பட்டனர். சிங்கத்தின் கதையை பின்புலமாகக் கொண்ட சிங்கள மக்களிடையே உலாவும் வரலாற்றுக் கதையும் இத்தன்மையதே. சிங்கத்தின் வாரிசுகளே சிங்கர் என்றும் சிங்களவர் என்றும் அழைக்கப்படுவதாக இவர்கள் வரலாறு கூறுவர். எனினும் மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் கூறும் விஜயனின் முன்னோர் பற்றிய குறிப்புக்கள் சமூக ஆய்வுக்கு ஏற்புடையதாக இருப்பதைப் பார்கின்றோம். சிங்கன் எனும் வேடுவனால் கவர்ந்து செல்லப்பட்ட கலிங்க இளவரசியின் வயிற்றுப் பரம்பரையே சிங்களவர் எனச் சொல்லப்படுவதாக அது குறிப்பிடுகின்றது.

வங்கர் என அழைக்கப்படுபவர்கள் கங்கைக் கரையை ஓட்டி வாழ்ந்த கங்கர் என்ற சமூகத்தினரே என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வங்கர் என்போர். படகோட்டிகள் (வங்கம் - படகு) எனவும் சொல்லப்படுகின்றது. படகோட்டியான கங்கைக்கரையின் தலைவனான குகனும் கங்க வம்சத்தை சார்ந்தவனாக குறிப்பிடப்படுகின்றான். இதனாலேயே மட்டக்களப்பு மக்கள் குக வம்சத்தினர் என்ற பெயரைப் பெறுகின்றனர். இது பற்றிய மேலதிக விபரங்கள் பிறிதொரு அத்தியாயத்தில் இடம்பெறுகின்றன.

விஜயன் ஈழத்திற்கு வருகின்றபோது அதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரும் மக்கள் இங்கு வாழ்ந்தமையும் ஆட்சி அதிகாரங்களில் நிலைபெற்றிருந்தமையும் அறியப்பட்டவையாகும். மட்டக்களப்பின் மேற்குப் பகுதியினும் (விந்தனைப்பகுதி) திருக்கோயில் மற்றும்அதனை அண்டிய காட்டுப்பிரதேசங்களிலும் இம் மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் ஆய்வுகள் ஊடாக புடம்போட வேண்டியவையாய் உள்ளன.

**திமிலர்**

மட்டக்களப்பின் வாவியை அண்டிய கரைப்பகுதிகளில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட மக்கள் கி.மு. 3ம் நூற்றாண்டுக்கு முன்னரே வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன. திமிலர் என அழைக்கப்பட் இம் மக்கள் மட்டக்களப்பின் திமிலைதீவுப் பகுதியை





தங்கள் இருக்கையாக்கி தனிக் குழுவாக வாழ்ந்த சமூகத்தினர் ஆகின்றனர். திமிலை தீவு மட்டக்களப்பு வாவியால் சூழப்பட்ட ஒரு தீவாக அமைந்திருந்தது. இப்போது அது பல சிற்றூர் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது. புராதன தமிழருக்குள் வரையறை செய்யப்பட்ட மீனவர் வகுப்பைச் சேர்ந்த இம் மக்கள் மட்டக்களப்பிற்கு எக்காலத்தே எங்கிருந்து வந்தார்கள் என்பது தெளிவற்ற தன்மையைக் கொண்டிருக்கின்றது. தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் ஊடாக இவர்கள் மட்டக்களப்பிற்கு வந்திருக்கலாம் என யாழ்ப்பாண வரலாற்றுத் தகவல்களை ஆதாரப்படுத்தி கருதப்படுகின்றது. கி.மு. 5ம் நூற்றாண்டில் கீரி மலையிலிருந்து பாண்டுவசுவால் அப்புறப்படுத்தப்பட்டு மட்டக்களப்பில் குடியேறிய மீனவர் சமூகம் குறித்து கவனத்திற் கொள்ளும் அதே வேளை பல்வேறு தொழிற் சமூகப்பிரிவுகளை உள்ளடக்கியதாக இயக்கரினம் விளங்கியதெனவும் அதில் ஒரு பிரிவினரே திமிலர் எனவும் சில ஆய்வாளர்கள் கருதவும் செய்கின்றனர் . நாகர் இனத்துள்ளும் தொழிற் பிரிவு சமூகக் கூறுகள் இருந்ததாக தென்னிந்திய சமூகவியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கி.மு 3ம் நூற்றாண்டில் குடியேறியதாக கொள்ளப்படும் குக மரபினருக்கும் அச்சூழலில் மட்டக்களப்பில் வாழ்ந்து கொண்டிருந்த திமிலருக்கும் ஏற்பட்ட குழு நிலை ஆதிக்கப்போட்டியில் பின்னர் திமிலர் மட்டக்களப்பிலிருந்து துரத்தப்படக் காரணமாய் அமைந்திருக்கலாம் எனச் சமூகவியல் ஆய்வில் வெளிப்படுத்த முடியும். இக்காலம் பட்டாணியருடன் சம்பந்தப்பட்டு நிற்பதால் தென்னிந்தியா மற்றும் ஈழத்தில் பெறப்படும் பட்டாணியர் தொடர்பான ஆய்வுக் குறிப்பகளின் அடிப்படையில் திமிலர்களின் வெளியேற்றம் கி.பி.4ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டே அமைந்திருக்க வாய்ப்புண்டு. மட்டக்களப்பிலிருந்து வெளியேறி வெருகல் கரைக்கு அப்பால் வாழ்கின்ற திமிலர் இன மக்களே இயக்கர் நாகர் சமூகத்தினருக்குப் பின் மட்டக்களப்பின் புராதன மக்கள் என்ற பெருமைக்குரியவர்கள் ஆகின்றனர்.

இவர்கள் முற்றாக வெளியேறினார்களா? அல்லது இதில் ஒரு பகுதியினனர் குக மரபினரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு அவர்களைச்சார்ந்து வாழ்ந்தர்களா என்பது தெரியவில்லை. .பின்வந்த சான்றுகளின்படி திமிலரின் ஒரு பிரிவினர் மட்டக்களப்பின் வட எல்லையான வெருகல் கரையில் வாழ்ந்துள்ளமை உறுதியாகின்றது. கி.பி. 13ம் நூற்றாண்டுக்குரிய மட்டக்களப்பின்

குல விருதுப் பாடல்களிலும் இம்மக்கள் இணைக்கபட்டுள்ளமை கவனத்தை ஈர்க்கின்றது.

**கலிங்கக் குடியேற்றம்**

கிடைக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் சுமார் 2260 ஆண்டுகால மட்டக்களப்பின் வரலாற்றினைப் பார்கின்றபோது இங்கு குடியேறிய மக்கள் காலத்திற்கு காலம் பண்டைய கலிங்கமான ஒரிசா, வங்கத்தின் தென்கிழக்கு, ஆந்திராவின் கிழக்குப்பகுதி மற்றும் பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, தொண்டை நாடு ஆகிய பண்டைய தமிழ் நாட்டிலிருந்து கடற் பயணம், இடப்பெயர்வு, குடியேற்றம், போர் நடவடிக்கைகள் ,ஆட்சி அதிகாரம் ஆகிய காரணங்களால் வந்துற்ற திராவிடப் பழங்குடிகளே என்பது புலனாகின்றது. ஈழத்தின் இதரபகுதிகளில் ஏற்பட்ட குடியேற்றங்களும் பெரும்பாலும் இத்தன்மையதே. எனினும் ஈழத்தின் மேற்கு கரைப்பிரதேசங்களான சிலாபம், புத்தளம் பகுதிகளில் சேரநாட்டின் கரையோர மக்கள் பெருமளவில் குடியேறியதாக கேரள ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறாயினும் கலிங்கமே மட்டக்களப்புக் குடியேற்றத்தின் முதல் தளமும் முக்கிய தளமும் எனக் குறிப்பிடலாம். அதனோடு தொடர்புடையதாகவே இதர தென்னிந்தியக் குடியேற்றங்கள் அமைகின்றன.

கி.மு. 500 வாக்கில் யாழ்ப்பாணத்தில் உசுமன் தலைமையில் வாழ்ந்த மீன் பிடிச் சமூகம் ஒன்று பாண்டுவசுவால் வெளியேற்றப்பட்டு பாணகையில் வந்து குடியேறியதாக யாழ்ப்பாண வரலாற்றுக் குறிப்புக்களால் அறியப்பட்டாலும் மட்டக்களப்பில் இது குறித்த தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை. எனினும் இம் மீன்பிடிச் சமூகமானது கலிங்கத்தின் குக வம்சத்தினரின் வரவுக்கு முற்பட்டு வாழ்ந்த திமிலர் சமூகத்தை அடையாளப்படுத்துவதாக அமையலாம். கி.மு.3ம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் ஏற்பட்டதாக சொல்லப்படுகின்ற கலிங்க குக மரபுக் குடியேற்றம் பற்றிய தகவல்களே இங்கு கிடைக்கின்றன. மட்டக்களப்பு மான்மியம் இதனை கலிங்கனான இரஞ்சலன் வந்த காலத்தோடு இணைத்து கி.மு.234 என குறிப்பிடுகின்றது. திரு.ஞா.சிவசண்முகம் எழுதிய மட்டக்களப்பு குகன் குல முக்குகர் வரலாறும் மரபுகளும் என்ற நூலில் திருக்கோயில் பகுதியில் பெறப்பட்ட கல்வெட்டு பாடல் ஒன்றினை சான்றுபடுத்தி இதனை கி.மு 261 எனக் கூறுவார். அக்கரைப்பற்று வரலாற்றினை எழுதிய ஏ.ஆர்.எம்.சலீம் அவர்கள்





தனக்குக் கிடைத்த பல்வேறு சான்றுகளை ஆதாரப்படுத்தி கி.மு.301 எனக் குறிப்பிடுவார். ஈழத்தின் தொன்மை மிக்க திருக்கோவில் ஆலயச் சாசனங்களையும் அதனோடு தொடர்பு பட்டதான ஓலைச்சுவடித் தகவல்களையும் சான்றாகப் பெறும் இவர் முதன் முதலில் இம் மக்கள் கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) பகுதியில் குடியேறியதாக குறிப்பிட்டுள்ளார். அரசடித்தீவில் திரு.அ.இராசதுரை அவர்களிடம் பெறப்பட்ட ஏட்டுப்பிரதியும் இத் தகவல்களையே கொண்டிருக்கிறது. இதனிடையே ஒரிசா தலைநகர் புவனேஸ்வரில் கிடைக்கும் கலிங்க அரசர் கார்வேலரின் (கி.மு.165) அதி கும்பாக் கல்வெட்டுத் தகவல்களின் படி தக்கணப்பிரதேசத்திலும் தாம்பிரபண்ணை நாட்டிலும் திரவிட சங்கார்த்தம் தோன்றி 113 வருடங்கள் ஆகிவிட்டன எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன்படி பார்த்தால் இக்காலம் கி.மு 278 ஐ குறிப்பதாக உள்ளது. தாம்பிரபண்ணை என்பது இலங்கையை குறிப்பதாகும். அசோகனின் பாறைக்கல்வெட்டும் இலங்கையை தாம்பிரபண்ணை என்றே குறிப்பிடுகின்றது. இத் தகவல்களை ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து பொதுவாக கலிங்க குடியேற்றத்தினை கி.மு. 3ம் நூற்றாண்டாக கொள்வதே பொருத்தமானதாக அமையும்.

மட்டக்களப்பை முதன் முதலில் இருக்கையாக்கி ஆட்சி செய்தவனாகக் கூத்திகன் குறிப்பிடப்படுகின்றான். இவனே மட்டக்களப்பின் (சம்மாந்துறைப்பகுதி) மாளிகை அமைத்தவனாக பேசப்படுகின்றான். இவனது புதல்வனே சேனன் எனவும் மான்மியம் கூறுகின்றது. இவ்வாட்சிக் காலத்தை கி.மு. 2ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக அது கணிக்கின்றது. இதனை ஒத்த வரலாற்றுக் குறிப்புகள் சிங்கள வரலாற்று நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. சூரத்தீசனின் ஆட்சிக்காலத்தே கூத்திகன், சேனன் எனும் சேரத்துத் தலைவர்கள் ஆட்சி புரிந்தமையினையும் இவர்களது காலத்தே பெருமளவு சேரக்குடியேற்றம் இடம்பெற்றுள்ளமையையும் இவை குறிப்பிடுகின்றன. அண்மைய இலங்கை வரலாற்றாசிரியர்களின் கணிப்பின்படி கூத்திகன், சேனன் என்போர். கி.மு 236 - கி.மு 214 வரையான காலப்பகுதியில் அனுராதபுரத்தில் இருந்து ஆட்சி செய்தனர் எனக்கூறுவதால் சேர நாட்டவரான இவர்களது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசமும் இவர்களது ஆட்சிக்குள் இருந்ததெனக் கொள்ளலாம்.

### அந்தணர் குடியேற்றம்

இக்காலத்தே மட்டக்களப்பின் தென்பகுதியில் ஏற்பட்ட ஒரு அந்தணக் குடியேற்றம் பற்றி அக்கரைப்பற்று பூ சித்திவிநாயகர் ஆலயத்தில் பெறப்படும் சில ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. கி.மு. 2ம் நூற்றாண்டில் வட கலிங்கத்திலிருந்து வந்த நான்கு குடும்பம் முதலில் குமுக்கன் பள்ளத்தாக்கிலும் பின்னர் கருங்கொடித்தீவின் தில்லை நதி ஓரத்திலும் குடியேறியதாகவும் இது ஒரு ஆரியக் குடியேற்றமாகவும் சொல்லப்படுகின்றது. எனினும் இவர்கள் ஆதிசைவ சிவப்பிராமணர்கள் என குறிப்பிடப்படுவதால் கி.பி. 1ம் நூற்றாண்டில் உன்னரசுகிரி மனு நேயவாகுவின் காலத்தில் நிகழ்ந்த தமிழகத்தின் வேளாளர் மற்றும் அந்தணர் வரவாகவே இதனைக் கொள்ள முடியும்.மட்டக்களப்பு மான்மியமும் இவ்வாறே கூறுகின்றது. இதனைச் சோழ நாட்டில் திருச்சோழனது ஆட்சிக்காலமாக அது கணிக்கின்றது. இக்காலத்தில் அனுராதபுர அரசு மீது சோழர் மேற்கொண்ட படையெடுப்புப் பற்றியும் ஈழத்தில் அவர்களது ஆதிக்கம் பற்றியும் தமிழ்நாட்டு வரலாறுகள் விபரிக்கின்றன. சிங்கள வரலாற்று ஆவணங்களும் இதனைக் குறிப்பிடுகின்றன. தமிழக சோழராட்சி வரலாற்றில் இது திருமாவளவனுடைய ஆட்சிக்காலமாகக் கொள்ளமுடியும். திருமாவளவனே மான்மியம் குறிப்பிடும் திருச்சோழனாக கருதுவதற்கான சான்றுகள் பின்னர் விபரிக்கப்படும்.

### சேர நாட்டுக் குடியேற்றம்

கி.பி. 2ம் நூற்றாண்டில் இலங்கை வேந்தன் இரண்டாம் கஜபாகு, சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரில் எடுத்த கண்ணகி விழாவில் கலந்துகொண்டமை பற்றி தமிழக வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதனை முக்கியப்படுத்தியதாக பல வரலாற்று ஆவணங்கள் கால கணிப்புகளைச் செய்திருக்கின்றன. இவன் வஞ்சியிலிருந்து கண்ணகி சிலையுடன் நூற்றுக்கணக்கில் சேரக்குடிகளை அழைத்து வந்ததாகவும் கண்டியில் கண்ணகிக்கு கோயில் அமைத்து(பத்தினி தெய்யோ தேவாலய) சிலையை பிரதிஸ்டை செய்தபின் சேரக்குடிகளை கிழக்கில் குடியமர்த்தியதாகவும் சொல்லப்படுவதால் இவர்கள் குடியமர்த்தப்பட்ட இடம் மட்டக்களப்புப் பிரதேசமாக இருக்க வாய்ப்புள்ளது. கேரளத்து சமூகவியல் பேராசிரியர் எஸ்.ஆர்.பணிக்கர் தனது ஆய்வுக்கட்டுரையில் (Journal of Kerala studies) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.





கி.பி. 2ம் நூற்றாண்டு முதல் தொடர்ச்சியாக கேரளத்திலிருந்து (சேரநாடு) ஈழநாட்டுக்கு மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். ஈழத்தின் வடமேற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் இவர்கள் பெருமளவில் குடியேறினர். இவர்களில் முக்குவர்கள், பணிக்கர்கள் மற்றும் மழவர்கள் முக்கிய சமூகத்தினராகின்றனர். மலையாளத்து மரபுவழிப் பாரம்பரியங்களையும் கலாசார விழுமியங்களையும் இம்மக்கள் தங்களுடன் கொண்டு சென்றதோடு மேலும் அவற்றை அவர்கள் அங்கு உயிர்ப்போடு வளர்த்தெடுக்கலாயினர். நமது பண்பாட்டின் உண்மையான வேர்களை கேரளம் பெருமளவு படிப்படியாக அழித்துவிட்ட போதிலும் ஈழத்துத் தென்கிழக்குப் பிரதேச மக்கள் அவற்றை இன்றுவரை வளர்த்தெடுத்ததன் மூலம் நமது பாரம்பரியத்துக்கும் அவர்களே பெருமை சேர்த்தவர்களாகின்றனர்.

எனப் பெருமிதப்படுகின்றார்.

### வன்னியக் குடியேற்றம்

மட்டக்களப்பின் அடுத்து வரும் குடியேற்றமாக அமரசேனனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 364) இராமநாதபுரத்தில் இருந்து வந்த ஏழு வன்னியச்சியரும் அவர்களது கணவன்மாரும் பற்றிய மான்மியக் குறிப்பினைக் குறிப்பிடலாம். இவர்கள் மட்டக்களப்பின் ஏழு ஊர்களில் குடியேறியதாக தகவல்கள் கூறுகின்றன. அக்கரைப்பகுதி(அக்கரைப்பற்று) தொடக்கம் தற்போது பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பின் பண்டைய தமிழ் கிராமமான முத்துக்கல் வரையும் இவ்வூர்கள் குறிப்பிடப்படுகின்றன.

### மண்முனைக் குடியேற்றம்.

அடுத்து நிகழ்ந்த முக்கிய இந்தியக் குடியேற்றமாக கொள்ளப்படுவது மண்முனைக் குடியேற்றமாகும். இக்காலத்தைப் பெரும்பாலும். கி.பி 5ம் நூற்றாண்டின் தொடக்கமாகக் கொள்ள போதிய சான்றுகள் உள்ளன. மண்முனைச் சிற்றரசு உருவாக்கப்பட்டு கலிங்க நாட்டிலிருந்து வந்த இளவரசி உலகநாச்சிக்கு அவ் அரசுப் பொறுப்பு வழங்கப்பட்டது. இக்காலத்தே முதலில் குகக் குடும்பம் நூற்றாறும் இன்னும் சில சமூகப்பிரிவினரும் அழைத்து வரப்பட்டமை தெரிகின்றது. அவளது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிலும் இதே போன்ற ஒரு குடியேற்றம் இடம்பெற்றமைக்கான தகவல்கள் கிடைக்கின்றன.

மண்முனைக் குடியேற்றத்தில் கோவில் குளமும் அதனைத் தொடர்ந்து தாழங்குடா மற்றும் புதுக்குடியிருப்பும் முக்கிய தளங்களாக அறியப்படுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் பரந்துள்ள சிறைக்குடிகள் எனக் கொள்ளப்பட்ட சில சமூகங்கள் மண்முனைக் குடியேற்றத்தின்போது தாழங்குடாவைத் தொடக்க வதிவிடமாக்கியமையும் தெரிகின்றது. உலகநாச்சியால் எடுத்துவரப்பட்ட காசிலிங்கம் கோவில் குளத்தில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டதாகவும் இளவரசியின் அரண்மனை தாழங்குடாவில் அமைக்கப்பட்டதாகவும் கள ஆய்வுத் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. அங்குள்ள மாளிகையடித் தெரு இதற்குச் சான்றாகச் சொல்லப்படுகின்றது. அத்தோடு இன்று இப்பிரதேசத்தே வாழுகின்ற தொழிற் பிரிவு சமூகத்தினர் வரலாற்று ரீதியாக தங்களை வெளிப்படுத்தும் போது தாழங்குடாவை மையப்படுத்தியே தங்களை அடையாளப்படுத்துகின்றனர்.

இக்காலகட்டத்தே கலிங்கத்தின் வரலாறு பற்றி தெரிந்துகொள்ள முற்படுவது நன்மை பயப்பதாகும். காரவேலரின் சந்ததி ஆட்சி முடிவுற்ற பின்னர் கி.பி 2ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் கலிங்கத்தில் வேற்றார் படையெடுப்புக்களும் ஆட்சிப் பறிப்புகளும் அடிக்கடி இடம்பெறலாயின. களப்பார், பல்லவர் போன்றவர்கள் ஆதிக்க நிலைக்குள் வந்ததோடு தமிழகம்வரை பரந்து நின்றனர். இக்காலத்தே சிற்றரசுகளில் நிலைகொண்டிருந்த கங்கர்கள் வேகமாகத் தலையெடுக்கலாயினர். கங்கர்கள் என்போர் கங்கைவெளியைச் சார்ந்த திராவிட இனத்தவராக கொள்ளப்படுபவர்கள். இராமாயணக்கதையில் இடம்பெறும் குகனும் இதே இனத்தைச்சார்ந்தவனாக அடையாளப்படுத்தப்படுகின்றான். கங்கைக் கரைப்பிரதேசத்தில் வங்கம் சார்ந்திருந்த பிரிவினர் வங்கர் எனப் பின்னர் அழைக்கப்பட்டாலும் கங்கரும், வங்கரும் ஒரே திராவிட சமூகப்பிரிவினர் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். உலகநாச்சியின் காலம் பற்றியும் அவள் தந்தையான குகசேனனது ஆட்சிக்காலம் தொடர்பாகவும் பார்க்கின்ற போது குகசேனன் கலிங்கத்தின் ஒரு சிற்றரசனாகவும் கங்கர் சமூகத்தை சேர்ந்தவனாகவும் கொள்ளவே அதிக வாய்ப்புத் தென்படுகின்றது. உலநாச்சியும் அவளால் அழைத்து வரப்பட்டவர்களும் கலிங்க நாட்டினராக இருப்பினும் கலிங்க குடியிலிருந்து இவர்கள் உலகநாச்சி குடியெனப் பிரிவுற இது ஒரு காரணமாக அமையலாம்.





### சீர்பாதர் குடியேற்றம்

அடுத்து குறிப்பிடப்பட வேண்டிய குடியேற்றமாக சீர்பாத குல மக்களின் குடியேற்றம் இடம்பெறுகின்றது. இது தொடர்பாக நமக்குக் கிடைக்கின்ற ஆதாரங்களாக சீர்பாதர் வரன்முறைக் கல்வெட்டுப் பாடல் மற்றும் வீரர்முனை செப்பேட்டுப் பாடல்களைக் குறிப்பிடலாம். இப்பாடல்களில் சொல்லப்படும் திருவொற்றியூர், கட்டுமாவடி, பழையாறு, பெருந்துறைப் பகுதிகள் சோழநாட்டினைச் சார்ந்தவை. எனினும் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் சீர்பாதர் என்ற ஒரு சமூகத்தினர் இதுவரை அடையாளப்படுத்தப்படவில்லை தமிழக கேரள சாதிப்பட்டியல்களினும் இச்சமூகம் குறிப்பிடப்படவில்லை, புராதன தமிழர்கள் என்ற வரையறைக்குள்ளும் இவர்கள் இடம்பெறில்லை. கி.பி. 8ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 9 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மட்டக்களப்புக்கு வந்ததாகக் கருதப்படும் இம்மக்கள் தங்களை அழைத்துவந்த சீர்பாத தேவியின் பெயரால் தங்கள் சமூகத்தினை அடையாளப்படுத்துவதில் ஒரு அர்த்தம் புலப்படவே செய்கின்றது. கலிங்க இளவரசி உலகநாச்சியால் அழைத்துவரப்பட்ட கலிங்கத்தின் மக்கள் உலக நாச்சி குடியென எவ்வாறு பெயர் பெற்றார்களோ அதேபோல சோழநாட்டிலிருந்து சீர்பாத தேவியால் அழைத்து வரப்பட்ட இவர்களும் சீர்பாத குலத்தினர் எனும் சிறப்புப் பெயரினைச் சமூகப் பெயராகப் பெற்றிருக்க முடியும்.

### சோழராட்சிக் குடியேற்றங்கள

இதன் பின்னர் மட்டக்களப்பில் இடம்பெற்ற பெருமளவு குடியேற்றங்கள் சோழராட்சிக் காலத்தை குறித்து நிற்கும். கி.பி. 985 தொடக்கம் 1044 வரை சோழரின் வலுவான ஆதிக்கம் ஈழத்தில் இருந்ததாக தமிழக வரலாற்று ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன. எனினும் மட்டக்களப்பு சரித்திரக் குறிப்புகள் இக்காலத்தை கி.பி 1078 வரை நீடித்துக்காட்டுகின்றன. சோழராட்சியின் போது பெருமளவு தமிழ் நாட்டினர் பல்வேறு மூகப் பிரிவுகளிலிருந்து வந்து ஈழத்தில் குடியேறினர். சோழ அரசின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் புரிவதற்காக தாம்பூலம் மடித்துக் கொடுக்கும் அடைப்பையர்கள் உட்பட பல பிரிவினர் இங்கு அழைத்து வரப்பட்டதாக சோழநாட்டு வரலாற்றுக் குறிப்புகளில் காணமுடியும். இவர்களது ஆட்சிக் காலத்தே பாதுகாப்புப் பொறுப்பின் நிமித்தம் பெருமளவு வன்னிய சமூகப் பிரிவினர் (படையாட்சியர்) இங்கு அழைத்து வரப்பட்டு பாதுகாப்பு மற்றும் நிருவாகப் பிரிவுகளில் நிலைகொண்டிருந்தனர். அரை

நூற்றாண்டுக்கும் மேற்பட்ட இக்காலம் தமிழரின் பெருமளவு குடி வரவுக்கும் தமிழ் நாட்டுச் கலாசார பரிமாற்றத்திற்கும் முக்கிய கால்கோளாக அமைந்தது எனக் குறிப்பிடலாம்.

**மாகோன் ஆட்சிக் குடியேற்றங்கள்**

அடுத்து முக்கிய குடியேற்றமாகக் கொள்ளப்படுவது கலிங்க மாகோனின் ஆட்சிக் காலத்தை மையப்படுத்தியதாக அமையும். கி.பி 1215 தொடக்கம் 1255 வரையான இக்காலம் மட்டக்களப்பின் மிக உக்கிரமான எழுச்சிக்காலமாகும். தடையற்ற குடியேற்றங்கள் நிகழப் போதிய வாய்ப்பினை அவனது ஆட்சிக்காலம் அமைத்துக் கொடுத்தது. சிங்கள வரலாற்று நூல்கள் கலிங் மாகோன் 24000 படைவீரர்களுடன் வந்தபின் 40000 படைவீரர்களை வைத்து பாதுகாப்பைப் பலப்படுத்தினான் எனவும் ஆயிரமாயிரம் தமிழர்களை இங்கு கொண்டுவந்து குடியேற்றினான் எனவும் அளவுக்கதிகமான கற்பனைக்குள் மிகைப்படுத்தி நின்றாலும் நூற்றுக் கணக்கான தமிழ் நாட்டினர் (சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகள்) அக்கால கட்டத்தே அழைத்துவரப்பட்டமை புலனாகின்றது. இக் குடியேற்றங்கள் மட்டக்களப்பில் மாத்திரமன்றி ஏனைய வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்குப் பிரதேசங்களிலும் பெருமளவு இடம்பெற்றிருக்கின்றன.

**பட்டாணியர்**

அடுத்து மிக முக்கயப்படுத்தப்பட வேண்டிய நிலையில் மட்டக்களப்பு வரலாற்றில் பட்டாணியர் பற்றிய தகவல்கள் பெறப்படுகின்றன. இப்பிரதேச மக்களோடு குறிப்பாக முற்குக சமூகத்தினரோடு மிகவும் பின்னிப் பிணைந்தவர்களாக இச்சமூகத்தினர் பேசப்படுகின்றனர். இஸ்லாம் மதம் தோற்றம் பெறுவதற்கு முற்பட்டதான கால வரலாறு இவர்களுக்கு உண்டு. வியாபார நோக்கில் பாரசீகம் மற்றும் அரேபியாவில் இருந்து வந்த இம்மக்களை மட்டக்களப்பு வரலாறு பட்டாணியர் என்றே குறிப்பிடுகின்றது. பண்டைய தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் வரலாற்றுப் பதிவுகளின்படி உருதுமொழி பேசிய பாரசீகர்களை பட்டாணியர் எனவும் அரபு மொழி பேசிய அரேபிய நாட்டவர்களை அரேபியர் எனவும் அழைக்கப்பட்டமை தெரிகின்றது. இங்கு இவர்கள் முற்குக தலைவர்களுக்கு பக்கபலமாக விளங்கி திமிலரை வெளியேற்றி முற்குகரின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த உதவியமையும் அதன் பொருட்டு அச்சமூகப் பெண்களை மணம்புரிந்து ஏறாவூரில் குடியிருந்தமையும்,





மட்டக்களப்பு தொடர்பாக பெறப்படுகின்ற வரலாற்று ஆவணங்கள் அனைத்திலும் பரவலாகவே தென்படுகின்றன.

இக்காலக் கணிப்புக் குறித்து சரியான தகவல்களைப் பெறமுடியவில்லை. எனினும் கொஸ்மஸ் (கி.பி 530) என்பவரது பயணக் குறிப்புகளாலும் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பட்டாணியர் பற்றிய கல்வெட்டுக் குறித்தும் யாழ்ப்பாணம் கந்தரோடையில் பெறப்பட்ட இவர்களது வெள்ளி நாணயம் குறித்தும் இக்காலத்தை கி.பி 4ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகக் கொள்ளமுடியும். அக்கால கட்டத்தே இவர்கள் முஸ்லீம்கள் என்ற பெயரினைப் பெற்றிருக்கவில்லை. கி.பி. 7ம் நூற்றாண்டு தொடக்கமாக இஸ்லாம் மதம் அரேபிய மற்றும் பாரசீக நாடுகளில் முழுமையான மதமாக நிலைபெற்றதைத் தொடர்ந்து இம்மக்கள் முஸ்லீம்கள் என்ற மதப் பெயரைப் பெற்றவர்களாயினர். எவ்வாறாயினும் இவர்களது தொடக்ககால வரலாறு மட்டக்களப்பின் முற்குகரது வரலாற்றின் எழுச்சிக் காலத்தோடு (கி.பி 5ம் நூற்றாண்டு) இணைவு பெறவே செய்கின்றது.

**முஸ்லீம்களின் குடியேற்றம்**

கி.பி 1540ற்கு பிற்பட்ட எதிர்மன்னசிங்கன் எனும் சிற்றரசன் ஆட்சிக்காலத்தில் வியாபார நோக்கில் வந்த சில முஸ்லீம்கள் கல்முனை நாற்பிட்டிமுனைப் பகுதியில் அம்மன்னனால் குடியமர்த்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. எனினும் மட்டக்களப்புப் பிரதேசத்தே முஸ்லீம்களின் பாரிய குடியேற்றமாக போர்த்துக்கீச ஆளுனர் கொன்ரைன்டின் டிசாவின் (கி.பி 1605 - 1635) ஆட்சிக்காலத்தைக் குறிப்பிடலாம். இக்காலத்தே மட்டக்களப்புப் பிரதேசம் கண்டி ராச்சியத்தின் கீழ் செனரதனின் ஆட்சியில் இருந்தது. போர்த்துக்கீசரின் செயற்பாடுகளுக்கு முஸ்லீம்கள் பெரும் தடையாக இருப்பதாகக் காரணங்காட்டி அவர்களை மேற்கு மற்றும் வடமேற்கு கரைப்பிரதேசங்களில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளில் போர்த்துக்கீசர் ஈடுபட்டனர்.

பாணந்துறை, கேனமுல்லை, தொட்டவத்தை, அகலவத்தைப் பகுதிகளில் போர்த்துக்கீசரின் செயற்பாடுகளுக்கு சார்பாக இருந்த முஸ்லீம்களை உயர்ந்த நிலையிலும் அவர்களை எதிர்த்து நின்றோரை தாழ்ந்த நிலையிலும் கணிக்கப்பட்டதற்கான தகவல்களை அங்கு பெறமுடியம். அவர்களது நெருக்குவாரத்ததால்

பெருமளவு முஸ்லீம்கள் புத்தளம், குருநாகல் ஊடாக கண்டிராச்சியத்துள் நுழைந்தனர். இவர்களது நிலையில் அனுதாபம் கொண்ட கண்டி மன்னன் செனரதன் மட்டக்களப்பின் வன்னியர்களுடன் தொடர்புகொண்டு கி.பி 1626 ல் நூற்றுக்கணக்கில் இம்மக்களை இங்கு குடியமர்த்தியதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு மான்மியமும் சில சிங்கள வரலாற்று நூல்களும் இவர்களை சுமார் நாலாயிரம் எனக் குறிப்பிடுகின்றன. பிற்பட்ட காலங்களில் சேரநாட்டின் (கேரளா) கொச்சின் தொடக்கம் சோழ நாட்டின் நாகபட்டினம் வரை வாழுந்த முஸ்லீம்களின் தொடர்பும் இப்பிரதேசத்துக்குக் கிடைத்திருப்பது தெரிகின்றது. இது பற்றிய மேலும் பல தகவல்கள் பிறிதொரு அத்தியாயத்தில் விபரிக்கப்படும்.

**போர்த்துக்கேயர் (பறங்கியர்)**

கி.பி 16ம் நூற்றாண்டினைத் தொடந்ததாக பறங்கியர் சமூகத்தினர் போர்த்துக்கல்லிலிருந்துவந்து மட்டக்களப்பில் குடியேறலாயினர். போர்த்துக்கீசரின் ஆட்சிக்காலத்தில் தொழில் நிமித்தம் இங்கு கொண்டுவரப்பட்ட இம்மக்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளைப்போல மட்டக்களப்பையும் தங்கள் வாழ்விடமாக்கிக் கொண்டனர். எண்ணிக்கையில் இவர்கள் குறைந்த விகிதத்தினராக இருப்பினும் தங்கள் மரபு வழிப் பாரம்பரியத்தைப் பேணியவர்களாகவே இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.





# மட்டக்களப்பு பிரதேச ஆட்சியாளர்களும் செயற்பாடுகளும்

**பண்டைய ஆட்சிப்பிரிவுகள்.**

மட்டக்களப்பு பிரதேச எல்லைகள் குறித்து ஏற்கனவே கண்டோம். இப்பிரதேசமானது காலத்திற்குக் காலம் வெவ்வேறு சூழலில் ஆடசியாளர்களினும் ஆட்சி அதிகாரங்களினும் பல்வெறு மாற்றங்களைப் பெற்றே வந்திருக்கின்றது. தனி அலகாகவும் மட்டக்களப்பு, உன்னரசுகிரி, மண்முனை எனப் பிரிவுபட்ட குறுநில அரசுகளாகவும் அனுராதபுரம், பொலநறுவை, கண்டி என மாறுபட்ட பேரரசுகளின் சிற்றரசுகளாகவும் பின்னர் பிரிவுபட்ட வன்னிமைப் பகுதிகளாவும் மட்டக்களப்பின் வரலாற்றுத் தோற்றம் தென்படுவதை எம்மால் அவதானிக்க முடியும். சிற்றரசு நிலைகளினும் கூட மட்டக்களப்பினது தன்னாதிக்கமானது முற்றுமுழுதாகக் கட்டுப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கி.பி 16ம் நூற்றாண்டு வரை பெறப்படவில்லை.

பண்டைய மட்டக்களப்பின் இருக்கை எனக் கருதப்படும் சம்மாந்துறை கி.பி 1ம் நூற்றாண்டு வரை பிரதேசம் முழுவதற்குமான தலைமையிடமாக விளங்கியிருக்கின்றது. அங்கு மட்டக்களப்புத் தரவை எனக் குறிப்பிடப்படும் இடம் இதற்கான சான்றினைச் சுட்டி நிற்பதை அவதானிக்க முடியும். மட்டக்களப்பு வாவி தொட்டு நிற்கும் நீர்ப்பரப்பே சம்மாந்துறை எனப்பட்டது. சிறிய படகு போல் பாய்மரம் விரித்த தோணிகளே சம்மான் ஆகும். வியாபாரப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வாவியூடே வரும் இவை அதன் தெற்கொல்லைத் துறையில் தரித்து நிற்கும். இதன் அடிப்படையிலேயே மட்டக்களப்புக்குச் சம்மாந்துறை எனும் பெயர் எழலாயிற்று.

கி.பி 1ம் நூற்றாண்டில் உன்னரசுகிரி குறுநில அரசு தோற்றம் பெற்றதும் அக்கரைப்பற்றின் தென்பால் விந்தனையை உள்ளடக்கி மாணிக்க கங்கை வரை நீண்டபகுதி இப்பெயரைப் பெறுவதாயிற்று. சன்னாசுமலை என தற்போது அழைக்கப்படும் இடமே

உன்னரசுகிரியின் பிரதான இருக்கையாக இருந்ததெனக் கருதப்படுகின்றது.இதனிடையே உன்னஸ்கிரியே உன்னரசுகிரி என்ற கருத்தும் ஆய்வாளர் மத்தியில் தென்படவே செய்கின்றது. எனினும் இதை நிலைநிறுத்தப் போதிய பக்கச் சான்றுகள் தென்படவில்லை. அதன்பின் கி.பி.4ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி 5ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மண்முனை அரசு தோற்றம் பெறுகின்றது. இதனை இன்றைய மட்டக்களப்பு மாவட்டமாக வரையறை செய்ய முடியும்.கி.பி 14 ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தே மட்டக்களப்பில் சமூக அதிகாரப் பூசல்கள் ஏற்பட்டமைக்கான தகவல்கள் கிடைக்கின்றன. இது உறுகுணை அரசு மேலாதிக்கம் பெற்றிருந்த காலமாகக் கருதப்படுகின்றது. இதனைச் சமன் செய்யவே மட்டக்களப்பின் நான்கு நிர்வாக ஆட்சிப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன. வெருகலாறு தொடக்கம் ஏறாவூர் வரையான பிரிவு மண்முனை வடபிரிவு அல்லது கோறளைப் பிரிவு எனவும் ஏறாவூர் தெற்கெல்லை தொடக்கம் கல்லாறு வரையான பிரிவு மன்முனைப் பிரிவு எனவும் கல்லாறு தெற்கெல்லை தொடக்கம் அக்கரைப்பற்றின் தெற்கெல்லை வரையான பிரிவு மட்டக்களப்புப் பிரிவு எனவும் மிகுதியான மாணிக்க கங்கை வரையுள்ள பிரதேசம் உன்னரசுகிரிப் பிரிவு எனவும் பெயர் பெறுகின்றது.

பின்னர் ஐரோப்பியர் ஆட்சியின் பிற்பட்ட காலத்தே உன்னரசுகிரியின் மாணிக்க கங்கைப் பகுதியும் விந்தனைப் பிரதேசத்தின் ஒரு பகுதியும் மட்டக்களப்பிலிருந்து பிரிக்கப்பட்டு சிங்களப் பகுதிகளுடன் இணைக்கப்பட குமுக்கன் ஆறு வரையும் தெற்கெல்லை சுருங்கிக் கொள்கின்றது. நாடு சுதந்திரம் பெற்ற பின் 1960 க்குப் பின்னர் இலங்கை அரசு தனது நிருவாக வசதிகளுக்காக மாவட்டங்களை உருவாக்கிய போது மட்டக்களப்பு - அம்பாரை என இப்பிரதேசம் இரு மாவட்டங்களாக தோற்றம் பெறுகின்றது.

**மட்டக்களப்பின் வரலாற்று ஆவணங்கள்.**

மட்டக்களப்பின் முழுமையான ஆட்சி அதிகாரங்காரங்கள் குறித்தோ அன்றேல் கிடைக்கின்ற வெளிப்பாடுகளுக்கான சரியான காலக் கணிப்புக் குறித்தோ போதிய சான்றுகள் நமக்குக் கிடைக்வில்லை. எனினும் ஒரு வரலாற்று ஆய்வுக்கான மெய்யான தேடலை நோக்கி பயணிப்பதற்கு ஏதுவாகச் சில முன்னெடுப்புக்கள் இங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நம்மால் இன்று மதித்து நினைவு கூரத்தக்க நமது முன்னவர்கள் சிலர் தங்களால்





முடிந்தவற்றை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்து சென்றார்கள். தங்கள் முன்னோர் வாயிலாகத் தொடராக அறியப்பட்டவற்றைத் தொகுப்பாக்கிப் பெட்டகங்களுள் வைத்து பாதுகாத்தார்கள். அவையே மட்டக்களப்பின் பூர்வீக சரித்திரம் என அவர்கள் அவற்றை நிச்சயித்தார்கள். பொதுவாக வரலாறுகளின் தோற்றம் உலக நாடுகளின் இத் தன்மையாகவே உருவாகியிருக்கின்றது.

இன்று நம்வருள் சிலர் தலைமுறைகளைக் கடந்தும் பூட்டிய பெட்டகத்தை பிறருக்காகத் திறந்துவிட மனமற்றவர்களாகவே வாழ்கின்றனர். கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இது விடயத்தில் நாம் மேற்கொண்ட முயற்சிகள் பெருமளவில் வெற்றியளிக்காத நிலையில் போர் நடவடிக்கைகள், தீ வைப்புகள், அழிபாடுகள் போன்றவற்றால் பல பெறுமதிமிக்க ஆவணங்கள் நம் கைக்குக் கிடைக்காமல் போய்விட்டன.

வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்கள் மேற்கொண்ட முயற்சியே மட்டக்களப்புப் பூர்வீக சரித்திரத்தின் இரு ஏட்டுப் பிரதிகளைத் தொகுப்பாக்கி மட்டக்களப்பு மான்மியம் என்ற பெயரில் 1962 ல் முதல் ஆவணமாக நமது கைக்குக் கிடைக்கின்றது. நீண்டகாலமாக நீற்றுப்போய் புதையுண்டு கிடக்கின்ற நமது வரலாற்று பெட்டகத்தை மான்மியம் என்ற திறவு கோலால் திறந்த நிலையில் அதனைக் கிண்டிக் கிளறி பார்க்க முயற்சிக்காத தன்மையில் நாம் இருந்துவிட்டோம். சமகாலத் தேவையினை நிறைவேற்றும் நோக்கில் மாத்திரம் மேற்பரப்பில் மிதந்தவற்றை மட்டும் நம்மால் அப்பிக் கொள்ள முடிந்ததே தவிர ஆழச்சென்று அலசிப் பார்க்க முடியவில்லை. மட்டக்களப்பு வரலாற்று படைப்பாளிகள் என இச் செயற்பாடுகளின் மூலம் எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதே தொடர்நிலையாகிவிட்டால் மட்டக்களப்பு வார்த்தைகளில் சொல்வதெனின் நமது வரலாறு ஒரு வெட்டாப்பு ஆகத் தென்படலாமே தவிர அது நிலையான வெள்ளாப்பு ஆக இருக்கப் போவதில்லை.

**ஆட்சியாளர்கள்**

**இராவணன் காலம்**

பண்டைய காலத்தே ஈழத்தில் குபேரனின் ஆட்சியும் பின்னர் இராவணன் மற்றும் விபீடணனின் ஆட்சியும் நடைபெற்று அதன்பின் பன்னெடுங்காலம் ஈழம் பழம்பட்டுக் கிடந்ததாக வேதங்கள்,

புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் சங்க இலக்கியங்கள் விபரிக்கின்றன. இந் நிகழ்வுக் காலங்களைப் பல்லாயிரம் வருடங்கள் முன்னோக்கிய தாகவும் அவை கூறுகின்றன. வரலாற்று ரீதியாக இவை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இராம இராவண யுத்தம் குறித்தும் இந்திய ஆய்வாளர்கள் இன்னும் ஒரு உடன் பாட்டிற்கு வரவில்லை. இது இலங்கையில் இடம்பெற வாய்ப்பிருக்க வில்லை என்று இன்றைய பல ஆய்வாளர்கள் கருது கின்றார்கள். அவ்வாறு ஒரு யுத்தம் நடந்திருக்கக் கூடுமாயின் இது இந்திய நிலப்பரப்பிலேயே நடந்திருக்க வேண்டும் எனவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

வான்மீகியின் காலத்திற்கு முன்னர் இராமர் பற்றிய கதையொன்று தஜரத ஜாதகக் கதையாக வருகின்றது. இதில் இராமர் தென்னிந்தியா ஊடாக இலங்கை சென்றதாகவோ இராம இராவண யுத்தம் ஒன்று நடைபெற்றதாகவோ குறிப்பிடப்படவில்லை. இவ் ஐதீகங்கள் மரபு வழியாக காலத்துக்கு காலம் வளர்ச்சி பெற்று பிற்பட்டெழுந்த இராமாயண காவியத்தில் சேர்க்கப்பட்டவை என்றே ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகின்றது. தொல்லியலாளர் எச்.டி.சங்காலியா ஒரிசாவை உள்ளடக்கிய இந்திய கிழக்குப் பகுதியில் இராமர் - இராவணன் மற்றும் லங்காதீப பற்றிய ஐதீகமொன்று பன்னெடுங்காலமாக நிலவி வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி தனது ஆய்வுகளின் அடிப்படையில் இது இலங்கையைக் குறிப்பிடாது எனவும் கூறுகின்றார். உத்தரப் பிரதேசம் வாரனாசியிலிருந்து (காசி) சாரநாத் செல்லும் வழியில் லங்கா எனும் பெயரில் ஒரு சிறு நகரம் தென்படுகின்றது. இங்கும் இராம இராவண யுத்தம் நிகழ்ந்ததான ஐதீகமுண்டு. கி.பி 10ம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் பெறப்பட்ட ஆவணங்களில் இராமர் பற்றிய குறிப்புக்கள் எதுவும் இல்லை என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனினும் இராவணன் தொடர்பான நம்பிக்கைகளைப் பிரதேச வரலாற்றிலிருந்து முற்றுமுழுதாக ஒதுக்கமுடியாதென்பதால் அதுகுறித்த தொடர்ரான ஆய்வுகள் அவசியமானவையாகும்.

விஜயன் பற்றிய கதைகள் பொதுவாக இலங்கையின் வரலாற்று ஆவணங்கள் அனைத்திலும் இடம்பெறுவதோடு வட இந்தியாவிலும் முற்பட்ட காலத்தே இது பற்றிய பதிவுகள் பெறப்படுகின்றன. ஹுவான் -ஸாங் என்ற சீனரின் யாத்திரைக் குறிப்புகளிலும் இது இடம்பெறவேசெய்கின்றது. சிங்கபுரம்





இந்தியாவின் வடமேற்கு பகுதி என்பதால் விஜயனை ஆரியர் வழியால் பார்ப்பதே சரியென்பது சில ஆய்வாளர்களின் வாதமாக இருக்கின்றது. மகாவம்சம் குறிப்பிடும் மகதநாடு, வங்க நாடு, கலிங்க நாடு என்பவை கிழக்கிந்தியாவிலும் சிங்கபுரத்து லாடாநாடு இந்தியாவின் வட மேற்கிலும் அமைந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். (மகாவம்சம் முரண்பட்ட அவதானிப்புக்களைக் கூட சாதகமாக்க முற்படுவதையே இது காட்டுகின்றது).

குவேனி - விஜயன் தொடர்பு, பாண்டிய இளவரசியின் திருமணம், இலங்கையில் விஜயன் கால் வைத்த போது புத்தர் பரிநிர்வாணம் அடைந்தமை, இலங்கையின் கலிங்க வங்க ஆட்சியாளர்களை லாடா நாட்டு விஜயனுடன் இணைக்க முற்பட்டமை, பௌத்த மதத்தை இலங்கையில் பாதுகாக்கும் படியும் இலங்கையில் தான் அது நிலைக்கப் போகிறது என்பதைப் புத்தரே உபதேசித்தாகக் கூறுவதும் முரண்பாடுகளுக்கு இடைப்பட்ட தனது சாதகமான நகர்த்தலை ஒரு பெரும் வரலாற்றாக்கிச் சித்தரிப்பதோடு இலங்கையின் பண்டைய திராவிட இனத்தையும் அவர்களின் சிறப்பு மிக்க நாகரீகத்தையும் அது தொடர்பான பாரம்பரியத்தையும் இழிவுபடுத்தவும் மகாவம்சம் முற்பட்டிருக்கின்றது. இராமன் ஆரியத் தலைவனாக இருப்பினும் அவனின் கதையை மகாவம்சக் காலத்து நூல்கள் உள் வாங்காமைக்குக் காரணம் இதன்பால் தெளிவாகின்றது. இராமனை உயர்த்துவதன் மூலம் இந்துமதம் தலையெடுத்து விட்டால் பௌத்தம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வே அது. இதில் அவை கொண்ட மிகுந்த அக்கறையானது சிங்கள பௌத்தத்தை முன்னிறுத்த அவர்களுக்கு பேருதவி புரிந்தது என்றே கொள்ளவேண்டும்.

பொதுவான தகவல்களின் அடிப்படையில் இராவணன் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை ஆய்வுகளுக்கு உட்படுத்துவது மிகவும் அவசியமாகின்றது. இராம இராவண யுத்தம் என்பது ஆரியச் செல்வாக்கை நிலை நிறுத்த கிறிஸ்துவுக்கு பிற்பட்டு எழுந்த ஒரு கற்பனை வடிவமே என்பதுவும் இதே போன்றதாக வள்ளியோடு மாத்திரம் பேசப்பட்ட முருக வழிபாட்டில் திராவிடப் பெருமையை சீர்குலைக்க ஆரியரால் புகுத்தப்பட்டதே சூரசம்காரக் கதை எனவும் தற்போதைய ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்துவதை பார்க்கின்றோம். ஆரியருக்குரியவனான இந்திரனின் மகளாக தேவயானை சித்தரிக்கப்பட்டு முருகனுடன் இணைக்கப்படுவதும் திராவிட

இயக்கர் குலம் இராமாயணத்தில் அரக்கர்களாகவும் திராவிட மன்னர்களும் வீரர்களும் கந்தப் புராணத்தில் அசுரர்களாகவும் சித்தரித்துக் காட்டப்படுவதும் இத்தன்மையதே.

இவற்றையெல்லாம் விடுத்துப் பார்க்கும் நிலையிலும் ஈழத்தில் இராவணன் தொடர்பான வரலாற்றுப் பின்னனி ஒன்று மிகவும் ஆழமாக வேர்விட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள் வேண்டும். இராவணனது ஆட்சியில் அவனது கோட்டை கொத்தளங்கள் அமைந்த பகுதி தென்னிலங்காபுரியான திருக்கோவிலின் கிழக்குக் கடலுள் அமிழ்ந்து விட்டதாக இப் பகுதியில் பெறப்படுகின்ற வாய்மொழி வரலாறுகள் அவதானிப்புக்கு உட்படுத்தப்படவேண்டியவையாகும். இப் பிரதேசத்தே ஒரு தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்படின் ஒரு தெளிவினுக்கு மட்டக்களப்பு வரலாறு வர வாய்ப்பேற்படும். அவ்வாறு இது நிலை நிறுத்தப்படுமாயின் வரையறை செய்யப்படும் ஒரு கால கட்டத்தே மட்டக்களப்பின் பண்டைய ஒரு ஆட்சியாளனாக இராவணனை முன்னிறுத்த முடியும். அதுவரை கலிங்க ஆட்சியாளர்களை முன்வைத்தே மட்டக்களப்பு ஆட்சியாளர்களை தீர்மானிக்கும் வாய்ப்புண்டு.

**கலிங்க அரசர்கள்**

ஈழத்தினதும் குறிப்பாக மட்டக்களப்பினதும் வரலாறானது பெரும்பாலும் கலிங்கத்தையே பின்னிக்கிடப்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே இவ் வரலாற்றுக் காலத் தேடலை கலிங்கத்தில் தொடங்குவதே மிகப் பொருத்தமானதாக அமையும். கலங்கத்தில் அசோகரின் பாறைக் கல்வெட்டு, புவனேஸ்வரத்திலுள்ள அதிகும்பா பாறைக் கல்வெட்டு மற்றும் சம்பைக் கல்வெட்டு போன்ற கிறிஸ்துவுக்கு முற்பட்ட கல்வெட்டுக்கள் தாம்பிரபண்ணே (தாமிரபண்ணை) நாடான ஈழத்தையும் தொட்டு நிற்கின்றது. இவை கலிங்கத்தின் அப்போதைய ஆட்சி நிலையினையும் சமூகங்களின் சிறப்பியல்புகளையும் குறிப்பிடுகின்றன. மாமூலனார் , மோசிகீரனார் போன்ற சங்ககாலத்துப் புலவர்கள் அப்போதிருந்த கலிங்க மன்னர்களைத் தங்கள் பாடல்களில் பெருமைப்படுத்தியிருப்பதுவும் தமிழநாட்டு மன்னர்களும் கலிங்க மன்னர்களும் நெருக்கமுறக் கலந்திருந்தமையை பண்டைய கலிங்க - தமிழக வரலாற்று ஆவணங்கள் நமக்கு உணர்த்துகின்றன. ஓரிசாத் தலைநகர் புவனேஸ்வரின் ஆவணக் காப்பகத்தில் பெறப்படுகின்ற பல தகவல்களால் யாவா, சுமத்ரா, ஈழம் போன்ற நாடுகளில்





கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கலிங்கரின் ஆதிக்கத் தன்மை அறியப்படுகின்றது.

கௌதம புத்தரின் ஆன்மீகப் புரட்சி கி.மு. 5ம் நூற்றாண்டினை மையப்படுத்தியதாக அமைந்தது. கி.மு 4ம் நூற்றாண்டில் தனநந்தரின் கலிங்கப் பேரரசு தக்காணத்தின் ஆட்சித் தளத்தே முதன்மை நிலைக்கு அடிவைத்தது. தலைநகரான பாடலி அப்போது புகழ்பெற்ற வாணிப நகராக தலையெடுத்திருந்தது. தொடாந்து வந்த காலத்தே தனநந்தர்களும் சேரர்களும் கொண்டிருந்த வலுவான உறவு முறைகளை அங்கு தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. அதேபோல கலிங்கரான காரவேலரின் ஆட்சிக்குறிப்புகள் கலிங்கத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இருந்த நெருக்கத்தை வெளிப்படுத்துகின்றன. மட்டக்களப்பிலும் கலிங்கத் தமிழகத் தொடர்புகள் வலுப்பெற இவையும் ஒரு காரணம் என்றே கொள்ள வேண்டும்.

மிக நீண்ட காலமாக இயக்கர் நாகரின் குழுநிலை ஆட்சி முறைமை ஈழத்தில் பரவியிருந்த போது மட்டக்களப்புப் பிரதேசத்தில் நாகர்முனை (திருக்கோயில்), நாகன்சாலை(மண்டூர்), சூரியத்துறை(மட்டக்களப்புப் பெருந்துறை), நாகர்ப் பொக்கணை(மன்னம்பிட்டி) போன்றவற்றில் நாகரும் கதிர்காமம், மகியங்கனை, விந்தனை போன்றவற்றில் இயக்கரும் குழுநிலை ஆட்சி அதிகாரத்தில் இருந்தனர். இயக்க அரசி குவேனியின் ஆட்சியை தன்வசப்படுத்திய விஜயன் (கி.மு. 543) தம்மநுவரையை இருக்கையாக்கி முழு அரசை நிறுவியவனாகக் கருதப்படுகின்றான். இவனின் ஆட்சியின் பின்னர் இவனோடு தொடர்புபட்ட ஆட்சியாளர்களாக உபதீசன், பாண்டுவசு, அபயன் ஆகியோர் கி.மு. 454 வரை உபதிஸ்ஸ நுவரையில் இருந்து ஆட்சி புரிந்ததாக கூறப்படுகின்றது. பாண்டுவசுவின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு பகுதியினர் மட்டக்களப்புப் பாணகையில் வந்து இறங்கியதாக யாழ்ப்பாண வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக மட்டக்களப்பு பிரதேசத்தில் எதுவித சான்றுகளும் இதுவரை பெறப்படவில்லை என்பதால் இதனை ஒரு தகவலாகவே தற்போது கொள்ளமுடியும்.

கி.மு. 454 தொடக்கம் கி.மு. 437 வரையான காலப்பகுதி குறித்த சரியான தகவல்கள் இலங்கையின் வரலாற்றில்

குறிப்பிடப்படவில்லை. இக்காலத்தை உள் நாட்டுக் கலகக் காலம் என வரலாற்றில் சொல்லப்பட்டாலும் மீண்டும் இயக்கர் நாகர் வலிமை பெற்ற காலமாக இதனைக் கருதமுடியும். கி.மு. 437 தொடக்கம் கி.பி. 729 வரையான காலம் அனுராதபுரத்தைக் குறித்து நிற்கின்றது. இதில் கி.பி. 479 - 497 வரையான பதினெட்டு ஆண்டுகால ஆட்சியில் சிகிரியா காசியப்பனின் ராசதானியாக மிளிர்கின்றது. இக்கால மன்னர்கள் நாடு முழுவதையும் தங்கள் ஆளுகைக்குக் கீழ் கொண்டுவர முற்பட்டாலும் நிலையாக அதனைச் செயற்படுத்த முடியாத நிலையே பெரும்பாலும் அனுராதபுர ஆட்சியில் தென்பட்டது. மட்டக்களப்புக் குறுநிலப்பிரிவினை அவர்களது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாத தன்மையே இங்கு தெளிவாகின்றது. எனினும் நட்பு முறையான ஆட்சி முறைமையே மட்டக்களப்பில் நீண்டகாலம் தொடர்ந்திருந்தமையை அவதானிக்க முடியும். இதற்குக் காரணம் கலிங்க மரபுத்தளம் நிலைபெற்றிருந்தமையே.

மட்டக்களப்பின் தொடக்ககால அரசுப் பிரிவை முக்கியப்படுத்தும் தன்மையில் கூத்திகனை மட்டக்களப்பு மான்மியம் இனங்காணுகின்றது. இங்கே கலிங்கனான சிறிகுலசேனனின் வங்க குலத் தாய்வழி வாரிசாகக் கூத்தினை மான்மியம் குறிப்பிடுவதும் கால வரையறை செய்வதும் சற்று வேறுபடுவதைக் காணமுடிகின்றது. மகாவம்சம் போன்ற சிங்கள வரலாற்று நூல்கள் கூத்திகன், சேனன் இருவரையும் சேர நாட்டின் தளபதிகளாக வெளிப்படுத்துகின்றன. சேரநாட்டினரான இவர்களை வங்கர் குலத்தவர் எனக் குறிப்பிடும் மான்மியம் இதேபோல் பிற்பட்ட காலத்தே மட்டக்களப்பின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த சேரத்துப் பணிக்கர் குலத்தோனான எதிர்மன்ன சிங்கனையும் வங்கர் குலத்தோன் எனக் குறிப்பிடுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சூரத்தீஸனின் (கி.மு 246 - 236) ஆட்சியை சேனனும் கூத்திகனும் இணைந்து கைப்பற்றி அனுராதபுரத்தின் ஆட்சியை (கி.மு 236 - 214) நிலைப்படுத்தியதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சேனன் அனுராதபுரத்தில் நிலை கொள்ள கூத்திகன் மட்டக்களப்புக்கு வருகின்றான். இவனே இன்றைய சம்மாந்துறையை இருக்கையாக்கி மட்டக்களப்பை ஆட்சிபுரிந்தவனாகின்றான். இது தொடர்பான தகவல்கள் மட்டக்களப்பில் பரவலாகப் பெறப்படுவதோடு சம்மாந்துறைப் பகுதித் தடயங்களும் சான்றாக உள்ளன. தற்போது மலுக்கம்பிட்டி என அழைக்கப்படும் இடமே கூத்திகனது கோட்டை கொத்தளம்





அமைப்பதற்காக மண், கல் என்பன எடுத்த இடமாக குறிப்பிடப்படுகின்றது. இது அன்று மண்கல்பிட்டி என அழைக்கப்பட்டு மலுக்கம்பிட்டி ஆயிற்று என்பர். அதேபோல் மட்டக்களப்பு வாவியின் தென் முனையில் மட்டக்களப்பு அரசுக்கான பாதுகாப்புக் காவல் அரண் அமைக்கப்பட்டு அதில் படை வீரர்கள் நிலைபெற்றிருந்தமை தெரிகின்றது. வீரர்முனை என அழைக்கப்பட்டிருந்த அவ்விடம் பின்னர் வீரமுனை என மருவியதென்பர். மேலும் கூத்திகன் காலத்தில் அனுராதபுர அரசின் சுற்றுலாவிடுதி ஒன்று சிங்காரத் தோப்பில் அமைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இது மட்டக்களப்பு தனியரசாக உருவாகுவதற்கு முன்னர் அனுராதபுர ஆட்சியின் நேரடி நிருவாகத்தில் இருந்தமையைப் புலப்படுத்தும். அட்டப்பள்ளம் என்ற பழந்தமிழ்க் கிராமமே சிங்காரத் தோப்பு எனும் அழகிய பெயரை முன்னர் பெற்றிருந்தது. சிங்காரத் தோப்பு பின்னர் சிங்கார வத்தை எனவும் பின்னர் சிங்காரபுரம் எனவும் அழைக்கப்படலாயிற்று. சிங்காரபுர மாரியம்மன் ஆலயம் அங்கு இருந்தமை கொண்டு இதனை நிலைநிறுத்தலாம். கூத்திகன் காலத்தே தெற்கே பூமுனை மற்றும் தீகவாபி வரையான நிலப்பரப்பில் தென்னிந்தியக் குடியேற்றங்கள் இடம்பெற்றமையும் உறுதியாகின்றது.

கூத்திகன், சேனன் ஆட்சி முடிவுற்ற பின்னர் கி.மு. 77 வரை மட்டக்களப்பு அனுராதபுர அரசின் ஒரு சிற்றரசாக நிருவகிக்கப்படுகின்றது. இதன்பின் அனுராதபுரம் நாகமன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர மட்டக்களப்பும் அவர்களின் கீழ் செல்கின்றது. மகாகுல நாகன், சோர நாகன் என்போர் ஆட்சியிலிருக்கின்றனர் இது குறித்து மான்மியமும் விளக்குகின்றது. விண்டு அணையை (விந்தனை) இருக்கையாக்கி மட்டக்களப்பு அரசினை இயக்கர், நாகர் பொறுப்பேற்றதாகவும் கலிங்கரால் முன்னெடுக்கப்பட்ட சிவ வழிபாட்டினை ஒதுக்கி விட்டு தங்களது சிறு தெய்வ வழிபாட்டினையே இவர்கள் முன்னெடுத்தாகவும் முப்பது ஆண்டுகள் நீடித்த இவர்களது ஆட்சிபற்றி கலிங்க மன்னர் மதிவாகுகுணனுக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் இதன்பின் கலிங்கர் படையெடுப்பால் நாகராட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதுடன் மட்டக்களப்பில் கலிங்கர் மீண்டும் ஆதிக்கம் பெற்றதாக மான்மியம் குறிப்பிடுவதோடு ஆட்சிக்காலத்தை கி.மு. 82 எனவும் அது குறிப்பிடும். இலங்கை வரலாற்றாய்வாளர்களின் கணிப்பின்படி அனுராதபுர ஆட்சி மாற்றம் கி.மு.51ல் நிகழ்ந்ததாக குறிப்பிடுவதால் இக்காலக் கணிப்பு பெரும்பாலும் நெருங்கி வருவது தெரிகிறது.

இக்காலத்தே ஈழம் நோக்கிய கலிங்கப்படையெடுப்பு ஒன்றினை அவதானிக்க முடிகின்றது. இரஞ்சலன் என்பவனே இதற்குப் பொறுப்பேற்று வந்தவனாக மான்மியம் விபரிப்தோடு கலிங்கத்தில் அப்போது மதிவாகுகுணனின் ஆட்சி இருந்ததாக அது கோடிடுகின்றது. கலிங்கத்தைப் பொறுத்தவரையில் கலிங்கரான தனநந்தர்களுடைய ஆட்சி கி.மு. 318 ல் சந்திரகுப்த மோரியரால் பறிக்கப்பட்ட பின்னர் 150 ஆண்டுகளுக்கு மேலாக கலிங்கம் பல உள்நாட்டுக் குழப்பங்களுக்கு ஈடுகொடுத்தமை தெரிகின்றது. அதன்பின் கி.மு 160 தொடக்கம் கலிங்கரான காரவேலரும் அவருடைய வாரிசுகளும் கி.பி 3ம் நூற்றாண்டு வரை பேரரசாகவும் சிற்றரசுகளாகவும் நீடிக்கின்றனர். இதனால் மான்மியம் குறிப்பிடும் மதிவாகுகுணன் ஒரு கலிங்கனாக இருக்கவே வாய்ப்பாகின்றது.

மட்டக்களப்பின் விந்தனையில் இடம்பெற்ற போரில் இரு பக்கமும் பெருமளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதன் பின் நாகர் கலிங்கருக்கு உதவியதாகவும் தொடர்ந்து இயக்கருடைய ஆட்சிகள் பறிக்கப்பட்டு அவர்கள் விந்தனை, மையங்கனை,லக்கலை, கதிர்காமம் போன்ற இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டதாகவும் தெரிகின்றது. இதையேதான் மகாவம்சம் இயக்கரை அப்புறப்படுத்தி அப்பகுதியை தூய்மைப்படுத்த வேண்டிய எண்ணத்தை புத்தர் ஏற்கனவே கொண்டிருந்ததாக குறிப்பிடுவதன் மூலம் தனது வரலாற்றுத் தெளிவினுக்கு புடம்போட முற்படுகின்றது.

இதன் பின்னர் மட்டக்களப்பின் ஆட்சி அதிகாரம் படையாட்சித் தலைவனான சிறிகுலனிடம் சென்றதாக மான்மியம் குறிப்பிடும். இவனைப் படைப்பிரிவு ஒன்றினுக்கு தலைமை தாங்கி வந்த சோழ நாட்டினனாகவோ அல்லது தொண்டை நாட்டினனாகவோ கொள்ள முடியும். இவனது ஆட்சிக்குப் பின்னர் இவனின் மகனான வாகூரன் கி.மு 32 ல் ஆட்சிப் பொறுப்பேற்றதாகத் தெரிகின்றது. இவனே மாணிக்க கங்கையிலிருந்து முக்கனார் எனும் வாய்க்காலை வெட்டி விவசாயத்தை ஊக்குவித்தவனாக கருதப்படுகின்றான்.இதன் மூலம் பாசனம் பெற்ற பிரதேசம் வாகூரவட்டை என அழைக்கப்பட்டிருந்தது. பூமுனைப் பகுதியில் அமைந்த இப் பகுதி இன்று வாகூரவெட்டை எனத் திரிவுபட்டு நிற்கின்றது. இவனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் அரசுப் பொறுப்பு இவனின் மகனான





பிரசன்ன சித்துவிடம் கைமாறுகின்றது. இதனை கி.பி 1ம் நூற்றாண்டின முற்பகுதியாக கொள்ள முடியும்.

இதன் பின் கலிங்க குமாரன் புவனேகபாகு தனது மனைவியும் திருச் சோழனின் புதல்வியுமாகிய தம்பதி நல்லாளுடன் மட்டக்களப்பிற்கு யாத்திரை வந்ததாகக் கூறப்படுகின்றது. கலிங்கத்தில் காரவேலரின் ஆட்சிக்கு முன்னர் ஆட்சியாளர்களாக இருந்த மோரியர்கள் கலிங்கத்திலிருந்து தமிழ் நாட்டுக்குள் நுழைய முற்பட்டபோது சோழர்கள் அவர்களை விரட்டி அடித்தனர். கி.பி 1ம் நூற்றாண்டில் திருமாமளவன் 2ம் கரிகால் சோழன் பரந்த ஆட்சியாளனாக தமிழகத்தில் விளங்கியவனாகின்றான். கலிங்கர்களுடன் நெருக்கமான நட்புக் கொண்டவனாக தக்காணப் பிரதேசம் எங்கும் திராவிட சங்கார்த்தம் நிலை நிறுத்தப்பட இவன் பெரும் பங்காற்றியவன் .இவனை திருமாச் சோழன் எனவும் வரலாற்றில் கூறப்படுகின்றது.

**கரிபரி காலாட் பொரு தளற் சென்னி**
**விரி தரு கருவூர்த் திருமாச் சோழ....**

என வரும் கருவூர்ச் சிறப்புப் பாடலடிகள் திருமாமளவனை திருமாச் சோழன் என்றே குறிப்பிடுகின்றன. இவன் புகழ் ஈழம் வரை பரவியிருந்தது. ஈழம் புகுந்து அனுராதபுர ஆட்சியை வெற்றி கொண்ட இவன் சோழப்படைகளால் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான ஈழத்துப் போர் வீரர்களையும் இன்னும் பலரையும் சிறைப்பிடித்து தமிழகம் கொண்டுவந்து காவேரிக்குக் கல்லணை கட்டியதோடு அவர்களை வைத்து களனி திருத்தி பாசனம் செய்து வளம் பெருக்கியவனாகப் புகழப்படுகின்றான். நமக்கு கிடைக்கின்ற மட்டக்களப்பின் தகவல்களும் காலமும் தமிழக - கலிங்க வரலாற்று குறிப்புகளுடன் குறிப்பாக கலிங்கமும் சோழமும் கொண்டிருந்த நெருக்கத்தின் பால் பெருமளவு இணைந்திருப்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மான்மியம் குறிப்பிடும் திருச் சோழனே கருவூர் வரலாற்றில் சொல்லப்படுகின்ற திருமாச் சோழனாக கொள்ளப் போதிய காரணம் தென்படுவதாக அமைகின்றது. திருமாச் சோழனே திருமாமளவனென்றும் 2ம் கரிகால் சோழன் என்றும் குறிப்பிடப்படுபவனாகின்றான்.

நீண்டகால வரலாற்றுப் புகழ் மிக்கதாக விளங்கிய நாகர்முனை (திருக்கோவில்) சுப்ரமணியர் ஆலயம் பாழுற்றிருந்த

நிலையில் மட்டக்களப்புச் சிற்றரசன் பிரசன்னசித்துவினதும் பிரதேச மக்களதும் வேண்டுகோளினை ஏற்றுக்கொண்ட புவனேகபாகுவும் தம்பதி நல்லாளும் திருச்சோழனின் உதவியினைப் பெற்று இவ் ஆலயத்தை கி.பி 1ம் நூற்றாண்டில் செப்பனிட்டதாகக் கூறப்படுகின்றது.பின்னர் இவ் ஆலயத்தை பிரசன்னசித்துவிடம் ஒப்புவித்து நாடு திரும்பவேண்டிய நிலையில் தம்பதி நல்லாள் குழந்தைப் பேற்றினை எதிர்பார்த்திருந்த வேளையில் அவர்களை இங்கு தங்கவைக்கவேண்டி ஏற்பட்டமையால் மட்டக்களப்பின் தென்பால் அவர்களுக்காக ஒரு சிற்றரசு உருவாக்கப்பட்டது. அதுவே உன்னரசுகிரியாகும். இதற்கு எல்லையாக மக்கனல் வெட்டு வாய்க்காலும் தெற்கு மாணிக்க கங்கையும் மேற்கு கடவத்தையும் கிழக்கு கடலும் கொண்ட நிலப்பரப்பாகச் சொல்லப்படுகின்றது. மக்கனல் வெட்டு வாய்க்கால் இன்றைய கோமாரிக்கும் பொத்துவில்லுக்கும் இடைப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. பின்னர் புவனேகபாகுவுடன் இங்கு வந்த சோழ நாட்டுக் குடிகளும் குடியமர்த்தப்பட்டு காடுகள் திருத்தி களனிகளும் உருவாக்கப்பட்டன.

இதன்பின் உன்னரசுகிரியின் ஆட்சிப் பொறுப்பு புவனேயபாகுவின் மகன் மனுனேயபாகுவிடம் செல்கின்றத. மட்டக்களப்பின் அரசுரிமை பிரசன்ன சித்துவின் மகன் தாசனிடம் கைமாறுகின்றது. இவனை தாசுதன் எனக் குறிப்பிடும் ஏட்டுப் பிரதிகளும் உண்டு. மனுனேயபாகுவின் ஆட்சியின்போது உன்னரசுகிரியன் தென் மேற்குப் பகுதி மேலும் விரிவு பெற்றதாகத் தெரிகின்றது. மட்டக்களப்பு அரசின் சம்மதத்தோடு மனுனேயபாகு திருக்கோவில் ஆலயத்தை சிறப்பாக புனரமைத்ததாகத் தெரியவருகின்றத. சோழநாட்டு சிற்பிகளைக் கொண்டு பாரிய அளவில் செப்பனிடப்பட்ட இவ் ஆலயத்தின் குட முழுக்கானது அனுராதபுரம் யாழ்ப்பாண அரசர்களுக்கும் மற்றும் கலிங்கநாடு, வங்கநாடு, சிங்கநாடு, சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு (ராமநாடு) மன்னர்களுக்கும் அழைப்பனுப்பப்பட்டு மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டதாக மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் தொடர்பான ஏட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ் ஆலயத்துக்காக சங்குமண் கண்டி (சங்கமன் கண்டி) தொடக்கம் சாகாமத்தின் வட பகுதியான தாடகிரி வரை பெருமளவு களனி செப்பனிடப்பட்டு இவ் ஆலயத்திற்கு வழங்கப்பட்டதற்கான போதிய சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.





தமிழக எழுத்தாளர் ஆர்.எஸ்.மணி எழுதி 1971 இல் வெளியிடப்பட்ட ஈழத்து ஆலயங்கள் பற்றிய கட்டுரைகளில் தென்னிலங்கை வேந்தன் இராவணனால் பூசிக்கப்பட்ட ஆலங்களில் ஈழத்தின் தென் கிழக்கில் அமைந்த திருக்கோவில் ஆலயம் மிக முக்கியத்துவம் பெறுவதோடு தமிழக மூவேந்தர்களது மதிப்பினையும் கொடையினையும் பெற்றமையும் பெரும் புகழ் கொண்ட இவ் ஆலயத்தை தரிசிக்க பண்டையகாலம் முதல் தமிழக யாத்திரிகர்கள் அங்கு சென்று வழிபாடியற்றித் திரும்பியமையும் தெரியவருவதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாலயத்துக்குப் பணிசெய்யவேண்டி சோழநாட்டின் பல குடிகள் இங்கு அழைத்துவரப்பட்டமையும் தெரியவருகின்றது.

இதன் பின் கிபி 1ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆடகசௌந்தரியின் வரவு பற்றி மட்டக்களப்பு வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இவளோடு தொடர்புபடும் வரலாற்று குறிப்புகள் அனைத்தும் அதீத கற்பனையின் பால் இணைவுற்றிருப்பதை உணரமுடியும். இதனையொத்த குறிப்புகள் சிங்கள வரலாறுகளிலும் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாண வரலாற்றில் சொல்லப்படுகின்ற மாருதப்புரவி வல்லியின் கதையும் பெரும்பாலும் இதுபோன்ற தன்மையையே கொண்டிருக்கின்றன. சுவாமி ஞானப்பிரகாசரும் இதன் நம்பகத் தன்மைபற்றி ஐயுறுவதைப் பார்க்கின்றோம். மட்டக்களப்பு வரலாற்றுப் பதிவுகளில் ஒரு இடைச் செருகல் தென்படுவது போன்ற தோற்றப்பாட்டினை இது வெளிப்படுத்துகின்றது.

ஆடகசௌந்தரியின் வரவானது எத்தன்மையது என்பதனை முழுமையாக கண்டறியமுடியாவிட்டாலும் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் இவள் பாணமைத் துறையில் வந்திறங்கியதாக கொள்ளமுடியும். மட்டக்களப்பின் மாமாங்கம், தாந்தாமலை,திருக்கோவில் போன்ற வழிபாட்டுத் தலங்களோடு திருக்கோணேஸ்வரமும் இவள் வரலாற்றில் இணைக்கப்படுகின்றது. இவள் காலத்தே அனுராதபுரியயை ஆட்சி செய்த தெத்தீசன் (கி.பி 261- 275) மகாசேனன் (கி.பி. 275-302) ஆகிய மன்னர்கள் இணைத்துப் பேசப்படுவதாலும் மகாசேனனை ஆடக சௌந்தரி திருமணம் செய்ததாக மான்மியம் குறிப்பிடும் காலம்(கி.பி 250) ஓரளவு நெருங்கி வருவதால் கி.பி 3ம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இவளது மட்டக்களப்பின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடலாம். எனினும் இதன்போது ஒரு இடைப்பட்ட நீண்டகால ஆட்சி

முறைமையை மட்டக்களப்பில் கண்டறியமுடியவில்லை. இக்காலம் வங்கநாசுகன் (கி.பி 106) தொடக்கம் தாத்தீசன் (கி.பி 261) வரையான அனுராதபுர ஆட்சிக் காலமாகும். இதனிடையே சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கஜபாகுவின் (கி.பி 113 -131 ஆட்சிக் காலமும் இதனுள் அடங்கிவிடுகின்றது. இவன் காலத்தே பல சேர நாட்டுக் குடிகள் மட்டக்களப்பில் குடியேற்றப்பட்டதாகவும் கண்ணகி வழிபாடும் இங்கு தோற்றம் பெற்றதாகவும் தகல்கள் கிடைக்கின்றன. இவ்விடைப்பட்ட காலத்தில் அனுராதபுர ஆட்சியில் மட்டக்களப்பு இருந்ததாகக் கொள்ளவே பெரும்பாலும் முடிகின்றது.

கி.பி 3ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உன்னரசுகிரி சிங்ககுமாரனிடம் செல்கின்றது. இவனை ஆடகசௌந்தரியின் மகனாக மான்மியம் சித்தரிக்கின்றது. இக் காலத்தே மட்டக்களப்பில் பிரசேது அதிகாரத்தில் இருக்கிறான். உகந்தை சிறந்த வழிபாட்டுத் தலமாக மாறுகின்றது. முன்னர் இது இராவணனனின் வணக்கத்தலமாக இருந்ததென்பது ஐதீகம். இங்கு ஒரு மலைக் கோவிலையும் இதன் அடிப்பாகத்தே வேறு ஒரு கோவிலையும் சிங்ககுமாரனே கட்டினான் எனக் கூறப்படுகின்றது. இராவணனது வழிபாட்டுச் சிறப்பினை நினைவுகூர வேண்டி ஆடிப்பு-ரணையிலும் தொடர்ந்து வரும் அமாவாசை தினத்திலும் இராவணனின் நினைவாக மலையில் தீபம் ஏற்றப்பட்டு நினைவு கூரப்படவேண்டும் என சிங்க குமாரனால் திட்டம் பண்ணப்பட்டதாகவும் அதுவே தொடராக நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் உகந்தை தொடர்பான வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

கி.பி 4ம் நூற்றாண்டின் தொடக்கத்தே மட்டக்களப்பு பிரசேதுவின் மகன் தினசேனனுக்கும் உன்னரசுகிரி சிங்ககுமாரனின் மகன் சிறிசிங்கனிடமும் மாறுகின்றது. இதன்பின் தினசேனனுக்கு வாரிசு இல்லாமையால் உன்னரசுகிரியோடு கூடிய மட்டக்களப்பு முழுவதும் சிறிசிங்கனின் மகன் பானுவின் ஆட்சிப் பொறுப்பில் வருகின்றது. இதுவும் கி.பி 4ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். அதன் பின் பானுவின் மகன் அமரசேனன் 4ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் அதிகாரத்திற்கு வருகின்றான்.

கி.பி 4ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பு முழுவதற்கும் அமரசேனனின் மகன் குணசிங்கன் அரசனாகின்றான். இவனது ஆட்சிக் காலத்தை அனுராதபுரத்தின் கீர்த்திசிறி மேகவர்ணன் ஆட்சிக் காலத்தோடு மான்மியம் இணைக்கின்றது.





இலங்கையின் முன்னைய வரலாற்று நூல்கள் சில இதனைக் கி.பி 330 எனக் கூற அண்மைய ஆய்வாளர்கள் சிலர் இதனை கி.பி 382 எனக் குறிப்பிடுகின்றனர். இங்கு வரலாற்றுக்காலம் ஐம்பது ஆண்டுகள் இடைவெளியைக் கொண்டிருப்பதைக் அவதானிக்க முடிகின்றது. இங்கே ஆடக சௌந்தரியின் ஆட்சிக்காலம் தொடக்கம் வரலாற்றுக் காலம் திருத்தி அமைக்கப்படுதல் வரலாற்று ஆசிரியர்களின் கடமையாகின்றது.

அமரசேனனின் காலத்தில் கம்பரின் இராமர் காதை மட்டக்களப்பில் பரப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது. கம்பர் பிற்பட்ட காலத்தவர் என்பதால் இதைக் கம்பரின் ராமர் காதையாகக் கருதமுடியாது. எனினும் இக் காலத்தே இராமர் பற்றிய கதை (தசதரஜாதகக் கதை) தமிழ் நாட்டில் உலாவியமை தெரிகின்றது. எனவே அக்கால கட்டத்தில் இராமநாதபுரத்திலிருந்து வந்து மட்டக்களப்பில் குடியேறியவர்களூடாக இக் கதை மட்டக்களப்பில் பரவியதாக கொள்ளமுடியும்.

**உலகநாச்சி**

குணசிங்கனின் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக கலிங்க இளவரசி உலகநாச்சியின் வரவைக் குறிப்பிடலாம். இவள் கலிங்க அரசன் குகசேனனின் புதல்வி என மான்மியம் கூறும். இவள் தனது தம்பி உலகநாதனுடன் வந்ததாக மட்டக்களப்பு சரித்திர ஏடுகள் குறிப்பிடுகின்றன. இவள் கலிங்கத்திலிருந்து வந்த நோக்கம் சரியாக தெளிவாக்கப் படவில்லை. இவள் புத்தரின் தசனத்துடன் சிவலிங்கம் ஒன்றைக் கொண்டுவந்ததாகக் கூறப்படுகின்றது. இக் காலமானது கலிங்கத்திலும் தமிழகத்திலும் பௌத்தம் வளர்ச்சி கண்டதோடு இலங்கையிலும் மிக வேகமாக பரவத் தொடங்கிய காலம். இது போன்ற வரலாறு சிங்கள மக்களிடையேயும் பேசப்படுகின்றது. கீர்த்தி சிறி மேகவர்ணனின் ஆட்சிக் காலத்தே (கி.பி 296 - 324) கலிங்க நாட்டிலிருந்து இளவரசி ஹேமமாலாவும் இளவரசன் தந்தாவும் புத்தரின் தசனத்தைக் கொண்டுவந்து மேகவர்னனிடம் கையளித்ததாக அதில் சொல்லப்படுகின்றது. இதில் புத்தரின் தசனத்தை அனுராதபுர அரசிடம் கையளிப்பதைக் காரணப்படுத்தி குகவம்சத்தவரின் ஆட்சிப் பிரதேசமான மட்டக்களப்பில் சிவ வழிபாடு மேலோங்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டதா என்பது மேலும் தெளிவாக்கப்படவேண்டியதாகிறது.

மேகவண்ணனிடம் தசனத்தை கையளித்த உலகநாச்சியின் விருப்பின்பேரில் அவளுக்கான வாழிடம் ஒன்றினைக் கோரி மட்டக்களப்பு அரசனிடம் மேக வண்ணன் அவளை அனுப்புகின்றான். குணசிங்கனின் ஆட்சி இருக்கை அப்போது பாணகையில் இருந்ததாகச் தகவல்கள் கூறுகின்றன. அவள் ஒரு கலிங்க இளவரசி என்பதனால் அவள் விருப்பத்தின் பேரில் தனியான சிற்றரசு ஒன்றினை மண்முனை என்ற பெயரில் உருவாக்கி குணசிங்கன் கையளித்தான் எனத் தெரிகின்றது.

இன்றைய கோவில்குளம் பகுதியில் உலகநாச்சியின் இருக்கை அமைந்ததோடு அங்கு ஒரு சிவாலயமும் அவளால் உருவாக்கப்பட்டு கொண்டுவரப்பட்டசிவலிங்கம் அதில் வைத்துப்பூசிக்கப்பட்டது. அவளது மாளிகை இன்றுள்ள தாழங்குடா கிறஸ்தவ தேவாலயத்திற்கு பின்புறம் அமைந்திருந்தாக கூறப்படுகின்றது. அவ்விடம் இன்றும் மாளிகையடித்தெரு என அழைக்கப்படுவதை இதற்குச் சான்றாக கொள்ளலாம். அதனைத் தொடர்ந்து கலிங்கத்திலிருந்து அவளால் அழைக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குகக் குடிகளும் சிறைக் குடிகளும் புதுக்குடியிருப்பு உட்பட வாவியின் இரு பக்கமும் இரு வேறு தடவைகளில் குடியேற்றப்பட்டதையும் முனைக்காட்டுப்பகுதி உருவாக்கப்பட்டபோது காடுகளை அழிக்கையில் பண்டைய வேடர்களின் வழிபாட்டினை தொடர்ந்து கொக்கட்டிமர அடியில் மறைந்துபோன சிவலிங்கம் மீண்டும் கண்டெடுக்கப்பட்டு தான்தோன்றீச்சரம் அவளால் அமைக்கப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இக்காலம் குறித்துக் கலிங்க நாட்டில் நமது பார்வையைச் செலுத்துவது மிகுந்த பயனுள்ளதாக அமையும். மகதநாட்டு பேரரசின் மோரியரான சந்திரகுப்தரும் மகன் பிந்துசாரனும் மேற்கொண்ட அகன்ற போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பிந்து சாரனின் மகன் அசோகன் அரச கட்டில் ஏறியதும் தக்காணப் பிரதேசத்தில் பரந்த பேரரசு ஒன்றினை நிலை நிறுத்தும் செயலில் ஈடுபட்டான். கலிங்கத்தின் மீது மேற்கொண்ட போர் மிகக் கொடூரமாய் அமைந்ததோடு பல நாட்கள் இது நீடித்தது. ஆயிரக் கணக்கில் வீரர்கள் மடிந்தனர். நூற்றுக்கான பெண்கள் விதவைகளாயினர். அசோகன் இதில் தன் முதல் புதல்வனையும் இழந்தான். இந் நிகழ்வின் தொடர் பாதிப்பே அசோகனை சாந்தி வழிக்கு இட்டுச் செல்கின்றது. கலிங்கம் பௌத்தத்தில்





சங்கமித்தது.கலிங்கத் தொடர்பு கொண்ட ஈழத்திற்கும் ஆந்திரா மற்றும் தமிழகத்திற்கும் பௌத்தம் அமைதி வழியில் உள்நுழைந்தது. பின்னர் கலிங்கரான காரவேலரின் எழுச்சி மோரியரிடமிருந்து கலிங்கத்தை மீட்டெடுத்தது. காரவேலரின் வாரிசு ஆட்சியின் பின்னர் சாதவாகனர்களின் ஆட்சி கி.பி 2ம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை நீடித்தது. அதன் பின் களப்பாளர்களும் கங்கர்களும் தலையெடுக்கலாயினர். கலிங்கத்தில் தங்களது ஆட்சியை கங்கர்கள் சிற்றரசு நிலைகளில் மேலும் வலுப்படுத்தலாயினர்.

கங்கர்கள் கங்கைப் பிரதேசத்தே வாழ்ந்த திராவிடப் பழங்குடியினர் என்பது தெளிவுபடுத்தப்பட்டதாகும். இதன் அடிப்படையில் கங்கைக் கரை தலைவனான குகனோடும் சம்பந்தப்படுத்துவர். கங்கர்களது சோழருடனான உறவே சோழகங்கர்கள் உருவாகக் காரணமாயிற்று என்பர். உலகநாச்சியின் தந்தையாக சொல்லப்படும் குகசேனனுடைய ஆட்சிக்காலம் கலிங்கத்தே கங்கர்களது ஆட்சிக்காலமாகும். குகன் என்ற முற்பெயரும் இவனுக்கு அமைந்திருப்பது கவனத்தை ஈர்ப்பதாகும். உலக நாச்சி கலிங்கநாட்டுப் பெண்ணாக இருப்பினும் இவளைக் கங்கர் வமிசத்தினுள் வைத்து பார்க்கப் போதிய ஆதாரம் தென்படுகின்றது. குணசிங்கனின் ஆட்சியின் பின்னர் அவனது மகனுக்கு மட்டக்களப்பு முழுவதற்கும் பட்டம் கட்டியதாகவும் குணசிங்கனின் சந்ததியினர் சுமார் இருநூறு ஆண்டுகள் மட்டக்களப்பில் ஆட்சி புரிந்தனர் எனவும் மான்மியம் விபரிக்கின்றது.

**கி.பி 5ம் நூற்றாண்டு முதல்**
**கி.பி 9ம் நூற்றாண்டு வரை**

கி.பி 5ம் நூற்றாண்டு முதல் ஈழத்துக்கும் பாண்டி நாட்டுக்கும் நெருக்கமான தொடர்புகள் தென்படுவதை வரலாறு உணர்த்தும். 2ம் மகாநாமன் (கி.பி. 412- 434) பாண்டி நாட்டில் திருமணம் செய்திருந்தான். கி.பி 436 தொடக்கம் கி.பி 463 வரை அனுராதபுரத்தை இருக்கையாக்கி பாண்டியர்கள் ஆட்சிபுரிந்தபோது உறுகுணை ஆட்சியும் அவர்களுக்கு கட்டுப்பட்டதோடு மட்டக்களப்புச் சிற்றரசும் அவர்களது ஆட்சியின் கீழே இருந்தது. இதன்பின் கி.பி 5ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாம் காசியப்பன் சிகிரியாவை இருக்கையாக்கி ஆட்சி செய்த காலத்தில் நிகழ்ந்த அரசுப் போட்டியில் மொகல்லாளன் தமிழ் நாட்டில் அடைக்கலம் பெற்றிருந்தமையும் நிகந்தர்களின் உதவிகொண்டு அவன் ஈழம்

திரும்பியமையும் வரலாறு குறிப்பிடும். கி.பி 7ம் நூற்றாண்டின் முற்பகுதி வரையான இக் காலத்தில் மட்டக்களப்பில் கலிங்கரின் ஆதிக்கம் நலிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. பின்னர் கி.பி 630 ல் கலிங்கனான வங்கலாடன் மட்டக்களப்புக்கு வந்து அரசுப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதற்கான தகவல்கள் பெறப்படுகின்றன. அவனது சந்ததியினர் கி.பி 750 வரை மட்டக்களப்பை பரிபாலித்தமை தெரிகின்றது. இக் காலத்தே பொலநறுவை இராசதானி தோற்றம் பெறுவதைப் பார்க்கின்றோம். கி.பி 8ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி 9ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பொலநறுவையின் நிதிய அதிபர்களின் கீழ் மட்டக்களப்பு நிருவாகம் தென்படுகின்றது. 2ம் மகிந்தனின் நிதிய அதிபன் ஒருவன் மட்டக்களப்பை நிருவகித்தமைக்கான சான்றுகள் பெறப்படுகின்றன.

கி.பி 5ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டு வரையான ஈழத்து அரசியல் மட்டக்களப்பிலும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்தது. இதன் காரணமாக அக்கால கட்டத்தின் தென்னிந்திய - ஈழ அரசியல் நிலவரம் குறித்துப் பார்ப்பது உகந்ததாக அமையும். இது குறித்து ஈழத்து வரலாற்றாசிரியர் செ.கிருஸ்ணராசா அவர்களது ஆய்வுக் குறிப்புகள் நம் கவனத்தை ஈர்ப்பனவாய் உள்ளன.

இலங்கை மீதான தென்னிந்தியப் படையெடுப்புக்கள் அனுராதபுர ஆட்சியின் தொடக்க காலத்திலிருந்தே ஏற்படலாயின. மன்னர்கள் வலிமையற்றிருந்த காலத்திலும் இவர்களது ஆட்சித் துணைக்கு உதவிகோரி அழைக்கப்பட்ட சூழ்நிலையிலும் தென்னிந்திய படைகள் வரக் காரணமாய் அமைந்தன. கி.பி 9ம் நூற்றாண்டுவரை தென்னிந்தியாவில் பேரரசு ஆதிக்க வல்லரசு ஏற்படாத தன்மையினால் அதுவரை ஈழம் நோக்கிய படையெடுப்புக்களில் அரசியல் நோக்கம் அடிப்படை தன்மையாக இருக்கவில்லை. சில வேளைகளில் அனுராதபுரம் படையெடுப்பாளர்களின்ஆதிக்க நிலையுள் கொண்டுவரப்பட்டாலும் தென்னிந்திய அரசுகளுக்குக் கட்டுப்பட்டோ, திறை செலுத்தியதாகவோ இருக்கவில்லை. எனினும் ஆட்சியாளர்களில் சிலர் தென்னிந்திய வம்சத்தினராகவே இருந்திருக்கின்றனர். கி.பி 9ம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட படையெடுப்புக்கள் பெரும்பாலும் அரசியல் படையெடுப்புக்களாக அமைந்ததோடு ஆள்புல விஸ்தரிப்புக் கொள்கையினுள் இலங்கையை இட்டுச் சென்றன. 9ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதன் முறையாக இவ்வாறான ஒரு படையெடுப்பு அவதானிக்கப்படுகின்றது. பாண்டிய மன்னன் சிறிமாற சிறிவல்லவன் அனுராதபுரத்தை கைப்பற்றி தனது ஆட்சியை நிலைநிறுத்தினான். தொடர்ந்து இதன் பின் ஏற்பட்ட படையெடுப்புக்கள் அரசியல் பொருளாதார நிலைத் தாக்கங்களை ஏற்படுத்த அனுராதபுர ராச்சியமும் பின்னர் தோற்றம் பெற்ற பொலநறுவை ராச்சியமும் ஒரு புதிய வெளிநாட்டு அரசியல் கொள்கையை உருவாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாகின. தங்களது இறைமை மற்றும் மேலாண்மையை காக்க வேண்டிய நிலையில் இவை எதிரியின் எதிரி நண்பன் என்ற கோட்பாட்டில் தங்களது தென்னிந்திய எதிர் அரசின் பகை அரசுகளுடன் மாறி மாறி நட்புறமை கொண்டாடினர்.கி.பி 9ம் நூற்றாண்டின் பின்னர் இலங்கை அரசுகள் இக் கொள்கையில் மிகத் தீவிரமாக இருந்தன.

**சோழப் பேரரசும் மட்டக்களப்பும்**

கி.பி 10ம் நூற்றாண்டில் தஞ்சையை இருக்கையாக்கி சோழ அரசு எழுச்சி பெற்றபோது பாண்டியருக்கு உதவவேண்டிய நிலையில் இலங்கை அரசு இருந்தது. 1ம் பராந்தகச் சோழனுக்கு எதிராக பாண்டிய மன்னனான 2ம் இராசசிம்மனுக்கு இலங்கையின் மன்னன் 5ம் காசியப்பன் படைகளை அனுப்பியதும் இத்தன்மையதே. இந்த அடிப்படையில் தான் தொடர்ந்து எழுச்சி பெற்றுக் கொண்டிருந்த சோழப் பேரரசின் கடல் ஆதிக்கத்திற்கு ஈடு கொடுக்க வேண்டிய நிலையில் இலங்கை அரசு கலிங்கத்தின் கையை நம்ப வேண்டியிருந்தது. எனினும் சோழப் பேரரசின் வீறு கொண்ட எழுச்சியை எவ்வகையிலும் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. கி.பி 10ம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அனுராத ஆட்சி உட்பட ஈழத்தின் வட கிழக்குப் பாகம் சோழராட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட போது கலிங்கனான தர்மசிங்கன் மட்டக்களப்பின் சிற்றரசனாக இருக்கின்றான் . அதன் பின் குமாரசிங்கன் , கதிர்சுதன், மதிசுதன். நாதன், தினசிங்கன் என கலிங்கரின் வாரிசு ஆட்சி சோழரின் மேலாதிக்கத்தின் கீழ் மட்டக்களப்பில் நிலை நிறுத்தப்படுகின்றது. இவர்களது ஆட்சிக் காலக் குறிப்புகள் காலக் கணிப்பீடுகளில் சிற்சில வேறுபாடுகளை கொண்டிருப்பினும் நிகழ்வுகள் பெரும்பாலும் ஒத்ததாக அமைவதைக் காண முடிகின்றது.

இராசராசன் எனப் புகழப்பட்ட அருண்மொழித்தேவன் கி.பி 985 ல் சோழ வேந்தனாக முடிதரித்தான். இவனின் பாட்டன் 1ம் பராந்தகன் தனக்கு எதிராக பாண்டியருக்கு உதவியதற்காக ஈழவேந்தன் 4ம் உதயணன் மீது போர் தொடுத்து வெற்றி கொண்டான். எனினும் ஈழத்தில் தன் ஆட்சியை நிலை நிறுத்தவில்லை. இராசராசன் பதவிக்கு வந்ததும் ஈழத்துடன் தொடர்பினை பேணிக் கொண்டிருந்த அமரபுயங்க பாண்டியனை தோற்கடித்து பாண்டி நாட்டைக் கைப்பற்றினான். பின்னர் தனது மகனான இராசேந்திரன் தலைமையில் சேரத்தையும் இணைத்துக் கொண்டான். இந் நிலையில் ஈழ வேந்தன் 5ம் மகிந்தன் தனது ஒற்றர்களை பாண்டிநாட்டுக்குள் ஊடுருவச்செய்து தனது ஆட்சிக்குக்கெதிராகச் செயல்படுவது அவனுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. இக் காலத்தே ஈழத்திலும் மகிந்தனுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் இடம்பெறலாயின. இந்நிலையில் இராஜராஜன் ஈழத்தின் மீது படையெடுத்தான். வட பகுதியூடாக அனுராதபுரத்தை அவன் கைப்பற்றினான். இதன்போது அவனது கடற்படை காலிப் பகுதியில் தரித்து நின்று ஈழத்தின் தென்கடல் பிரதேசத்தை வளைத்திருந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. இதன் பின் பொலநறுவையைத் தமது முக்கிய இருக்கையாக்கிய சோழர்கள் அதற்கு ஜனநாத மங்கலம் எனப்பெயர் சூட்டினர். ஈழத்தை உள்ளடக்கிய சோழ சாம்பிராச்சியம் மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயர் பெறலாயிற்று. சோழர் ஆட்சியின் சிறப்பிற்கு வேளைக்காரர் என அழைக்கப்பட்ட வன்னியர்கள் பெரும்பங்காற்றினர்.

இராஜராஜனுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த மகன் இராஜேந்திரன் (கி.பி 1012 -1044) அவனது தந்தையின் பாண்டி நாட்டுப் படையெடுப்பின்போது தோல்விகண்ட பாண்டியர் தங்கள் மணிமுடியினை ரோகணத்தில் (உறுகுணை) மறைத்து வைத்திருக்கின்ற சேதியைத் தெரிந்து கொண்டான். அதை மீட்டெடுக்க மேனும் ஒரு பாரிய படையணியை ஈழத்தே செலுத்த வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டது. இப்படையணிகளில் முத்தரையர் பெரும்பங்காற்றினர். சோழர்படை கி.பி 1017 ல் பெரும் வெற்றியை பெற்று ரோகணத்தில் இருந்த மணிமுடியை மீட்டது. அரசியையும் பிள்ளைகளையும் படையினரையும் ரோகணத்துச் செல்வங்களையும் சோழர் தங்கள் உடமையாக்கினர். இராசேந்திர சோழனின் ஆறாவது ஆட்சியாண்டில் நிறுவப்பட்ட திருவாலங்காடு சேப்பேடுகள் இவை பற்றி விபரிக்கின்றன.





இக்காலத்தே கதிர்சுதன் சோழராட்சியின் சிற்றரசனாக மட்டக்களப்பை நிருவகித்துள்ளான். சோழப் பேரரசின் ஆட்சிப் பிரதிநிதி (ஆளுனர்) பொலநறுவையில் தங்கியிருக்க - அவர்கள் ஆட்சிக்கு கீழ் உள்ள ஈழத்தின் பெரும் பகுதியில் சிற்றரசுமுறை நிருவாகங்கள் இருந்தாலும் தங்கள் பிரதிநிதிகளையும் அவர்கள் நியமித்திருந்ததாக சோழர் ஆட்சிக் குறிப்பில் தெரியவருகின்றது. மட்டக்களப்புப் பூர்வீக சரித்திரம் குறிப்பிடும் ஏழு நிருவாக பிரிவு மந்திரிகளும் இவர்களாகவே இருக்க வேண்டும். கதிர்காமம் பகுதிக்குக் கட்டகாமனும், அக்கரைப்பற்று பகுதிக்கு அகுராகுவும், கரவாகுப் பகுதிக்கு நீலவண்ணசேனனும், மண்முனைப் பகுதிக்கு புலியமாறனும், மண்முனை வடபகுதிக்கு வவுணசிங்கனும், ஏறாவூர் பகுதிக்கு சத்துவண்டனும் வாகரைப் பகுதிக்கு கொட்டக் கச்சனும் பதவியில் இருந்ததாகத் தெரிகின்றது. நீண்டகால வரலாற்றுப் புகழ் மிக்கதான மகாகந்தக் குளம் (தீகவாவி) மட்டக்களப்பின் நிருவாக பிரிவினுள்ளேயே சோழராட்சியின் போது இருந்ததாக அறியப்படுகின்றது.

சோழராட்சிக் காலம் மட்டக்களப்பிற்கு ஒரு சிறப்புக்காலம் என்றே கொள்ள வேண்டும். இக் காலத்தே தமிழரது கலாசார விழுமியங்களும் பண்பாடுகளும் இங்கு முழுமையாக முக்கியத்துவமும் பெறுகின்றன. தமிழ்க்கலைகள் (கூத்துக்கள்) அறிமுகமாகி வளர்ச்சிப் பாதைக்கு வருகின்றன. ஆலயங்கள் சிற்பங்களாலும் ஓவியங்களாலும் பொலிவுறுகின்றன. மட்டக்களப்பின் சிறு சிறு துறை முகங்களான வாழைச்சேனை, மட்டக்களப்பு ,கல்முனை ,திருக்கோவில், கோமாரி (குமரி - Comari) போன்றவை சோழரின் வாணிபத் தளங்களாக அமைகின்றன. சோழரின் குடி நிர்வாக முறை, வாழ்க்கை முறை, நீர்ப்பாசனம், வேளாண்மைச் செய்கை போன்றவை மட்டக்களப்பில் பிரதிபலிக்க வெருகல் தொடக்கம் கதிர்காமம் வரையான பெரும் நிலப்பரப்பு ஒரு தனி அலகாக மிளிர்கின்றது. இக் காலத்தில்தான் திருக்கோவில் ஆலயம் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் புதுப்பொலிவு பெறுகின்றது. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரமும் சிற்ப வேலைப்பாடுகளைப் பெறுவதோடு சோழ நாட்டிலிருந்து அழகிய தேர்கள் வரவழைக்கப்படுகின்றன. இதன் காலத்தை நாற்பது ஆண்டுகள் அளவில் முன்னோக்கியதாக மான்மியம் குறிப்பிட்டாலும் தேர்கள் வரவழைக்கப்பட்டதன் உண்மைத் தன்மை உறுதிப்படவே செய்கின்றது.

பின்னர் இராசேந்திரன் வடநாட்டு போரில் வெற்றியீட்டியபின் கடாரத்தையும் கைப்பற்றினான். பாண்டி ,சேரம், ஈழம், கலிங்கம், வங்கம், வட இந்தியா, கடாரம் எனப் புலிக்கொடியைப் பறக்கவிட்ட இராசேந்திரனின் ஓயாத போர்களினால் அவனின் ஆட்சியின் பிற்பகுதி அவனுக்குச் சோதனைக் களமாக அமைந்துவிட்டது. அனைத்தையும் ஒரு சேரக் கட்டிக் காப்பது அவனுக்கு பெரும் பிரச்சனையாக மாறியது. தீகவாவிப் பிரதேசத்திலும் பெரும் தொல்லைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. இராசேந்திரனுக்குப் பின்னர் அவன் மகன் இரண்டாம் இராசாதிராஜ குலசேகரன் கி.பி 1044 இல் அரியணை ஏறினான். சேரத்துக் கிளர்ச்சியை அடக்க முடியாததைப் போல ஈழத்துக் கிளர்ச்சியையும் அவனால் முழுமையாக அடக்க முடியவில்லை. எனினும் பொலனறுவை ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள அவனால் முடிந்தது. இதன் பின் 2ம் இராசேந்திரனும் அதனைத் தொடர்ந்து அவனின் தம்பி வீர சோழன் எனச் சிறப்புப் பெயர் கொண்ட வீர இராசேந்திர சோழனும் சோழ நாட்டில் அரியணை ஏறினர்.

இக் காலத்தே கதிர்சுதனைத் தொடர்ந்து அவன் மகன் மதிசுதன் மட்டக்களப்பின் அதிகாரத்திற்கு வருகின்றன். இவன் பொலநறுவையிலிருந்த சோழப்பிரதிநிதியின் மகளை மணம் செய்தவனாக் குறிப்பிடப்படுகின்றான். மதிசுதனும் தந்தையைப்போல் சோழருக்கு மிகுந்த விசுவாசியாகச் செயல்பட்டான். இவன் காலத்தே ஆலய வழிபாடுகள் சிறப்புப் பெற்றன. விவசாய செய்கை புத்தாக்கம் பெற்றது. இவன் மேற்கொண்ட பணிகள் மட்டக்களப்பு அரசர்களில் இவனை முன்னிறுத்தி பார்க்கின்றன. மண்டுநாகன் எனும் நாக மன்னனால் கட்டப்பட்ட நாகன் சாலை(மண்டூர்) காளி கோவிலையும் , போர் முனைநாடு (கோவில்போரதீவு) முருகையன் கோயிலையும் முன்னர் காலசேனன் இடித்து தள்ளியதாகத் தெரிகின்றது. மண்டூர் பகுதியிலிருந்த காளிகோவில் எது என்பது புலனாகவில்லை. கோவில் போரதீவு ஆலயம் மதிசுதனால் புனரமைக்கப்பட்டதாக தெரிகின்றது. நீண்ட நாட்களாக புத்திர பாக்கியமில்லாது கவலையுற்றிருந்த மதிசுதன் பெரியவர்களின் ஆலோசனையின் பேரில் பொலநறுவை சோழப் பரதிநிதியின் உதவியுடன் தொண்டை நாட்டுச் சிற்பிகளை கொண்டு அந்தணர்களின் ஆலோசனைப் பிரகாரம் (சோழராட்சியில் பிராமணர்களே ஆலோசகர்களாக செயல்பட்டனர். ) ஐந்து தட்டுத் தூபியும், கோபுர வாசல் வாகனவீடு, ரத சாலை, மூன்று சுற்று





மதில்கள் என்பவற்றோடு தங்கத் தகடு பூட்டிய கொடித்தம்பமும் அமைத்து தூபியில் தங்கக் கலசமும் பொருத்தி சிறப்பாக குடமுழுக்கும் நடத்தியதாகத் தெரியவருகின்றது. கிடைக்கின்ற சான்றுகளைக் கொண்டு பார்க்கின்றபோது மட்டக்களப்புப் பிரதேசத்தில் முதன் முதலாக அந்தணரை முதன்மையாக கொண்டு நிகம வழிபாட்டினை ஏற்றுக் கொண்ட முதல் ஆலயமாக கோவில் போரதீவுச் சித்திரவேலாயுதர் ஆலயமே தென்படுவதாகத் தெரிகின்றது. இக் காலத்தை கி.பி 1030 ஆகக் கொள்ள முடியும். இதன் பின்னும் இவ் ஆலயம் தொடர்பான தகவல்கள் பெறப்படுகின்றன. இவ் ஆலயத்தில் தனது மனைவியுடன் வழிபாடியற்றி வந்த மதிசுதனுக்கு ஆண்மகவு ஒன்ற கிடைக்கின்றது. அவனுக்கு நாதன் எனப் பெயரிட்ட மதிசுதன் போர் முனை நாட்டுக்கு (கோவில்போரதீவு) அப்பால் ஆற்றுக்கு குறுக்காக அணை கட்டி அதற்கு நாதன் அணை (நாதனை) எனப் பெயரிட்டு அதன் மூலம் நீர்ப்பாய்ச்சக்கூடியதும் ஆயிரம் அவணம் நெல் விதைக்கத் தக்கதுமான நிலத்தைச் செப்பனிட்டு அந்த இடத்திற்கு வேலாயுதர் வெளி எனப் பெயரிட்டு கோவிலுக்கு நிவந்தமாக அளித்தான் எனத் தெரிகின்றது. அணை கட்டியஆறு நாதனை ஆறு எனவும் அந்த இடம் நாதனை எனவும் அணை கட்டிய இடத்தில் வைத்து வழிபாடு செய்த பிள்ளையார் கோவில் நாதனைப் பிள்ளையார் கோவில் எனவும் வயல் நிலங்கள் நாதனை வெளிக் கண்டம் எனவும் வேலாயுதர் வெளி மருவி வெல்லாவெளி ஆனது எனவும் வரலாற்றுச் சான்றாகி நிற்பதைக் காணுகின்றோம். இதனடிப்படையில் பார்க்கின்றபோது சில நவீன ஆய்வாளர்கள் கோவில்போரதீவு அண்மைக்காலத்தே உருவாகிய கிராமமெனக் குறிப்பிடுவதைப்போலல்லாது அது பண்டைய கிராமம் என்பதை உறுதிசெய்து கொள்ளலாம். சோழராட்சியில் கோவில் மானிய நிலவுடைமையாக இருந்த நிலங்கள் பிற்பட்ட காலங்களில் செய்கையாளர்களுக்கு கைமாறியதை போன்ற நிலமை நாதனை வெளிக் காணிகளுக்கும் ஏற்படலாயிற்று.

பின்னர் நாதன் ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்றான். இவன் தனது தாய் வழியில் பொலநறுவையில் வாழ்ந்த சோழர் குலப் பெண்ணையே திருமணம் செய்கிறான். இக் காலத்தில் சோழநாட்டில் வைஷ்ணவம் தலையெடுக்க சோழர்கள் உதவுகின்றனர். இது பற்றிய மட்டக்களப்பு மான்மியத்தின் கூற்று கவனிக்கத் தக்கதாகின்றது.

குல சேகரன் எனும் சோழன் பாண்டிய நாட்டுக்கு படையுடன் சென்று பாண்டியனை வென்ற பின்னர் அங்கும் வைஷ்ணவ மதத்தை பரப்பினான். மேலும் இலங்கையில் சோழராட்சிப் பகுதியிலும் வைஷ்ணவம் பரவலாயிற்று. இதில் நாதனையும் வலுக்கட்டாயமாக வைஷ்ணவத்தை ஏற்கச் செய்தான். மான்மியத்தின் இக்கூற்று தொடர்பாக அக்காலத்தில் தமிழக சோழராட்சியின் பால் நம் கவனத்தைத் திருப்புதல் பயனுள்ளதாக அமையும்.

இராசேந்திர சோழருக்குப் பின் பதவிக்கு வந்த 2ம் இராசாதிராசகுலசேகரன் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்க தனது படைகளை அனுப்பினான். அதன் பின் அங்கு வைஷ்ணவ மதத்தை பரப்ப சில திட்டங்களையும் வகுத்தான். அத்தோடு சோழராட்சியின் கீழிருந்த நாடுகளிலும் வைஷ்ணவ மதத்தை பரப்ப வேண்டிய பணிகளை மேற்கொண்டான். பாரதக் கதை மற்றும் இராமர் கதை போன்ற வைஷ்ணவ நூல்கள் சைவ ஆலய மண்டபங்களில் படிக்கப்பட்டன. இதனை திருவாலங்காட்டு சாசனமும் உறுதி செய்கின்றது. சோழராட்சிக் குறிப்புக் காலமும் (கி.பி 1044) மான்மியக் குறிப்புக் காலமும் (கி.பி. 1078) தொடர்ந்தும் சிறிது வித்தியாசத்தை காண்பிக்கவே செய்கின்றன. இங்கு மான்மியம் குறிப்பிடும் குலசேகரனே சோழவேந்தன் 2ம் இராசாதிராச குலசேகரன் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாதன் தனது ஆட்சிக் காலத்தின் பின்னர் தனது மூத்த புதல்வன் தினசிங்கனுக்கு சோழ நாட்டரசன் வீரசோழனின் ஒரு புதல்வியை திருமணம் செய்து மட்டக்களப்பையும் பட்டம் கட்டியதாக மட்டக்களப்பில் பெறப்படும் தகவல்கள் (மான்மியத்துடன் சில மட்டக்களப்பு பூர்வீக சரித்திர பழமையான ஏடுகள்) தெரிவிக்கின்றன.

**பிற்பட்ட சோழராட்சி வரலாற்று குறிப்புகளில் பின்வரும் தகவல்கள் அவதானிக்கப்படுகின்றன.**

இரண்டாம் இராசேந்திரனுக்குப் பின்னர் அவனின் தம்பியான வீர சோழ இராசேந்திரன் கி.பி 1064 ல் சோழப்பேரரசனாகத் தனது ஐம்பதாவது அகவைக்குப் பின்னர் முடி தரிகின்றான். இக் காலம் பொலநறுவையில் சோழராட்சியின் பிற்காலமாகும். இவன் தனது ஈழத்து (பொலநறுவை) ஆட்சிப் பிரதிநிதியாக தனது மகனையே நியமித்திருந்தான். இவனின் தாயார் சோழகங்கர் குலம் எனவும் தெலுங்குச் சோழர் எனவும் இருவேறு தகவல்கள் உண்டு. இக் காலம்





சோழர் பெரும் சிக்கல்களுக்குள் உட்பட்டிருந்த காலம். சோழரின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருந்த சேரர்கள் சோழருக்கு எதிராக சாவேற்றுப்படை (Suside squard) ஒன்றினையும் உருவாக்கியிருந்தார்கள். கலிங்கப் பிரதேசத்திலும் சோழருக்கெதிராக அரசியல் கிளர்ச்சிகள் உருவாக வீரசோழராசேந்திரன் தக்காணப் பிரதேசப் போர்களில் மூழ்கியிருந்த வேளையில் ஈழத்தில் விஜயபாகு விடுதலைக்கான கிளர்ச்சியை தொடங்கியிருந்தான். தகவல் அறிந்த வீரசோழராசேந்திரன் விஜயபாகுவிற்கு எதிராக படைகளை அனுப்பி அதனை அடக்கினான். எனினும் ரோகணம் விஜயபாகுவிடம் சென்றத. மகாகந்தக்குளமும் பறிபோனது.

இக் குறிப்புக்களின் அடிப்படையில் மான்மியம் கூறும் வீரசோழனே சோழ வரலாற்றில் இடம்பெறும் வீரசோழராசேந்திரன் என்பது உறுதியாகின்றது. தினசிங்கனின் மைத்துனனே பொலநறுவையின் அரசுப் பொறுப்பில் இருந்தான் என மான்மியம் கூறுவதும் முழுக்க முழுக்க தமிழக வரலாற்றுக் குறிப்புகளோடு பொருந்தி நிற்கின்றது. தினசிங்கனின் ஆட்சிக் காலத்தில் அவனது படையாட்சி நிர்வாகிகளால் (மந்திரிகள் என மான்மியம் குறிப்பிடும்) வைஷ்ணவமத கட்டாயப் பரவலினால் மட்டக்களப்பு ஆட்சியாளருக்கெதிராக மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பு சுட்டிக் காட்டப்படுகின்ற நிலையே பொதுவாக தமிழகத்திலும் ஏற்பட்டிருந்ததை வரலாறு குறிப்பிடுவதைக் காண்கிறோம். சோழராட்சி நடைமுறைகளை மட்டக்களப்பு ஆட்சியாளர்களும் அவர்களுடன் உறவு கொண்டு சிறப்புற செயல்படுத்தியமை இங்குள்ள வரலாற்று குறிப்புக்களில் தெளிவாகின்றது.

சோழராட்சியின் பிற் காலத்தில் இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும் விஜயபாகுவுக்கு வலிமையைப் பெற்றுக் கொடுத்தது. அவர்கள் ஏற்படுத்திய பரந்த சோழராட்சியம் நிலைகுலையலாயிற்று. ஈழத்தில் நிலை கொண்டிருந்த படைகளுக்குத் தொடர்ந்து படை அணிகளை அனுப்பும் நிலையிலும் சோழர்கள் இருக்கவில்லை. இதனால் விஜயபாகுவின் பாரிய படையெடுப்பை சோழரின் குறைந்த எண்ணிக்கை கொண்ட வேளைக்காரர்களால் வெற்றிகொள்ள முடியாத நிலையில் பொலநறுவையை பறிகொடுத்து ஈழத்தை இழக்கின்றனர். கி.பி 1070 வாக்கில் ஈழத்தில் சோழராட்சி முற்றுப் பெற ஜனநாத மங்கலம் என்ற பொலநறுவை விஜயராஜபுரம் என்ற சிறப்புப் பெயரைப்

பெற்று விஜயபாகுவின் இராசதானியாகின்றது. மட்டக்களப்பு அவனது ஆட்சிக்குள் வருவதோடு தனது ஆதிக்கத்தை பரவலாக்க விரும்பிய விஜயபாகு பாண்டி நாட்டிலும் கலிங்கத்திலும் மண உறவினை மேற்கொண்டு அந் நாடுகளின் நட்புறவையும் வலுப்படுத்திக் கொள்கின்றான்.

மட்டக்களப்பு சுமார் 77 ஆண்டுகள் சோழராட்சியில் இருந்தமையால் பல நன்மைகளை அதனால் பெற்றுக் கொள்ளமுடிந்தது. இதன் மூலம் சோழர்கள் படையெடுப்பாளர்கள் மாத்திரமல்ல சிறந்த நிர்வாகிகளுமாவார்கள் என்பது உணரப்பட்டது. இவர்களது மன்னராட்சி முறையூடு ஒரு மக்களாட்சி தன்மையும் வளர்ச்சியடைந்தது. ஊர் அல்லது கிராம நிர்வாக முறைமைக்கு சோழர் சிறப்பிடம் வழங்கினர். நில அளவைகள், பங்கீடுகள், நிலப் பிணக்குகளைத் தீர்த்தல், சமூகப் பண்பாட்டு பேணல்கள், சமூகக் கட்டுப்பாடுகள், குற்றச் செயல்களுக்கான தண்டனைகள் வழங்கல் போன்றவை கிராம நிருவாகத்துள் இணைக்கப்பட்டன. காணிகள் மற்றும் தொழில்களுக்கான வரி அறவீடுகளில் ஆட்சியாளருக்கு ஒரு பங்கு போக மறு பங்கு வழிபாட்டுத் தலங்கள், அணைகட்டல், வாய்க்கால் வெட்டல் போன்றவற்றிற்காக கிராமங்களில் செலவு செய்யப்பட்டன. குற்றத் தண்டனைகளுக்கு கடும் தண்டனைகள் வழங்கும் நிலை ஏற்படின் மத்திய அரசுப் பிரதிநிதியின் (பொலநறுவை ஆளுனர்) முன் அங்கீகாரம் பெறப்படவும் வேண்டியிருந்தது. இந் நடைமுறையானது சோழப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் எல்லா இடங்களினும் பொதுவான நடைமுறைகளாக இருந்ததென ஆய்வாளர்கள் குறிப்பிடும் நிலையில் மட்டக்களப்புப் பிரதேச ஆட்சி பற்றி சில தெளிவுகளை நாம் அடைய வேண்டியுள்ளது.

01. சோழராட்சிக்காலத்தில் குறிப்பிடப்படும் மட்டக்களப்பின் ஆட்சியாளர்கள் சுயமாக ஆட்சி செலுத்தியர்வர்கள் எனக் கருத முடியாது.
02. இவர்கள் பெரும்பாலும் உன்னரசுகிரிச் சிற்றரசின் ஊடாக வந்தவர்களாய் இருந்தமையால் கலிங்க சோழ வம்சத்தினராகவே கணிக்கப்படக் கூடியவர்கள்
03. பொதுவாக தொடர்பு பட்ட கலிங்க மண உறவினைப் பேணிய இவர்கள் பின் சோழர் குலம் சார்ந்து மண உறவினை மேற்கொண்டவர்களாயினர்.( சோழருக்கும் கலிங்க மண உறவு அப்போது இருந்துள்ளமை தெரிகின்றது.)





04. மட்டக்களப்பின் அரசர்களாக இவர்கள் கருதப்பட்டாலும் மத்திய சோழ அரசின் பிரதான பிரதிநிதியாக பொலநறுவையில் அமர்த்தப்பட்ட ஆட்சிப் பிரதிநிதியின் அனுசரணையின் கீழேயே இவர்கள் செயல்பட்டனர்.
05. சோழருடைய சமூக சமயக் கட்டமைப்புகளும் நடைமுறைகளும் தாம் பின்பற்றிய கலிங்க மரபுகளிலிருந்து சற்று மாறுபட்ட நிலையில் இவர்களும் மாறுபட வேண்டியவர்களாயினர். (உ-ம் : விநாயகர் வழிபாடு, விஷ்ணு வழிபாடு)
06. சோழப் பேரரசின் காலத்தே ஏற்றுக் கொள்ளப்பட்ட வைஷ்ணவ மத வழிபாட்டினை (விஷ்ணு வழிபாடு) காலங்காலமாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிலை பெற்ற சிவ வழிபாட்டுக்குள் பிரதேச மக்களின் மனநிலைக்கு எதிராகப் புகுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இவர்கள் இருந்தார்கள்.

சோழரின் நிருவாகக் கட்டமைப்பு சமூக வளர்ச்சியின் பால் பல சிறப்புக்களைக் கொண்டிருந்தாலும் சமூகத் தளப்பண்பாட்டு மரபுகளினும் ஒருங்கிணைந்த கட்டமைப்பு நெறிமுறைகளினும் அவற்றின் வழக்காறுகளினும் பாரிய ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தியிருப்பதாக சமூகவியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இத் தன்மையானது மட்டக்களப்புச் சமூக அமைப்பிலும் உட்புகவே செய்தது. சோழர்கள் பிராமணர்களை மேற்பட்ட சமூகமாக ஏற்றுக் கொண்டமையும் தங்களது நிருவாகக் கட்டமைப்பில் அவர்களை முதன்மையாளர்களாக்கி பல்வேறு சமூகக் கூறுகளை உருவாக்கியமையே அது.

தமிழ் நாட்டைப்போல் பெருமளவு சமூக மாற்றங்கள் மட்டக்களப்பில் ஏற்படாது போனாலும் தொழில்முறைச் சமூகங்கள் சாதிக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இரத்த உறவுகளும் தொழில் குழுக்களும் சமூகக் கூறுகளாய் விரிவு பெற்றன. மேட்டுக் குடிகளும் கீழ்மட்ட சிறைக் குடிகளும் உருவாக்கம் பெற்றனர். சமூக நெறி முறைகளும் நடையுடை பாவனைகளும் உயர்வு தாழ்வுகளை வெளிப்படுத்தின. பிராமணரால் அடித்தளமிடப்பட்டு சோழராட்சியில் வளர்ச்சி பெற்ற இச் சாதி முறைமை ஈழத்திலும் உள்வாங்கப்பட்டமை பற்றி அவாகளுக்குப் பின் பொலநறுவையில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த

விஜயபாகுவின் பொலநறுவைக் கல் வெட்டு இதனை ஓரளவு வெளிப்படுத்துகின்றது.

1ம் விஜயபாகு (கி.பி 1070) ஆட்சியில் மட்டக்களப்பு வந்தபோது சோழருடன் உறவு கொண்டிருந்த தின சிங்கனது ஆட்சி தொடர வாய்ப்பிருந்திருக்கும் எனக் கருத முடியவில்லை. சோழராட்சி கைமாறியகாலத்தே மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. தினசிங்கனிடம் அவனது படையாட்சி குல மந்திரிகளான சம்பன், சதாங்கன் என்போர் கூறியதாக இதில் சொல்லப்படுகின்றது.

கலிங்கர் குலம் மகாவம்சம். அவர்களது குலம் தான் இந்த மட்டக்களப்பை உண்டாக்கியது. நீர் சோழர் குலத்தில் கலந்து சோழரைத் துணைகொண்டு தமிழ் மதங்களை (சிவ வழிபாடு) மாற்றி ஆலய நிதியங்களையும் சோழநாட்டிற்கு அனுப்பிவிட்டீர். அதனால் கலிங்கரால் சில துன்பம் வர வேண்டியது அறிந்து கொள்க.

இதனால் தின சிங்கன் பொலனறுவைக்குச் செய்தி அனுப்பி தனது மைத்துனனும் சோழரின் பிரதிநிதியுமான அணிகங்கனை அழைப்பித்து கலிங்கத் தலைவர்களை சோழ நாட்டில் சிறை வைக்கத் திட்டமிட்டதாக மேலும் மான்மியம் குறிப்பிடுவது ஒரு அர்த்தபாட்டினை கொண்டிருக்கின்றது.

**பொலநறுவை ஆட்சி:**

விஜயபாகுவின் ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு வந்தது முதலாக கலிங்க மாகோன் (கி.பி 1215) காலம் வரை சுமார் 145 வருடங்கள் மட்டக்களப்பின் தனிப்பட்ட வரலாறு எழுதப்படாமையால் அது முழுக்க முழுக்க பொலநறுவை ஆட்சி அதிகாரத்துள் சென்றுவிட்டமை புலனாகின்றது. இக் காலத்தே பௌத்த மதம் மட்டக்களப்பில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த முற்பட்டமை இலங்கை வரலாற்றில் தெளிவுபடுகின்றது. எனினும் சிவ வழிபாட்டினை அதனால் மீற முடியவில்லை. விஜயபாகுவின் ஆட்சிக் காலம் இலங்கையில் இன மத துவேசத்துக்கு வித்திட்டதாகக் கருதப்பட்டாலும் அது தவறானது என இன்றைய ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. பனாகடுவைச் செப்பேடு தமிழர்களை அவன் தனது அலுவலர்களாக நியமித்திருந்தான் எனவும் சோழரது வன்னியப்படைகளை அவன் தன்னுடன் வைத்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றது. சூளவம்சத்தின் ஐம்பதாவது அத்தியாயமும்





இதனை உறுதி செய்வதாய் உள்ளது. குருகுல சூரியத் தரையன் என்ற தமிழ் மகன் விஜயபாகுவின் சிறந்த படைத் தலைவனாகச் செயற்பட்டதையும் அவனது சேவையைப் பாராட்டிச் செப்புப்பட்டயம் வழங்கி நிலக்கொடையும் விஜயபாகுவால் அளிக்கப்பட்டதையும் சோழநாட்டு திருமுக்கூடல் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. சோழப் பேரரசினை முன் மாதிரியாகக் கொண்டே இவனது ஆட்சியும் நகரத் தொடங்கியது.

விஜயபாகு கலிங்கருடனும் பாண்டியருடனும் உடனடியாக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தினான். அதனால் மீண்டும் மட்டக்களப்பில் கலிங்கர் தலையெடுக்கலாயினர். விஜயபாகுவின் ஆட்சி 55 ஆண்டுகள் நீடித்ததாக வேளைக்காரர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. விஜயபாகுவிற்கு பிறகு ஜெயபாகு ஆட்சிக்கு வர உரோகணத்து வேந்தன் விக்கிரமபாகு அரசுரிமைப் போராட்டத்தில் வெற்றி பெறுகின்றான். எனினும் பொலநறுவையில் பெறப்பட்ட கல்வெட்டுக்களின் படி 43 ஆட்சியாண்டுகள் ஜெயபாகுவின் பெயர் இடம்பெறுவதை பார்க்கின்றோம். இதன்படி விக்கிரமாகு ஜெயபாகுக் கூட்டாட்சியும் வீரபாகு ஜெயபாகு கூட்டாட்சியும் பொலநறுவையில் நிலை பெற்றதாக அறியமுடிகின்றது. இக் கல்வெட்டுக்களது பொறிப்பு முறையில் திராவிடச்சாயலே தென்படுவதாக தொல்லியலாளர்கள் குறிப்பிடுவதால் இக்கால அரசியலில் கலிங்க பாண்டிய சேரச் செல்வாக்கு நிலை பெற்றமையே இதற்கான காரணம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

விக்கிரமபாகுவுடன் இணைந்த காலப்பகுதியில் 2ம் கஜபாகுவின் ஆட்சிக்காலம் கணிக்கப்படுகின்றது. இவன் பொலன்நறுவையிலும் கந்தளாயிலும் இருந்தவனாகச் சொல்லப்படுகின்றான்.இந்து மதத்திற்கு பெரு மதிப்பளித்தவன் என்பதனால் திருகோணமலைப் புராணத்திலும் தக்கண கைலாசப் புராணத்திலும் இவன் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றான். இதனாலேயே இவனைச் சூளவம்சம் தவறாகச் சித்தரிக்கின்றது. இதன்பின் பராக்கிரமபாகுவின் ஆட்சி முன்னெடுக்கப்படுகின்றது. சிங்கள வரலாறுகள் இவனை உயர் நிலையில் வைத்துப் போற்றுகின்றன. இவனுடைய போர் நடவடிக்கைகளில் தமிழதிகாரி ஆதித்தன் சிறப்பாக பேசப்படுகின்றான். இவனது படைகள் பாண்டி நாட்டுக்குச் சென்று பராக்கிரமபாண்டியனுக்கு உதவியமை தொடர்பாக சூளவம்சம் அதீத கற்பனையில் செல்வது இன்று ஆய்வாளர்களால் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

பராக்கிரம பாண்டியன் முடிவில் ஆட்சிக்கு வரமுடியாது போனதும் ஈழப்படையின் தளபதி இலங்காபுரன் பாண்டிய நாட்டில் கொல்லப்பட்டதையும் தமிழக வரலாற்றில் தெளிவுபடுத்தப் படுகின்றது. எனினும் பராக்கிரமபாகு இராமேஸ்வர ஆலயத்தின் ஒரு பகுதியினை கட்டி முடித்தமை தமிழக வரலாறு இவனுக்கு ஒரு சிறப்பிடத்தை அளிக்க காரணமாய் அமைந்துவிட்டது.

1ம் பராக்கிரமபாகுவின் மரணத்துக்கு பின் கி.பி 1186 - கி.பி 1214 வரையான காலப்பகுதி ஒரு நிலையற்ற அரசியல் தன்மையை கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். குறித்த 24 ஆண்டுகளில் 12 ஆட்சியாளர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் அனேகர் கலிங்க வம்சத்தினரே. இதில் மிக முக்கியமானவனான நிஸங்கமல்லன் (கி.பி 1187 -1196) என்ற கலிங்கன் அறியப்படுகின்றான். இவனைப் பற்றிப் பல சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. இவன் சைவனாக இருந்து பௌத்தத்தை தழுவியவனாகின்றான். பிற்கால பொலநறுவை ஆட்சியில் கலிங்கர் - பாண்டியர் - சிங்களவர் என்ற முத்தரப்பினரிடையேயும் ஆட்சி உரிமைச் சிக்கல்கள் பெருமளவில் இடம்பெற்றிருக்கின்றன. சோழராட்சிக்குப் பின்னர் கலிங்க மாகோன் பொலநறுவையைக் கைப்பற்றும் வரையான சுமார் 145 ஆண்டுகாலப்பகுதி பொலநறுவையின் ஆட்சிப் பிரதிநிதிகளாலே மட்டக்களப்பு பராமரிக்கப்பட்டு வந்துள்ளதை கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியும்.

**கலிங்க மாகோன் காலம்:**

கி.பி 1215 ல் மாகோன் இலங்கையின் பெரும் பகுதியைக் கைப்பற்றி தோப்பாவையில் (பொலநறுவை) தனது ஆட்சியை நிறுவினான். இவனது ஈழப்படையெடுப்பு தொடர்பாக மட்டக்களப்பு பூர்வீக சரித்திர ஆவணங்கள் கூறும் கருத்துக்களையே வரலாற்று ஆசிரியர்களும் பெரும்பாலும் முன் வைக்கின்றனர். இலங்கையில் கலிங்கர்களின் மேலாண்மையை நிலை நிறுத்துவதோடு பிற்பட்ட சோழராட்சிக் காலத்திலும் அதைத் தொடர்ந்து பொலநறுவை ஆட்சியிலும் சிவ மதத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களைக் களைவதுமே அவனது படையெடுப்புக்கு காரணமாய் அமைந்தது என்பதே பொதுவான கருத்தாகும். மாகோன் பெரும் படையுடன் வந்து இராசரட்டை மற்றும் உறுகுணையின் பெரும் பகுதியைக் கைப்பற்றினான். இவனிடம் இருபத்தினாலாயிரம் படைவீரர்கள் இருந்ததாக சூளவம்சம் குறிப்பிடும். இவனது பாரிய படையணியில் கலிங்கருடன் தமிழக வீரர்களும் இடம்பெற்றிருந்தனர். இவனது





படையெடுப்பு தொடர்பான தகவல்கள் தமிழக வரலாறுகளிலும் காணப்படுகின்றன. மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண வரலாற்று ஆவணங்கள் இவனது ஆட்சியை (கி.பி. 1215 1255) பெருமைப்படுத்தி பேசும் நிலையில் சிங்கள பௌத்த வரலாற்று நூல்கள் இவனை ஒரு கொடுங்கோலனாகச் சித்தரிக்கின்றன. வீரசைவனான மாகோன் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கும் பௌத்த மேலாதிக்கத்திற்கும் எதிராகச் செயல்பட்டமையே இதற்குக் காரணமாகும். எனினும் பிற்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் பலர் அவனது ஆட்சியில் கடைபிடிக்கப்பட்ட நீதியான அரசியலமைப்பையும் கட்டுக்கோப்பு மிக்க நிருவாகத் திறனையும் வியந்து நோக்கவே செய்கின்றனர்.

**யாழ்ப்பாண வைபவ விமர்சனம் மாகோன்பற்றிக் கூறும்போது**

கலிங்க மாகன் மற்றும் ஜெயபாகு (இவனே குளக்கோட்டன் ஆவான் ) என்னும் இரு அரசர்கள் கலிங்க தேசத்திலிருந்து பெரும் படையுடன் வந்து இலங்கையை ஆண்டனர். ஜயபாகு யாழ்ப்பாண நாட்டை அரசாள மாகன் புலத்தி நகரில் (பொலநறுவை) வீற்றிருந்து தென்னிலங்கை முழுவதையும் தனிக்குடையின் கீழ் அடக்கி செங்கோலோச்சினான். எனக்குறிப்பிடுகின்றது

சிங்கள நூலான நிக்காய சங்கிரஹாயவும் யாழ்ப்பாண வைபவமாலையும் இவனைக் காலிங்க விஜயபாகு எனக் குறிப்பிடப்படுவதைப் பார்க்கின்றோம். மட்டக்களப்பின் திருக்கோவில் கல்வெட்டு இவனை திரிபுவன சக்கரவர்த்தி விஜயபாகு தேவர் என விளம்புகின்றது.

மாகோன், சோழப் பேரரசின் மட்டக்களப்பு நிருவாகப் பிரதிநிதி புலியன் இருந்த இடத்தில் செங்கல்லால் சிறிய கோட்டை அமைத்து அதில் தனது சிற்றரசனாக கலிங்க குலத்தை சேர்ந்த சுகதிரனை அமர்த்தியிருந்தான். இந்த இடமே புளியந்தீவில் தற்போதைய நீதிமன்றம் அமைந்துள்ள இடமாகக் கருதப்படுகின்றது. தனது ஆட்சிப் பிரிவுகளின் நிர்வாக அலகுகளை ஏழேழு வன்னிமைகளாக வகைப்படுத்தி சோழராட்சியிலும் அதைத் தொடர்ந்து வந்த பொலநறுவை ஆட்சியிலும் சிறந்த நிருவாகிகளாக விளங்கிய படையாட்சி வன்னியப் பரம்பரையினருக்குப் பொறுப்பளித்தான். மாணிக்க கங்கை தொடக்கம் வெருகலாறு வரையான மட்டக்களப்புப் பிரதேசம் நாடுகாடுப்பற்று, பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப்பற்று,

கரைவாகுப்பற்று, மண்முனைப்பற்று, ஏறாவூர்ப்பற்று, என ஏழு பிரிவுகளாக அவனது ஆட்சியில் வகுக்கப்பட்டிருந்தது. மகாவலி கங்கையின் கீழ்ப்பால் விளங்கிய, சோழராட்சிக் காலத்தில் அவர்களால் குடியமர்த்தப்பட்ட ஆட்சிப் பணியாளர்களின் இருப்பிடங்களான மன்னன்பிட்டி, சமணன்பிட்டி, முத்துக்கல், திரிகோணமடுப் பகுதிகளை ஒருங்கிணைந்து முத்துக்கல் வன்னமையாக்கி ஏற்கனவே படையாட்சித் (வேளைக்காரர்) தலைவர் ஒருவரின் பொறுப்பில் அப்பகுதி இருந்தமையால் அவனோடு கலிங்கன் ஒருத்தனையும் சேர்த்து அதில் நிருவாக பொறுப்பளித்தான்.

சோழராட்சியின் பிற்காலம் முதல் செல்லரித்துக் கிடந்த மட்டக்களப்புத் தமிழகம் உத்வேகத்துடன் தலை நிமிரத் தொடங்கியது. தமிழ் மொழியும் தமிழ் மதமும் (சைவம்) சமூக நெறி முறைப் பண்பாடுகளும் உன்னத இடத்திற்கு உயர்ந்தன. ஆலய நடைமுறைகள் மற்றும் தொழில்சார் கருமங்கள் யாவும் சிறப்புற்றன.கதிர்காமக் கந்தன் ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன் றீச்சரம், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், மண்டூர் கந்தசுவாமி ஆலயம், வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம் போன்ற வழிபாட்டுத் தலங்கள் ஊடாக அவை சார்ந்து வாழ்ந்த சமூகங்கள் ஒருங்கிணைக்கப் பட்டன. அச் சமூகங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களும் கடமைகளும் சமூகத் தேவையாக விரிந்து பிரதேச ஒருமைப்பாட்டினுக்கு வழி கோலின. இப் பிரதேசத்தின் ஒரே சிவாலயமாகவும் தேரோடும் கோவிலாகவும் விளங்கிய கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் சகல நிலையினும் முன்னிறுத்தப்படலாயிற்று. இக் காலத்தே மட்டக்களப்பின் தலைமையானது கலிங்கர்களான சுகதிரனிடமும் பின்னர் அவனது மகன் சமூகதிரனிடம் இருந்ததாக மான்மியம் விளம்புகின்றது.

கலிங்க மாகோனின் ஆட்சிப் பறிப்புக்கு பாண்டியர் அடிக்கடி உதவி புரிந்தமை வரலாற்று ரீதியாக உணரப்பட்டதாகும். அவனது ஆட்சிக் காலத்தின் கி.பி 1223 ல் 1ம் மாறவர்மன் சுந்தர பாண்டியனும் கி.பி 1250 ல் 2ம் மாறவர்மனும் 1255 ல் ஜடாவர்மன் வீர பாண்டியனுமாக மும்முறை ஈழத்துக்குப் படைகளை அனுப்பியமை தெரிகின்றது. கி.பி 1255 ல் மாகோன் பொலநறுவையை விட்டு செல்ல வேண்டி ஏற்பட்டமைக்கு அவனுடைய வயோதிபத்தன்மையும் ஒரு காரணம் என்றே கொள்ள வேண்டும்.





## பாண்டியப் படையெடுப்புக்கள்:

கி.பி 1255 ல் பொலநறுவை ஆட்சி கலிங்க மாகோனிடமிருந்து கைமாறினாலும் பொலநறுவையைத் தொடர்ந்தும் இருக்கையாக்கும் நிலையில் சிங்கள மன்னர்கள் இருக்கவில்லை. அவர்களிடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டிகள் இதற்குக் காரணம் எனலாம். 3ம் விஜயபாகுவும், 3ம் பராக்கிரமபாகுவும் தம்பதெனியாவையே தமது இருக்கையாக்கினர். இதனிடையே கி.பி 1284ல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சியில் அவனது பாண்டியப்படை ஈழத்துக்குச் சென்று பொலநறுவையை வெற்றி கொண்டது. அங்கிருந்த புத்தமெருமானின் புனித சின்னமான பல் மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இக் காலத்தே பாண்டியப்படை மட்டக்களப்புக்குத் தெற்கே கதிர்காமத்தில் தரித்திருந்தாகச் சொல்லப்படுகின்றது. 3ம் விஜயபாகு தம்பதெனியாவுக்குள் சென்றுவிட ஆட்சிப் பொறுப்பு 3ம் பராக்கிரமபாகுவிடம் கி.பி 1287 ல் பாண்டியரால் கையளிக்கப்படுகின்றது. பின் பராக்கிரமபாகு மதுரை சென்று குலசேகர பாண்டியனிடம் பேசி புனித சின்னத்தை மீட்டு வந்தான். இது பற்றிய விரிவான தகவல்கள் குலசேகர பாண்டியனின் இருபதாம் ஆட்சியாண்டில் இயற்றப்பட்ட சேரன்மாதேவிக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

கி.பி 1301 ல் பொலநறுவை மன்னனாக 3ம் விஜயபாகு மீண்டும் முடி தரித்தாலும் இரண்டாண்டுகளில் ஆட்சியை இழக்க நேரிட்டது. புவனேகபாகு கி.பி 1314 வரை யாப்பகூவவில் ஆட்சியை அமைத்துக் கொண்டான். 4ம் பராக்கிரமபாகு கி.பி 1314 ல் ஆட்சிக்கு வந்ததும் பொலநறுவை மீண்டும் இராசதானியாகின்றது. ஐந்தாண்டுகளில் 2ம் புவனேகபாகுவிடம் ஆட்சி கைமாற தலைநகரும் குருநாகலுக்கு மாறுகின்றது. இதன் பின் ஆட்சித் தளங்கள் கம்பளை , பேராதனை என கி.பி 1411 வரை மாறுவது தொடர்கின்றது. இது 6ம் விஜயபாகுவின் காலமாகும்.

இக் காலத்தே மட்டக்களப்பை மேலாதிக்க ஆட்சிகளால் கட்டுப்படுத்த முடியாத நிலையே இருந்துள்ளது. பொலநறுவை அரசின் வீழ்ச்சியை அடுத்து ஏற்பட்ட அரசியல் பிளவுகள் குறிப்பிடத்தக்க அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்டிருக்கின்றன. இதன்போது வட இலங்கையில் தனித்துவமான அரசியல் ஒன்று தொடர்ந்து மையம் கொள்ள மட்டக்களப்பும் கட்டுப்பாடற்ற

நிருவாகக் கட்டமைப்பினூடே சென்றுள்ளது. இக் காலத்தே பரதசுந்தரன், இராசசுந்தரன், யாகசேனன் ,குகச்சந்திரன் ஆகியோர் மட்டக்களப்பை தொடர்ந்து நிருவகித்ததாக அறியப்படுகின்றது.

**கண்டி அரசு**

கி.பி 14ம் நூற்றாண்டின் பிற் பகுதி முதல் கண்டி அரசின் கீழ் மட்டக்களப்பு கொண்டுவரப்பட்டபின்னர் நான்கு உப நிர்வாகப் பிரிவுகளாக அது பிரிக்கப்பட்டு திக்கதிபர்களால் நிருவகிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதற்கென நியமிக்கப்பட்டவர்கள் பற்றி அறிய முடியவில்லை. எனினும் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் உன்னரசுகிரிப் பிரிவு சிங்களப் பிரதிநிதி ஒருவரிடமும் மட்டக்களப்பு (சம்மாந்துறை) பிரிவு பணிக்கர் குலப் பிரதிநிதியிடமும் மண்முனைப்பிரிவு கலிங்கர் குலப் பிரதிநிதியிடமும் ஏறாவூர் - கோறளைப் பிரிவு படையாட்சி குலப்பிரதிநிதியிடமும் இருந்தமைக்கான தகவல்கள் கிடைக்கின்றன. ஏறாவூர் கோறளைப் பிரிவு வெருகலாறு மற்றும் மன்னன்பிட்டி வரை பரந்ததாகத் தென்பட்டது. பொலநறுவையில் நியம அதிபனாக மாருதசேனன் என்ற கலிங்கனே பொறுப்பில் இருந்தான்.

கி.பி. 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொலநறுவையின் அதிபனான மாருதசேனன் தனக்கு ஆதரவாகச் செயல்பட்ட திக்கதிபர்களின் துணை கொண்டு மட்டக்களப்பையும் இணைத்து தனியரசாகச் செயல்பட்டான் எனத் தெரிகின்றது. கலிங்கனான இவன் பணிக்கர் குலப் பெண்ணை மணந்திருந்தான் எனப் பிற்பட்ட குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இவனுக்குப் பின்னர் இவன் மகன் எதிர்மன்னசிங்கன் கி.பி 1540 அளவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவன் மட்டக்களப்பில் உன்னரசுகிரி, மட்டக்களப்பு, போர்முனை நாடு, மண்முனை, ஏறாவூர் என ஐந்து நிருவாகப் பிரிவுகளை உருவாக்கினான். இவன் தனது ஆட்சிக் காலத்தில் புதிய சாலைகளை ஏற்படுத்தியும் களனிகள் திருத்தியும் பாசன வசதிகள் செய்தும் கோவில்கள் கல்விச் சாலைகள் அமைத்தும் நற்பணி புரிந்தவனாகக் கருதப்படுகின்றான். இவன் காலத்தே வெளிநாட்டு வியாபாரிகள் இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டதாகவும் அறியவருகின்றது. தென்னிந்திய அண்ணாமலை செட்டிமார் வியாபாரம் செய்ய வந்து கிட்டங்கியின் கரையை (சவளக்கடை - ஜவுளிக் கடை ) முக்கிய வியாபாரத் தளமாக வைத்திருத்தனர் எனவும் வர்த்தகம் செய்யவந்த மூன்று முஸ்லிம் குடும்பங்களை





நற்பிட்டிமுனையில் இவனே குடியமர்த்தினான் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாண்டிருப்பில் மகாபாரதக் கூத்தினூடாக துரோபதையம்மன் வழிபாட்டினை தோற்றுவித்ததன் மூலம் மட்டக்களப்பில் அவ் வழிபாடு பரவ இவனே காரணமானான். மட்டக்களப்பின் தென் பிரதேசத்தே பரவலாக வாழும் தனது தாய் வழி பணிக்கர்குல மக்கள் சகல நிலையிலும் முன்னுரிமை பெற இவனே வித்திட்டவனாகின்றான். இவனது ஆட்சி கி.பி 1585 வரை நீடித்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன.

இதன் பின் மட்டக்களப்பு மீண்டும் கண்டி அரசின் கீழ் வருகின்றது. 1592 ல் விமலதருமனும் கி.பி 1605 ல் சேனரதனும் கி.பி 1635 ல் 2ம் இராசசிங்கனும் கண்டி மன்னர்களாக முடிதரிக்கின்றனர். போர்த்துக் கீசரின் ஆட்சி மட்டக்களப்பில் (கி.பி 1622 ) ஆரம்பிக்கும் வரை கண்டிய மன்னர்களே மட்டக்களப்பின் ஆட்சியுடமையாளர்களாக செயல்பட்டனர். இக் காலத்தே மட்டக்களப்பின் நிலமைப் பதவிகளை மட்டக்களப்பின் ஆட்சி அதிகாரநிலை வழி வந்த முற்குக சமூகத்தினருக்கு அவர்கள் வழங்கினர். கலிங்கர், பணிக்கர், படையாட்சியர் குலத்தலைவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டன. இதில் ஒரு திசாவைப் பதவி முழுப் பிரதேசத்திற்கும் அமைய நிலமைப்பதவி இரண்டாக இருந்தது. ஐந்து நிர்வாக அலகுகளுக்கும் ஐந்து உப நிலமைகள் பணியாற்றினர். ஆரம்பத்தில் திசாவையாக கண்டியச் சிங்களவர் ஒருவர் பொலன்நறுவையிலிருந்து கதிர்காமம் வரையான பகுதியை பரி பாலித்தமைத்தமைக்கான பொலநறுவைத் தகவல்கள் கிடைக்கின்றன. இவர் திசாகாமி என அழைக்கப்பட்டார். இவரது இருக்கையும் பொலன்நறுவையிலேயே இருந்திருக்கின்றது. இதன் பின் திசாவைப்பதவி பற்றிய குறிப்புக்களை மட்டக்களப்பில் அறியமுடியவில்லை. வெருகல் தொடக்கம் கல்லாறு வரையான பகுதி ஒரு நிலமையிடமும் பெரியநீலாவணை தொடக்கம் கதிர்காமம் (மாணிக்க கங்கை ) வரையான பகுதி ஒரு நிலைமையிடமும் ஆங்கிலேயர் ஆட்சி வரை தொடர்ந்திருந்தமை தெரிகின்றது. நிலைமைகளை பெரிய வன்னியனார் என்றும், உப நிலைமைகளை சின்ன வன்னியனார் (உடையார்) எனவும் மக்கள் அழைக்கலாயினர். மட்டக்களப்பு நில உடைமையாளர்களான முற்குகத் தலைவர்கள் போடிகள் என்ற பெயரைப் பெற்றிருந்தனர். தென் பாண்டியிலும் அதனை அண்டிய சேரத்திலும் அன்றைய நில உடைமையாளர்கள் போடியார் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டமை இங்கும் அப் பெயர் வரக் காரணமாயிற்று எனக்

கொள்ளலாம். இதனைத் தொடர்ந்த காலங்களில் நிலமைகள் நிலமைப் போடிகள் (தலைமைப்போடி ) எனவும் உப நிலமைகள் போடிகள் எனவும் கிராம நிர்வாகிகள் ஊர்ப்போடிகள் எனவும் பதவிப் பெயரைக் கொள்ளலாயினர். பொதுவாக மட்டக்களப்பின் ஆட்சியதிகார நிலைக்குரியவர்களாக முற்குகரே இருந்ததை எல்லா ஆய்வாளருமே குறிப்பிடுகின்றனர். வரலாற்றாசிரியர்கள் ஈ.வி.டென்கமும் அவரது இலங்கை பற்றிய ஆய்வுக் குறிப்பில் மட்டக்களப்பின் ஆட்சியதிகாரத்தில் சுதேசிகளான மட்டக்களப்பு முற்குகரே இருந்தனர். கி.பி 15ம் நூற்றாண்டில் கொட்டியாரத்திலிருந்து முற்குகர் அல்லாத வன்னிமைப் பிரிவினர் மட்டக்களப்பில் குடியேற முயற்சித்தபோது மட்டக்களப்பின் முற்குக வன்னியர்கள் அவர்களை எதிர்த்து வெளியேற்றினர் எனக் குறிப்பிடுகின்றார். பி.ஈ.பீரிஸ் அவர்கள் தனது வரலாற்று நூலில் ஆரம்பகாலத்தே மட்டக்களப்பில் தோற்றம் பெற்ற மூன்று முற்குக வன்னிமைகளின் சந்ததியினரே விந்தனை தவிர்ந்த அனைத்து மட்டக்களப்புப் பிரதேசத்தையும் தொடர்ந்து அதிகாரம் செலுத்தினர் எனக் கூறுகின்றனர்.

**போடிகள்**

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரியம் மிக்க மரபுவழிப்பட்ட வரலாற்றிலும் சிறப்பம்சங்கள் பொருந்திய நிலமானியப் பொருளாதார நடவடிக்கைகளிலும் போடிமார் பற்றிய தகவல்களும் மேலாதிக்கச் செயல்பாடுகளும் மிக மேலோங்கியதாகவே தென்படுகின்றது.போடி முறைமையானது பண்டைய சேரநாடான மலையாள நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு அறிமுகமான முறைமை என்றே குறிப்பிடப்படுகின்றது.நில உடமையாளரைக் குறிக்கும் போக்தா என்ற மலையாளச் சொல்லே திரிந்து போடியான தென பேராசிரியர் வேலுப்பிள்ளை போன்றவர்கள் குறிப்பிடும் நிலையில் வித்துவான் வி.சி.கந்தையா மற்றும் தொல்லியல்துறை விரிவுரையாளர் கே.தனபாக்கியம் போன்றவர்கள் போஷி என்னும் வடமொழிச் சொல்லே போடியானதெனவும் அது குடி மக்களின் துணைகொண்டு உழுது வேளாண்மை செய்து தன்னோடு பிறரையும் போஷித்து தலைமையேற்று வாழ்ந்தவர்களைச் சுட்டுவதாக அமையும் எனவும் குறிப்பிடுகின்றனர்.பிற்காலத்தே அரசின் பட்டமாக - தமிழகத்தில் நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் இது செயல்பாட்டிலிருந்தமை ஆதாரப்படுத்தப்பட்டதாகும். மட்டக்களப்பில் நிலவுடமை





வாதிகளான போடிமார் மரபு முக்குகச் சாதியாரிடையே காணப்பட மலையாள நாட்டில் அது அங்குள்ள வேளாண் சமூகமான நாயரிடமே இருந்தது. மட்டக்களப்பில் தென்பட்ட தலைமைப் போடி மற்றும் ஊர்ப்போடி முறைமையையொத்த தலைமைத்துவ முறைகளும் அங்கும் அண்மைக்காலம் வரை இருக்கவே செய்தது. எனினும் கேரளாவில் 1696 வரை நடைமுறையிலிருந்து கோட்டயம் மன்னனான கேரளவர்மனால் ஒழிக்கப்பட்ட உயர்வு, தாழ்வு குறித்த மன்னப்போடி - புலப்போடி முறைமை மட்டக்களப்பில் இல்லாமை ஒரு சிறப்பம்சமாகவே கொள்ளப்படத்தக்கது.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரிய நிலவுடமை பற்றிய ஆய்வினை மேற்கொண்ட பொருளியல் ஆசான் குமாரவேலு தம்பையா தனது கட்டுரையொன்றில் (தான்தோன்றீச்சர கும்பாபிஷேக மலர் - 1998) முடிவுரையாக, வன்னிமை என்ற சுதந்திரச் சிற்றரசுகள் செழிப்புற்றிருந்த காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட நிலவுடமை முறையும் அதன் கட்டமைப்பு வளர்ச்சியும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் நீண்ட மரபுகளுக்கும் வழக்காறுகளுக்கும் காரணமாய் அமைந்திருந்தன. இத்தகைய பின்னணியில் தோற்றுவிக்கப்பட்டு விருத்தியடைந்த இப்பிரதேசத்தின் மானியமுறைப் பொருளாதாரமானது ஏனைய பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களைப்போல் பாரம்பரிய மானிய அமைப்பு முறையை ஒத்ததாகவும் நிலமே பிரதான பொருளாதார மூலமாக பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. ஆனால் ஏனைய மானிய முறைமையில் காணமுடியாத அளவிற்கு நில உடமையையும் அதன் ஒழுங்குபடுத்தல்களையும் அவற்றினால் உருவான சமூக விழுமியங்களையும் அடியொற்றிய போடியார் முறை இப்பிரதேசங்களில் தென்பட்டது.இம் முறைமை இப்பிரதேசத் திற்கேயுரிய பாரம்பரிய வழக்காறுகளின் உயர்நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாகவே கணப்படுகின்றது. ஏனைய பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் நிலப் பிரபுத்துவ முறையும் அதனோடியைந்த மானியமுறைப் பண்புகளும் காணப்படுகின்ற நிலையில் மட்டக்களப்புப் பிரதேசத்தே இப் போடியார் முறை உருவாக்கிய மானிய முறையின் வழக்காறுகள் சமூகப் பெறுமானங்களையும் பொருளியல் விருத்தியையும் அடியோற்றியவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகின்றது. சான்றாக ஏனைய மானியமுறைப் பொருளாதாரங்களில் ஊழியம் அடிமை முறையாக அல்லது கீழ்நிலைப்படுத்தப்பட்ட சாதாரண கூலித் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டதை நேரடியாகவே காணக்கூடியதாக வுள்ளது.

ஆனால் மட்டக்களப்புப் பிரதேச போடியார் மரபு முறையின் கீழ் இவ்வாறு கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்தப்பட்ட ஊழியம் அவர்களை சாதாரண கூலித் தொழிலாளர்கள் என்பதைவிட மனித நேயம்மிக்க மனித உழைப்பையும் இப்போடிமாரால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதனை மிக முக்கியமாகக் குறிப்பிட்டேயாகவேண்டும்.

இதன் அடிப்படையில் பார்க்கின்றபோது, பொதுவாக மட்டக்களப்பின் நிலவுடமையாளர்களாக வாழ்ந்த போடிமார் யாவரும் மிக்க கண்ணியமானவர்களாகவும் மனிதாபிமானம் மிக்கவர்களாகவும் அனைவரையும் சமமாக வழிநடாத்தி தங்களை நிலைநிறுத்திக்கொண்டவர்கள் என்பதனை நம்மால் அறிந்துகொள்ளமுடிகின்றது.

**போர்த்துக்கேயத் தொடர்புகளும் ,மட்டக்களப்புப் போடிகளும்**

கி.பி 16ம் நூற்றாண்டு தொடக்கம் மட்டக்களப்பு வரலாறு பற்றிய தகவல்கள் ஒரு தடுமாற்ற நிலையை தெளிவு படுத்துகின்றன. மாருதசேனன் கண்டி அரசினைப் பகைத்துக் கொண்டு தன்னாட்சி நிறுவிய காலம் கவனத்தில் கொள்ளத்தக்கதாகின்றது. மட்டக்களப்பு பூர்வீக சரித்திரமும் சில கல்வெட்டு பாடல் குறிப்புக்களும் முரண்பட்டு நிற்கும் நிலமையும் இங்கு தோற்றம் பெறுகின்றது. மட்டக்களப்பில் போர்த்துக்கேயர் கால் பதித்த இக் காலத்தே கோவா போன்ற தென்னிந்திய கிறிஸ்தவ அமைப்புக்களின் தொடர்புகள் மட்டக்களப்புக்குக் கிடைத்திருக்குமோ என்ற சந்தேகங்களும் எழவே செய்கின்றன. போடி கல்வெட்டில் கூறப்படும் பங்குடாவெளி கண்ணன் எனும் கலிங்கத் தலைவன் மாருதசேனனாக இருக்கக்கூடுமோ என்ற ஐயம் மேலோங்கி நிற்கும் வேளையில் திருக்கோவில் ஆலயம் தொடர்பான குறிப்பு இதற்கு வலிமை சேர்க்கின்றது. திருக்கோவில் ஆலயத்திற்கு நீதிபரிபாலனம் செய்த பங்குடாவெளி நிலமை கண்ணாப்போடியாரின் மணவினைகள் தொடர்பானும் வேறு ஏதுக்களானும் ஆலய நிருவாகம் அவரிடமிருந்து கைமாறியதாக கூறப்படுகின்றது. வேறு ஏதுக்கள் என்பது குறித்த விளக்கமின்மையே இப்போது வரலாற்று தெளிவொன்றினைக் காணப் பெரும் தடையாகப்படுகின்றது. மான்மியம் குறிப்பிடும் மாருதசேனனும் திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று சித்திவிநாயகர் ஆலயத் தகவல்கள் வெளிப்படுத்தும் பங்குடாவெளி நிலமை கண்ணாப்போடியும் போடி கல்வெட்டு தரும் பங்குடாவெளி கண்ணனும் ஒரே காலக் கணிப்புக்கு





உட்பட்டேயுள்ளனர். இதனால் பாதிரியார் கோயம்பரா குறிப்பிடும் கிறிஸ்தவத்தை ஆதரித்த மட்டக்களப்பு மன்னனாக இவனைக் கருதக் கூடியதாக உள்ளது.

கி.பி 1622 ல் மட்டக்களப்பு போத்துக்கீசர் வசம் வந்தது. எனினும் அதற்கு முன்னிருந்தே போத்துக்கல் நாட்டின் கிறிஸ்தவப் பாதிரிமார் மட்டக்களப்பில் தொடர்பு கொண்டிருந்தமை நமது கவனத்துக்கு வருகின்றது. கி.பி 1520 வாக்கில் போத்துக்கேயரின் தொடர்பு யாழ்ப்பாணத்தில் ஏற்படுகின்றது. வர்த்தக ரீதியாக ஆரம்பமான இது பின்னர் கிறிஸ்தவ போதனையின் பால் மாற்றமடைகின்றது. இதே நிலை மட்டக்களப்புக்கு கி.பி 1550ன் பின் ஏற்பட்டதற்கு சான்றுகள் உண்டு. மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பெறத்தக்க ஆவணமொன்று (Archives of the Roman Catholic Mission , Batticaloa) இது பற்றிக் குறிப்பிடுகின்றது. விமலதருமனின் ஆட்சிக்கு முற்பட்டதாக போத்துக்கேய கிறிஸ்தவ பாதிரிமார் மட்டக்களப்பில் நிலை கொண்டுள்ளனர். அவர்களது ஆரம்பகாலக் கண்டித் தொடர்பும் மட்டக்களப்பை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. கி.பி 16 ம் நூற்றாண்டின் முற்பகுதி தொடக்கம் கோட்டை அரசோடு போர்த்துக்கேயருக்கு இருந்த நெருக்கம் பல வழிகளிலும் அவர்களுக்கு சாதகமாகவே அமைந்தது.

ஆய்வாளர் டி.சிவராம் இது தொடர்பாக எழுதிய கட்டுரைகள் போர்த்துக்கேயரின் அறிக்கைகள் ஊடாக மட்டக்களப்பின் அக்கால வரலாற்று தளத்துள் நம்மை இணைக்க உதவுகின்றன. கி.பி 1530 -1542 வரையான காலப் பகுதியில் கிறிஸ்தவப் பாதிரியார் சைமாவே கோயம்பரா என்பவர் அவர்களது தலைமைக்கு எழுதிய கடிதங்கள் மூலம் பல தகவல்கள் கிடைக்கின்றன. இக் காலம் கோட்டை இராச்சியத்தின் கீழ் நாடு இருக்கின்றது. மட்டக்களப்பு தனி இராச்சியமாக இருப்பதையும் மட்டக்களப்பு மன்னனைத் தான் சந்தித்ததாகவும் கோட்டை இராச்சியத்திலிருந்து முற்றாகத் தன்னை விடுவித்துக்கொள்ள பீரங்கி போன்ற உதவிகளை போர்த்துக்கல் மன்னனிடம் மட்டக்களப்பு மன்னன் கோரியதாகவும் பதிலாக கப்பல் கட்டும் மரங்கள் போன்றவற்றை பண்டமாற்றாகத் தர விரும்புவதாகவும் அதில் காணப்படுவதை டி. சிவராம் விபரிக்கிறார். இது போன்ற பல தகவல்களைப் பெற்று அவர் ஆய்வுப்படுத்தியுமுள்ளார். கடிதங்களும் குறிப்புகளும் வரலாற்றுக்குத் துணை போவதை

உறுதி செய்யும் போது இன்னும் அவை மேலான உள் நோக்கத் தன்மையின் வெளிப்பாட்டின் அம்சமாக இருப்பதையும் வரலாற்றுக்குள் உள்வாங்குதல் அவசியமாகின்றத. தென்னிந்திய வரலாறுகளிலும் இவை வெளிப்படுவதைக் காணுகின்றோம். முதல் வர்த்தக நோக்கமும் பின்னர் மதம் பரப்பும் நோக்கமும் அதன் பின் நாடு பிடிக்கும் நோக்கமும் ஐரோப்பியரின் வரலாற்றுத் தெளிவாகும். மதகுருமார் நாட்டின் அல்லது பிரதேசத்தின் தலைவர்கள் அல்லது அதற்கென நியமிக்கப்பட்டவர்களை அவர்களின் பலவீனத்தை தெரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் தங்கள் நாட்டு ஆட்சி மேலிடத்தின் உதவிகளையும் உத்தரவாதத்தினையும் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் பதிலாக தங்கள் மதத்தினை பரப்பிக் கொள்வதும் ஒரு பகிரங்கப்படுத்தப்படாத உத்தியாகவே இருந்துள்ளது. கோட்டையின் புவனேகபாகுவின் ஆட்சி வாரிசு தர்மபாலனதும் யாழ்ப்பாண சங்கிலியனின் வாரிசும் இதுவரை வரலாற்றில் தெளிவுபடாத மட்டக்களப்பு ஆட்சித் தலைவன் கண்ணாப்போடியின் வாரிசும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளல் இதன் பாற்பட்டதாகும்.

போர்த்துக்கேயர் கி.பி1622 ல் மட்டக்களப்பைக் கைப்பற்றியதாகக் கூறப்பட்டாலும் உடனடியாக இப் பிரதேசமெங்கும் தங்கள் ஆட்சியை அவர்களால் நிறுவிக் கொள்ள இயலவில்லை. மாகோன் வகுத்த வன்னிமைப் பிரிவுகளே பொதுவாக அவர்களது ஆட்சிப் பிரிவுகளுக்கு வித்திட்டிருக்கின்றது. கண்டி மன்னன் செனரதனின் ஆட்சிக் காலத்தின் (கி.பி. 1605- 1635) பிற்பகுதியில் இலங்கையின் வடமேற்கு மற்றும் மேற்கு கடல் பகுதியை சார்ந்து வாழ்ந்த முஸ்லிம்கள் போர்த்துக்கேயரின் கொடிய நெருக்குதலில் இன்னல்பட்டு கண்டியில் அடைக்கலம் புகுந்தபோது கண்டி மன்னன் செனரதன் ஆயிரக் கணக்கான முஸ்லிம்களை கி.பி 1626 ல் தனக்கு மிக நெருக்கமான மட்டக்களப்பு முற்குக வன்னியர்களின் துணைகொண்டு மட்டக்களப்புத் தென் பகுதியல் குடியேற்றியபோது போர்த்துக்கேயர் மட்டக்களப்பில் போதிய ஆதிக்க சக்திகாளக வளரவில்லை என்பதையே இது காட்டுகின்றது. இக் காலத்தில் தான் முஸ்லிம் மக்களில் ஒரு கணிசமான தொகையினர் இப் பிரதேசத்து தமிழர்களுடன் இணைந்து கொள்கின்றார்கள். இதனை ஆய்வாளர் ஏ.ஆர்.எம்.சலீம் அவர்களது அக்கரைப்பற்று வரலாறு (முதற் பதிப்பு) காய்தல் உவத்தலின்றி சுட்டி நிற்கின்றது.





ஒரு மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாத மட்டக்களப்பு மக்கள் மீதும் அவர்களது முற்குக வன்னிமைகள் மற்றும் நில உடமையாளர்களான போடிகள் மீதும் போர்த்துக்கேயர் மூர்க்கத்தனமாகச் செயல்பட்டதையும் வழிபாட்டுத் தலங்களை தகர்த்து செல்வங்களை அபகரித்ததையும் தொடக்க நிலையாக பார்க்கின்றோம். கிளர்ச்சியில் ஈடுபட்ட பல போடிமார் சிறைப்பிடிக்கப்பட்டு மட்டக்களப்பில் இதற்கென அமைக்கப்பட்ட திறந்த வெளிச் சிறையான சிறையாத்தீவில் வைக்கப்பட்டும் கடுமையாகச் செயல்பட்டவர்கள் கொழும்புச் சிறைக்கு மாற்றப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதுவும் பலர் கொல்லப்பட்டதுவும் இதுவரை சரியாக ஆவணப்படுத்தப்படாத பல தகவல்களை நமக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பு வாவியால் சூழப்பட்ட பெரிய களத்துக்கு அண்மையிலுள்ள சிறிய தீவே போடிகள் நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டமையால் சிறையாத்தீவு எனப் பெயர் பெற்றது. சிறையாத்தீவில் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு உடல் மெலிந்து பின்னர் தனது ஊரான புதுக்குடியிருப்பில் மரணித்த நோஞ்சிப்போடி பற்றி அவரின் வாரிசுகள் தரும் தகவல்கள் இங்கு முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இவர் சிறையாத்தீவில் அடைபட்டிருந்தபோது கடும் நோய்வாய்ப்பட்டதால் இவரை தோணியில் ஏற்றி புதுக் குடியிருப்புக்கு அனுப்பியதாகவும் இதனால் இவர் ஏத்தப்பட்ட நோஞ்சிப்போடி என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனிடையே திரு.ஞா.சிவசண்முகம் தனது நூலில் நோஞ்சிப்போடியை போர்த்துக்கேயர் போர்த்துக்கல்லுக்கு கப்பலேற்றியதாக குறிப்பிட்டுள்ளமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்க தாகின்றது. சில வருடங்கள் கண்டியில் தலைமறைவாகியிருந்த சம்மாந்துறை வன்னியனையும் போர்த்துக்கீசர் சிறைப்பிடித்து விசாரணையின் பின்னர் அவனின் சொத்துக்களையும் பறித்து பதவி நீக்கமும் செய்ததாக சில ஏட்டுப் பிரதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கண்டி மன்னனுடன் நட்புக் கொண்டிருந்த அவ் வன்னியன் பற்றிய போதிய விபரங்கள் கிடைக்கவில்லை. எனினும் இவனே போர்த்துக்கீசரால் வடமேல் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டு கண்டியில் தரித்திருந்த நூற்றுக் கணக்கான முஸ்லிம்களை கண்டி மன்னன் செனரதனின் வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பில் குடியமர்த்தினான் எனவும் இவனது வதிவிடம் சம்மாந்துறையில் முற்குகவட்டை என்னுமிடத்தில் அமைந்திருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. போர்த்துக்கீசரின் கொள்கைகளையும் செயல்பாடுகளையும்

தொடர்ந்தும் எதிர்ப்பவர்களாகவே மட்டக்களப்பின் பெரும்பாலான போடிமார் செயல்பட்டு வந்தனர்.

**முக்குகச் சட்டம் :**

யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சி வசதிக்காக பழமைவாய்ந்த நெறிமுறைகளை எவ்வாறு தேசவழமைச் சட்டமாக்கி செயல்படுத்தினார்களோ அதேபோல மட்டக்களப்பின் முக்குக ஆட்சித் தலைவர்களால் செயல்படுத்திய நிருவாக நெறி முறைகளை முக்குகச் சட்டம் என்ற பெயரில் தங்கள் ஆட்சியில் சேர்த்துக்கொண்டனர். ஏனைய மரபு வழிச் சட்டங்களிலிருந்து வேறுபட்டு தாய்வழி (பெண்ணுரிமை) முக்கியத்துவமும் முன்னுரிமையும் பெறும் சட்டமாக இது அமைந்தது. இச் சட்டமானது புத்தளப் பிரதேசத்திலும் நடைமுறையிலிருந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு தேசத்தை பொறுத்த வரை முக்குகரின் சாதி வழமையே எல்லாத் தமிழருக்கும் பொதுவான சட்ட நெறியாக கொள்ளப்பட்டதென பேராசிரியர் சி.பத்மநாதன் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். மூத்தோர் கூடம் எனும் சமூகப் பெரியார்கள் மூலம் சட்டம் அமுல் படுத்தப்பட்டதாக சேர்.அலெக்சாந்தர் ஜோன்ஸ்ரன் என்பவர் தனது ஆய்வில் இது குறித்துக் தெரிவிக்கின்றார். புத்தளப் பிரதேசத்தில் இது முத்திர கூடம் எனக் குறிப்பிடப்படுகின்றது. மூத்தோர் கூடமே முத்திர கூடமாயிருத்தல் வேண்டும். தமிழகத்திலும் (சேர,சோழ, பாண்டிய நாடுகள்) இத்தகைய அமைப்புக்கள் இருந்திருக்கின்றன.

**இச்சட்டம் சொத்துடமை தொடர்பாகப் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.**

01. சொத்துரிமை வகை
02. சீதனமாகக் கொடுக்கப்படுகின்ற வகை
03. காணி ஆட்சிப்படுத்திலின் (கையாளல்) வகை
04. காணி நன்கொடை வகை
05. காணி ஒற்றி பிடிக்கின்ற வகை
06. சிறைக்குடிகளுக்காக காணி வழங்கல் வகை
07. வட்டியறவீட்டு வகை
08. காணி வாங்கல் விற்றல் வகை

**சட்டப்பகுப்பு சொற் பிரயோகம் (சி.பிரிட்டோ தொகுப்பு) பின்வருமாறு அமைகின்றது.**

1. தேட்டம் - தேடிய சொத்துக்கள்





2. மாதாக்கள் - தாய்வழியினர்
3. தாதாக்கள் - தந்தை வழியினர்
4. மூதாக்கள் - தாய், தந்தை முன்னோர் வழிகள்
5. குடிகள் - தாய் வழிச் சமூகத்தினர்
6. வயிற்றுவார் - குறிப்பிட்ட ஒரு தாய் வழிச் சந்ததியினர்
7. முதுசம்- தாய்வழி மற்றும் மூதாதையர் வழிச்சொத்துக்கள்
8. சோம் - அசைவுள்ளதும், அசைவற்றதுமான சொத்துக்கள்
9. இரட்டைச் சொற்கள் - (உ-ம்) காணிபூமி, வீடுவாசல், தோட்டம்துரவு, ஆடுமாடு
10. உரிமை- பிள்ளைகளையும் பெண்பிள்ளைவழி வாரிசுகளையும் குறிக்கும்.

மேற்கண்ட பிரயோகங்கள் மேலும்பல உட்பிரிவுகளுடன் விரிந்து காணப்படுகின்றன.

இச் சட்டம் குறித்து பிரிட்டோ மிகவும் விரிவாக ஆராய்துள்ளார். மாதா வழி முதுசம் தவிர ஏனைய அனைத்தும் பண்டைய ரோமன் டச்சுச் சட்டத்தில் (Roman Dutch Laws) காணப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார். இச் சட்டம் தெற்கு ஒல்லாந்து நாட்டில் காணப்படுகின்ற வாரிசுச் சொத்துடமை முறையினை ஒத்திருப்பதையும் அவர் காணுகின்றார். கணவன் மனைவியிடத்தே நேரடி வாரிசுகள் இல்லாதிருக்கின்றபோது அவர்களது சொத்துக்கள் எவ்வாறு பங்கிடப்படல் வேண்டுமென இச் சட்டம் கூறும் வரையறைகளும் வியாக்கியானங்களும் வியந்து நோக்கத்தக்கவை. ஒரு பண்பட்ட சமூகமாக மட்டக்களப்பு தமிழர் சமூகம் தன்னை வளர்த்துக் கொண்டமைக்கு முற்குகச் சட்டம் நல்ல உதாரணமாகும். இச்சட்டம் குறித்து தமிழக சட்ட வல்லுனரும் எழுத்தாளருமான திரு.பாவேந்தன் தனது முனைவர் பட்டத்துக்கான கீழைத்தேய மரபு வழிச் சட்டங்கள் ஆய்வில் ஈழத்து மட்டக்களப்பு முற்குகர் சட்டம் எனும் அத்தியாயத்தில் தரும் குறிப்புக்களில் சில பகுதிகள் இவ்வத்தியாயத்தில் இடம்பெறுவது பொருத்தமானதாக அமையும்.

பாரம்பரியம் மிக்க மரபுவழிச் சமூகங்களுக்குரிய வழக்காறுகளின் அடிப்படையில் அச் சமூகங்களையே நிலையான ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்துப் பேணுவதற்கு ஒரு நீண்ட கால அனுபவ நெறிப்படுத்துகையில் உருவானவையே தேசிய மரபு வழிச் சமூகச் சட்டங்கள் ஆகும். தேசியச் சமூகம் ( National Community) என்பது பல்வேறு அர்த்தப்பாட்டைக் கொண்டிருப்பினும் மிக முக்கியமான மூன்று அம்சங்களை அது உள்ளடக்கியதாக அமையும்.

1. தேசிய மரபுரிமை சார்ந்த சமூகக் கட்டமைப்பு
2. பிரதேசத்துக்குரியதான சிறப்புக் குறித்த வழக்காறுகளின் முக்கியத்துவம்.
3. மேற்படி இரண்டிற்குமான பேணுகையும் பாதுகாப்பும்.

ஈழத்தில் சிங்களப் பிரதேசங்களுக்கு தனிச் சமூகச் சட்டங்கள் இருந்ததைப் போல தமிழர் வாழ் பிரதேசங்களில் இத் தன்மை கொண்ட இருவித சட்டங்கள் ஒரு நீண்ட காலப்பகுதியில் நடைமுறையிலிருந்ததுவும் கி.பி 16ம் 17ம் நூற்றாண்டில் அந் நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த போர்த்துக்கேயரும் பின்வந்த டச்சுக்காரரும் தங்கள் நிர்வாக முறைக்குள் அவற்றைப் புகுத்தியதும் அங்கு வாழ்ந்த தமிழர்கள் தேசியப் பாரம்பரியம் கொண்ட பண்டைய சமூகத்தினர் என்பதை வெளிக்காட்டுகின்றது. யாழ்ப்பாணத்தில் பேணப்பட்ட சட்டம் யாழ்ப்பாண தேசவழமைச்சட்டம் எனப் பெயர் பெற மட்டக்களப்புப் பிரதேசத்தில் பேணப்பட்ட சட்டமோ மட்டக்களப்பு முற்குகர் சட்டம் (Batticaloa Mukkugas Law) எனும் சமூகப் பெயரைப் பெறுகின்றது. முக்குகர் பற்றி பல்வேறு வியாக்கியானம் கொடுக்கப்பட்டாலும் கேரளத்து - தமிழகத்து முக்குவருக்கும் மட்டக்களப்பு முக்குகருக்கும் பாரிய வேறுபாடுண்டு.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைய தென்னிந்திய சமூகப் பரிவுகளின் ஒருங்கிணைப்பாகவே மட்டக்களப்பு முக்குகர் சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப முதலே ஆட்சியுடமை நிலவுடமை மிக்க சமூதாயமாக இது வளர்ந்து நிலை பெற்றதால் முக்குக தேசம் எனும் சிறப்பினை மட்டக்களப்பு பெற்றிருக்கின்றது. முக்குக தேச வழமைச் சட்டமே முக்குகச் சட்டமாக இங்கு பெயர் பெற்றிருக்கலாம்.

மட்டக்களப்பு முக்குகச் சட்டம் பெரும்பாலும் நில உடமைகள், பங்கீடுகள், பராமரிப்புக்கள, செய்கைகள், கொடுக்கல்





வாங்கல்கள், உடமை மாற்றம், பணிகளுக்கான கூலிகள், பிணக்குகளைத் தீர்த்தல், குடியியல் தண்டனைகள் என்பவற்றை சார்ந்தே அமைகின்றது. இச் சட்டமானது அதனது நடைமுறைக்கால அந்திமப் பகுதியில் அல்லது அற்றுப்போன காலத்தில் அச் சட்டப் பயனை அனுபவிக்காத அல்லது முழுமையும் அறிந்திராத ஆங்கிலேய சட்ட அறிஞரான சி.பிறிற்றோ என்பவரால் தொகுக்கப்பட்டதையே நாம் மட்டக்களப்பு முக்குகச் சட்டமாகப் பார்க்கின்றோம். இது தொகுக்கப்பட்ட விதம் இடையிடையே அறுந்துகிடக்கும் சங்கிலியின் தோற்றப்பாட்டையே கொண்டிருக்கின்றது. இதில் நல்ல பல அம்சங்கள் விடுபட்டுப்போயினவோ எனும் ஐயப்பாட்டையும் இது உண்டு பண்ணவே செய்கின்றது. இச்சட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்களோ அன்றேல் அது நடைமுறைக்குட்படுத்தப்பட்ட காலத்தே வாழந்தவர்களோ அல்லது முழுமையாக தெரிந்து வைத்திருப்பவர்களோ அதை ஆவணப்படுத்தாது விட்டமை அந் நாட்டினதும் அது சார்ந்த தமிழர் சமூகத்தினதும் வரலாற்றுத் தவறாகவே உலகம் கொள்ளும்.

இச்சட்டங்களின் தேடலின் ஊடே கட்டுக்கோப்பும் அரவணைப்பும் தாய்வழி இன உணர்வின் இறுக்கமும் கொண்ட ஒரு பண்பட்ட சமூகத் தன்மை நாகரீக மிடுக்குடன் வெளிப்படுகின்றது. போர்த்துக்கீசர் யாழ்ப்பாண மேல் மட்டத்தினராகக் கருதப்பட்ட பல வேளாளர்களை தங்களின் நிருவாகத்தில் முக்கிய பதவிகளில் சேர்த்துக் கொண்டதை போல மட்டக்களப்பின் மேல் மட்டத்தினராக அன்றிருந்த முக்குகரை சேர்த்துக் கொண்டமைக்கு எதுவித சான்றுகளும் கிட்டவில்லை. மட்டக்களப்பின் முக்குகப் போடிகளை நம்பகத்தன்மை அற்றவர்கள் எனக் கருதியதும் இதற்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கலாம். யாழ்ப்பாணத்திலே தொம் எனும் போர்த்துக்கீசச் கொல்லோடு தமிழரசர்களால் வழங்கப்பட்ட முதலியையும் சேர்த்து தொம் முதலி என்ற பட்டத்தினை பலருக்கு வழங்கினார்கள் என்றும் வசதி படைத்தவர்கள் பணத்தைக் கொடுத்தும் இப் பட்டத்தை பெற்றார்கள் என்றும் ஆசுகவி வேலுப்பிள்ளை தனத யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் (!918) குறிப்பிடுவதும் இங்கு நம் கவனத்தை ஈர்க்கின்றது. என முற்குகச் சட்டத்தின் தாற்பரியங்கள் பற்றிப் பாவேந்தன் விரிவாக எழுதிச் செல்கின்றார்.

கத்தோலிக்க மதகுருக்களான பிதா சைமோவாடி கோயம்பரா அடிகளின் கடிதக் குறிப்புகளும் பிதா கொயரோன் அடிகளின் மேற்றிராசனக் குறிப்புகளும் முற்குகத் தலைவர்களை மட்டக்களப்பு மன்னர்கள் என்றே குறிப்பிடுகின்றன.

போர்த்துக்கேயர் மட்டக்களப்பில் மேற்கொண்ட ஆரம்ப நடவடிக்கைகளால் பிற மதங்கள் மீது எவ்வாறு காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தார்கள் என்பது வெளிப்படுகின்றது. இது நாடு முழுவதற்கும் பொருத்தமானதாகும். மட்டக்களப்பில் இவர்கள் கண்ணில்பட்ட பல சைவக் கோயில்களை இடித்துத் தள்ளினர். அங்கிருந்த செல்வங்களையும் சூறையாடினர். யாழ்ப்பாணச் சரித்திரத்தில் எஸ்.முத்துத்தம்பிப்பிள்ளை தரும் குறிப்பு போர்த்துக்கீசரின் பொதுவான நடவடிக்கையின் வெளிப்பாடாக அமைகின்றது. ஒலிவேறா எனும் பறங்கித் தளபதி யாழ்ப்பாண பிரதேசத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட கோவில்களை இடித்து தள்ளியதற்காக அவன் பெரிதும் பாராட்டப்பட்டமையை வேதனையுடன் அவர் குறிப்பிடுகின்றார். திருகோணமலை சிவாலயமும் சீதவாக்கை சிவாலயமும் காலிக்கப்பாலுள்ள தேவேந்திரபுரம் (Dondra) விஷ்ணு ஆலயமும் பின் மட்டக்களப்பு திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயமும் கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயமும், வெல்லாவெளி சிவாலயமும், இவர்களால் அழிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க புகழ்பெற்ற சைவ ஆலயங்களாகும். 1500 வருடங்களுக்கு மேற்பட்டு நம் தமிழ் மன்னர்களாலும் பிரபுக்களாலும் பெருநிதி கொண்டு நிருவகித்துப் பாதுகாத்து வந்த ஆலயங்களையெல்லாம் பறங்கியர் சிறிதும் கைகூசாது தகர்த்து சித்திரமணம் சிறிதுமில்லாத நாடாக மாற்றிவிட்டார்கள் என எஸ் .முத்துத் தம்பி மேலும் ஆதங்கப்படுவது ஒரு வரலாற்று வெளிப்பாடாகும்.இதே நிலைமை மட்டக்களப்பின் அனேக சைவக்கோவில்களுக்கும் ஏற்படவே செய்தது.

**போர்த்துக்கேயர் ஏற்படுத்திய மாற்றங்கள்:**

போர்த்துக்கேயர் மட்டக்களப்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மிக முக்கியமானவை வரி அறவீட்டு முறையாகும். இதற்கென அவர்கள் தோம்பு எனப்படும் பதிவேட்டு முறைகளை ஆரம்பித்தார்கள். நிலவரிக்கான காணித் தோம்பில் அப்போதிருந்த போடிகளையும் அவர்களது காணி அளவுகளையும் அவர்கள் பதிவு செய்து நிலவரி அறவீட்டினைச் செய்தார்கள். பதினைந்து வயதுக்கு





மேற்பட்டவர்களும் பாடசாலைக்குச் செல்லாதவர்களும் அங்கவீனம் அடையாதவர்களும் உடலுழைப்பு மேற்கொள்ள முடிந்தவர்களுமான எல்லா ஆண்களும் தலைவரி செலுத்த வேண்டியவர்களாயினர். இதில் ஒரு பகுதியாக போர்த்துக்கேயரின் நிறுவனங்களில் (கம்பனிகள்) வருடத்தில் குறிப்பிட்ட நாட்களில் வேலை செய்வதும் அடங்கும். இதற்காக இவர்கள் தலைவரிக்குரிய பெயர்களை தோம்பு மூலம் பதிவு செய்து வைத்திருந்தனர். இதைவிட ஏனைய தென்னைவரி, புகையிலைவரி, ஆயவரி, மீன்பிடிவரி, சந்தைவரி, அதிகாரிவரி (ஒப்பிஸ்காசு - Stamp Duty) என வரிகள் விரிவடைந்து சென்றன. இவ்வரி அறவீட்டுமுறை ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிவரை நீடிக்க போர்த்துக்கீசரே வழியமைத்துக் கொடுத்தனர். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இவர்கள் தோம்புகளை (பதிவேடுகளை) திருத்தியும் புதுப்பித்தும் வந்தனர். இதனைப் பெரிதும் விரும்பாத மட்டக்களப்பின் பெருன்பான்மையான போடிகள் தொடர்ந்தும் போர்த்துக்கேயருடன் முரண்படவே செய்தார்கள். இதனால் போர்த்துக்கேயர் மட்டக்களப்பு முழுவதும் ஒரு நிலையான ஆட்சியைக் கொண்டிருந்தார்கள் எனக் கூறமுடியவில்லை. பொதுவாக நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் போர்த்துக்கேயர் பண்டைய சமூக அமைப்புகளுக்கு முரண்படாத வகையில் தங்கள் திட்டங்களை வகுத்து செயல்பட்டிருந்தார்கள். அவர்கள் சமூகக் கட்டமைப்புக்களையும் அவற்றின் நெறி முறைகளையும் மாற்ற முயலவில்லை. சில வேளைகளில் இது அவர்களுக்கேற்பட்ட முன் அனுபவங்களாகவும் இருக்கலாம்.

பொதுவாக அவர்களது நாட்டங்கள் எல்லாம் பிரதேச வளங்களிலிருந்து அவர்களால் பெறத்தக்க அனுகூலங்களையே கொண்டிருந்தன. எவ்வாறாயினும் அவர்களின் நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட தோம்பு (பதிவு) முறைகளும் அறிக்கைகளும் பல தகவல்களைப் பெறத்தக்க ஆவணங்களாக நமக்கு கிடைத்திருக்கின்றன.

**ஒல்லாந்தர் காலமும் மட்டக்களப்புப் போடிகளும்**

ஒரு குறுகிய காலத்துள் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரிடம் தங்கள் அதிகாரத்தை இழந்தவர்கள் ஆனார்கள். கி.பி 1637 ல் மட்டக்களப்பு ஒல்லாந்தர் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது. மட்டக்களப்பின் போடிகள் போர்த்துக்கேயரின் ஆட்சியை எவ்வாறு எதிர்த்துச் செயல்பட்டர்களோ அதே நிலைமையே ஒல்லாந்தர்

ஆட்சிக் காலத்திலும் தென்பட்டது. கி.பி 1675 ல் இலங்கையில் அப்போதிருந்த ஒல்லாந்தக் கவர்னர்(ஆளுனர்) தனது நாட்டு அரசுக்கு அனுப்பிய விரிவான அறிக்கையில் மட்டக்களப்பில் அதிகார நிலைக்கு வந்து முப்பத்தைந்து ஆண்டுகள் கடந்தும் ஒரு தனித்துவமான ஆட்சியைத் தங்களால் இங்கு நிறுவமுடியாதிருந்தமையை மெய்ப்பிப்பதாய் அமைந்தது. அவர்களால் குறிப்பிடப்படும் வாசகமான மட்டக்களப்பின் தலைவர்கள் மூர்க்கத்தனம் மிக்கவர்களாகவும் நம்பகத்தன்மை அற்றவர்களுமாகவே இருக்கின்றனர். ஒல்லாந்தக் கம்பனிகளுக்கு இவர்கள் தொடர்ந்தும் பெரும் நஸ்டத்தை ஏற்படுத்தியவர்களாகவே உள்ளனர். எனும் குறிப்பானது ஒரு பெருமையான வரலாற்றுண்மையை கசப்பாகக் கொண்டிருப்பதையே காட்டுகின்றது.

ஆரம்பகாலத்தே ஒல்லாந்தரோடு இடம்பெற்ற கிளர்ச்சிகளிலும் மோதல்களிலும் தொடர்ந்தும் பல மட்டக்களப்பின் தலைவர்கள் (போடிகள்) உயிரிழந்தனர். எஞ்சியவர்களில் பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்களுக்கு சொத்துப்பறிப்பு, சிறைவாசம் போன்றவற்றை தண்டனையாக வழங்கினர். சொத்துக்களை தங்கள் கொம்பனிக் கணக்கில் ஒல்லாந்தர் எடுத்துக் கொண்டனர். இக் காலத்தே ஏறூவூர் (கோறளை) பகுதிக்குப் பொறுப்பாயிருந்த இளஞ்சிங்கன் எனும் வன்னியனை ஒல்லாந்தரால் பிடிக்கமுடியாதிருந்தமை இப்பகுதியில் பலராலும் பேசப்பட்டு வருவதாகும். நீண்ட நாட்களாக இவன் பனிச்சங்கேணி , முத்துக்கல் பகுதியில் அடர்ந்த காடுகளைக் கொண்ட மலையை இருப்பிடமாக்கி வாழ்ந்ததாகவும் சொல்லப்படுகின்றது. மன்னன்பிட்டிப் பகுதி கள ஆய்வுத் தகவல்களின் படி இன்று திம்புலாகல என அழைக்கப்படும் மலைப்பகுதியை குறித்த இடமாகக் கொள்ள போதிய சான்றுகள் தென்படுகின்றன. அங்கு காணப்படும் அழிபாடுற்றுக் கிடக்கின்ற வதிவிடம், கிணறு போன்ற நீர்சேகரிப்பு தொட்டி என்பனவும் நம் கவனத்தை ஈர்க்கின்றன. தலைமறைவாகிவிட்ட ஏறாவூர் இளஞ்சிங்க வன்னியனை மட்டக்களப்பின் ஒல்லாந்தக் கமாண்டர் பீற்றர் டி குறவ் என்பவன் உயிரோடோஅன்றேல் பிணமாகவோ பிடித்துக் கொண்டுவர உத்தரவிட்டதாகவும் பின்னர் அவனே தலைமையேற்று இளஞ்சிங்கனை தேடியதாகவும் தெரிகின்றது. எனினும் இளஞ்சிங்கன் பிடிபட்டமைக்கான தகவல்கள் இல்லை.





பின்னர் ஒல்லாந்தர் கண்டியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பால் கண்டியரசைப் பகைக்காத நிலையிலேயே இலங்கையில் தங்கள் ஆட்சியை நடாத்தினார்கள். கண்டியுடனான அவர்களின் நல்லுறவு மட்டக்களப்பைச் சார்ந்தே அமைந்தது. கண்டிக்கு அவர்கள் பயணம் மேற்கொள்வதற்கும் மட்டக்களப்பையே முக்கிய தரிப்பிடமாகவும் அவர்கள் வைத்துக் கொண்டனர். மட்டக்களப்பு ஊடான கண்டிப் பாதையே அவர்களுக்கு வசதிப்பட்டதாக அமைந்தது. ஒல்லாந்தர் காலப்போக்கில் சில விட்டுக் கொடுக்கும் தன்மைகளைக் கொண்டு ஒரு சில போடிகளை தங்களுக்கு ஆதரவாளர்களாக மாற்றிக் கொண்டார்கள். கண்டி அரசும் இந்த வழியில் ஒல்லாந்தருக்கு துணை நின்றதை குறிப்பிட வேண்டும். கி.பி 1700 க்குப் பின்னர் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஆட்சியை ஒல்லாந்தர் மட்டக்களப்பில் ஏற்படுத்தினார்கள்.கட்டாய மதமாற்றம் என்பதனையும் மிசனறிக் கல்வியையும் மட்டக்களப்புப் போடிகள் பகிரங்கமாகவே எதிர்த்து வந்தமையால் அப் பிரதேசங்களில் இதன் தீவிரத் தன்மையை ஒல்லாந்தர் கைவிட்டனர். கண்டியின் ஆலோசனைகளை ஒல்லாந்தர் ஏற்றுக் கொண்டமையே இதற்கு முக்கிய காரணமாயிற்று.

சில போடிமாருடன் சமரசத் தன்மையை ஏற்படுத்திக் கொண்ட ஒல்லாந்தர் மட்டக்களப்பின் மரபுவழி ஆதிக்கப் பின்னணியில் வந்தவர்களும் முற்குகர் சாதி என அடையாளப்படுத்தப்பட்டவர்களும் நில உடமை யாளர்களுமான தங்களின் நம்பிக்கைக்குரியவர்களை அரசு நிர்வாகப் பதவிகளில் நியமித்தார்கள். நாட்டின் ஏனைய பகுதிகளில் நிகழ்ந்தவை போல இப்போடிகள் மதம்மாறவில்லை என்பது ஒரு முக்கிய குறிப்பாகும். நாட்டில் எங்குமில்லாதவாறு மட்டக்களப்பிலான சொல் வழக்கிலேயே ‘தலைமைப்போடி’ என்ற முதன்மைப் பதவிகளை இவர்கள் வழங்கியமை ஒரு வரலாற்றுப் பெருமை எனலாம். 1766 ல் மட்டக்களப்புப் பிரதேசத்தை இரண்டாக பிரித்த இவர்கள் கோறளை, மண்முனை , போரதீவுப் பற்றுப் பகுதிகளைக் கொண்ட வட பகுதிக்கு அருமைக்குட்டிப் போடியையும் கரவாகு சம்மாந்துறை அக்கரைப்பற்று பாணமை உன்னரசுகிரி வேகம்பற்று பகுதிகளுக்கு கந்தப்போடியையும் தலைமைப் போடிகளாக நியமித்தனர். இந் நியமனக் கடிதங்களை கொழும்பின் ஒல்லாந்த ஆளுனர் இமான் வெல்லம் பல்க் 1766 கார்த்திகை 6ந் திகதி ஒப்பமிட்டு வழங்கினான். இதில் கந்தப்போடி பணிக்கனார் குடியையும் அருமைக்குட்டிப்போடி

காலிங்கா குடியையும் சேர்ந்த முற்குகர் வம்சத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் ஒல்லாந்தரது நீதி நிருவாகம் லாண்ட் டிராட் எனும் கீழ் நீதி மன்றத்தைக் கொண்டிருந்தது. இதற்கான தலைமை நீதிமன்றம் ராட்வன் ஜஸ்ற்றிஸ் என்ற பெயரில் கொழும்பில் அமைந்திருந்தது. மட்டக்களப்பின் ஒல்லாந்தப் பிரதிநிதி நீதிபதியாகவும் இன்னொரு ஒல்லாந்தர் சக்கடத்தார் ஆகவும் (Secretary) அதன் அங்கத்தவர்களாக ஐந்து போடிமாரும் அத்தோடு ஐந்து ஒல்லாந்த இறைசுதோரும் (Recabedore) நான்கு எழுதுனரும் பணியாற்றினர். இதில் போடிமார் தங்களது பகுதிகளில் நடக்கும் குடியியல் (Civil) சம்பந்தமான பிணக்குகளை விசாரித்து தீர்த்து வைப்பதோடு நீதிமன்றத்திற்கு அறிக்கை செய்ய வேண்டும். இவர்கள் நூறு காசிக்கு உட்பட்ட தண்டனையை வழங்கக் கூடியவர்களாய் இருந்தனர். இறசுதோரும் போடிமாருடனே செயல்பட்டனர். மேலும் இறைசுதோர் தோம்பில் (சொத்துப் பதிவேடு) உள்ளபடி வரிகளையும் அறவீடு செய்தனர். எழுதுனர்கள் அலுவலகப் பணிகளை மேற் கொண்டனர். தலைமை நீதிபதியின் கீழ் குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு தடவை நீதிமன்றம் கூடும். அங்கு தீர்க்கப்படாத பிணக்குகளும் குற்றவியல் (Criminal) சம்பவங்களும் விசாரிக்கப்படும். அதற்கும் அப்பாற்பட்ட வழக்குகள் கொழும்புக்கு விசாரணக்கு அனுப்பி வைக்கப்படும். இதிலும் குடியியல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் முற்குகச் சட்டமே முன்னுரிமை பெற்றிருந்தது.

கி.பி 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போடிமாருக்கும் இறைசுவதோருக்கும் மாதச் சம்பளமாக ஐம்பது பணம் காசும் ஒரு பறை அரிசியும் வழங்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இச் சம்பளம் போடிமாருக்குப் பதிலாக அவர்களால் நியமனம் செய்யப்பட்ட முதலிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

**மட்டக்களப்புப் பிரதேச ஊர்ப்போடிகள்**

மட்டக்களப்புப் பகுதித் தலைமைப் போடிகள் தங்கள் வசதிக்காக ஊர்ப்போடிகளை நியமித்து நிர்வாகப் பணிகளை மேற்கொண்டனர். அதில் மட்டக்களப்புத் தென்பகுதி கந்தப்போடியின் நியமன காலம் முதலாக அண்மைக்காலம் வரை ஊர்ப்போடிகளின் செயல்பாட்டிலேயே இருந்து வந்துள்ளது.





கந்தப்போடியின் தாய்வழிப் பணிக்கனார் குடி வாரிசுகள் (மருமக்கள்) இப் பதவியைத் தொடராக வகித்தனர்.

இதனிடையே தங்களது கடமைகளை இலகுவாக நிறைவேற்றும் பொருட்டு ஊர்ப்போடிகளும் தங்களது கிராமங்கள் தோறும் போடிகளை நியமித்து செயற்பட்டனர். இவர்களும் அவ்வவ் ஊர்களின் பெயரால் ஊர்ப்போடி என்று அழைக்கப்பட்டனர். அக்கரைப்பற்றின் பிரதேச ஊர்ப்போடிகளாக திரு.சி.சிவஞானமூர்த்தி வரை முப்பதுக்கும் மேற்பட்டோர் பணிபுரிந்துள்ளனர். கரவாகுப்பகுதி ஊர்ப்போடிகளாக பணிக்கனார் குடி திரு.ஐயாத்துரை(சீனித்தம்பிப்போடி) வரை பணிபுரிந்தவர்களில் எட்டுப்பேரின் விபரமே தெரிய வருகின்றது. கரவாகுப் பிரிவு ஊர்ப்போடிமாரின் வதிவிடம் சாய்ந்தமருதுவில் இருந்தது. சாய்ந்தமருது முஸ்லிம்களின் கைக்குள் முழுதாக வந்தபின் அவ்வூர்த் தமிழ் மக்களுடன் ஐயாத்துரையும் பாண்டிருப்புக்கு இடம் பெயர்ந்துள்ளார்.

நமது கள ஆய்வில் பெறப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச ஊர்ப்போடிகள் (கடமைப் பிரிவு : அக்கரைப்பற்று, பாணமைப்பற்று)

01. திரு.முண்டாப்போடி
02. திரு.மானாகப்போடி
03. திரு.வீமாப்போடி
04. திரு.கந்தப்போடி
05. திரு.சென்னாச்சிப்போடி
06. திரு.செம்பாப்போடி
07. திரு.பத்தப்போடி
08. திரு.கண்ணாப்போடி
09. திரு.பரமப்போடி
10. திரு.முதலிப்போடி
11. திரு.தம்பிப்போடி
12. திரு.சத்துருக்கப்போடி
13. திரு.மாணிக்கப்போடி
14. திரு.சின்னத்தம்பிப்போடி
15. திரு.மன்னிப்போடி
16. திரு.மங்கலப்போடி
17. திரு.வேலாப்போடி
18. திரு.பெரியதம்பிப்போடி
19. திரு.பத்திப்போடி

20. திரு.வீமாப்போடி
21. திரு.நெல்லிப்போடி
22. திரு.கந்தப்போடி
23. திரு.கதிர்காமப்போடி
24. திரு.கணக்கப்போடி
25. திரு.பெரியசின்னத்தம்பிப்போடி
26. திரு.சத்துருக்கப்போடி
27. திரு.கண்ணாப்பணிக்கப்போடி
28. திரு.சின்னத்தம்பிப்போடி
29. திரு.தம்பியாப்போடி
30. திரு.சம்புநாதபோடி
31. திரு.சிவஞானமூர்த்தி

அக்கரைப்பற்று சித்தி விநாயகர் ஆலய ஆவணக்காப்பகத்தில் திரு.சிவஞானமூர்த்தி அவர்கள் 33 வது ஊர்ப்போடியாராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.இதனல் இருவரது பெயரைப் பெறமுடியவில்லை.

கரவாகுப் பிரதேச ஊர்ப்போடிகள்
(கடமைப்பிரிவு: கரவாகுப்பற்று, சம்மாந்துறைப்பற்று)

01.திரு.பம்மக்குட்டிப்போடி
02.திரு.பரமக்குட்டிப்போடி
03.திரு.கணபதிப்போடி
04.திரு.சின்னத்தம்பிப்போடி
05.திரு.மயில்வாகனப்போடி
06.திரு.சிந்தாத்துரைப்போடி
07.திரு.கேதாரப்போடி
08.திரு.சீனித்தம்பிப்போடி (ஐயாத்துரை)

அக்கரைப்பற்று பிரதேச ஊர்ப்போடிகள் 31 பேரின் விபரங்களைப் பெறமுடிந்த அதேவேளையில் கரவாகுப் பிரதேசத்தில் எட்டுப் பேரது விபரங்களே கிடைத்தன.

திருக்கோவில் ஆலய நிர்வாக அமைப்பின் தலைமைப் பொறுப்பு கரவாகு பிரதேச ஊர்ப்போடி வழிப் பணிக்கனார் குடியாரிடமும் பொக்கிசப் பொறுப்பும் மற்றும் சங்கமன் கண்டி ஆலய தலைமைப் பொறுப்பும் அக்கரைப்பற்று பிரதேச ஊர்ப்போடி வழிப் பணிக்கனார் குடியாரிடமும் இருந்து வந்துள்ளது. 1966 க்குப்





பின்னர் கரவாகுப் பிரதேசம் ஊர்ப்போடிகளின் செயற்பாட்டினை படிப்படியாக இழந்து தற்போது முற்றாகவே இழந்துவிட்டது. அக்கரைப்பற்றுப் பிரதேச ஊர்ப்போடியின் கடமையானது இன்று மட்டுப்படுத்தப்பட்டு கோவில் கடமை மற்றும் அங்கு வாழ் தமிழ் மக்களது சமூகக் கடமை எனச் சுருங்கிவிட்டது.

மட்டக்களப்பு வடபகுதியான போரதீவுப் பற்று, மண்முனைப்பற்று, ஏறாவூர் (கோறளை) பற்றுப் பகுதிகளில் காலிங்கா குடி தாய் வழி மருமக்கள் முறையை ஒட்டி ஊர்ப்போடி முறைமை இருந்து வந்துள்ளமை அறியப்பட்டாலும் அதற்கான போதிய விபரங்களைப் பெற முடியவில்லை. எனினும் கிராம மட்டங்களில் செயற்பட்ட ஊர்ப்போடிகள் பற்றிய விபரம் போரதீவு கொக்கட்டிச்சோலை ஏறாவூர் போன்ற இடங்களில் இருந்து அறியப்படுதாக உள்ளது.

கோவில் போரதீவில் கடந்த 200 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலிங்கா குடியைச்சேர்ந்த ஏழு ஊர்ப் போடிகள் தொடர்பான தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

01.திரு.வேலாப்போடி
02.திரு.சின்னத்தம்பிப்போடி
03.திரு.கிருஷ்ணபிள்ளைப்போடி
04.திரு.வி.மாணிக்கப்போடி
05.திரு.பா.நல்லதம்பிப்போடி
06.திரு.க.கந்தவனப்போடி
07.திரு.அ.சுந்தரம்போடி

தற்போது திரு சுந்தரம்போடி இக் கடமைகளை செய்து வருகின்றார். ஆலயம் சம்பந்தமான நிகழ்வுகளுடன் மரணவீடுகள் தொடர்பான கடமைகளையும் மேற்கொள்வது இன்று இவர்களின் சமூகக் கடமைகளாக சுருங்கிவிட்டது.

**ஒல்லாந்தரின் பணிகள்**

ஒல்லாந்தர் மட்டக்களப்பிலிருந்து பிற இடங்களுக்கு நெல்லைக் கொண்டு சென்றனர். ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திற்கு நெல் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தாலும் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாட்டின் நிமித்தம் அங்கிருந்து வத்தைகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு

தொடர்ந்தாற்போல் நெல் ஏற்றிச் சென்றதாக ஒல்லாந்தரின் ஆவணங்களிலும் யாழ்ப்பாண வரலாறுகளிலும் அறிய வருகின்றது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தே கட்டடக்கலை சிறப்புற்றதோடு அதில் தொழில்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டன. தச்சுவேலை மேசன்வேலை ஓடு செங்கல் தயாரிப்பு மற்றும் நகை வேலை போன்றவை இவர்கள் காலத்தே சிறப்புற்றன. நகரப் பகுதிகளிலும் இவர்களுக்கு ஏற்புடைத்தான பகுதிகளிலும் கல்விச் சாலைகளை இவர்கள் நிறுவினர். யாழப்பாணத்தில் ஆர்மன் வேய்ஸ் (ஏழை அனாதைச் சாலை) என ஏழை அனாதைப பிளளைகளுக்கு ஒரு இலவசக் கல்விச் சாலையும் வதிவிடமும் நிறுவியதைப்போன்று மட்டக்களப்பிலும் ஆர்மன் கோணர் என ஏழை அநாதைச் சிறுவர்களுக்கு கல்விச் சாலையும் விதிவிடமும் நிறுவினர். இது மட்டக்களப்பு பிரதேசம் அனைத்துக்குமாக அமைக்கப்பட்டு நீண்டகாலமாக பெரும்பணி ஆற்றியிருக்கின்றது.

**ஆங்கிலேயர் ஆட்சியும் மட்டக்களப்பு போடிகளும்**

ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து 1796 கிழக்கிந்தியக் கம்பனி என்ற பெயரில் இலங்கையில் கால்பதித்த ஆங்கிலேயர் 1802 ல் மட்டக்களப்பில் தடம் பதித்தனர்.வழக்கம்போல் ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பாளர்களாக விளங்கிய மட்டக்களப்பின் போடிமார் ஆங்கிலேயரின் வரவையும் அவர்கள் ஆட்சியையும் முற்றாக வெறுத்தனர். 1803 ல் கண்டி ஆட்சிக்கு எதிராக பிரித்தானியர் படையெடுத்தபோது மட்டக்களப்புப் போடிமார் கண்டிக்கு முழு ஆதரவையும் வழங்கினர். இக் காலத்தே அடங்காபற்று வன்னியர்களும் கண்டி அரசோடு கைகோர்த்துக் கொண்டனர். மட்டக்களப்பிலும் ஆங்கிலேயருக்கெதிரான கிளர்ச்சிகள் வெடிக்கலாயின. புளியந்தீவு தவிர்ந்த ஏனைய பகுதிகளை மட்டக்களப்பின் வருவாய்த்துறை அதிகாரியான (Batticaloa Collector) ஜோசப் சிமித்தால் முழுக்கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது. லெப்ரினன் கேர்னல் ஆர்தர் ஜோண்ஸ்ரன் தலைமையில் பிரித்தானியப் படைகள் பெரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மட்டக்களப்புக் கிளர்ச்சியை அடக்கினர். இதற்கு இரண்டு மாதம் வரை சென்றதாக அறியமுடிகின்றது.அதன் பின்னரும் போடிமாருக்கெதிராக ஆங்கிலேயர் சில அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களால் பிடிபட்ட சில போடிகள் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். பல போடிமாரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.





போர்த்துக்கீசராலும் ஒல்லாந்தராலும் படிப்படியாக அதிகார வலுவிழந்து போன இவர்கள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் கீழ் சொத்திழப்புக்களுக்கும் முகம் கொடுக்கலாயினர். அவர்களது ஆட்சிக்கு அனுசரணை யாளர்களாக செயல்பட்ட சுதேசிகள் சிலரும் மதம் மாறியவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து கிறிஸ்தவ மிசனறிகள் ஊடாக இங்கு வந்து சேர்ந்தவர்களும் ஆதிக்க நிலையில் உயர்ந்தனர். கால ஓட்டத்தில் அன்னிய ஏகாதிபத்தியத்தின் முன்னெடுப்பாளர்களாக மாறிய இவர்கள் மட்டக்களப்பின் வரலாற்றுப் புகழ் மிக்க ஆதிக்க சமூத்தினரை சகல நிலையிலும் புறம் தள்ளிக் கல்வி, அரசு உத்தியோகம் என சகலதையும் ஆக்கிரமித்ததோடு முற்குகப் போடிமாரின் பறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் நில புலங்களை கொள்ளை விலைக்கு ஆங்கில அரசிடமிருந்து அபகரித்தும் கொண்டனர். கிறிஸ்தவ மிசனறி ஒன்றுக்கு தலைமைப்பொறுப்பேற்று வந்த ஒருவர் மட்டக்களப்பு நகரப்பகுதியில் பெருமளவு சொத்துக்களை உடமையாக்கியதோடு புறநகர்ப் பகுதியில் நூறு ரூபாய் பணத்துக்கு நூறு ஏக்கர் காணியை பெற்றுக் கொண்டமைக்கான வரலாறும் மட்டக்களப்பில் உண்டு.

மட்டக்களப்புப் போடிமாரின் காணி உரித்துக்கள் தொடர்பில் பல ஆய்வாளர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கின்றனர். இதில் **East Coast Sri Lankan Tamil Temple** எனும் நூல் சில முக்கிய தகவல்களைப் பதிவுசெய்திருக்கின்றது.இது மட்டக்களப்பின் புகழ்பெற்ற திருப்படைக் கோவில்களிலொன்றான மண்டூர் கந்தசுவாமி ஆலயம் தொடர்பில் அமெரிக்க நாட்டினரான கலாநிதி மார்க் பி.விற்றாகர் (Mark P.Whitakar) என்பவரால் எழுதப்பட்ட ஆய்வு நூலாகும். மார்க் விற்றாகர் அமெரிக்க நாட்டின் பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானப் பேராசிரியராவார்.

இந்நூல் மண்டூர் ஆலயம் பற்றியதாக அமையினும் இதன்மூலம் வெளிப்படும் தகவல்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தினுடைய சமூகக் கட்டமைப்பு மற்றும் வரலாற்றுப் பெருமைகளை வெளிப்படுத்தும் தன்மையையும் பெருமளவு கொண்டிருப்பதைப் பார்க்கலாம். பிரதேசத்தின் நீர்வளம் மற்றும் நிலவளம் குறித்து மிகச் சிறப்புறுத்தும் இந்நூல் அதன் பண்டைய பெருமைகள் குறித்தும் விரிவாகக் குறிப்பிடுகின்றது. கி.பி 6ம்

நூற்றண்டுக்குரிய மகாவம்சம் மட்டக்களப்பின் நிலவளம் குறித்து வெளிப்படுத்தியுள்ள கருத்தினை முன்வைத்து பண்டைய காலம் முதலே கிழக்கிலிருந்து தானியங்கள் இந்தியா உட்பட பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தகவலையும் பதிவுசெய்திருக்கின்றது. ஐரோப்பியரது ஆட்சிக்காலத்திலும் இந்நிலை தொடர்ந்துள்ளமையை ஆவணப்படுத்தியுள்ள இந்நூல் 1870 வாக்கில் பெருமளவு தானியங்கள் யாழ்ப்பாணம், வதுளை போன்ற பகுதிகளோடு இந்தியாவுக்கும் ஏற்றுமதிசெய்யப் பட்டுள்மையையும் குறிப்பிடுகின்றது. 1869ல் யாழ்ப்பாணத்திற்கு மட்டும் 43,000 புசல் அரிசியும் 6,000 புசல் நெல்லும் மட்டக்களப்பிலிருந்து சென்றதாக அதில் பதிவாகியுள்ளதைப் பார்க்கலாம்.

போர்த்துக்கேயர் மட்டக்களப்பைத் தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்தியபோது இங்கு மேலாண்மைச் சமூகமாகவிருந்த முக்குக சமூகத்தின் தலைவர்களான போடிமாரே நிலவுடமையாளர்களாக இருந்தனரெனவும் கிழக்கின் கரையோரப் பிரதேசத்தின் பெருமளவு நிலபுலங்கள் அவர்கள் வசமேயிருந்ததெனவும் அதன்பின்னர் ஆங்கில அரசின் காலத்தில் பெருமளவு காணிகள் ஏனையோருக்கு வழங்கப்பட்டதாகவும் அதில் குறிப்பாக 1870 முதல் 1921 வரையான காலப்பகுதியில்மட்டும் 32,406 ஏக்கர் அரச காணி ஏனைய தனியாருக்கு வேளாண் செய்கைக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் இந்நூல் தகவல்படுத்தியுள்ளது. மேலும் ஒல்லாந்து ஆட்சியாளரின் இறுதிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்துவந்து தனது திட்டமிட்ட செய்கைகளால் மட்டக்களப்பின் அனேக போடிமாரின் உயிரிழப்புக்கும் சொத்துப் பறிப்புக்கும் காரணமாகவிருந்த பஸ்கால் முதலி தான் சார்ந்த கிறிஸ்தவ அமைப்பின் ஊடாக சுமார் பத்துமைல் சுற்றளவினைக்கொண்ட மட்டக்களப்பு - எருமைத் தீவில் (Buffelow Iland) அமைந்துள்ள அனைத்து விவசாய நிலங்களுக்கும் ஆங்கில அரசின் காலத்தில் உரித்துடையவனாக மாறிய தகவலையும் இந்நூல் பதிவுசெய்துள்ளது.

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சிவரை அரசாங்கத்தால் தொம் முதலிப்பட்டம் வழங்கப்பட்டவர்களில் மட்டக்களப்பின் பரம்பரை குடிமகன் யாரும் இடம்பெற்றுள்ளார்களா என்பதை அறியமுடியவில்லை. எனினும் பதவிக்காக ஒரு சிலர் கிறிஸ்தவத்திற்கு மாறியதற்கான





ஒல்லாந்தர் ஆட்சியன் தொடக்க காலத்தே வெளியிடப்பட்ட இலங்கைப்படம்



ஆங்கிலேயர் ஆட்சியில் மீள்வரைவு செய்யப்பட்ட
இலங்கைப் படம் (1832)




கோல்புறூக் ஆணைக்குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட
இலங்கைப்படம் (கி.பி.1832)





தகவல்கள் நமக்கு கிடைத்திருக்கின்றன. அம்பிளான் துறையைச் சேர்ந்த காலிங்காகுடி குஞ்சிளையாப்போடி, றொபட் எனும் கிறிஸ்தவப் பெயரைப்பெற்று மட்டக்களப்பின் வன்னியராக பதவியேற்றார். இதன் பின் இவரின் மகன் படையாட்சிகுடி கதிராமப்போடி, டானியல் எனும் கிறிஸ்தவப் பெயருடன் தந்தைக்குப் பின் அப்பதவியை வகுத்துள்ளார். எனினும் குஞ்சிளையாப் போடி வன்னியரின் மனைவியோ அல்லது நான்கு பெண்மக்களோ அன்றேல் கதிராமப்போடி வன்னியனின் மனைவியோ மதம் மாறாது தொடர்ந்தும் இந்துக்களாகவே வாழ்ந்தனர். இவர்களது வழி வந்தவர்கள் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரத்தில் வண்ணக்கர்களாகவும் பணி புரிந்துள்ளனர்.மட்டக்களப்பு தபால் நிலையத்திற்கு முன்னர் அமைந்துள்ள வில்லியம் ஓல்ட் மண்டபமே குஞ்சிளையப்போடி வன்னியனது வாசஸ்தலமாக அப்போ திருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தே பதவி வகித்த தலைமைப் போடிகள் சிலரது விபரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

01. நிலமை வேலாப்போடி (திமிலைதீவு)
02. நிலமை பாலிப்போடி (படையாண்டவெளி)
03. நிலமை கதிராமப்போடி (மகிழடித்தீவு)
04. நிலமை பெரிய கரவாகுப்போடி (சாய்ந்தமருது)
05. நிலமை வைகாளிப்போடி (சம்மாந்துறை)
06. நிலமை வீமாப்போடி (சம்மாந்துறை)
07. நிலமை கதிராமப்போடி (புதுக்குடியிருப்பு)
08. நிலமை சின்னத்தம்பிபோடி (எருவில்)

மட்டக்களப்பிலிருந்து பணியாற்றிய நிலமை வேலாப்போடியின் வாசஸ்தலம் கோவிந்தன் வீதியும் ஏரிக்கரை வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருந்தது.இந் நிலமைப் போடிகளின் நியமனங்கள் ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றிய காலத்தை இணைந்ததாக இருந்தன. அதன்பின் ஆங்கிலேயர் தங்களுக்குச் சார்பாக செயல்படக்கூடியவர்களை வன்னியர்களாகவும் உடையார்களாகவும் நியமித்தனர்.

01. சம்மாந்துறைப் பற்று - நாடுகாடுப்பற்று - டானியல் கதிராமப்போடி வன்னியன்.
02. அக்கரைப்பற்று , நிந்தவூர்பற்று, பாணமைப்பற்று - தம்பையா வன்னியன்
03. மண்முனைப்பற்று - றொபேட் குஞ்சிளைப்போடி வன்னியன்

04. ஏறாவு+ர்ப்பற்று , கோறளைப்பற்று - அகமது லெவ்வை வன்னியன்
05. எருவில் பற்று, போரதீவுப்பற்று, கரவாகுப்பற்று - சினத்தம்பி வன்னியன் (இவர் நிலமைப்போடியாக முன்னர் பதவி வகித்தவர்)
06. விந்தனைப்பற்று - வில்லியம் ஜேம்ஸ் சுப்ரமணியம் வன்னியன்
07. சம்மாந்துறைப்பற்று , நாடுகாட்டுப்பற்று - எதிர்மன்னசிங்க வன்னியன்.
08. கரவாகுப்பற்று, பாணமைப்பற்று, - சத்துருக்கப்போடி வன்னியன்
09. கரவாகுப்பற்று , பாணமைப்பற்று, - செல்லையா வன்னியன்.(சத்துருக்கப்போடி வன்னியனுக்குப் பின்)

பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் பிற்பட்ட காலத்திலும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிறிமன் செய்த நியமனங்களும் அறிய வருகின்றன. ஏறாவூர் வன்னியனாக மீராலெவ்வையும் மண்முனை வன்னியனாக ஆரையம்பதி சோமநாதனும் அவர் மரணத்தின் பின் பொன்னுச்சாமி என்பவரும் பதவி வகித்தவர்களாகின்றனர். பொன்னுச்சாமி வன்னியனின் பணிமனை களுதாவளையில் அமைந்திருந்தது. ஏறாவூர் அகமது லெவ்வை வன்னியன் தாய்வழிப் பணிக்கர் குலத்தினன் என அறியப்படுகின்றது.

இதே காலப் பகுதியில் யாழ்ப்பணப் பிரதேசத்தை பார்க்கின்ற போது உயர் மட்டத்தினராக கருதப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானவர்கள் போர்த்துக்கீசர் ஆட்சி தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சிவரை கிறிஸ்தவர்களாகி கல்வி கற்று நாடு முழுவதும் அரசுப் பணிகள் புரிந்து புகழ் பெற்றிருக்கின்றார்கள். 1918ல் யாழ்ப்பாண வைபவ கௌமுகி (History of Jaffna) நூலை வெளியிட்ட ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் முதலிகள் தொடர்பாக நீண்டதோர் விபரப் பட்டியலைத் தருகின்றார். இப் பட்டப்பெயர் போர்த்துக்கீசர் மூலம் ஆரம்பிக்கப்பட்டு ஒல்லாந்தராலும் பேணப்பட்டதோடு ஆங்கிலேயர் ஆட்சியிலும் தொடரப்பட்டுள்ளமை தெரிகின்றது.

நூற்றுக் கணக்கான முதலிகள் பற்றி யாழ்ப்பாணத்தில் அறியப்படுவதைப்போல மட்டக்களப்பில் எவரும் அறியப்படவில்லை. அதிலும் குறிப்பாக அன்னியரால் வழங்கப்பட்ட





இம் முதலிப் பட்டங்களைப் பெற்றவர்களதும் அவர்களது வாரிசுகளதும் பின்னணியைப் பார்க்கின்றபோது இவர்கள் பொதுவாக யாழ்ப்பாணச் சமூகத்தின் உயர் மட்டத்தினராக வாழ்ந்தவர்கள் - வாழ்பவர்கள் என்பது தெளிவாகின்றது. கிறிஸ்தவ மிசனறிகளில் ஆரம்ப முதலே தங்களை இணைத்து உயர்கல்வி பெற்று அரசுத் தொழில்களில் சேர்ந்தும் பொருளாதார வசதிகளில் உயர்ந்தும் சமூக மட்டத்தில் மேலாண்மை பெற்றவர்களாக இவர்கள் விளங்குகின்றனர். அன்னியர் ஆட்சியிலும் இவர்கள் முழு இலங்கையை மாத்திரமன்றி தென்னிந்தியா, மலேசியா , சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தொழில் புரிய இதுவே அவர்களுக்கு அடித்தளமாய் அமைந்தது.

இதற்கு மாறாக மட்டக்களப்பின் வரலாறு திசை திரும்பியிருக்கின்றது. மட்டக்களப்பின் மேலாண்மைச் சமூகம் எனக் கருதப்பட்டவர்கள் அன்னிய ஏகாதிபத்தியத்தையும் அவர்களது மதம்மாற்றும் கொள்கைகளையும் முற்றாக நிராகரித்தவர்களாக அக்கால அரசுகள் வழங்கிய கல்வி மற்றும் வசதி வாய்ப்புக்களையும் இழந்து சமூகப் பின்னடைவுக்கு உள்ளாயினர். யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்கு வந்த பஸ்கால்முதலி ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் முதலிப்பட்டம் பெற்றவனாகத் தெரிகின்றது. இவன் யாழ்ப்பாண வரலாறு குறிப்பிடும் மட்டக்களப்புக்கு மதம் பரப்ப வந்த தொன்பிலிப்பு இராசகாரியாராக இருக்கலாம் எனக் கருதத் தோன்றுகின்றது. இவன் மட்டக்களப்புப் போடிகளுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததோடு அவர்களில் அனேகர் அநியாயமாக கொலையுண்ணவும் காரணமாக செயல்பட்டவன்.நமது களஆய்வில் கிராமப்புறப் பெரியவர்கள் பஸ்கால் முதலிபற்றி அளித்த தகவல்கள் அவனை ஒரு கொடுமையாளனகவே சித்தரிப்பதாக அமைந்திருந்தது.

**ஆங்கிலேயர் ஏற்படுத்திய நிருவாக மாற்றம்**

போர்த்துக்கீசர் ஆட்சியிலும் தொடர்ந்து ஒல்லாந்தர் ஆட்சியிலும் குடியியில் சட்டமாகப் பேணப்பட்ட மட்டக்களப்பின் முக்குகச் சட்டம் ஆங்கிலேயர் ஆட்சியில் படிப்படியாக பாவனையிலிருந்து நீக்கப்பட்டது. எனினும் காணியுரிமை தொடர்பான அதன் அழுத்தங்கள் மட்டக்களப்பில் போரதீவு, கன்னன்குடா மற்றும் இலுப்பையடிச்சேனைப் பகுதிகளில் 1980 வரை நீடித்திருந்தமை அறியப்பட்டவையே. யாழ்ப்பாணம், கண்டி போன்ற பகுதிகளில் மரபுவழிச் சமூகச் சட்டங்கள் அவற்றின் பேணுகையில்

இருந்த நிலையில் மட்டக்களப்பில் அது அதன் பேணுகையை இழந்தமைக்கு ஏற்புடைத்தான காரணங்களை நமது கள ஆய்வில் இன்றைய மட்டக்களப்பின் சட்ட வல்லுனர்கள் சிலர் முன்வைத்தனர்.

மட்டக்களப்பில் ஒல்லாந்தர் லாண்ட்றட் (Land Rarrd) நீதி அமைப்பினைத் தோற்றுவித்தபோது அதில் மட்டக்களப்பில் பிரதான போடிகள் அங்கம் வகித்தனர். குற்றவியலில் (ஊசஐஅஐயெட) ஒல்லாந்தச் சட்டம் (Dutch Law) நடைமுறைக்கு வந்தபோதும் குடியியலில் (Civil) முக்குகச் சட்டமே அப்போது பேணப்பட்டது. பிற்பட்ட காலத்தே தேசியத் தலைவர்கள் நீதித்துறைக்கு வந்தபோது மட்டக்களப்பைச் சார்ந்த எவரும் இத்துறையில் இணையும் தகுதியுள்ளவாகளாக இருக்கவில்லை. பொதுவாக நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் பெற்ற சட்டக்கல்வி இது சார்ந்ததாய் அமையாததாலும் இச் சட்டத்தின் சமூக தத்துவார்த்தத் தன்மை அவர்கள் அக்கறையின்பாற்பட்டு நில்லாமையும் ஒரு காரணமாகும். வழக்காளியும் எதிரியுமே இப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஆங்கில அறிவு அற்றவர்கள்.நீதிபதி, சட்டத்தரணிகள், நீதி மன்ற அலுவலர்கள், எல்லாரும் ஆங்கில மொழி மூலம் கருமமாற்றும் இப்பிரதேசம் சாராதவர்கள். ஆங்கில (உரோமன் டச்) மொழிச் சட்டத்தை பயின்ற இவர்கள் வேண்டுமெனில் யாழ்ப்பாண தேச வழமைகள் சட்டத்தை தெரிந்து வைத்திருக்கமுடியும். நீதி மன்றத்தில் வாதாடுவதற்கோ, தீர்ப்பளிப்பதற்கோ முக்குகச் சட்டம்அப்போது அவர்களுக்கு முக்கியமானதாக அமையவில்லை. எமக்குக் கிடைக்கும் கி.பி 1824 ம் ஆண்டுக்கு பிற்பட்ட நிருவாக அறிக்கைகளில் நீதி நிருவாகம் தொடர்பான பதிவுகளில் முக்குகச் சட்டம் குறித்த தகவல்கள் இடம்பெறவில்லை. மாறாக அவர்களால் நியமிக்கப்பட்ட வன்னியர்களால் மேற்கொள்ளப்படும் நீதி விசாரணக்கு கூட அவர்கள் ஒரு தனி நீதி நிர்வாக அமைப்பை (Village Tribunal Ordinance) உருவாக்கியிருந்தார்கள். கிராம நீதிமன்றம் (Village Tribinal ) என அதற்குப் பெயரிட்டார்கள். தொடக்கத்தில் மட்டக்களப்பிலும் பின்னர் கி.பி 1871 ல் நற்பிட்டிமுனையிலும் (கரவாகு) இந் நீதி மன்றங்கள் வன்னியனார் தலைமையில் செயல்படத் தொடங்கின. இக் காலத்தே சத்துருக்கப்போடி வன்னியன் மேற் கொண்ட நீதி விசாரனைகள் குறித்த தகவல்கள் அவரது ஒப்பமிட்ட அறிக்கையாக நமக்குக்கிடைக்கின்றன. இதில்





குடியியல் தொடர்பில் 1470 வழக்குகளுக்கும் குற்றவியல் தொடர்பில் 248 வழக்குகளுக்கும் தீர்வு காணப்பட்டிருப்பதுவும் தெரிகின்றது. இதே காலப்பகுதியில் மாவட்ட நீதி மன்றம் 146 குற்றவியல் வழக்குகளுக்கு தீர்வு கண்டுள்ளது.

கி.பி. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பின் முதலாவது அரச அதிபராக ஆர்.டபிள்யூ. ரி.மொரிஸ் 1870ல் நியமிக்கப்படுகின்றார். அரசு நிருவாகம் தொடர்பான அறிக்கைகள் பார்வைக்காக நமக்குக் கிடைக்கின்றன. 1870 ல் சுமார் இரண்டு லட்சத்து இருபதாயிரமாக இருந்த வருமானம் பத்து ஆண்டில் மூன்று லட்சத்தை எட்டியுள்ளமை தெரிகின்றது. இதில் சகல நிலையிலுமான செலவீனம் ஒரு இலட்சம் ரூபாய்க்குள்ளேயே தென்படுகின்றது. இதனால் மட்டக்களப்பு பெருமளவு வருமானத்தை அரசுக்கு ஈட்டிக் கொடுக்கும் ஒரு மாவட்டமாகவே தொடர்ந்தும் இருந்துள்ளது. காணி விற்பனை, குத்தகை, போடிமாரிடமிருந்து பெறப்படும் தானிய (நெல்- சோளம்) வரி, உப்பு விற்பனை என்பவையே இதில் முக்கால்வாசி வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் காரணிகளாகத் தென்பட்டன. மட்டக்களப்புத் துறைமுகம் இக் காலத்தே ஒரு முக்கிய துறைமுகமாக விளங்கியிருக்கின்றது. இங்கிருந்து நெல், தேங்காய் ,கருவாடு கொப்பரா, காப்பி, தும்பு, கயிறு, பாக்கு, தேன் மெழுகு, மிருகத்தோல்கள் போன்றவையும் தேக்கு, முதிரை, கருங்காலி, ராணை, விளினை, சாளம்பை போன்ற மரங்களும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆங்கிலேயர் தங்களது நிருவாக வசதிக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில்

| | |
|---|---|
| 01.கோறளைப்பற்று | 02.உறுகம்பற்று |
| 03.ஏறாவூர்பற்று | 03.மண்முனைப்பற்று |
| 05.எருவில்பற்று | 06.போரதீவுப்பற்று |
| 07.கரவாகுப்பற்று | 08.சம்மாந்துறைப்பற்று |
| 09.நாடுகாட்டுப்பற்று | 10.அக்கரைப்பற்று |
| 11.நிந்தவூர்ப்பற்று | 12.பாணமைப்பற்று |
| 13.விந்தனைப்பற்று | |

எனப் பதின்மூன்று உப பிரிவுகளை ஏற்படுத்தியிருந்தனர். ஆங்கிலேயரின் முன்னைய நூறு ஆண்டுகால கி.பி 1900 வரை ஆட்சிப் பகுதியில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் சராசரியாக தமிழ்மொழி பேசுவோர் 96 வீதத்தினராக இருந்தனர்.

கிழக்கின் மறு பகுதியான திருகோணமலையிலும் தமிழ் மொழி பேசுவோர் 95 வீதத்தினராவர்.

மட்டக்களப்பு ஆங்கிலேயர் ஆட்சியில் வந்தபோது சேர்.பிரெடெரிக் நோத் (கி.பி 1800 முதல்) இலங்கையின் தேசாதிபதியாக (Governar General) பதவி வகித்தார். இலங்கை ஐந்து மாகாணங்கள் ஆக்கப்பட்டு மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தில் இருந்தது. கி.பி 1833 ல் சட்ட நிருபணசபை தோற்றம் பெற்ற போது இதில் தமிழரின் பிரதிநிதியாக ஒருவரே இருந்தார். 1906 ல் இரு தமிழர்கள் சட்ட நிருபண சபைக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியதும் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிறிஸ்தவ மிசனெறியூடாக மட்டக்களப்புக்கு வந்தவருமான திரு.திசவீரசிங்கம் என்பவரை அங்கத்தவராக்கினர்.

1900- 1930 வரையான முப்பதாண்டுகால ஆட்சிப்பகுதியில்மட்டக்களப்பு பல நன்மைகளை பெற்றிருப்பதை நாம் காணமுடியும். இக் காலத்தில் இப் பிரதேச சனத்தொகை சுமார் ஒரு லட்சத்து எழுபதாயிரமாக உயர்ந்து நிற்கின்றது. தமிழ்மொழி பேசுவோர் இதில் 95 வீதத்தினராக உள்ளனர். பிரதேச நிலப்பரப்பு 6998 சதுரக் கிலோமீற்றராகும். இக் காலத்தில் நிருவாகம், கல்வி, சுகாதாரம், விவசாயம் எனப் பலதுறைகளிலும் தமிழர்கள் அரசு உயர்பதவிகளில் அமரத் தொடங்குகின்றனர். எனினும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் இப்பதவிகளில் சேர்ந்ததற்கான தகவல்கள் கிடைக்கவில்லை. நாடுகாடுப்பற்று, வேகம் பற்று எனப் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது. வருடம் தோறும் பிரித்தானிய அரசரின் பிறந்த தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மட்டக்களப்பு புகையிரத சேவை (1924) பூர்த்தியாகின்றது. இக் காலத்தே திரு.தம்பிமுத்து அவர்கள் அரச நிர்ணயசபை அங்கத்தவராக இருக்கின்றார். மட்டக்களப்பில் முப்பத்தெட்டு அரசாங்கப் பாடசாலைகளும் நூற்றியொரு மிசநெறிப் பாடசாலைகளும் இயங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்ட கல்விக்குழு (Education District Committee) அரசாங்க அதிபர் தலைமையில் செயல்படத் தொடங்குகின்றது. சுவாமி விபுலானந்த அடிகளும் இக் காலத்தே குழு உறுப்பினராக செயல்படுகின்றார். நீதி அமைப்பு பொலிஸ் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் என இரு நீதி மன்றங்களைக் கொண்டதாக அமைகின்றது. கொழும்பு உச்ச நீதிமன்றம் வருடாந்தம் இரு அமர்வுகளை மட்டக்களப்பில் மேற்கொள்கின்றது. மட்டக்களப்பு நெல் வங்கி (Batticaloa Paddy





Bank ) என்ற பெயரில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் வங்கி ஒன்று செயல்படத் தொடங்குகின்றது. இதன் கீழ் கிராமங்கள் தோறும் நாற்பத்தாறு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படத் தொடங்குகின்றன. மட்டக்களப்பு நகரம் உள்ளூர் சபையின் (Local Board) கீழும் ஏறாவூர், கல்முனை, காத்தான்குடி, சம்மாந்துறை நகரங்கள் சுகாதார சபையின் (Sanitary Board) கீழும் செயல்படுகின்றன. ஏனையவை முப்பத்தைந்து கிராம சபைகளாக இயங்குகின்றன. பல்வேறு கட்டளைச் சட்டங்களும் (Ordinance) நடைமுறைக்கு வருகின்றன. துப்பாக்கிகள் பாவிப்பதற்கான அனுமதி 2897 பேருக்கு வழங்கப்படுகின்றது. இக்காலப் பகுதியில் 1980 துப்பாக்கிகள் பாவனையில் இருக்கின்றன. இக் காலத்தில் பாசனமுறையில் 60415 ஏக்கரிலும் மழையை நம்பியதாக 46200 ஏக்கரிலும் விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது.

1948 பெப்ரவரி 4ம் திகதி நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுகின்றது. இடைப்பட்ட சுமார் முந்நூறு ஆண்டுகளில் மட்டக்களப்பு பல மாற்றங்களைக் கண்டதாகவே அதன் வரலாற்று பாதை அமைகின்றது. அதனிடையே இக் காலம் குறித்து அமெரிக்க ஆய்வாளர் டெனிஸ்.வீ.மக்கில் வரேயின் கருத்து மிக முக்கியத்துவம் பெறுவதைக் காணுகின்றோம். வீரம் மிக்க மட்டக்களப்பின் முற்குகத் தலைவர்களின் அதிகாரங்கள் ஐரோப்பியரின் குடியேற்ற ஆட்சியில் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக இல்லாதொழிக்கப்பட்டமையை தனது ஆய்வில் அவர் வலியுத்தியுள்ளார்.

Today the System of Mukkuvar Sub-Chief-tancies within the Batticaloa region has almost disappeared under the impact of over (300) three hundred years European Colonial rule, yet the temple histories which are still recited and the Symbols of the Mukkuvar Vannimai (Regional Chief Ship of the Mukkuvars) leave no doubt as to the traditions of conquest and warrior dominance which distinguish this group.

Mukkuvar Vannimai
Dennis.B.Mc.Gilvray.

நாடு சுதந்திரம் அடைகின்ற கால கட்டத்தே இலங்கையின் சனத்தொகை 66,57,339 ஆக இருந்தத. இதில் இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்கள் 23 மூ வீதமாகவும் முஸ்லிம் 6மூ வீதமாகவும் இருந்தனர். சுமார் ஏழாயிரம் (6998) சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மட்டக்களப்புப் பிரதேசம் 202987 சனத்தொகையைக் கொண்டிருந்தது.

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு நகரம் | - | 12,948 |
| மண்முனை வடக்கு | - | 27,449 |
| ஏறாவூர் - கோறளைப்பற்று | - | 40,100 |
| மண்முனை எருவில் போரதீவுப்பற்று | - | 24,345 |
| கரவாகுப்பற்று | - | 47,550 |
| சம்மாந்துறைப்பற்று | - | 14,075 |
| அக்கரைப்பற்று | - | 21,781 |
| பாணமைப்பற்று | - | 6,438 |
| வேகம்பற்று | - | 2,399 |
| விந்தனைப்பற்று | - | 5,902 |
| | | ---------- |
| | - | 202987 |

இக் காலகட்டத்தே மட்டக்களப்பின் 18,37,440 ஏக்கர் நிலப்பரப்பில் 6,08,617 ஏக்கர் காட்டுப்பிரதேசமாக இருந்தது.

இலங்கை ஆட்சி கைமாறும் காலத்தே பின்வரும் தலைமைத்துவங்கள் மட்டக்களப்பை நிருவகிப்பவர்களாயினர். மட்டக்களப்பு தென்பகுதிக்கு அரசாங்க சபை அங்கத்தவர் திரு.தருமரெத்தினம் அவர்களும் வடபகுதிக்கு திரு.வி.நல்லையா அவர்களும் பதவி வகிக்கின்றனர். சுதந்திர இலங்கையில் திரு.வி.நல்லையா திரு.எஸ்.யூ.எதிர்மனசிங்கம் திரு.எம்.எஸ்.காரியப்பர் ஆகியோர் மட்டக்களப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களாக அமர்கின்றனர்.

மட்டக்களப்பின் அரசாங்க அதிபர் திரு.டி.சி.ஆர்.குணவர்த்தன, கல்முனை உதவி அரசாங்க அதிபர். திரு.பி.போர்வெஸ், மட்டக்களப்பு நகர் (Local Board) திரு.குணவர்த்தன ஆகியோர் நிருவகப் பொறுப்பிலிருந்தனர்.





**உள்ளூராட்சித் தலைவர்கள்**

| | | |
|---|---|---|
| கல்முனைப் பட்டினம் | - | M.I.M.காரியப்பர் |
| காத்தான்குடிப் பட்டினம் | - | S.M.M.முஸ்தபா |
| ஆரையம்பதி கிராம சபை | - | T.சின்னத்தம்பி |
| காரைதீவு கி.ச | - | P.பரமலிங்கம் |
| ஏறாவூர் கி.ச | - | K.பொன்னையா |
| குருமண்வெளி கி.ச | - | J.S.இளையதம்பி |
| கொக்கட்டிச்சோலை கி.ச | - | T.V.திருமேனிப்பிள்ளை |
| கோறளை தெற்கு கி.ச | - | T.செல்லத்தம்பி |
| போரதீவு கி.ச | - | P.பொன்னுத்துரை |
| துறைநீலாவணை கி.ச | - | P.ஆ. முருகுப்பிள்ளை |
| மருதமுனை கி.ச | - | S.M.S.I. மௌலானா |
| சித்தாண்டி கி.ச | - | S.சிவஞானம் |
| வலையிறவு கி.ச | - | L.கருணாகரன் |
| மகா ஓயா கி.ச | - | J.C. அப்புகாமி |
| மண்முனை வடமேற்கு கி.ச | - | N.மயிலிப்போடி |
| தமண கி.ச | - | K.M. களுபண்டா |
| பாணம கி.ச | - | S.T. புஞ்சிமாத்தையா |
| நிந்தவூர் கி.ச | - | M.ஆ.மிர்சா |
| நாவற்குடா கி.ச | - | K.கிருஸ்ணபிள்ளை |
| உகனை கி.ச | - | B.M. முத்து பண்டா |
| பொத்துவில் கி.ச | - | M.A. முகம்மதுவெல்வை |
| கதிரவெளி கி.ச | - | V.T.கதிர்காமத்தம்பி |
| அக்கரைப்பற்று வடக்கு கி.ச | - | A.ஆ.இஸ்மாயில் |
| அக்கரைப்பற்று தெற்கு கி.ச | - | D.E.தம்பிமுத்து |

ஆங்கிலேயர் ஆட்சி ஏகாதிபத்திய அத்திவாரத்தில் கட்டி எழுப்பப்பட்டாலும் நாட்டின் நிருவாகக் கட்டமைப்பை அது சீராக்கி வழங்கியதை மறுப்பதற்கில்லை. இப் பிரதேசத்தின் கல்வித்துறையில் அது அளப்பரிய சேவையை வழங்கியிருக்கின்றது. ஐரோப்பிய மிசனறிகள் ஊடாக உருவாக்கப்பட்ட மெதடிஸ்த மத்திய பாடசாலை (1814) - வண வில்லியம் ஓல்ட்), வின்சன்ற் பாடசாலை (1838) பெயர் மாற்றம் -1895 ), புனித மிக்கல் பாடசாலை (1875-கத்தோலிக்க திருச்சபை), ஆசிரிய பயிற்சிக் கல்லூரி (1880 - மெதடிஸ்தசபை) போன்றவை உள்ளிட்ட சுமார் 110 கல்வி நிறுவனங்கள் இப் பிரதேசத்தில் பெரும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கி.பி 1832 ல் கோல்புறுக் - கமரோன் ஆணைக்குழு இலங்கையின் மாகாண எல்லைகள் குறித்த படமொன்றினை வெளியிட்டிருந்தது. அதில் மட்டக்களப்பு மாவட்ட மேற்கெல்லையாக மகாவலி கங்கையின் கிழக்குப் பக்க கிளை ஆறு குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் மீள வரையப்பட்ட எல்லைக்கோடுகளின் படி விந்தனையின் பெரும்பகுதி ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. பட்டிப்பளை (கல்லோயா) ஆற்றுச் சமவெளியின் ஒரு பகுதியும் மாத்தளை மாவட்டத்துடன் இணைக்கபடலாயிற்று. கிழக்கின் விந்தனைப் பிரதேசம் ஊவாவுடன் இணைக்கப்பட்ட முறைமையை முரண்பாட்டுக்குரியதாக 1976ல் உருவாக்கப்பட்ட தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.எனினும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**சுதந்திரத்தின் பின் மட்டக்களப்பு**

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் (04.02.1948) அரசியல் பேரினவாதம் வேகமாகத் தலையெடுக்கலாயிற்று. பல வழிகளாலும் தமது முழு உழைப்பினால் இந் நாட்டைக் கட்டி எழுப்பிய தமிழினம் அதனது குறைந்த அபிலாசைகளையாவது நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படலாயிற்று. திட்டமிட்ட சிங்கள பேரினவாதச் செயல்பாடானது மட்டக்களப்புப் பிரதேசத்தையும் வேகமாக அழுத்தத் தொடங்கியது. 1952 ல் பட்டிப்பளை ஆற்றை மையப்படுத்தி அணை ஒன்றைக் கட்டியபின் கல்லோயா குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது.அதிலிருந்த 44 கிராமங்களில் 38 கிராமங்களுக்கு 1960 வரை பெருமளவு சிங்கள மக்கள் தெற்குப் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். பின்னர் பெருமளவு நிலப்பரப்பு மட்டக்களப்பிலிருந்து பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டதோடு திகாமடுல்ல என்ற ஒரு தொகுதியும் (தேர்தல் மாவட்டம்) உருவாக்கம் பெற்றது. திட்டமிடப்பட்ட இனக்கலவரங்கள் தோற்றுவிக்கப்படும் போதெல்லாம் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல இம் மாவட்டத்தின் சிங்களவர் மத்தியில் வாழும் தமிழர்கள் உயிரிழப்புக்கும் உடமைப்பறிப்புக்கும் ஆளாயினர். விவசாயக் காணிகளும் வதிவிடங்களும் வழிபாட்டுத் தலங்களும் சிங்களப் பிரதேசங்களாக உள்வாங்கப்பட்டன. பெரும்பான்மைக் குடியேற்றங்கள் தொடர்ந்த நிலையில் தமிழர்கள் சிறுபான்மையினராக இதனால் அம்பாறை மாவட்டத்தில் ஆக்கப்பட்டனர். அவர்களின் மரபுவழித் தாயகம் காலத்துக்கு





காலம் குறுகிக்கொண்டே வந்தது. போர்த்துக்கீசர் மட்டக்களப்பை கைப்பற்றும்போது 6900 சதுரகிலோமீற்றருக்கும் அதிகமாக இருந்த மட்டக்களப்புத் தமிழரின் மரபுவழித் தாயகம் இன்றைய கட்டத்தில் பெருமளவு நிலப்பரப்பை பறிகொடுத்து நிற்பதை நாம் காணுகின்றோம்.

1956ல் பேரினவாத அரசால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து ஈழத்தமிழருடன் மட்டக்களப்பு மக்கள் போர்க் கொடி எழுப்பினர். 1958 ல் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காக பிரதமர் திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா உறுதியளித்த சமஷ்டி அரசியல் அமைப்பு மறுக்கப்பட்ட நிலையில் அவர் பௌத்த மதவாதிகளால் 1959 இல் படுகொலை செய்யப்பட்ட பின்னர் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக்கப்பட்டார். கணவரின் மரணம் அவருக்கு இந்த வாய்ப்பை நல்கியது. தமிழரின் கோரிக்கைகள் அவர் முன் வைக்கப்பட்டன. சிறிமாவோ நிறைவேற்றும் நிலையில் இல்லை.மீண்டும் ஒரு சாத்வீகப் போராட்டம் 1961 ல் சத்தியாக்கிரகம் என்ற பெயரில் தமிழர் தாயத்தின் தலைநகரங்களில் முன்னெடுக்கப்பட்டது. இராணுவ அடக்கு முறையால் அதுவும் அடக்கப்படலாயிற்று. மட்டக்கப்பும் இராணுவ அடக்குமுறையத்தில் இரத்தம் சிந்தியது. அதன்பின் ஏற்பட்ட டட்லி சேனநாயக்காவின் தேசிய அரசில் தமிழசுக் கட்சியும் அங்கம் வகித்தது. தொடர்ந்தும் மட்டக்களப்புப் பிரதேசம் சிங்களக் குடியேற்றங்களால் அபகரிக்கப் படலாயிற்று. 1968 ல் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழ கோரிக்கையை கையில் எடுத்தது. மீண்டும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிப் பொறுப்பேற்றார். 1972 ல் இலங்கையின் அரசியல் சாசனம் புதிய பரிணாமம் எடுத்தது. தமிழினத்தின் அவலம் தொடர்கதையானது. தமிழர் தலைவர்களின் சாத்வீக நெறிமுறைகள் அனைத்தும் ஆட்டம் கண்டன. 1948 ல் 6வீதமாக இருந்த சிங்கள மக்களின் விகிதாசாரம் 1980 ல் (மட்டக்களப்பு அம்பாறையில் ) 20வீதமாக உயர்ந்தது.தொடர்ந்தும் அது வளர்ச்சிப்பாதையிலேயே சென்றது.தமிழர் பிரதேசங்கள் அரசின் முழு அங்கீகாரத்துடனும் பாதுகாப்புடனும் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டன. பேரினவாத அரசியலமைப்பு விகிதாசாரம் என்ற போர்வையில் தமிழரை இரண்டாம் தரப்பினராக்கி கல்வி தொழில் என நசுக்கத் தொடங்கியது. தமிழரின் பாதுகாப்பு முற்றிலும் கேள்விக்குறியானது.

பிரித்தானியர் இந்நாட்டை ஆளும்போது ஒன்றுபட்ட இலங்கை என்ற கோதாவில் இன விகிதாசார அடிப்படையில் பாதுகாப்பு படைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதை முன்னுதாரணமாக்கினர். ஏனைய துறைகளில் தகுதி அடிப்படையில் தொழில்கள் வழங்கப்பட்டு வந்தன. நாடு சுதந்திரமடைந்த பின்னர் இன ரீதியான ஒதுக்கல் சகல நிலையிலும் கடைபிடிக்கப்பட்டன. அரசுத் துறைகளில் தமிழர்களது விகிதாசாரம் படிப்படியாக குறைக்கப்பட்டது. பாதுகாப்புப் படைக்கான ஆட்சேர்ப்பு மிகவும் குறைவான நிலையை எட்டியது. தமிழர்களிடையே ஆயுதக் குழுக்கள் உருவாகுவதற்கு முன்னதான (1970 -1980) பத்து ஆண்டு காலத்தில் சிங்களவர் 95 வீதத்தினராகவும் தமிழர் 5 வீதத்தினராகவும் பாதுகாப்புப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் தொடர்பான நடுநிலையாளர்களது அறிக்கைகள் சிங்களக் குண்டர்களுக்கு ஆதரவாக ஆயுதப்படைகள் செயல்பட்டமையை தெளிவாக்கியுள்ளன. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் உயிர் இழப்பதற்கும் கோடானுகோடி ரூபா பெறுமதியான தமிழர்களது உடைமைகள் அழிக்கப்படுவதற்கும் ஆயுதப்படைகளே காரணமாயின. 1983 ஜூலையில் வெடித்த இனக்கலவரம் தென்னிலங்கையில் தமிழரிடையே ஏற்படுத்திய பேரழிவினைக் கண்டு உலக நாடுகளே கலங்கிப் போயின. தமிழரின் பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில் அவர்களிடையே முழுமூச்சாக ஆயுதக்குழுக்கள் உருவானமை இந்தியா போன்ற நாடுகளில் அன்று அங்கீகரிக்கப்பட்டன. போராளிகளுக்கான ஆயுதப் பயிற்சியையும் இந்தியா வழங்கியிருந்தது. 1987 ல் செய்யப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் இங்கு வந்த இந்தியப் படை இந்திய மேலாண்மையை நிலை நிறுத்தி சில ஆயுதக்குழுக்களின் உதவியுடன் தமிழர் தாயகக் கோட்பாட்டை மழுங்கடிக்க முனைந்த பின் 1990ல் நாட்டைவிட்டு வெளியேறியது. ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தின் பரிணாமம் உலகதெளாம் உணரப்பட்ட நிலையில் மட்டக்களப்பின் பங்களிப்பும் மகத்தானதாக இருந்தது. கி.பி 1622 முதல் கொண்டு அன்னிய ஏகாதிபத்திய எதிர்ப்பலையில் நீந்திய மட்டக்களப்புப் பிரதேசம் இப் போராட்டத்திலும் ஆயிரக் கணக்கான இளைஞர்களையும் பொதுமக்களையும் முப்பது ஆண்டுகளாகக் காவு கொடுத்து கோடிக் கணக்கில் சொத்துக்களையும் இழந்து இன்று ஏதிலியாய் நிர்க்கதியாகி நிற்கின்றது.





# மட்டக்களப்புச் சமூகங்களும் அவற்றின் விரிவாக்கமும்

## பண்டைய சமூக நிலை

இப்பிரபஞ்சம் தோன்றிப் பதினையாயிரம் கோடி வருடங்கள் ஆகிவிட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனிடையே பாலூட்டிகள் தோன்றி 225 மில்லியன் வருடங்கள் எனவும் உயர் பாலூட்டிகள் தோன்றி 90 மில்லியன் வருடங்கள் எனவும் மனித நேர் மூதாதையர் தோன்றி நாற்பதாயிரம் வருடங்கள் எனவும் மானிடவியலாளர்கள் கூறுவர். இவை செய்திகளின் தொகுப்பாக இல்லாமல் நிகழ்வுகளின் காரண காரியங்களைக் கொண்டவையாகும்.

தொன்மை மக்கள் காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் தன்னந் தனியாக உணவு ஈட்டுதலோ காட்டு விலங்குகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுதலோ மழை, வெள்ளம் புயல் காற்று காட்டுத்தீ போன்ற இயற்கை அனர்த்தங்களின் அச்ச நிலையைப் போக்கவோ அவர்களால் இயலவில்லை. மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து அவர்களின் உதவியைப் பெற்று வாழுதலே இதற்கான வழி என அவர்கள் கண்டறிந்தனர். விலங்குகள் பறவைகள் ஊர்வன நகர்வன அனைத்தினதும் இயற்கையான வாழ்க்கை முறையினையும் அவர்கள் பார்த்துணர்ந்தனர். இதனடிப்படையில் மனித குலத்தில் தோன்றியதே சமுதாய வாழ்க்கை.

தேவைகளுக்காக தோன்றிய சமூகங்கள் தொடக்க காலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒன்றுகூடி வாழ முற்பட்டனர். குழுச்சமூகநிலை வரிவாக்கம் பெற்றபோது அவர்களின் தேவையை ஈடுசெய்ய அவர்களுக்குத் தெரிந்த அல்லது இலகுவான வேலைகளைச் செய்து சமுதாயத் தேவைகளை நிறைவேற்றினர். இதுவே அவர்களது சமுதாயக் கடமையாகவும் மாறியது. இதனடிப்படையில் உழவர்கள் , மீன் பிடிப்பவர்கள், நெசவாளர்கள், கருமார்கள்(கைத்தொழில்கள்) தொழிலாளர்கள், வணிகர்கள், தலைவர்கள், ஆட்சியாளர்கள், போர்வீரர்கள் என தொழில் நிலைச்

சமூகங்கள் தோற்றம் பெறுகின்றனர். கிரேக்க அறிஞர் பிளாட்டோ (கி.மு 427 -347) இதனை விரிவாக விளக்கியுள்ளார்.

உருவ வகைகள் ,வழங்கிய மொழிகள், பொருள்கள் , பண்பாடு, வாழ்க்கைமுறை, சமயநெறிகள், சமூக நீதிகள் , அரசு , போர் முறை என்பன பின்னர் சமூகங்களை இன வழிப்பட்ட சமுதாயமாக வேறுபடுத்திக் காட்டின. இவர்கள் வாழ்ந்த பகுதிகள் காலப்போக்கில் பிரதேசங்களாகவும் நாடுகளாகவும் உருக்கொண்டன. சங்ககாலத்தே ஒரே சமுதாயத்தில் தொழில்சார் சமூகங்கள் தோற்றம்பெற மேட்டு நிலத்தார் மந்தை வளர்ப்பு, மேய்ச்சல் தொழிலையும் ஆற்றுப் படுக்கைளில் வாழ்ந்தவர்கள் நெற்பயிரையும் கடற்கரை சார்ந்து வாழந்தவர்கள் மீன்பிடித் தொழிலையும் மேற் கொண்டனர். தலைவன் கோவென அழைக்கப்பட்டான். கல்வி அறிவு, அறம் போன்றவற்றில் நாட்டம் கொண்டவர் செம்மையுடையோராய் சமூகத்தில் மதிக்கப்பட்டனர். இவர்களே பண்டைய தமிழக சமூகங்களின் அந்தணர் என அழைக்கப்பட்டனர். பிராமணர் இந்தியாவுக்குள் நுழைய முன்னரே தமிழ்ச் சமூகத்தில் அந்தணர் இருந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு வள்ளுவர் குறிப்பிடும் அந்தணர் என்போர் தமிழ்ச் சான்றோர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தொல்காப்பியரும் இதையேதான் சொன்னார். கி.பி 4ம் நூற்றாண்டின் பின் தமிழகத்தில் ஆதிக்கம் பெற்ற பிராமணர் (ஆரியர் ) முந்தி வந்த காதை பிந்தி வந்த கொம்பு மறைத்தது போல் அந்தணர் என்ற தமிழ்ப் பெயரை தங்களுக்குச் சூட்டிக் கொண்டனர். சங்க காலத் தமிழர்கள் தொழில்களை வேறுபடுத்தினாரன்றி தொழில் செய்வோரை கூறுபடுத்தினாரல்லர். கோவும் கொல்லனும் ஒரே அவையில் வீற்றிருந்து பணியாற்றிய காலம் அது.

ஈழத்தின் ஆதிச் சமூகம் எனக் கொள்ளப்பட்டது இயக்கரும் நாகரும் என்பது அறியப்பட்டதாகும். உலகின் பண்டைய சமூகங்களுக்குள்ளும் நாகர்கள் ஆதிச் சமூகமாவே கொள்ளப்படுகின்றனர். இயக்கரும் நாகரும் சமூகப் பிணைப்புப் பெற்றவர்கள் என்பதனையும் இவர்களின் எச்சங்களே வேடர்கள் எனவும் ஆய்வாளர் முடிவுறுத்தியுள்ளனர். இயக்கர் நாகரிடையேயும் தொழில்கூறுகள் இருக்கவே செய்தன. கி.மு. 3ம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் வாழ்ந்து மீன்பிடித் தொழிலை மேற் கொண்ட திமிலர் இயக்கர் சமூகத்தின் ஒரு தொழில் பிரிவினராகவே





கருதப்படுகின்றனர். இவர்களைக் குகருக்கு முன்னரே மட்டக்களப்பில் வாழ்ந்தவர்களாக கொள்ள முடியும்.

**மட்டக்களப்பின் குக மரபுத் தோற்றம்**

கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட காலம் முதலே கலிங்கர் செல்வாக்கு ஈழத்திலும் மட்டக்களப்பிலும் நிலை நிறுத்தப்படுகின்றது. ஈழத்து வரலாற்று நூல்கள் அனைத்துமே கலிங்கர் ஈழத்தில் பெற்ற உயர்வினைச் சிறப்பாக குறிப்பிடுவதோடு ஆதிக்கக நிலையில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன. ஈழத்து அரசர்களை குறிப்பிடும் முன்னைய சிங்கள நூல்கள் கலிங்க மன்னர்களை சிங்களவர்கள் பக்கம் திருப்பிப் பார்க்கின்றன. சிங்கள மன்னர்கள் , தமிழ் மன்னர்கள்(சேர, சோழ, பாண்டியர்) என்று அவை சுட்டும் அதேவேளை யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் சிலவும் பல கலிங்க மன்னர்களை அதாவது தமிழ் மன்னர்கள் சிங்கள மன்னர்கள் என இரு பக்கமும் இனம் காணுகின்றன. ஆனால் மட்டக்களப்பின் பூர்வ வரலாற்று ஆவணங்கள் கலிங்கரை தமிழ் மன்னர்களாகவும் கலிங்கக் குடிகளை குகக் குடிகளாகவும் பார்க்கின்றன. சில கல்வெட்டுப் பாடல்கள் மட்டக்களப்புக்கு முதலில் வந்த (கி.மு. 3ம் நூற்றாண்டு) இக்குக மரபினர் கங்கைக் கரையில் ஓடம் செலுத்திய குகனின் வழித்தோன்றல்கள் எனக் கூறுகின்றன. இராமாயண காவியம் குறிப்பிடும் குகனின் வரலாற்றுக் காலம் சர்சைக்கு உட்படுவதாக அமையினும் கங்கைக் கரையின் பண்டைய சமூகத்தின் பாற்பட்ட தொடர்பு மட்டக்களப்புக்கு கலிங்க நாட்டிலிருந்து வந்த இந்தக் குக மரபினருக்கும் உண்டென்பதை மறுக்க முடியவில்லை. கிறிஸ்துவுக்கு முற்பட்ட கலிங்கத்தை பற்றிய தேடல் இங்கு அவசியமாகின்றது. ஓரிசாவில் புவனேஸவரர் ஆவணக் காப்பகத்தில் கிடைக்கும் வரலாற்று தகவல்கள் இதற்குத் துணை செய்கின்றன.

பண்டைய கலிங்கம் இந்திய உப கண்டத்தில் மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்ட திராவிடர் பூமியாக விளங்கியதாகும். சிறந்த மன்னராட்சியையும் நாகரீகமடைந்த மக்களையும் கலிங்க பூமி கொண்டிருந்தது. கங்கர், நந்தர், கலிங்கர்,வங்கர் எனப் பழந் திராவிட மரபினர் கலிங்கத்தில் வாழ்ந்தனர். கங்கர் என்போர் கங்கைச் சமவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த ஆதிக்க மிக்க சமூகத்தினர் என இந்திய வரலாற்றாவணங்கள் கூறுகின்றன. இவர்கள் பேசியமொழி தமிழ் எனவும் கங்கைச் சமவெளியிலுள்ள ஊர்களான தமிழ்ப்பூர், தமிழ்க்குடி, தமிழ்பேடா , தாமுமூக் போன்ற

பல ஊர்கள் பண்டைய கங்கர்கள் வாழ்ந்த பகுதிகளாகவும் மொழி ஆய்வாளர்களும் சமூகவியலாளர்களும் கருதுகின்றனர். கலிங்கர் சேர பாண்டிய நாட்டினருடன் சமூகக் கலப்புற்றதை போல கங்கர் சோழ நாட்டினருடன் பெருமளவு கலப்புண்டதாக தென்னிந்திய வரலாறுகள் தெரிவிக்கின்றன. சோழ கங்கர்கள் உருவாக்கத்திற்கும் இது காரணமாயிற்று எனவும் தெரிகின்றது. சோழரும் கலிங்கர்களுடன் சமூக உறவு கொண்டவர்களாகவே வாழ்ந்தனர்.

கங்கர்(கெங்கர் ) குலம் பற்றிய ஒரு குறிப்பும் மட்டக்களப்பு மான்மியத்தில் இடம்பெறுகின்றது. கங்கைக் கரையின் குறுநிலத் தலைவர்களான குகனுக்கும் கங்கர் சமூகத்துக்கும் இறுக்கமான தொடர்பிருக்க வாய்ப்புண்டு என்பதால் வரும் ஆய்வுகள் அதற்கு வழி அமைக்க முடியும். நமது ஆய்வில் துணைபுரிந்த தமிழகத்து ஆய்வாளர்களான தொல்லியலாளர் நடன காசிநாதன், பேராசிரியர் வே.இராமகிருஷ்னன், கேரளத்து ஆய்வாளர் திரு.சங்கரமேனன் போன்றோர் மட்டக்களப்பு மான்மியம் தொடர்பான தகவல்களில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதுவும் ஓரிசாவின் அரசியல் கட்சியான கலிங்க சேனாக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தங்கள் சமூகத்தினரின் விரிவாக்கம் பற்றி அறிய முற்பட்டிருப்பதுவும் மட்டக்களப்பின் சமூக வரலாற்றினுக்கு விரைவில் ஒரு தெளிவினைத் தர வழி பிறக்கும்..

அறியப்பட்ட மட்டக்களப்பின் வரலாற்றுக் காலத்தே இயக்கர், நாகர், திமிலருக்கு பின் வந்து ஆதிக்கம் பெற்ற குக மரபினர் தங்களுக்கு ஆதரவாக இருந்த திமிலரைத் தங்களுடன் இணைத்துக் கொண்டு ஏனையோரை வெளியேற்றினார்களா அல்லது அவர்களை முற்றாகவே வெளியேற்றினார்களா என்பது விரிவாக எதிலும் குறிப்பிடப்படவில்லை. இங்கே பட்டாணியர் பற்றி பெரிதும் பேசப்படுகின்றது. அதற்கு உருது மொழி பேசும் பாரசீகர் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. கயத்தாறுக்கும் பாளையங் கோட்டைக்குமிடையே ஒரு இளம் பெண்ணைக் காப்பாற்ற உயிரீந்த பட்டாணிக்கு அவ்வூர் மக்கள் கோயில் கட்டியதாக தமிழகத்திலும் வரலாறு உண்டு. பாண்டிருப்பு துரோபதையம்மன் ஆலயத்திலும் பட்டாணி மேடையொன்று அமைக்கப்பட்டிருப்பதுவும் நம் கவனத்தை ஈர்ப்பதாகும். மட்டக்களப்பில் இந்துக்கள் வழிபாட்டில் பட்டாணி மடையொன்றும் வைக்கப்பட்டதும் அண்மைக்காலம் வரை வழிபாட்டு நிகழ்வுகளில் முற்குகத் தலைவர்களும் இஸ்லாமிய தலைவர்களும் இரண்டறக் கலந்து சிறப்பித்து வந்ததுவும் வரலாற்றுண்மையாகும்.





தங்களுக்கு உதவிய பட்டாணியருக்கு நன்றியாக குகமரபு மகளிரை மணம் முடித்து ஏறாவூரில் குடியிருத்தி குகத் தலைவர்கள் பண்டாணியரை தங்களுக்கு உதவியாக்கிக் கொண்டனர் என்பது கல்வெட்டுப் பாடல்கள் , பழைய ஓலைச் சுவடிகள், மட்டக்களப்பாரின் வாய்மொழிக் கதைகள் மூலம் சான்றளிக்கப்படுகின்றது. ஏறாவூர் மட்டக்களப்பின் பண்டைய ஊராகும். ஊர் எனும் பெயர் ஈற்றுச் சொல் பழமையும் சிறப்பும் கொண்ட மக்கள் குடியிருப்பினை குறிப்பதாகும். தொடக்கத்தே குகரோடு இணைந்த பட்டாணியர் தனித்து ஒரு சமூகமாக தோற்றம் பெற்றார்களா அன்றேல் குகமரபினரால் உள்வாங்கப்பட்டார்களா என்பதற்கு நிரப்பப்படாத சமூக ஆய்வு இடைவெளியால் சரியான முடிவினை எட்ட முடியவில்லை. பிற்பட்ட காலங்களிலும் இத் திருமணத் தொடர்புகள் நீடித்திருப்பதற்கு போதிய சான்றுகள் தென்படுகின்றன. இதற்கு ஆதாரமாக காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை ,அக்கரைப்பற்று பகுதிகளில் முஸ்லிம் சமூகத்தாரின் குடிப்பிரிவுகள் பல முற்குகரின் குடிப்பிரிவுகளோடு ஒத்திருப்பதைச் சான்றாகக் கொள்ளலாம். சாதிப்பிரிவுகளும் குடிப்பிரிவுகளும் சோழராட்சிக்கு பிற்பட்டே வந்திருக்க முடியும்.

**சமூகப் பிரிவுகளின் உருவாக்கம்**

மட்டக்களப்பின் மரபு வழிச் சமூகங்களாக இயக்கர், நாகர் (வேடர்) திமிலருக்குப் பின் முற்குகர் இடம்பெறுகின்றனர். முற்குகர் ஒரு தனிச்சமூகமா? அல்லது கூட்டுச் சமூகமா? என்பதற்கு எமக்கு சரியான விடை இப்போது கிட்டத் தொடங்கியுள்ளது. முற்குகர் என்போர் காலத்துக்கு காலம் தென்னிந்திய நிலப்பரப்பிலிருந்து வந்து இணைந்து கொண்ட திராவிடர்களின் கூட்டுச் சமூகம் என்பதே அது. மட்டக்களப்புச் சரித்திர ஏடுகளும் ஆரம்ப முதலே கலிங்கர், சிங்கர், வங்கர், என்றே குலப்பெயர்களை உச்சரித்து செல்கின்றது. அக்கால கலிங்க நாட்டிலும் கங்கர், நந்தர், கலிங்கர், வங்கர் ஆகிய சமூகங்களே தென்படுகின்றன. இதன் ஆரம்ப காலம் சாதிப்பிரிவுகள் தலையெடுக்காத காலம். திணைச் சமூகங்களோடு தொழிற் சமூகங்கள் ஒன்றியிருந்த சமூக ஏற்ற இறக்கம் குறுகியிருந்த காலம். இந்திய நிலப்பரப்புள் பொதுவான சமூகத் தோற்றப்பாடு இப்படித்தான் அமைந்திருந்தது. கி.பி 4ம் நூற்றாண்டின் பின் தமிழகத்தில் பல்லவராட்சியில் தலையெடுத்த பிராமணர்கள் ஆரியமொழி வர்ணாச்சிரமத்தை புகுத்தினர். தமிழரின் பாரம்பரிய ஏற்றத்தாழ்வற்ற சமூகப் பண்பாட்டினை சிதைத்து இல்லாதொழிக்க

இதன்மூலம் உறுதியான அடித்தளமிட்டனர். சோழராட்சியில் அரசனின் நிருவாக ஆலோசகர்களாக கோவில்களின் பாதுகாவலர்களாக தமிழர்களின் சொத்துக்களை பறித்தெடுத்த நில உடமையாளர்களாக உயர்நிலை சமூக அந்தஸ்த்தை எட்டிப் பிடித்த இவர்கள் இதனைத் தொடர்ந்தாற் போல் தக்க வைத்துக் கொள்வதற்காக மேலும் மேலும் அடுக்கு முறைச் சாதியத்தை தோற்றுவித்து இடங்கை வலங்கைப் பிரிவுகளை உருவாக்கி சமூகத்துள் சாதி வகுத்து சாதிக்குள் கூறுவகுத்து கூறுகளை அடுக்கடுக்காக்கி நானூறுக்கும் மேற்பட்ட சமூகச் சிதைவுகளைக் கொண்டு தமிழகத்தை உறுதியற்றதாக்கி சீரழித்தனர். சோழராட்சி ஈழத்தே நிலை நிறுத்தப்பட்டு மட்டக்களப்பு அவர்களின் பாலனத்துக்குட்பட்ட போது அவர்களது ஆட்சி முறைக்காக சமூகப் பிரிவுகள் தோற்றம் பெற வேண்டியதாயிற்று. இதனால் அவசியப்பட்ட சமூகப் பிரிவுகளை அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து அழைத்துவர வேண்டியதாயிற்று. ஈழத்தில் சோழராட்சியில் ஆட்சித் தலைவர்களுக்கு தாம்பூலம் மடித்துக் கொடுப்பதற்காக உரியவர்கள் இங்கு இல்லாமையால் அதற்குரிய அடப்பையர் என்ற சாதியர் இங்கு கொண்டு வரப்பட்டனர் என்ற தகவலை History of the later cholas and theirs heritages (பிற்கால சோழரின் வரலாறும் மரபுகளும்)குறிப்பிடுகின்றது. மட்டக்களப்பில் சாதிப் பிரிவுகள் வேறுபாட்டுடன் தோற்றம் பெற்ற காலமாக சோழராட்சிக் காலத்தை (கி.பி 975- 1059) குறிப்பிடலாம். இக் காலத்தின் முன்னர் முக்கியமாக இரண்டு குடியேற்றங்கள் சிறைக்குடிகளை சம்பந்தப்படுத்தியதாக மான்மியம் குறிப்பிடுகின்றது. கி.பி 1ம் நூற்றாண்டில் திருக்கோவில் ஆலய நடைமுறைகளுக்காக அழைத்துவரப்பட்ட வேளாளரும், அந்தணரும் சில சிறைக்குடியினரும் இதில் அடங்குவர். பின்னர் கி.பி 4ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி 5ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கலிங்க இளவரசி உலக நாச்சியால் சில சிறைக் குடியினர் கொண்டு வரப்பட்டனர். இவர்கள் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சர கோவில் கடமைகளின் நிமித்தம் கொண்டு வரப்பட்டவர்களாக அறியப்படுகின்றனர். மேலும் இக்காலத்தே தமிழ் நாட்டில் சாதியம் பெருமளவு தடம் பதிக்காத காலம் என்பதை நாம் கருத்தில் கொண்டால் அக்கால கட்டத்தே கடமை செய்ய வந்த மக்களை எவ்வாறு சமூக மட்டத்தில் குறைத்துப்பார்க்க முடியும். வரலாற்று பக்கம் சோழராட்சி மட்டக்களப்புக்கு சில நன்மைகளை தந்திருந்தாலும் இது போன்ற குறைபாடுகளையும் எச்சமாகவே விட்டுச் சென்றிருக்கின்றது. எனினும் சமூகப் பிரிவுகளும் அவற்றின்





ஏற்ற இறக்கத் தன்மைகளும் தமிழகத்திலும் மட்டக்களப்பிலும் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பதாக இங்குள்ள சில கட்டுரையாளர்கள் குறிப்பிடுவதை போலல்லாது முழுதான ஒரு வேறுபாட்டினை கொண்டிருப்பதையே சமூக ஆய்வுகள் வெளிப்படுத்தும். குறிப்பிட்ட தொழில்சார் சமூகங்கள் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைப் பகுதியில் தொழும்பர் எனக் குறிப்பிடப்பட மட்டக்களப்பு இவர்களைச் சிறைக் குடிகள் என்றே அழைத்திருக்கின்றது.

தமிழக சாதிப்படி நிலைக்கும் மட்டக்களப்பின் சாதிப்படி நிலைக்கும் பாரிய வேறபாடுண்டு. தமிழகத்தில் உயர்நிலை பேணும் பார்ப்பனருக்குள்ளேயே வடகலை, தென்கலை தொடக்கம் பல்வேறு அடுக்கு முறைகளைக் காணமுடியும். வேளாளருக்குள்ளேயே நாற்பதுவுக்கும் மேற்பட்ட சாதிக்கூறுகள் அங்கு தென்படுகின்றன. அவற்றினுள்ளும் ஏற்றத் தாழ்வுகளுடன் கூடிய சமூகப் பிரிவுகளை காணமுடியும். கவுண்டர், நாயக்கர், நாயுடு, செட்டிகள், பிள்ளை,வேளாளர், தேவர், முதலிகள், வன்னியர், முக்குவர் ,நாடார்,யாதவர் ,வடுகர்,பரவர்,மீனவர், பள்ளர், பறையர், நளவர், வண்ணார், அம்பட்டர், சக்கிலியர் எனத் தொடருகின்ற சாதிப்பிரிவுக்குள் சமூக நிலை கூறுகளும் அவற்றினுள்ளே மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் படி நிலைக் கூறுகளும் விரிவடைந்து செல்லுவதைப் பார்க்கலாம். படிநிலைக் கூறுகளில் கூட பிரதேசப் பிரிவுகளில் ஒன்றுக்கொன்று சமூக இணைப்புப் பெறுவதில் அங்கு சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன.

மட்டக்களப்புச் சாதிஅமைப்பு முற்றிலும் மாறுபட்டதாகும். மேல் மட்டம் கீழ் மட்டம் என வரையறை செய்யப்பட்ட சமூகங்களிடையே பொதுவாக சமூக உறவுமுறை பேணப்படுவதில்லையெனினும் இங்குள்ள நீண்டகால வரன் முறைகளை உள்ளடக்கிய வரலாற்றில் சமூகங்கள் ஒன்றையொன்று ஒதுக்காமல் பொதுவான நிகழ்வுகளில் இணைந்து தங்கள் தங்கள் பங்களிப்பினூடாக நெறி தவறா ஒற்றுமையை நிலை நிறுத்தி வாழ்ந்துள்ளமை உறுதி செய்யப்பட்டதாகும். மட்டக்களப்பு சமூகங்கள் தொடர்ந்தும் ஒரு கட்டுக்கோப்புக்குள் இயங்க வேண்டிய ஒரு அவசியம் உணரப்பட்டதால் கி.பி 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் மட்டக்களப்பு சமூகங்களை வரையறை செய்ததோடு அவற்றிற்கான சமூகக் கடமைகளையும் நிரல்படுத்தினான். ஆலய நடைமுறைகளை முக்கியப்படுத்தி பிரதேச இணைப்பினூடாகச்

சமூகங்கள் தங்கள் பங்களிப்பினை வழங்குதல் மூலம் மட்டக்களப்பின் சமூக ஒற்றுமை நிலை நாட்டவும் வழி செய்தான்.

மட்டக்களப்பின் முக்கிய பாரம்பரிய தமிழ்ச் சமூகங்கள் பின்வருமாறு அடையாளப் படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. முற்குகர் | 02. வேளாளர் |
| 03. கரையார் | 04. சீர்பாதர் |
| 05. கோவிலார் | 06. முதலிகள்(செங்குந்தர்) |
| 07. செட்டிகள் | 08. தட்டார் |
| 09. தனக்காரர் | 10. வாணியர் |
| 11. பண்டாரம் | 12. பண்டாரப்பிள்ளை |
| 13. வேடர்(வேட வேளாளர்) | 14. குயவர் |
| 15. தவசிகள் | 16. நம்பிகள் - நளவர் |
| 17. கொல்லர் | 18. வண்ணார் |
| 19. சாணர் (சான்றார்) | 20. அம்பட்டர்(மருத்துவர்) |
| 21. பள்ளர் | 22. பறையர்(வள்ளுவர்) |
| 23. திமிலர் | 24. கோவியர் |
| 25. கடையர் | |

இதனோடு அந்தணர் (சிவப்பிராமணர் ) பற்றிய குறிப்புகளும் பரவலாகக் கிடைக்கின்றன.

மேற்படிச் சமூகங்கள் இந்துப் பண்பாட்டை பேணுபவர்களாக உள்ள நிலையில் மட்டக்களப்பின் பண்டைய தனித்துவம் மிக்க சமூகமாக முஸ்லிம் சமூகம் மிளிர்கின்றது. இவர்கள் தொடக்க காலத்தே பட்டாணியராகவும் இஸ்லாம் தோற்றம் பெற்று மத்திய ஆசியப் பரப்பில் வேரூன்றிய பின்னர் முஸ்லிம்கள் என்ற பெயரிலும் மட்டக்களப்புத் தமிழகத்தில் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். பிற்பட்ட காலத்தே தனித்துவம் மிக்கதான பறங்கியர் சமூகமும் தோற்றம் பெறுகின்றது.

**இயக்கர்**

இலங்கை வரலாற்றில் இயக்கரும் நாகரும் ஆதிச் சமூகமாகச் கொள்ளப்படுகின்றனர். இயக்கர் பண்டைய மட்டக்களப்பு சமூகத்தினர் என்பதற்கு போதிய சான்றுகள் உண்டு. சில ஆய்வாளர்கள் இயக்கர் என்ற இனமொன்று இங்கு வாழ்ந்ததாக கருத முடியவில்லை எனத் தங்கள் கருத்துக்களை முன் வைப்பதையும் பர்க்கின்றோம். எனினும் இலங்கை தொடர்பான





வரலாற்று ஆவணங்கள் அனைத்துமே இயக்கர் பற்றியும் அவர்களது வாழ்விடங்கள் பற்றியும் விரிவான தகவல்களைச் சொல்லியுள்ளன. புத்தரின் இலங்கைக்கான முதல் வரவிலேயே அவர் இயக்கர்களைச் சந்தித்தார் எனவும் இயக்கரின் முப்பது மைல் நீளமும் பத்து மைல் அகலமும் கொண்ட மகாநாகா தோட்டத்திலே (மையங்கணை) அந் நிகழ்வு இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. கிறிஸ்துவுக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு இயக்கரும் நாகரும் இந் நாட்டினில் வாழ்ந்துள்ளமையை மறுப்பதற்கில்லை. கி.மு 5ம் நூற்றாண்டுக்குப் பின்னர் பெருமளவு இயக்கர் குடியிருப்புகள் ஆரியக் குடியிருப்புகளாக மாறியதாகக் கூறப்படுகின்றது. பண்டைய மட்டக்களப்புப் பிரதேசத்தில் (இ) யக்கரை என்ற அவர்கள் பெயரைக் கொண்ட இடத்திலும் விந்தனை , மையங்கனை மற்றும் கதிர்காமத்திலும் இயக்கர்கள் பரவலாக வாழ்ந்துள்ளனர். இவர்கள் ஆதித் திராவிடர்களாவர். சிங்களவர்களை இயக்கர், ஆரியர், தமிழர் என்போரது கலப்பினமாகவே இன்றைய ஆய்வுகள் வெளிப்படுத்தப் படுகின்றன.

**நாகர்**

இயக்கரைப் போன்ற பண்டைய சமூகமே நாகராகும். பண்டைய மட்டக்களப்பில் வாழ்ந்த இவர்கள் இயக்கரை விட நாகரீகமானவர்கள். இவர்களைத் தென்னிந்திய சமூகத்தினராக அடையாளப்படுத்துவாருமுளர். புத்தரின் இரண்டாம் மூன்றாம் வரவிலும் நாகரே சம்பந்தப்பட்டவர்களாகின்றனர். கி.மு 5ம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையில் இயக்கர் குடியிருப்புகள் ஆரியக் குடியிருப்புகளாக மாற்றமடைய நாகர் தொடர்ந்தும் தங்கள் ஆதிக்க நிலையிலேயே இருந்துள்ளனர். மட்டக்களப்பில் இவர்கள் சூரியத்துறை (பெருந்துறை) ,நாகன் சாலை (மண்டூர்), நாகர் முனை (திருக்கோவில்), நாகப் பொக்கணை (நாமள் பொக்குண - மன்னன்பிட்டி) என்பனவற்றை தங்களின் முக்கிய இருக்கையாக்கியிருந்தனர். நாகர் தொடர்பான எச்சங்கள் மட்டக்களப்பில் பல்வேறு இடங்களிலும் கிடைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் புத்த மதத்தை தழுவியுள்ளனர். இலங்கையில் புத்த மதத்தை தழுவிக் கொண்ட நாகர்களை கோடிக் கணக்கில் மகாவம்சம் குறிப்பிட்டாலும் நூற்றுக் கணக்கானவர்கள் எனக் கொள்ளமுடியும்.

**வேடர்கள்**

வேடர்கள் இன்று நாம் காணுகின்ற ஈழத்து சமூகங்களில் ஆதிச் சமூகத்தினர் எனக் கொள்ளப் போதிய சான்றுகள் உள. ஆரியக் குடியேற்றங்களிலும் பௌத்த மதப் பரம்பலிலும் இரண்டாம் படி நிலைக்குள் உள்வாங்கப்படாது விடுபட்டுப்போன பெருமளவு இயக்கரும் நாகரும் வேடர் என்ற சமூக அமைப்பினுள் வந்தவர்கள் என்றே கொள்ள வேண்டும். பண்டைய மட்டக்களப்பின் விந்தனை, வேகம் (நாடு காடு), கோறளை (வாகரைப்பகுதி) போன்ற நிலப்பரப்புள் தொடர்ந்தாற்போல் இச் சமூகத்தினர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்றனர். மட்டக்களப்பு பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேடரின் வாழ்விடங்கள் பற்றிய தகவல்களும் தடயங்களும் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுகின்றன. இப் பிரதேச ஆலய நடைமுறைகளினும் வழிபாட்டுத் தன்மையிலும் வேடர்களின் வழக்காறுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. திருக்கோவில், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம் ,கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், சித்தாண்டி சித்திர வேலாயதர் ஆலயம். வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம் போன்ற மட்டக்களப்பின் புகழ்பெற்ற திருத்தலங்களிலும் மற்றும் பல பண்டைய ஆலயங்களினும் வரலாற்றுத் தொடக்க நிலை வேடர்களைக் கொண்டே முன்னெடுக்கப்படுவது நம் கவனத்தில் கொள்ளத்தக்கதாகின்றது. எனவே இயக்கர் நாகர் என்போருக்கு அடுத்த நிலையில் இன்றும் சில இடங்களில் வாழ்வோரான வேடரே இலங்கையைப் போன்று இன்றைய மட்டக்களப்பின் புராதன சமூகத்தினர் எனத் கணிக்கத் தக்கவராகின்றனர்.

**வேடவேளாளர்**

இப் பிரதேசத்தில் வேடவேளாளர் என்ற பிரிவினர் ஒரு முக்கிய சமூகத்தினராக வாழ்ந்து வருகின்றனர். பொதுவாகத் திருப்படைக் கோயில்களை நிலைப்படுத்தியதாக இவர்கள் செறிந்துள்ளதோடு அவ்வாலய நடைமுறைகளில் இவர்கள் முக்கிய பங்காளிகளாகவும் உள்ளனர். இவர்கள் பரம்பரை வேடர்களாக இருந்து பின்னர் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டவர்கள் என்பதால் இப் பெயர் ஏற்பட்டதாக சிலர் கூறுகின்றனர். மட்டக்களப்பை பொறுத்தவரரை இக் கருத்தினை நிராகரிக்கவும் முடியாது. இப் பிரதேசம் முழுவதும் விவசாய நிலங்களால் சூழப்பட்டிருப்பதால் பிற்பட்ட காலத்தே வேளாண் செய்கை என்பது இங்கு ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குரியதென்றில்லாமல் பொதுவாக





எல்லாச் சமூகங்களும் இதில் ஈடுபாடு கொண்டுவருவதைப் பார்க்கின்றோம். எனினும் பண்டைய ஆலயங்களை உள்ளிட்ட பகுதிகளினது வேடர் சமூகங்கள் பால் நம் கவனம் செல்கின்றது. இவர்களின் திருமண உறவுகள் பெரும்பாலும் அப்பகுதி வேளாளருடன் தொடர்புற்றிருப்பதுவும் அவதானிப்புக்குட் படுத்தப்படுவதாகின்றது. வேடர் - வேளாளருடன் கொண்ட உறவு முறையும் பிற்பட்ட வாரிசுகளை வேட வேளாளர்களாகத் தோற்றுவிக்க ஏதுவாக அமைந்துள்ளது. இன்று மண்டூர் போன்ற கிராமங்களில் இதன் இறுக்கத்தை உணரமுடியும். இவர்களுக்கு வில்லம்பு குலவிருதுக் குறியாகவுள்ளது. இதனிடையே வாகரை போன்ற பகுதிகளில் வெள்வேடர் என்ற பெயரில் ஒரு பிரிவினர் தங்களை அடையாளப்படுத்துகின்றனர்.

**திமிலர்**

கி.மு 3ம் நூற்றாண்டு முதல் நமக்குக் கிடைக்கத்தக்கதான மட்டக்களப்பின் பொதுவான வரலாறு திமிலரை வைத்தே ஆரம்பமாகின்றது. இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த மீன்பிடிச் சமூகத்தினர் என யாழ்ப்பாண வரலாறுகளும் மீன் பிடித் தொழிலையும் மந்தை வளர்ப்பையும் மேற்கொண்ட இயக்கரில் ஒரு பிரிவினர் என மட்டக்களப்பு வரலாறுகளும் குறிப்பிடுகின்றன. திமிலருக்கு பால்முட்டி குல வருதாக வழங்கப்பட்டிருப்பதால் பிற்பட்ட காலத்தில் இவர்கள் தங்கள் சீவனோபாயத்திற்கு மந்தை வளர்ப்பினும் விவசாயத்தினும் ஈடுபட்டிருக்கக்கூடும். கலிங்கத்திலிருந்து குக வம்சத்தினர் மட்டக்களப்புக்கு வந்தபோது இவர்கள் திமிலைத்தீவு பகுதியில் (வலையிறவு) வாழ்ந்து கொண்டிருந்தமையும் மீன்பிடித் தொழிலை மேற்கொண் டிருந்தமையும் தெரியவருகின்றது. முக்குகரின் ஆதிக்க நிலைப்படுத்தலுக்கு சவாலாகவும் பெரும் தடையாகவும் இச்சமூகம் விளங்கியமையே அவர்களுக்கு எதிரான முக்குகரின் போர் நடவடிக்கைகளுக்கு வித்திட்டிருக்கின்றது. தனித்துநின்று திமிலரை வெற்றி கொள்ள முடியாத நிலையிலேயே வியாபாரம் செய்து கொண்டிருந்த பட்டாணியரின் உதவியை முக்குகர் பெறவேண்டியதாயிற்று. திமிலர் வெருகலுக்கப்பால் துரத்தப்பட்டதாக இங்கு கிடைக்கும் தகவல்கள் வெளிப் படுத்துகின்றன. எனினும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர் பிற்பட்டும் இங்கு வாழ்ந்துள்ளமை தெரிகின்றது. கி.பி 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் (குலவிருதுக் கல்வெட்டு), 18ம்

நூற்றாண்டின் முற்பகுதியிலும் (ஒல்லாந்தர் அறிக்கை) இவர்கள் வாழ்ந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன.

**பட்டாணியர்**

பட்டாணியர்கள் என்போர் பாரசீகத்து வியாபாரிகள் என்றே தமிழகத்து வரலாற்றுக் குறிப்புகள் விளக்குகின்றன. அரேபிய வியாபாரிகளை அரேபியர்கள் என்றும் அவை கூறுகின்றன. கி.பி 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலங்கையில் வரலாற்று ஆவணங்களில் பாரசீகத்து வியாபாரிகள் நெஸ்ரோரிய கிறிஸ்தவர்களாக வாழ்ந்தவர்கள் என அடையாளப் படுத்தப்படுகின்றனர். பட்டாணியர் என அழைக்கப்பட்ட இவர்கள் அதன்பின்னர் இஸ்லாத்தை தழுவிக் கொண்டு முஸ்லிம்கள் எனப்பட்டனர். இது குறித்து தனியான அத்தியாயத்தில் விளக்கப்படும்.

**முற்குகர்(முக்குகர்)**

முற்குகர்கள் என்போர் மட்டக்களப்பின் முழுமை பெற்ற வரலாற்றினைத் தங்களுக்கு உரிமையாக்கி கொண்ட ஒரு சமூகத்தினராவார். ஆங்கிலேயர் ஆட்சியில் கி.பி 1811 - 1820 வரை இலங்கையில் பிரதம நீதியரசராகப் பணிபுரிந்த சேர். அலெக்சாந்தர் ஜோன்ஸ்ரன் என்பவர் இலங்கை மக்களின் வழக்காறுகளும் சட்டங்களும் குறித்து எழுதியுள்ள ஆவணக்குறிப்புக்களை இங்கே கவனத்தில் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும். மட்டக்களப்பு பிரதேசத்தில் இம் மக்கள் நில உடமையாளர்கள் மாத்திரமின்றி ஆட்சி அதிகாரத்திலும் முதன்மை பெற்றவர்களாகவே இருந்துள்ளனர் என்பதனை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**..they not only became proprietors of almost all the lands in the province ,but they gradually acquired the complete Government of the Province. The Mutkuvars may be considered the first native in any part of Asia who were authorized by a European Government, to become members of a legislative assembly for the Government of their Own Country infact it consisted of a provincial Council of which all the heads Mutkuva families of the district were members of the Government of their own province.**

- Sir Alexandar Jhonstan-
- (Chief Justice 1811- 1820)





மட்டக்களப்பு பிரதேசத்தில் முழுமை பெற்ற ஒரு வரலாறு இவர்களுக்கு உண்டென்பதை இதன்மூலம் கண்டோம். இச்சமூகத்தினர் கலிங்கர், சிங்கர் , வங்கர் என மூன்று வம்சத்தினர் என மான்மியம் கூறுகின்றது. மான்மியத்துக்கு முன் எழுதப்பட்ட வரலாற்று தகவல்களும் பின் வந்த வரலாற்றுத் தகவல்களும் இம் மக்கள் பற்றி பொதுவான கருத்துக்களையே ஒன்றுபட்டும் திரிவுபட்டும் வெளிக்காட்டின. இச்சமூகத்தினரை ஒரே வழிச் சமூகத்தினராகக் காட்டவே இவை பெரிதும் ஆர்வம் காட்டின. இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எப்படி வந்தார்கள்? என்பதனை இவர்கள் வெளிக்காட்டிய விதத்தில் பல கட்டங்களில் முரண்படவும் செய்தார்கள். மட்டக்களப்பின் பூர்வீக சரித்திரக் குறிப்புகள் ஆர்வமுள்ள நமது பெரியவர்கள் சிலரால் அறிந்த தகவல்களைத் திரட்டி ஆவணப்படுத்தி பாதுகாத்து நமக்கு வழங்கப்பட்ட நமது தாய்வழி முதுசம் என்பதில் அக்கறையுள்ள எவரும் மாறுபடப்போவதில்லை. அக்காலச் சூழலும் கல்விநிலையும் இதற்கு மேலும் அவர்களுக்கு உதவ வாய்ப்பாக இருந்திருக்க முடியாது. யாழ் மண்ணின் மைந்தனாக இங்கு வந்த தமிழறிஞர் மகாவித்துவான் எவ்.எக்.சி.நடராசா இவற்றில் இரண்டு ஏடுகளை முடிந்தவரை தேடித் தொகுத்து அச்சாக்கி மட்டக்களப்பு வரலாற்று பெட்டகத்தின் திறவு கோலாக நம் கையில் கொடுத்தார். பெட்டகத்தை திறந்த பலரும் தங்களுக்குச் சார்பான சமூகப் பார்வைக்கு என்ன இருக்கிறது என்று பார்த்தார்களே தவிர அதனுள் பொதிந்து கிடக்கும் பொக்கிசங்களின் மதிப்பை கணக்கிட அவர்கள் மறந்து விட்டார்கள். இன்னும் சிலர் தங்களுக்கு தேவைப் பட்டதை மட்டும் தாழ்ப்பாளில் நின்று எட்டி எடுத்துக்கொண்டார்கள்.

மான்மியம் கூறும் தகவல்கள் சில காலக்கணிப்பிலும் இட வேறுபாட்டிலும் சம்பவ நிகழ்வுகளிலும் சிறு சிறு வேடுபாடுகளைத் தோற்றுவிக்கலாம். அவற்றைச் சீர் செய்ய வேண்டிய பொறுப்பு ஆய்வாளனுக்குரியதாகும். இதன் முன்னைய அத்தியாயங்கள் இவற்றை ஆழமாகச் சல்லடையிட்டு அலசிப் பார்க்கா விட்டாலும் முடிந்தவரை அவற்றை கிளறிப்பார்த்து சாமர்த்தியமான தேடலுக்கு வழிவிட்டிருக்கின்றன என்றே சொல்லவேண்டும்.

முற்குகர் என்பவர்கள் கலிங்கத்திலிருந்து வந்தவர்கள் என்பதுவும் சேரத்திலிருந்து வந்தவர்கள் என்பதுவும் வட இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதுவும் முடிவுகளாக

முன்வைக்கும் நிலையை விடுத்து தென் இந்திய நிலப்பரப்பில் திராவிடர் வாழ் பிரதேசங்களான கலிங்க நாடு, சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு என்பவற்றின் வெவ்வேறு திராவிட சமூகப் பிரிவுகளிலிருந்து காலத்துக்கு காலம் கடற்பயணம், குடியேற்றம் ஆட்சியதிகாரம் போர் நடவடிக்கைகள் என்பவற்றின் காரணமாக இங்க வந்து சமூக உறவு பெற்று ஒரு தனிச் சமூகமாக மாறிவிட்டவர்கள் என்பதே உண்மை நிலையாகும். கலிங்கத்தின் கலிங்கர் ,கங்கர், வங்கர், சிங்கர் என்பவரோடு சேரத்துப் பணிக்கர் ,நாயர், மழவர், முக்குவர் தமிழகத்து வன்னியர் (படையாட்சியர்) மழவராயர், கச்சியர், மறவர், யாதவர் (கோபியர்) போன்ற பண்டைய சாதி மரபினர் இணைப்பு பெற்றிருக்க போதிய வாய்ப்புள்ளமை பிற்பட்ட ஆய்வுகளில் வெளிவருகின்றன. பெருமளவு சேரத்து முக்குவரின் கலப்பு இதில் முக்கியத்தவம் பெற்றிருக்கினறது என்றே சொல்லவேண்டும். சேரத்து முக்குவர் தனி வரலாற்றுக்குரியவர்கள் .இன்று மலபார் முக்குவர் என அழைக்கப்படும் இவர்கள் தொடர்பில் கேரளத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளில் பல முக்கிய தகவல்கள் பெறப்படுகின்றன. இவர்கள் மகாவிஷ்னுவால் தோற்றம் பெற்றவர்கள் என்று புராண வரலாறு கூறப்படுவதைப் பார்க்கின்றோம். முத்துக்குளித்தலையே தங்கள் தொழிலாக இவர்கள் கொண்டிருந்தனரென்றும் கடலில் நீண்டநேரம் மூச்சடக்கி முக்குளிப்பதால் முக்குவர் எனும் பெயருக்குரியவராயினர் எனவும் சமூகப் பெயர்க்காரணம் அங்கு கூறப்படுகின்றது.

மாகோன் வகுத்ததாக முற்குகரிடையே ஏழு குடிகள் சொல்லப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் அவை மென்மேலும் விரிவுபட்டுள்ளமை தெரிகின்றது. வயிற்றுவாராகவும், ஊர்ப் பிரிவுகளாகவும் இக் குடிகள் கிளைவிட்டுள்ளன. கலிங்கக்குடி, உலகநாச்சிகுடி, படையாட்சிகுடி , பணிக்கனார்குடி, பெத்தான்குடி, மழவரசன்குடி, தனஞ்செயன்குடி, வல்லவராஜன் குடி, கச்சிலார்குடி, கோபிகுடி, செட்டி குடி, சிங்களக்குடி, மாதவிகுடி என மேனும் அவை விரிவு படுவதைப் பார்க்கின்றோம். இதில் தென்படும் அனேக குடிகள் தென்னிந்தியச் சாதிகளாக இன்றுமுள்ளவை என்பதை நாம் முக்கியமாகக் கவனத்தில்கொள்ளவேண்டும்.இவர்களுக்கு குலவிருதாக எழுத்தாணி வழங்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியதாகும்.





**கலிங்கக் குடியினர்**

இவர்கள் காலிங்கா குடியினர் எனவும் அழைக்கப்படுகின்றனர். ஓரிசாவிலும் (கலிங்கம் ) தமிழகத்திலும் கலிங்கர், காலிங்கர் என்ற சொற்பதங்கள் பேணப்படுவதோடு கலிங்க சேனா என்ற ஒரு அரசியல் கட்சியும் ஓரிசாவில் காணப்படுகின்றது. ஓரிய மொழியே அங்கு பேசப்பட்டாலும் அங்குள்ள ஆதிவாசிகளில் திராவிட மொழி பேசுகின்ற பதின்நான்கு இனக் குழுக்கள் பரவலாக வாழுகின்றனர். ஓரிசாவின் (கலிங்கத்தின்) ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளின்படி பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரிருந்தே அது திராவிடர் பூமியாக விளங்கியிருப்பதையும் தொல்காப்பியர் காலத்தே அது தமிழ் வழங்கும் நாடாக அடையாளப்படுத்தப்படுவதையும் காணுகின்றோம். சிவ வழிபாடும் வீர சைவமும் செழித்தோங்கிய வரலாறு அங்குள்ள நூற்றுக் கணக்கான புராதன சிவாலயங்களுடாக வெளிக் கொணரப்பட்டுள்ளன.

சேர சோழ பாண்டிய நாடுகளில் கலிங்கப் பெயர் கொண்ட ஊர்களும் வீதிகளும் இன்றும் உள்ளன. கலிங்கப் பட்டணம், கலிங்கப் பாளையம், கலிங்கராஜன் மங்கலம், கலிங்கப்பட்டி, காலிங்கா நல்லூர், காலிங்கா புரம் என அவை விரிவுபடும். கலிங்கர் யாவா, சுமத்திரா, ஈழம் (தாம்பிரபன்னி நாடு) எனக் கடல் கடந்து ஆதிக்கம் செலுத்தியதாக அங்கு பாடப் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்களே ஆரம்பத்தில் (கி.மு. 3ம் நூற்றாண்டு) மட்டக்களப்புக்கு வந்தவர்களாவர். கலிங்கத்தின் துறைமுக நகரான புவனேஸ்வரிலிருந்து தெற்கு நோக்கிய ஒரு நேர் கோட்டு கடல் பாதை மட்டக்களப்பு துறைமுகத்தை தொட்டு நிற்பதை கலிங்கரின் பண்டைய கடல் வழிப் பயணமாக அவதானிக்க முடியும்.

வரலாற்றுக்குட்பட்ட ஈழத்தின் ஆட்சி முறையில் கலிங்கரே முக்கியத்துவமும் முதன்மையும் பெற்றவர்களாகின்றனர். மட்டக்களப்பின் அதிகாரத் தலைமையாளிகளாக இவர்களே இருந்துள்ளனர். இவர்களது ஆரம்பக் குடியிருப்புகளாக மைலம்பாவெளி, ஏறாவு+ர், சந்திவெளி, சத்துருக்கொண்டான் என்பன குறிப்பிடப்படுகின்றன. இங்கிருந்து பின்னர் மட்டக்களப்பு (சம்மாந்துறை) கருங்கொடித்தீவு, (அக்கரைப்பற்று) , செங்கற்படை (காரைதீவு), அம்பிளான் துறை, பண்டாரியாவெளி, பங்குடாவெளி என இவர்கள் விரிவு பட்டதாக தெரியவருகின்றது.

மைலம்பாவெளியை இவர்கள் தங்களது வரலாற்றில் முக்கியப்படுத்துகின்றனர். மட்டக்களப்பின் சமூக கட்டமைப்பை மையப்படுத்துகின்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் நிருவாக செயற்பாட்டில் மைலம்பாவெளி வயிற்றுவாருக்கே அன்று தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது நமது கவனத்தை ஈர்ப்பதாகும். இவர்களிடையே மைலம்பாவெளி வயிற்றுவார், சத்துருக்கொண்டான் வயிற்றுவார், ஏறாவூர் வயிற்றுவார், மங்கிகட்டு வயிற்றுவார், வவுணதீவு வயிற்றுவார், எருவில் வயிற்றுவார் என வயிற்றுவார் பிரிவுகள் அவதானிக்கப்படுகின்றன. மட்டக்களப்பின் பெரும்பாலான இடங்களில் ஆலய நடைமுறைகளிலும் கும்பகுடம்(கூரைமுடி) வைத்தல், பட்டம் கட்டுதல் போன்றவற்றிலும் குலவிருதுச் சிறப்பை வெளிப்படுத்தும் நிகழ்வுகளிலும் கலிங்கரே முதல் மரியாதையினைப் பெறுகின்றனர். இவர்களது குலவிருது செங்கோலும் வாளுமாகும்.

**உலகநாச்சி குடியினர்(உலகிப்போடி குடி)**

கி.பி 398 ல் கலிங்க இளவரசி உலக நாச்சியின் வரவைத் தொடர்ந்து அவர்களால் கலிங்கத்திலிருந்து அழைத்துவரப்பட்ட குகன் குலத்தினராக இவர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் வங்கர் வமிசம் எனக் கூறினும் வரலாற்றைப் பார்க்கின்றபோது இவர்கள் கங்கைச் சமவெளியிலிருந்து கலிங்கத்துள் வந்த கங்கரினத்தவராகக் கருதப் போதிய சான்றுகள் அங்கு தென்படுகின்றன. குகனும் கங்கைச் சமவெளியில் வாழ்ந்தவன் என்பதனையும் கங்கைச் சமவெளி திராவிடரின் பண்டைய வாழ்விடம் என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதனாற் போலும் கங்கர்கள் குகன் குலத்தினர் எனக் குறிப்பிடப்பட்டனர். உலகநாச்சியின் தந்தையும் குகசேனன் எனும் பெயரைக்கொண்டவன் என்றே பூர்வீக சரித்திரம் குறிப்பிடும்.

உலகநாச்சி தான் கொண்டு வந்த சிவலிங்கத்தை மண்முனையில் (கோவில்குளம்) வைத்து வழிபாடியற்றியதோடு தன்னோடு வந்தவர்களை அங்கேயே இருத்தினள். பின்னர் களப்பு முனைப் பகுதியை (முனைக்காடு) காடழித்து நாடாக்கி பின்னர் தன்னால் வருவிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குகக் குடிகளை அப்பகுதியில் குடியமர்த்தினாள். கொக்கட்டிச்சோலையில் திகடன் எனும் வேடுவனால் கண்டெடுக்கப்பட்ட தான்தோன்றி லிங்கத்திற்கும் கோவில் எழுப்பி தனது மக்களால் வழிபாடியற்றவும் செய்வித்தாள். இம் மக்களே மாகோன் வரிசையில் உலகநாச்சி குடி





(உலகிப்போடி குடி - உலகப்பா குடி ) எனப் பெயர் பெறுகின்றனர். இவர்கள் திமிலை தீவு வயிற்றுவார், அக்கரைப்பற்று வயிற்றுவார் குறிஞ்சாத்தீவு (முனைக்காடு) வயிற்றுவார், போரதீவு வயிற்றுவார், சோதயன்கட்டு வயிற்றுவார் என விரிவு படுத்தப்பட்டு நிற்கின்றனர். மண்முனையிலிருந்து பிரிவு பட்டவர்களே திமிலதீவு வயிற்றுவார் மற்றும் அக்கரைப்பற்று வயிற்றுவார் ஆவர். இவர்களே ஆலய நடைமுறைகளில் முன்னுரிமை பெறுவதைப் பார்க்கின்றோம். பிற்பட்ட கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம் சம்பவமொன்று இதற்குச் சான்றளிக்கின்றது. மண்முனையிலிருந்து திமிலைதீவு சென்ற வயிற்றுவாரின் உமையாத்தை பற்றிய சுமார் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று குறிப்பு நமது கவனத்தை ஈர்க்கின்றது. அக் காலத்தே மட்டக்களப்புப் பிரதேச வன்னியனாக அம்பிளான்துறை கலிங்கர்குடி குஞ்சிளையாப்போடி பதவியிலிருக்கின்றார். இவர் பதவிக்காக கிறிஸ்தவத்தை தழுவி றொபட் குஞ்சிளையாப் போடி எனப்பட்டவர். தற்போதைய மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் மண்டபமே இவரது வதிவிடமாகும். இதனை அண்டிய காலத்தில் உமையாத்தையின் சகோதரர் நிலைமை வேலாப்போடியும் பதவி வகித்தவராவார். கொக்கட்டிச்சோலை களஞ்சிய அறையில் வன்னியரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட களவொன்று வெளிவர நிதி நிருவாகச் செயல்பாட்டு வண்ணக்கராக இருந்த உலகிப்போடி குடியைச் சேர்ந்தவரும் மௌனியாக இருந்த நிலையில் அதே குடியைச் சேர்ந்த உமையாத்தை இதைப் பொறுக்க முடியாதவராகக் கொதித்தெழுந்தார். தான்தோன்றீச்சரத்தில் தனது குடியுரிமையை நிலைநாட்ட அவர் வன்னியருக்கெதிராக மட்டக்களப்பு ஆட்சியாளருக்கு முறைப்பாடு செய்து விசாரணயினும் நேரடியாக பங்கு கொண்டு அதில் வெற்றியும் பெற்றார். பழுகாமம் அத்தியாகுடி வேளாளர்வசம் கைமாறியிருந்த தங்கள் வம்சத்தினருக்குரிய களஞ்சியத் திறவுகோலையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு சில ஆண்டுகள் தங்கள் குடிக்குரிய நிதிப் பொறுப்பு வண்ணக்குப் பதவியினும் செயல்பட்டார். அவர்களது பெண்வழி வாரிசுகள் பின்னர் கன்னன்குடாவுக்கு இடம்பெயர்ந்ததோடு அவர்களின் வாரிசுகளே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர நிதிநிருவாக வண்ணக்கர் பதவிக்கும் தொடர்ந்து உரித்துடையவராகின்றனர்..

வவுணதீவுப் பிரதேசக் குலவிருதுச் சிறப்புகளில் உலகநாச்சி குடியினருக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.இவர்களது குலவிருதாக எட்டுக்கால் குறிப்பிடப்படுகின்றது.

**படையாட்சிகுடி (படையாண்ட குடி)**

தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க பண்டைய மரபினரான வன்னிய சமூகத்தினரே படையாட்சியராவார். இவர்கள் ஒரு நீண்டகால வரலாற்றுக்குரியவர்கள். வடதமிழகம் (சோழநாடு) இவர்களை பெருமளவில் கொண்டுள்ளது. கடலூர், செங்கல்பட்டு, புதுவை, விழுப்புரம், சேலம் ,திருவண்ணாமலை ,தருமபுரி ,வேலூர், மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் இவர்களது ஆதிக்கமிக்க பகுதிகளாகும். சோழராட்சிக் காலத்தில் அரசு நிர்வாக பொறுப்பிலும் கி.பி. 9ம் நூற்றாண்டு முதல் சிற்றரசுப் பொறுப்புக்களிலும் தொடர்ந்து உடையார் மற்றும் பாளையக் காரர்களாகவும் தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புடன் வாழ்ந்த இவர்கள் வேற்றாரின் ஆதிக்கத்தில் தமிழகம் வீழ்ச்சி கண்டபோது சகல நிலையிலும் பெரும் பின்னடைவை நோக்கிப் பயணித்தவர்களானார்கள். கி.பி 4ம் நூற்றாண்டில் இளவரசி உலகநாச்சியின் வருகைக்கு முற்பட்டு ஏழு வன்னிச்சிமார் குடும்பங்களாக இராமநாதபுரத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்து குடியேறியதாக வரலாறுண்டு. அக் காலப்பகுதியில் பாண்டிய நாட்டிலும் வன்னியர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. மதுரை கருங்காலக் குடிக் கல்வெட்டு இதற்கு துணைநிற்கின்றது. கி.பி 10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த இராசராச சோழனின் ஈழப் படையெடுப்பில் வன்னியப் படைகளின் பெருமைபற்றி பேசப்படுவதைக் காணுகின்றோம். அது முதற்கொண்டு படையாட்சியரின் நிருவாக ஆதிக்கம் சோழராட்சிப் பகுதியில் (மட்டக்களப்பிலும்) நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது. இக் காலத்தே பெருமளவு படையாட்சியர் இங்கு வருவதற்கு அவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் இருந்தேயுள்ளன.

கி.பி 13ம் நூற்றாண்டில் கலிங்கமாகோன் மேற் கொண்ட பாரிய படையெடுப்பிலும் இவர்கள் இணைந்திருந்தாகவும் குறிப்பிடப்படுகின்றது. இவர்களது அனுபவம் வாய்ந்த நிருவாக சிறப்பே மாகோனால் உருவாக்கப்பட்ட வன்னிமைக்கு இவர்களைப் பேறுப்பேற்க வைத்தது. இதன் காரணமாகத்தான் தான்தோன்றீச்சரத்தின் நிருவாகச் செயற்பாடு எனும் பாரிய பொறுப்பு இவர்களுக்கானது. தமிழகத்தின் ஒரு பெரும் சமூகப் பிரிவு மட்டக்களப்பில் குகரோடு இணைப்புப் பெற்றதால் இங்கு ஒரு குடிப்பிரிவாக தன்னை குறுக்கிக் கொண்டது. மட்டக்களப்பு படையாட்சியர் தொடர்பாக இன்று தமிழக ஆய்வாளர்கள் பலர்





பெரும் அக்கறை கொண்டுள்ளமை அங்கு வெளிவரும் வன்னியர் தொடர்பான நூல்களிலும் சமூக ஆய்வுகளிலும் நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவர்களிடையே உப குடிகளும் வயிற்றுவார் பிரிவுகளும் பிற்பட்டு தோற்றம் பெற்றுள்ளமையை நிலாவணை வயிற்றுவார், வெல்லாவெளி வயிற்றுவார், கிரான்குளத்து வயிற்றுவார், மாங்காட்டு வயிற்றுவார், திமிலை தீவு வயிற்றுவார் என வயிற்றுவார் பிரிவுகளும் வீரியப் படையாண்ட குடி , சூரியப்படையாண்ட குடி, காரியப் படையாண்ட குடி, பெரிய படையாண்ட குடி ,சின்னப் படையாண்ட குடி என விரிவுபடுவதன்மூலம் அறிந்து கொள்ள முடியும். இவர்கள் முற்குகரின் ஒரு முக்கிய குடியினராக கருதப்பட்டு வரிசைகளையும் குலவிருதுச் சிறப்புக்களையும் இப் பிரதேசத்தே பெற்றவர்களாகின்றனர். இவர்களது குலவிருதாக பட்டிச் சங்கும் முடியெழுத்தாணியும் விளங்குகின்றன.

**பணிக்கர் குடி ( பணிக்கனார்குடி)**

பண்டைய சேர நாட்டின் பணிக்கர் சமூகத்தினரான இம் மக்கள் கி.பி 2ம் நூற்றாண்டு முதல் இங்கு வாழ்ந்தவர்களாக சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது 2ம் கஜபாகு வஞ்சிமா நகரில் இடம்பெற்ற கண்ணகி சிலை நாட்டு விழாவில் கலந்து கொண்டு திரும்பும்போது பெருமளவு சேரக்குடிகளையும் அழைத்துக் கொண்டு வந்ததை மையப்படுத்தியதாக அமையலாம். எனினும் மகாவம்சக் குறிப்புகள் சேர நாட்டிலிருந்து வந்து அரசு புரிந்த சூத்திகன் , சேனன் என்பவர்கள் பெருமளவு தமிழர்களை இங்கு குடியேற்றியதாக குறிப்பிடுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இது கி.மு. 236 - 214 ஆன காலப் பகுதியாகும். இதில் சூத்திகன் மட்டக்களப்பில் (சம்மாந்துறையில்) தனக்கென ஒரு சுற்றுலா மாளிகையினை அமைத்ததோடு மக்களையும் அங்கு குடியமர்த்தியதாக பூர்வீக சரித்திரக் குறிப்புகளும் அப் பிரதேசத் தடயங்களும் வெளிப்படுத்துகின்றன. அக்காலத்தே சேரத்தில் பெரும் வீரர்களாக விளங்கிய பணிக்கர்கள் இங்கு வந்து நிலைபெற வாய்ப்புக்கள் அதிகம் என்றே கொள்ள வேண்டும் .கேரளா ஆய்வாளர் கிருஸ்ண ஐயரும் அக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார். சேரன்தீவு (Serandiv) குறித்து அவர் விளக்குகையில் இக்கருத்துக்கு உடன்படவே செய்கின்றார். இன்றைய கேரளத்து பணிக்களது நடைமுறைகளும் செயல்பாடும் இம் மக்களை ஒத்திருப்பதை அவதானிக்க முடியும். மட்டக்களப்பு மலையர் குகநாடு என அழைக்கப்படவும் இவர்கள் காரணமாயினர். மட்டக்களப்பில்

காணப்படும் சேர நாட்டுக் கலாசாரங்கள், உணவு பழக்கவழக்கங்கள் ,மாந்தீரிக முறைகள், பேச்சு ஒலி வடிவங்கள் என்பவற்றிற்கும் இவர்களே மூலவர். சேரநாட்டிற்குரித்தான தாய் வழி மரபுப் பேணுகையை மட்டக்களப்பில் நிலை நிறுத்திய பெருமையும் இவர்களையே சாரும். மட்டக்களப்புத் தென் பிரதேசத்தில் இம்மக்கள் பரவலாகவும் ஆதிக்கம் மிக்கவர்களாகவும் வாழ்ந்தவர்கள். தாய்வழிப் பணிக்கர் குலத்தவனான எதிர்மன்ன சிங்கனின் ஆட்சிக்குப் பின் மட்டக்களப்பின் தென்பகுதி முன்னீடுகள் அனைத்தும் பணிக்கர் குடியினரையே பற்றியிருந்தது. ஒல்லாந்தரால் தலைமைப்போடி நியமனம் பெற்ற கந்தப்போடி ஆங்கிலேயர் காலத்து எதிர்மன்னசிங் வன்னியன் , சத்துருகப்போடி வன்னியன் மற்றும் செல்லையா வன்னியன் போன்றோரும் இக்குடி மரபினரே. அக்கரைப்பற்று கரவாகுப்பற்றுப் பகுதிகளின் ஊர்ப்போடிகளாக இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் கடமைபுரிந்துள்ளனர். திருக்கோவில், கோவில்போரதீவு திருப்படை ஆலயங்களினதும் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தினதும் தலைமைப் பொறுப்பினையும் இவர்களே ஏற்று நெறிப்படுத்தினர். குலவரிசைச் சிறப்புக்களில் மட்டக்களப்பின் வடபாகத்தில் இவர்கள் சற்று குறைவுபட்டு நின்றாலும் பெரியநீலாவணை தொடக்கம் பாணமையீறான தென் பிரதேசத்தில் முதன்மை பெற்றேறே உள்ளனர். இவர்களிடையே அக்கரைப்பற்று வயிற்றுவார், காரைதீவு வயிற்றுவார், கரவாகு வயிற்றுவார், நீலாவணை வயிற்றுவார், மகிளூர் வயிற்றுவார்,எருவில் வயிற்றுவார், போரதீவு வயிற்றுவார், புதுக்குடியிருப்பு வயிற்றுவார் என வயிற்றுவார் பிரிவுகள் அவானிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களது குலவிருதாக மத்துவளையம் குறிப்பிடப்படுகின்றது.

### மழவரசன்குடி (மழவர்குடி)

தமிழக ஆய்வுகளின்படி மழவர்கள் பண்டைய சேரத்தின் வன்னியர் மரபினர் எனவும் கிறிஸ்துவுக்கும் பிற்பட்டு இவர்கள் கொங்கு நாடு ஊடாக காவிரிக்கு வடமேற்கு கரையான அரியனூர் பெரம்பலூர் பகுதிகளில் (பண்டைய அரிசில் - அரியனூர்) குடியேறி விவசாயத்தை மேற்கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது. சேரத்து மழவர்கள் பெரும் போர்வீரர்களாக விளங்கியதோடு அரியனூர் மழவர்கள் வழிவந்த பாழையக்காரர்கள் சுமார் ஐநூறு ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தியவர்கள் எனத் தமிழக வரலாறுகள் விபரிக்கின்றன. இவர்கள் எந்தக் கால கட்டங்களில்





மட்டக்களப்புக்கு வந்தார்கள் என்பது குறித்து கணக்கிட முடியாவிட்டாலும் கூத்திகன் காலத்திலும் சோழராட்சிக் காலத்திலும் அதன்பின் கலிங்க மாகோன் காலத்திலும் வருவதற்கு பெருமளவு வாய்ப்பிருந்தமையை மறுப்பதற்கில்லை. மட்டக்களப்புப் பிரதேசத்தின் கண்ணகி வழிபாட்டின் தொடக்ககால ஆலயமான பட்டிநகர் கண்ணகி ஆலயத்தின் முன்னீடு இம்மரபினரையே சார்ந்திருந்தமையால் ஒரு நீண்டகாலச் சிறப்பினுக்கு இவர்கள் பாத்திரப்பட்டேயுள்ளனர். இக்குடியினர் இன்று அக்கரைப்பற்று மற்றும் பாண்டிருப்பு பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வருகின்றமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

### கச்சிலார் குடி

கச்சிலார் அல்லது கச்சியர் என்போர் வடதமிழகத்தின் காஞ்சிப் பகுதியில் வாழ்ந்த சமூகத்தினராக கருதப்படுகின்றனர். இவர்கள் சோழர்களின் படையில் சிறப்பாகப் பணியாற்றினர் என்பதனை தமிழக ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். பண்டைய காலத்தில் காஞ்சி , கச்சி என்றே அழைக்கப்பட்டது. காஞ்சி ஏகாம்பரேஸ்வரரை கச்சி ஏகம்பனே என்றே இரட்டைப்புலவர்கள் பாடினர். இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி.பி 1250 - 1276 ) பெயரில் எழுதப்பட்ட மெய்க்கீர்த்தியில் - கச்சியும் கலிங்கமும் கங்கமும்வங்கமும்- என்ற பாடல் அடிகள் தென்படுகின்றன. Kanchipuram the early south Indian history என்ற வரலாற்று ஆய்வு நூல் இவை பற்றி விரிவாக தெரிந்து கொள்ள உதவுகின்றது. கச்சியர், கச்சிலார் என்ற சமூகத்தினர் இடப்பெயர் சுட்டிய முக்கியத்துவத்தை கொண்டவர்கள். கச்சிலார் சோழராட்சியில் மட்டக்களப்பில் குடியேறி இருப்பார்கள் என்ற கருத்துக்கு வலுச் சேர்க்க சோழர் படையெடுப்பு பற்றிய குறிப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. இவர்களது குலவிருதாக வட்டச் சக்கரம் தென்படுகின்றது.

### மாதவி குடி

கோவில் போரதீவுக் கிராமத்தை சுமார் 250 ஆண்டுகள் மையப்படுத்தியதாக மாதவிகுடி அறியப்படுகின்றது. அங்கிருந்தே தேற்றாத்தீவு மற்றும் அக்கரைப்பற்று பகுதிகளுக்கு அம்மக்கள் விரிவு பட்டதாகத் தகவல்கள் உள்ளன. மாதேவி குடியே மாதவி குடியென மருவியதாக சில சமூகப் பெரியவர்கள் கள ஆய்வில் தெளிவுபடுத்தினர். பொதுவாக இவர்கள் கச்சிலா குடியினருடன் சமூக இணைப்பும் பெற்றுள்ளமையைக் காணமுடியும்.

**பெத்தான் குடி**

பெத்தான்குடி என்பது தமிழகத்தின் ஒரு மரபுவழிச் சமூகமாகக் கொள்ள எதுவித சான்றுகளும் கிடைக்கவில்லை. மாறாக மட்டக்களப்பின் ஒரு பிரதான குடியான படையாட்சி குடியின் தந்தை வழிப் பிரிவாகவே இது அமையக்கூடும் எனச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். சில இடங்களில் ஆலய நிகழ்வுகளில் படையாட்சி குடியினரும் பெத்தான் குடியினரும் ஒன்றுபட்டுச் செயல்படுவது இதற்கு ஒரு ஆதார சுருதியாக இருக்கின்றது. இன்னும் சில இடங்களில் இவர்கள் பெத்தாண்ட படையாண்ட குடி என அழைக்கப்படுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இக்குடிவழிச் சமூகத்தினர் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் பரந்துபட்டே வாழ்கின்றனர். இவர்களிடையே புதுக்குடியிருப்பு வயிற்றுவார், களுதாவளை வயிற்றுவார்,நாதனை வயிற்றுவர், சந்திவெளி வயிற்றுவார், மண்முனை வயிற்றுவார் என வயிற்றுவார் பிரிவுகள் தென்படுகின்றன. அக்கரைப்பற்றுப் பகுதியில் சங்கரப் பெத்தான் ராசகுடியும் இன்னும் சில இடங்களில் பெத்தாண்ட படையாண்ட குடியும் பெத்தான்குடியின் பிரிவுகளாக உள்ளன. இவர்களது குலவிருதாக சுளிச்சங்கு குறிப்பிடப்படுகின்றது.

**கோபி குடி (கோப்பி குடி)**

இன்று இக் குடி மரபினர் குறித்து வெவ்வேறு தகவல்கள் முன்வைக்கப்படுவதைப் பார்க்கின்றோம். மலையாள வேளாளர் எனச் சில ஆய்வாளர்களால் குறிப்பிடப்படும் இவர்கள் நிஷங்கமல்லனுடனும் இணைத்துப் பேசப்படுகின்றனர். எனினும் நிஷங்கமல்லனுக்கு எதிராக அரசுப்பதவியைப் பிடிக்க முயற்சித்த வேளாண் மரபினரான கொவிச் சமூகத்தினரை மலையாள வேளாளராகச் சீராக்கப்பட்ட இலங்கையின் வரலாற்றாவணங்கள் எவையும் தெளிவுபடுத்தவில்லை. மாறாக எஸ்.பரணவிதான போன்றவர்கள் கொவிக் குலத்தினரை சிங்கள அரச வம்சம் என்றே குறிப்பிடுகின்றனர். சிலர் இவர்களை வாய்மொழிக் கதையான ஒத்துவாரக் கந்தன் வரலாற்றை கூறி கொப்பேறு குடியே கோப்பி குடியானதென்பர். இதனை சமூகவியல் தளத்துள் இணைக்க முடியாத கருத்தாகவே கொள்ளவேண்டும். இவர்களிடையே உடையார் போன்ற பதவிகளை வகுத்தவர்கள் பற்றிய தகவல்களும்





கிடைக்கின்றன. எருவில் கிராமத்தைச் சேர்ந்த கோபிகுடி சின்னப்போடி என்பவர் இதில் குறிப்பிட்டு பேசப்படுகின்றார்.

தமிழகத்தில் வாழுகின்ற கோபி சமூகமே இதில் நமது கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. இவர்கள் கோபியர் என்றும் யாதவர் என்றும் அங்கு பேசப்படுகின்றனர். இச் சமூகத்தினர் இங்கு வந்து சமூக இணைப்புப் பெற்றிருக்க வாய்ப்புள்ளதாகையால் இது தொடர்பான தேடல்கள் அவசியமாகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் இக்குடியினருக்குரிய முக்கியத்துவம் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம், கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம் ,மண்டூர் முருகன் ஆலயம் போன்ற பண்டைய சிறப்புப் பெற்ற வழிபாட்டுத் தலங்கள் ஊடாக வெளிக் கொணரப்படுவதால் இவர்களை ஒரு விரிவுபட்ட பண்டைய குடிமரபினராகக் கொள்ள இதுவே போதிய சான்றாகும். இவர்களிடையே வீரமுனை வயிற்றுவார், நீலாவணை வயிற்றுவார் எனப் பிரிவுகள் உண்டு. இவர்களது குலவிருதாக ஆறுகால் குறிப்பிடப்படுகின்றது.

**வல்லவராயன் குடி**

இக்குடி மரபினரின் தோற்றம் பற்றி சரியான விளக்கத்தினை கள ஆய்வில் பெறமுடியாது போனாலும் இக்குடிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பெயர் காரணமாக அவற்றினது ஆளுமைத் தன்மை வெளிப்படுவதை பார்க்கின்றோம்.தமிழக ஈழ சமூகங்களும் அவற்றின் விரிவாக்கமும் என்ற எமது கட்டுரைத் தொடரில் கவனம் செலுத்திய தமிழக சமூகவியல் ஆய்வாளர் இராமகிருஷ்னன், பல்லவர் ஆட்சி சோழரால் பறிக்கப்பட்டபோது அவர்களால் பெறப்பட்ட பல்லவக் குடிகளை அல்லது படைகளை போர்க் காரணங்களுக்காகவோ அன்றேல் குடியேற்றம் காரணமாகவோ ஈழத்துக்கு கொண்டு சென்றிருக்கலாம் எனக்கருதுவதும் பல்லவராயனே மருவி வல்லவராயன் ஆகியிருக்கலாம் எனக் கூறுவதும் கவனத்தில்கொள்ளத் தக்கதே. எனினும் இது பற்றிய விரிவான தேடல் மேலும் அவசியமாகின்றது. சிலர் இவர்களை கலிங்கக் கலப்பில் வந்த சமூக பிரிவினராகவும் அடையாளப்படுத்த முனைகின்றனர்.

**தனஞ்செயன் குடி(தனஞ்சனா குடி)**

தனஞ்செயன் குடியினரை பொறுத்தவரை ஒரு படைத் தலைமையின் பால் இது சார்ந்து வந்திருக்க முடியும் என்பதே பலரது கருத்தாகவுள்ளது. சோழராட்சிக் காலத்தே படையாட்சியருடாக

இம் மரபினர் தோற்றம் பெற்றிருக்கலாம் எனக் கருதுவாருமுண்டு. மண்முனைப்பகுதியிலும் தெற்கு மட்டக்களப்பிலும் தனஞ்செயன் குடியினர் (தனஞ்சனா குடி) ஒரு முக்கியம் பெற்ற குடி மரபினராக செறிந்திருந்தமை கவனத்தில் கொள்ளத்தக்கதாகின்றது

**செட்டி குடி (சட்டிகுடி)**

செட்டி என்ற வாணிப குலத்தினரே குகவம்சத்தினரோடு இணைப்புப் பெற்று செட்டிகுடி எனப்பெயர் பெற்று அதுவே சட்டிகுடி ஆனதென இங்கு பலராலும் கூறப்படுகின்றது. வேளாளரிடையே செட்டி வேளாளர் என குறிப்பிடுவதையும் சீர்பாதர் மற்றும் கரையார் குறித்த சமூக ஆய்வுகளிலும் செட்டிகள் என்ற வாணிபர்கள் அச்சமூகங்களோடு உள்வாங்கப்பட்டிருப்பதும் தெரியவருகின்றது. பொதுவாக மட்டக்களப்பின் சமூக அமைப்புகள் இத் தன்மை வாய்ந்த ஒரு சிறப்பியல்பின் தளமாகவே அமைகின்றன. எனவே முற்குகரில் காணப்படும் செட்டிகுடி அல்லது சட்டிகுடி என்போர் தமிழகத்திலிருந்து மட்டக்களப்புக்கு வாணிபம் செய்யவந்து முற்குக சமூகத்துள் உள்வாங்கப்பட்டவர்கள் எனக் கொள்ளலே பொருத்தமானதாகும். இவர்களும் நீண்டகால பாரம்பரியத் துக்குட்பட்டே மட்டக்களப்பில் வாழுகின்றனர்.

**சிங்களக்குடி**

இக் குடி குறித்த பெயரே அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. மட்டக்களப்பு வரலாற்றில் தமிழினம் சிங்கள இனம் என்ற இனவேறுபாடு அடையாளப்படுத்தப்பட்ட காலத்துக்கு முதலே இம் மக்களிடம் திருமண உறவுகள் (சிங்கர், கலிங்கர் ,வங்கர் ) தொடர்ந்தே வந்தன. துட்டகாமினியின் தாயாரே ஒரு தமிழரசனின் (கதிர்காமம்) புதல்வியாக வெளிப்படுத்தப்படும் நிலையில் இதன் உண்மைத் தன்மையும் வெளிப்படச் செய்யும். இம்மரபுகளின் வரையறையின் போது (இது மாகோனுக்கு பிற்பட்டே அமையும்) சிங்கள - தமிழ் கலப்பின மக்கள் இக்குடிப்பெயரில் அடையாளப்படுத்தப்பட்டிருப்பர் என்பதே தெளிவாகும்.

**ஏனைய குடிகளும் வயிற்றுவாரும்**

முற்குகரில் காணப்படும் ஏனைய குடிகளும் வயிற்றுவார்களும் முன் சொன்ன குடிகளின் இடப் பெயர்வுகளை மையப்படுத்தியதாகவும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மண உறவின்பால் கிளைவிட்ட சந்ததிகளை வெளிப்படுத்துவதுமாகவே அமையும். எனினும் இவர்களும் முற்குகரை முக்கியப்படுத்திய





சந்ததியினர் (வழியினர்) என்பதே உண்மை நிலை. இதில் சிறப்பாக களுதாவளை போன்ற பழந்தமிழ் கிராமங்களில் பேனாச்சிகுடி, வள்ளிநாயகிகுடி, சுரக்காமூர்த்திகுடி, போத்திநாச்சிகுடி என வயிற்றுவார் குடிகளை அவதானிக்கமுடியும்.இதில் நாச்சி என்ற பெயர் பெண்வழிச் சிறப்பியல்பின் வெளிப்பாடாகவே கருதப்பட வேண்டியதாகும்.வள்ளிநாயகிகுடி என்பது பிற்பட்டு அக்கிராமத்தில் வந்து இணைந்து கொண்டவர்களின் பெண்வழி வாரிசுகளாகவே கொள்ளப்படுகின்றது. பொதுவாக இப்பேற்பட்ட குடிப் பிரிவுகள் மட்டக்களப்புப் பிரதேசத்தே பரவலாக அவதானிக்கப்பட்டே வந்துள்ளன.

**வேளாளர் (வெள்ளாளர்)**

வேளாளர் பண்டைய தமிழகத்தின் முக்கியத்துவமும் முன்னுரிமையும் பெற்ற மக்களாவர். இவர்களிடமிருந்தே முதலில் கோவெனும் அரசன் உருவாக்கம் பெற்றான். வேளான் நிலம் எனும் மருத நிலப்பண்பே முதலில் நாகரீகமடைந்த பண்டைய தமிழ் நாட்டினரை உருவாக்கியது. இவர்களின் விரிவாக்கம் காராளர், பிள்ளை, நாயர் என்ற பிரிவுகளையும் பண்டைத் தமிழகத்தில் தோற்றுவித்தது. இன்றைய தமிழகம் இவர்களையும் ஏற்றத் தாழ்வுகளுக்குள்ளாக்கி நாற்பதுக்கும் மேற்பட்ட படிநிலை கூறுகளையும் இவர்களிடையே தோற்றுவித்துவிட்டது. இவர்கள் மட்டக்களப்புக்கு வந்ததாக குறிப்பிடப்படும் கி.பி 1ம் நூற்றாண்டு என்பது தமிழக வேளாளரை ஒரே பிரிவுக்குள் வைத்துப்பார்த்த திணைச் சமூக காலமாகும். எனவே குறித்த காலத்தே இவர்கள் வந்ததாகக் கொள்ளின் பிரிவு நிலையற்ற ஒரே தன்மையினதாகவே அன்று இவர்கள் வந்திருக்க முடியும்.

யாழ்ப்பாண வேளாளருக்கும் மட்டக்களப்பு வேளாளருக்கும் இடையே அடிப்படையில் பாரிய வேறுபாடுகள் தென்படுவதை யாழ்ப்பாண வரலாற்று ஆவணங்களைக் கொண்டு ஒப்புநோக்க முடியும். அங்குள்ள சமூக இறுக்கத்தன்மையும் மேலாதிக்கப்படிநிலை போன்றவையும் மட்டக்களப்பு வேளாளரிடம் தென்படவில்லை. இதற்குக்காரணம் இம்மக்கள் பண்டைய தமிழகத்திலிருந்து கோவில்கடமை நிமித்தம் அரனூழியம் செய்ய வேண்டி அழைத்துவரப்பட்டமையே. பிற்பட்ட காலப்போக்கில் சிறைக் குடிகளின் கடமைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்யும் மட்டக்களப்புப் பிரதேச சிறப்பு வாய்ந்த ஒரு சமூக கடமையும் இவர்களுக்கு ஒப்புவிக்கப்படுகின்றது. இது இவர்களது

கோவில் கடமைகளிலிருந்து விரிவுபட்ட சமூகக் கடமை என்பதே சமூகவியலாளர்களது கருத்தாகும். இக்கடமைகள் வேளாளர் சமூகத்தினருக்கும் மட்டக்களப்பு நாட்டின் அதிகார நிலையில் இருந்த முற்குகரின் முக்கிய குடிப் பிரிவினருக்குமே உரித்தாக்கப்பட்டிருந்ததை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். முற்குகர் அதிகார நிலையிலிருந்தாலும் வேளாளருக்குரிய சிறப்பிடத்தை அவர்கள் கொடுக்கத் தவறியதே இல்லை .இச்சமூக கடமைகளின் வரையறை கலிங்க மாகோன் காலம் முதலே வகுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் தமிழக வரலாற்று ஆவணங்களைப் பார்க்கின்றபோது இவை சோழராட்சிக் காலம் முதலே மட்டக்களப்புக்கு வந்திருக்க முடியும் எனத் துணியலாம்.

வேளாளருக்குரிய சமூகக் கடமையின் நிமித்தம் மட்டக்களப்பு ஆட்சித் தலைவர்களால் அவர்களுக்கென பெருமளவு கோவில் காணிகள் செய்கைபண்ண வழுங்கப்பட்டிருந்தமைக்கு போதிய தெளிவான சான்றுகள் உள்ளன. மட்டக்களப்பு முற்குகர் வன்னிமை தொடர்பான ஆய்வுகளை அண்மையில் மேற்கொண்ட கலாநிதி டெனிஸ் பின்வருமாறு கூறுகின்றார்.

**"This South Indian evidence of Velalar religious connection is consistent with the traditions of Velalar settlement in the Batticaloa region, which assert that velalars were brought from India and installed as Saivite temple functionaries in perpetuity by local kings. They were not given ownership or control of the temples, but they were given responsibility for overseeing the conduct of temple ritual, and they cultivated a share of the temple lands as payment of their services."**

திருப்படைக் களஞ்சியம் என்ற பட்டயம் இவர்களை சேரர் நாயர் குலம் என்றும் பாண்டியர் பிள்ளைக்குலம் என்றும் சோழர் காராளர் வமிசம் என்றும் சிறப்புறுத்தியமையைச் சுட்டி நிற்கின்றது. சேர நாட்டில் பிராமணரின் ஆதிக்கம் நிலைபெறும் முன்னர் நாயர் முக்கிய சமூகத்தினராகப் பரவியிருந்தமை அங்குள்ள வரலாறுகளால் உணரப்படுவதாகும். பாண்டிய நாட்டு வேளாளரிடையே பிள்ளைக் குலத்தினரும் சோழநாட்டில் காராளரும் சமூகநிலையில் மதிக்கப்பட்டே வந்துள்ளனர். எனவே கோவில் கடமைகளுக்காக இங்கு அழைத்துவரப்பட்ட வேளாளர் பிராமணரின் ஆதிக்கத்தன்மை நிலைநிறுத்தப்படுவதற்கு முன்னர்





இருந்தே உயர்நிலை பேணிய சமூகத்தினர் என்பதை மறுக்க முடியாது.

இவர்களது முதல் வரவு திருக்கோவில் ஆலயத்தோடு தொடர்புபட்டதாக அமைகின்றது. கி.பி 1ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர்கள் கோரக்களப்பில் குடியமர்த்தப்பட்டதாக மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் விபரிக்கின்றது. கோரக்களப்பு திருக்கோவிலை அண்மித்த பகுதியாகும். ஆரம்பத்தில் இவர்களை கோரக்களப்புக் குடியினர் என அழைத்ததாக அப்பகுதிப் பெரியவர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். இப்பெயர் கொண்ட ஒருகுடியினர் அப்பகுதியில் வாழுவதை நம்மால் அவதானிக்க முடியும். மாகோனின் வரையறையில் இவர்கள் கண்டன்குடி, சருகுபில்லிக்குடி, கட்டப்பத்தன்குடி, கவுத்தன்குடி, அத்தியாயன்குடி, பொன்னாச்சிகுடி, வைத்திகுடி என ஏழு குடிகளாக வகுக்கப்பட்ட பின்னர் கண்டன் குடியினர் திருக்கோவில் ஆலயக் கடமைகளுக்கு உரியவர்களாக்கப்பட்டு தம்பிலுவில்லில் குடியமர்த்தப்பட்டனர். ஆதன் பின்னர் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தில் கடமை செய்வதற்காக அத்தியாகுடி மற்றும் வைத்தி குடியினர் (வச்சினாகுடி) அழைத்துவரப்பட்டு பழுகாமத்தில் குடியமர்த்தப்பட்டனர்.

மேலும் வேளாளரின் தென்னிந்திய வரவான வெவ்வேறு சம்பவங்கள் மட்டக்களப்புப் பூர்வீக சரித்திரத்தில் இடம்பெறாது போனாலும் ஆதாரப்படுத்தப்பட்ட வாய்மொழித் தகவல்களின் அடிப்படையில் நமக்குக் கிடைக்கின்றன. களுவாஞ்சிக்குடியில் பெரிய கவுத்தன் குடி மற்றும் சின்னக் கவுத்தன் குடியினரும் குருக்கள் மடத்தில் செட்டி வேளாளரும் சித்தாண்டியில் புதூர் வேளாளரும் இதில் அடங்குவர்.

தென்னிந்தியாவிலிருந்து பெரிய கவுத்தன், சின்னக்கவுத்தன், எனும் இரு சகோதரர்கள் தங்கள் குடும்பத்துடன் அவர்களது குல தெய்வமான வீரபத்திர சுவாமியின் விக்கிரகத்தையும் சாமணிக்கை எனும் வாத்தியக் கருவியையும் தங்களுடன் எடுத்துக்கொண்டு மட்டக்களப்புக்கு வந்ததாகவும் களுவாஞ்சிக்குடியே பொருத்தமான இடமாக தென்பட்டதால் அங்கே வீரபத்திர சுவாமியை வைத்து வழிபாடு இயற்றி வந்ததாகவும் மாகோன் காலத்தே இவர்கள் கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயக் கடமைகளுக்காக இணைக்கப்பட்டதாகவும் இவர்களின் சந்ததியினரே களுவாஞ்சிக்குடியில் பெரியகவுத்தன் குடியினர், சின்னக்கவுத்தன்

குடியினர் என்ற குடிப்பெயரில் அழைக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. கோரக்களப்பு கவுத்தன் குடியினர் மண்டூருக்கு வருவதற்கு முன்னர் களுவாஞ்சிக்குடி கவுத்தன் குடியினரின் தோற்றுவாய் தென்படுவது தெரிகின்றது. மண்டூர் ஆலயத்தில் வேளாளர் கடமை ஏற்பதற்கு முன்னரே கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் களுவாஞ்சிக்குடி கவுத்தன் குடியினர் கடமையாற்றினர். இவர்கள் வழிவந்த அலையப்போடி மற்றும் சிதம்பரப்போடி வயிற்றுவாரே களுவாஞ்சிக்குடி வயல்களுக்கு உரித்துடையவராயினர். பிற்பட்ட காலத்தே களுவாஞ்சிக்குடி பட்டணக்குடியினருக்கு கோவில்போரதீவு ஆலயச் சமூகப் பங்களிப்பு நாதனை வன்னிமையால் வழங்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இதேபோன்றே குருக்கள்மடம் சார்ந்த செட்டி வேளாளரும் சித்தாண்டிப் பகுதியிலுள்ள புதூர் வேளாளரும் தென்னிந்தியாவிலிருந்து தனித்தனியாக வந்தவர்களாக அறிமுகமாகின்றனர்.

கவுத்தன் குடிசார்ந்த ஏனைய பிரிவினர் கோரக்களப்பு வேளாளரைச் சார்ந்து அமைபவர்களாக உள்ளனர். ஒரே குடும்பத்தைச் சார்ந்த மூன்று கவுத்தன் குடிச் சகோதரிகளில் மூத்தவர் திருமணத்தின் பின் பண்டைய செங்கல்படை என அழைக்கப்பட்ட காரைதீவில் குடியிருந்ததாகவும் இரண்டாவது பெண் திருமணம் முடித்து குழந்தை குட்டிகளுடன் இருந்த நிலையில் மண்டூர் ஆலயக்கடமைகளுக்காக அழைத்துவரப்பட்டபோது தனது தங்கையையும் உடன் கூட்டி வந்ததாகவும் பின்னர் தங்கையை பழுகாமத்து வைத்தியா குடியைச்சேர்ந்த தம்பிப்பிள்ளை என்பவருக்கு திருமணம் செய்து பழுகாமத்தில் குடியிருந்ததாகவும் கூறப்படுகின்றது. மண்டூர் ஆலயத்தைப்பராமரித்தவர்கள் கொக்கட்டிச்சோலை மற்றும் கோயில்போரதீவு ஆலயங்களில் நடைமுறையில் உள்ளதான வேளாளரின் பங்களிப்புச் சிறப்பு தங்களுக்கும் வேண்டுமென நாதனை வன்னிமையில் முறையிட்டபோது அதனை ஏற்றுக்கொண்ட வன்னியன் கோரக்களப்பிலிருந்து இவர்களை அழைத்துவந்ததாக மண்டூர் தகவல்கள் கூறுகின்றன. இதன்பின் காரைதீவில் குடியிருந்த முதல் பெண்ணின் வாரிசுகள் காரைதீவுக் கவுத்தன் குடியெனவும் மண்டூரில் குடியேறிய இரண்டாம் பெண்ணின் வாரிசுகள் மண்டூர் கவுத்தன் குடியெனவும் பழுகாமத்தில் வாழ்ந்த இளைய பெண்ணின் வாரிசுகள் பழுகாமக் கவுத்தன் குடியினர் எனவும் அழைக்கப்படலாயினர்.





மண்டூர் கவுத்தன் குடியினரும் பழுகாமம் கவுத்தன் குடியினரும் மண்டூர் ஆலயக் கடமைகளுக்காக தொடர்ந்து நியமிக்கப்பட்டு வந்துள்ளனர்.

பிற்பட்ட ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் தமக்குச் சார்பானவர்களை அவர்கள் வன்னியர்களாக நியமித்தபோது ஆலய நடைமுறைகளும் சிற்சில மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டன. இதுவே பண்டைய நடைமுறைகளிலிருந்து சில வேறுபாடுகளை திருப்படைக் கோவில்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு வழிவகுத்தது எனலாம்.

மட்டக்களப்பு சமூகத் தளத்துள் வேளாளரிடையேயும் முற்குகரைப் போன்று சிங்களக் குடியொன்று தோற்றம் பெற்றிருப்பதைப் பார்க்கின்றோம். இது சிங்கள சமூகத்துடன் இவர்களுக்கு ஏற்பட்ட திருமண உறவின்பாற்பட்டதேயாகும்.

மண்டூர்ப் பகுதியில் வாழுகின்ற சோனக வேளாளர் என்ற ஒரு குடிப்பிரிவினர் நமது கவனத்தை ஈர்க்கின்றனர். மிகவும் முன்னேறிய குடிப்பிரிவினரான அம்மக்கள் குறித்து சிலர் அண்மைக் காலமாக விவாதித்து வந்துள்ளனர். இது தொடர்பாக மண்டூர், வெல்லாவெளிக் கிராமங்களில் வயோதிபப் பெரியவர்கள் தந்த பெறுமதி மிக்க தகவல்களின் அடிப்படையில் அதனோடு தொடர்புபட்ட மண்டூர், பழுகாமம், மண்முனைப்பகுதி, ஆரையம்பதி, காத்தான்குடி போன்ற இடங்களில் நாம் மேற்கொண்ட கள ஆய்வு சுவையானதும் பயனுள்ளதும் அனுகூலம் மிக்கதுமான பின்வரும் முடிவொன்றைக் காண எமக்குப் பெரிதும் உதவியது.

அன்றைய நிலையில் மட்டக்களப்புப் பிரதேசம் எங்கும் பொதுவாக திண்ணைப் பள்ளிகளே அமைந்திருந்தன. ஒரு சில இடங்களில் போர்த்துக்கேயரின் மிசனறிப்பள்ளிகள் நடைபெறலாயின. திண்ணைப் பள்ளிகளில் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்களே கல்வி போதித்தனர். இந்த நிலையில் யாழ்ப்பாணம் மட்டுவிலில் இருந்து வந்த ஒரு இளம் ஆசிரியர் தம்பதியினர் மகிழடித்தீவில் தங்கி அப்பகுதிக் கிராமங்களில் கல்வியைப் போதித்தனர். அங்கு வியாபார நோக்கில் வரும் காத்தான்குடி முஸ்லீம்கள் சிலர் அவர்களை அணுகி தங்கள் கிராமத்திற்கு வந்து தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வி போதிக்குமாறு வேண்டினர். மகிழடித்தீவில் அவர்கள் தங்கியிருந்த வீட்டின்

போடியாரும் (இவரது பெயர் வேலாப்போடி என அறியப்படுகின்றது) கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் காத்தான்குடிக்குச் சென்றனர். அன்றைய சூழலில் காத்தான்குடியும் ஆரைப்பற்றையும் பிரிவுபட்டதாக அமைந்திருக்கவில்லை. தீர்வைத் துறைக்கும் பரமநயினார் கோயிலுக்கும் இடையில் ஓலைக்கொட்டிலால் ஒரு திண்ணைப்பள்ளி அமைக்கப்பட்டு சோனகப்பிள்ளைகளுக்கு அங்கு பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் இவர்களது ஒரே பெண் குழந்தையும் அப்பிள்ளைகளுடனேயே படிக்கலாயிற்று. இதனிடையே அங்கு நீண்டகாலம் தங்கியிருந்த யாழ்ப்பாண ஆசிரியர்களை பக்கத்தூர்க்காரர்கள் சோனக வாத்தியார், சோனக வாத்தியம்மா என அழைக்கத் தொடங்கினர். இக்காலத்தில் பழுகாமத்தைச் சேர்ந்த ஒருவர் காணித்தோம்பு எழுதும் வேலையில் இருந்தார். ஆரையம்பதி காத்தான்குடிப்பகுதிக்குச் செல்லும் இவர் ஆசிரியரின் வீட்டிலேயே தங்குவார். இதன் காரணமாக ஆசிரியரின் மகளை தனது உறவினரான மண்டூர் கவுத்தன் குடியைச் சேர்ந்த ஒருவருக்கு மணம் செய்து வைத்தார். இப்பெண்ணை மண்டூர்க்காரர்கள் சோனகப்புள்ள என அழைக்கலாயினர். அதன் அடிப்படையில் அப்பெண்ணின் வாரிசுகள் சோனக வேளாளர் என்ற பெயரைப் பெறலாயினர். கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் இவர்கள் யாழ்ப்பாணம் மட்டுவில் வேளாளருக்கும் மண்டூர் கவுத்தன்குடி வேளாளருக்கும் உரிய வாரிசுகள் என்பதே அதன் முடிவாக அமைந்தது

மண்டூர் ஆலயத்தைப் பொறுத்த வரையில் அங்குள்ள சமூகங்களுக்கு வரிசைகளும் மற்றும் பூசை முறைகளும் வழங்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்னரே இக்குடியினர் உருவாக்கம் பெற்றதால் ஆலய நடைமுறைகளில் இவர்களுக்கு என உரிய பங்களிப்பினைப் பெறமுடியவில்லை. இத்தகவல்கள் சமூகவியல் ஆய்வு ரீதியில் இசைவுபடத்தக்க ஒன்றாகவே அமைகின்றது.எனினும் இன்னுமோர் கருத்தும் இங்கு நிலைநிறுத்தப்படவே செய்கிறது. மண்டூர் கந்தசுவாமி ஆலயம் தொடர்பில் அமெரிக்காவின் பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் பேராசிரியர் மார்க் பி விற்றாகர் மேற்கொண்ட ஆய்வுகளில் **(East Coast Sri Lankan Tamil Temple)** பெறப்பட்ட தகவல்கள் இங்கு முக்கியத்துவம் பெறவேசெய்கின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் தாய்வழி மரபே பேணுவதெனவும் மண்டூர் சோனக வேளாளர் தாய்வழியில் முஸ்லிம் மரபுக்குரியவராவதால் சைவ ஆலய நடைமுறைகளில்





உரிமைகோரமுடியாதவர்களாகின்றனர் எனவும் ஆலயத்தின் உரித்துடைய சமூகத்தினர் (சீர்பாதர்) சார்பில் கூறப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார். பொதுவாக நோக்குமிடத்து இக் குடிவழியினர் தொடர்பான நமது கருத்துக்களும் பேராசிரியர் மார்க் விற்றாகரின் குறிப்புகளும் மீளாய்வுக்குரியனவாகவே அமையும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் இன்னும் சில பகுதிகளில் வேளாளர் என்போர் வேறுபல குடிப் பெயர்களையும் கொண்டவர்களாய் உள்ளனர். இது வேறு சமூகப் பிணைப்பு, வயிற்றுவார் தொடர்புபட்ட வழி, மற்றும் இடப்பெயர் சுட்டும் நிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டமைவது தெரிகின்றது. வந்தாறுமூலை மற்றும் சித்தாண்டிப் பகுதிகளிலும் இது போன்ற தன்மையை பரவலாக அவதானிக்க முடியும். சித்தாண்டி, வந்தாறுமூலைப் பகுதிகளில் தொடக்க காலத்தைக் கொண்ட அத்தியாகுடி வேளாளருடன் வன்னியாகுடி, புதூர்க்குடி, பரமக்குட்டிக்குடி, கங்காணிப்போடிகுடி, பட்டியன்குடி, சந்தாப்பணிக்கன்குடி, நாட்டூர்க்குடி, கலிங்கன்குடி போன்ற குடி மரபினர் தங்களையும் வேளாளர் சமூகமாகவே அடையாளப்படுத்துகின்றனர். வன்னியர், கலிங்கர், பணிக்கரின் சமூக உள்வாங்கலின் வெளிப்பாடாக இது குறித்த மூன்று குடிகளையும் சமூக ஆய்வில் வெளிப்படுத்தலாம். தேற்றாத்தீவு போன்ற கிராமங்களில் தென்படும் ஒப்பிலி குடியினர் தங்களை வேளாளர் எனக் குறிப்பிடுவது பிற்பட்டு வந்த சமூக வெளிப்பாட்டினை அல்லது வயிற்றுவார் ஊடான வெளிப்பாட்டினைக் கொண்டதாக கருதமுடியும். சிற்றாண்டிப் பகுதி புதூர் குடியினர் தாங்கள் தமிழகத்தின் புத்தூர் வேளாளர் எனக்கூறுவதும் சமூகவியலாளர்களின் கவனத்தை ஈர்ப்பதாகும். பொதுவாக மட்டக்களப்புப் பிரதேசச் சமூகத்தளம் இவ்வாறே கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

மண்டூர் போன்ற இடங்களில் காணப்படும் பிராமணக் குடியினரும் களுவாஞ்சிக்குடி பட்டணக் குடியினரும் நம் கவனத்தை ஈர்ப்பவர்களாக உள்ளனர். பட்டணக் குடியினர் சார்பில் நாம் மேற்கொண்ட கள ஆய்வு முக்கியத்துவம் பெற்றதாகும்.நாதனை வன்னியனின் ஆட்சிக் காலத்தில் களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டிருந்த போது அதனைப் பார்வையிடவந்த வன்னியன் அங்கே கதிர்காமப் பயணம் மேற்கொண்டிருந்த யாழ்ப்பாணக் குழுவினில் ஒரு அழகிய கன்னிப்பெண் இருந்ததாகவும்

அவளைக் கண்டு ஆசைகொண்ட வன்னியன் நாதனை வன்னிச்சிக்குத் தெரியாமல் அவ்வழகியை தாரமாக்கி பின் அவளை நாதனைக்கு அழைத்துச் செல்லாமல் களுவாஞ்சிக்குடியில் அமர்த்தியதாகவும் அப்பெண்ணின் வாரிசுகள் பட்டணக் குடியினர் எனும்பெயரைப் பெற்றதாகவும் வன்னியன் அவர்களுக்கு காணிபூமிகள் வழங்கியதோடு கோவில்போரதீவு ஆலயத்திலும் முன்னீட்டு உரிமை கொடுத்ததாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.

பிராமணக் குடியினர் தங்களைப் பிராமணர் சமூகத்தவர்களாகவே அடையாளப்படுத்துகின்றனர். இவர்கள் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை வழிந்தவர்களாக குறிப்பிடும் நிலையில் மட்டக்களப்பின் பண்டைய சிவப்பிராமணர் சார்ந்தவர்களாகக் கருதக்கூடிய தகவல்களும் பெறப்படவே செய்கின்றன. வேளாள சமூகத்தினருக்கு அவர்களுக்கு உரித்தான மேழியே (ஏர்) குலவிருதுக் குறியாக வழங்கப்பட்டுள்ளமை இப்பிரதேசத்தின் ஒரு சிறப்பம்சம் என்றே குறிப்பிட வேண்டும்.

**அந்தணர் (சிவப்பிராமணர்)**

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பண்டைய குடியேற்றங்களில் ஒன்றாக அந்தணர் குடியேற்றமொன்று இடம்பெற்றுள்ளமை போதிய சான்றுகளால் தெளிவாகின்றது. இவர்கள் பண்டைய பரந்த கலிங்கத்தின் பகுதியான சிறிசைலஜம் - மல்லிகார்ச்சுனம் போன்ற இடங்களிலிருந்து(இன்றைய ஆந்திராப் பகுதி) வந்தவர்களாக கொள்ளப்படுகின்றனர். மட்டக்களப்பு பிரதேச பண்டைய ஆலயங்களில் ஒன்றாக கருதப்படும் கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) சித்திவிநாயகர் ஆலய தலபுராணத்தில் கலிபிறந்து 2840(கி.மு.260) கலிங்கருடன் இவர்கள் வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. நமது களஆய்வில் பெறப்பட்ட தகவல்களின்அடிப்படையில் தென்னிந்தியாவிலிருந்து கி.பி. 1ம் நூற்றாண்டில் திருக்கோவில் ஆலயத்துக்காக கொண்டுவரப்பட்டு தம்பட்டையில் கால்பதித்த பரத்துவாச வம்மிசம், அத்திரி வம்மிசம், காசிப வம்மிசம் ஆகிய முனிவர்கள் வழிவந்த பட்டர் குடும்பங்களைப் பற்றியதாக இவர்களது வரவு அமைகின்றது. இவர்களது சந்ததியினர் முன்னர் குமுக்கன் ஆற்றுக் கரையினும் பின்னர் கருங்கொடித்தீவின் தில்லைநதிக் கரையிலும் குடியிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதன்பின்னர் இவர்கள் திருக்கோவில் ,தம்பிலுவில், அக்கரைப்பற்று, பனங்காடு போன்ற





இடங்களில் வாழத்தொடங்கினர். மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் கி.பி 1ம் நூற்றாண்டை மையப்படுத்தியதாக கூறும் கருத்துக்களும் இங்கு ஒப்புநேக்கத்தக்கவை.

பண்டைய மட்டக்களப்பில் சிவவழிபாட்டை முக்கியப்படுத்திய சில ஆலயங்கள் பின்னர் விநாயகர் வழிபாட்டினை முதன்மைப்படுத்தி மாற்றமடைந்துள்ளமை வரலாற்றில் குறிப்பிடப்பட்டதாகும். கி.பி. 6ம் நூற்றாண்டுக்குப் பின்னர் இதே நிலமை தமிழ் நாட்டிலும் உருவாகியுள்ளது. வடக்கு மடடக்களப்பில் அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைப் போல தெற்கு மட்டக்களப்பில் அக்கரைப்பற்று ஆலயத்தைக் குறிப்பிடலாம். இவ்வாலயத்தின் வரலாறும் வழிபாட்டியலும் தனியாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இங்கு இவ்வந்தணர் பரம்பரையே பூசை புனற்காரியங்களை மேற்கொண்டிருந்தது. பரம்பரை வழியில் வந்த முப்பது குருமார் பற்றிய விபரம் இவ்வாலய ஆவணங்களிலிருந்து நம்மால் பெறமுடிகின்றது.

01.சிவப்பிரகாசப் பட்டர்
02.ஞானப்பிரகாசப் பட்டர்
03.சங்காரசிவப் பட்டர்
04.நல்லதம்பிப் பட்டர்
05.கணபதிக் குருக்கள்
06.குமாரவேஹ ஐயர்
07.தில்லைநாதக் குருக்கள்
08.சதாசிவ ஐயர்
09.மாணிக்கக் குருக்கள்
10.சரவணக் குருக்கள்
11.பத்தினிக் குருக்கள்
12.சிவலிங்கக் குருக்கள்
13.பழனிக் குருக்கள்
14.கந்தசுவாமிக் குருக்கள்
15.கார்த்திகேசக் குருக்கள்
16.சரவணமுத்துக் குருக்கள்
17.முருகேசக் குருக்கள்
18.பாலநாதக் குருக்கள்
19.தில்லைநாதக் குருக்கள்
20.நல்லதம்பிக் குருக்கள்
21.ஆறுமுகக் குருக்கள்
22.சிவஞானக் குருக்கள்

23.பொன்னுத்துரைக் குருக்கள்
24.முருகேசக் குருக்கள்
25.பொன்னம்பலக் குருக்கள்
26.லோகநாதக் குருக்கள்
27.கணபதிக் குருக்கள்
28.விநாயகமூர்த்திக் குருக்கள்
29.லிங்கநாதக் குருக்கள்
30.சிவஞானசெல்வக் குருக்கள்

இங்கு கிடைக்கின்ற வேறுசில தகவல்கள் இவர்களை குருலிங்க சங்கமர் என அடையாளப்படுத்துவதாலும் இவர்கள் சிவசிறியை முன்நாமமாகக் கொண்டுள்ளதாலும் தங்களை இவர்கள் சிவப்பிராமணர்களென வெளிப்படுத்துவதாலும் இவர்களைப் பண்டைய தமிழகத்தின் அந்தணர்களெனக் கொள்ளப்பட்ட சமூகப்பிரிவிற்குள் கொண்டு வருதல் பொருத்தமாகப்படுகின்றது. கரூர், பழனி, கொடுமுடி போன்ற தமிழகத்தின் பகுதிகளிலும் கேரளத்திலும் இவர்களது தொடர்பு பற்றி அறியமுடிகின்றது. இவர்கள் தற்போது இருபாகைக் குருமார்கள் என அழைக்கப்படுவது மாகோன் காலத்துக்குப் பின்னரே ஏற்பட்ட நிலைமையாக இருக்க முடியும். திருமணத் தொடர்பினை முக்கியப்படுத்தியதாகவே இது அமைகின்றது. இம்மக்கள் வைத்தியம், ஆரூடம், மாந்திரீகம், மனையடி சாத்திரம் போன்றவற்றிலும் சிறந்து விளங்குகின்றனர். இவர்களது குலவிருதாக சூலமும் பூநூலும் குறிப்பிடப்படுகின்றது.

**கரையார்**

கரையோரப் பகுதியை வாழ்விடமாக்கிய மக்களே கரையார் என அழைக்கப்பட்டனர். தமிழகத்தில் கரையோரச் சமூகங்களாக அடையாளப்படுத்தப்படும் மீனவர், பரவர், முக்குவர் போன்ற நெய்தல் நில மக்களாகிய இவர்கள் முத்துக்குளித்தல், சங்கெடுத்தல், கிளிஞ்சல் பொறுக்குதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களில் நீண்டகால ஈடுபாட்டினைக் கொண்டிருந்தனர். மருதநில மக்களின் நாகரீக வளர்ச்சி உள் கட்டமைப்பின்பால் செல்ல நெய்தல் நில மக்களின் நாகரீக வளர்ச்சி வெளிக்கட்டமைப்பின் பால் நிலைபெறலானது. கடற்பயணங்கள், நாடுகளுக்கிடையிலான வர்த்தக, போர் நடவடிக்கைகள், அயல்நாட்டு இடப்பெயர்வுகள் என உலகம் விரிவுபட்டபோது இம்மக்களின் செயற்பாடுகளும் விரிவுபடலாயின. துறைமுக நகரங்களும் வாணிப நகரங்களும் தோற்றம் பெற்றதும் இம்மக்களே விரைவான நாகரீக வளர்ச்சி





கொண்டவர்களாயினர். கடற்பயணங்கள் மற்றும் கடற்போர் நடவடிக்கைகளில் இவர்களே சக்தி மிக்கவர்களாயினர். நாடுகளின் புலம்பெயர் நடவடிக்கைகளிலும் இத்தன்மையே வியாபித்து நிற்கின்றது.

மட்டக்களப்பில் குடியேறிய இம்மக்கள் தொடக்காலத் தொழிலாக மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களை மேற்கொண்டவர்களாக இருந்தாலும் காலப்போக்கில் சமூகநிலையில் முன்னேறிய சமூகமாக உயர்ந்தனர். சிறப்பாக கல்வித் துறையில் எல்லா வாய்ப்புக்களையும் பெற்ற சமூகமாக இவர்கள் நிலைபெறலாயினர். வாழைச்சேனை, அமிர்தகழி, கல்லடி, ஆரைப்பற்றை, கல்லாறு, துறைநீலாவணை, திருக்கோவில் போன்ற பகுதிகளில் பரவி வாழும் இவர்கள் தொடக்க காலத்தே ஆரைப்பற்றை (ஆரையம்பதி) தீர்வைத் துறையில் வந்திறங்கி அங்கு நிலைபெற்றனர் என்றே பரவலாகக் கூறப்படுகின்றது. இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்களா? அல்லது பண்டைத் தமிழகத்திலிருந்து வந்தவர்களா என்பது குறித்த தகவல்களுக்கிடையில் இவர்களிடையே காணப்படும் குடிப்பிரிவுகளைச் சான்றுப்படுத்தியும் கள ஆய்வில் பெறப்பட்ட இச்சமூகப் பெரியவர்கள் மற்றும் அறிஞர்களினது வலுவான சான்றுகள் கொண்டும் இவர்கள் பண்டைய தமிழகத்திலிருந்து வந்திருக்க முடியும் என கருத முடிகின்றது. வாகரை போன்ற பகுதிகளில் வடமராட்சி கரையார் சமூகத்தொடர்புகள் அவதானிக்கப்பட்டாலும் அது பிற்பட்ட காலத்தைக் குறிப்பதாகவே உள்ளது. ஆரையம்பதி பல்வேறு சமூகங்களின் கூட்டுக் கிராமமாக இருந்தாலும் கரையார சமூகத்தினரே பெரும் எண்ணிக்கையினராகவும் ஊரை அடையாளப்படுத்தும் பண்டைய சமூகத்தினராகவும் இருக்கின்றனர். கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரத்திலும் திருக்கோயில் மற்றும் மண்டூர் ஆலயங்களிலும் இவர்களுக்கு அளிக்கப்பட்ட கடமைகளும் சிறப்புக்களும் இவர்களது முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக அமையும். இவர்கள் கி.பி 2ம் நூற்றாண்டு அளவில் இங்கு வந்ததாக இவர்களது சமூகப்பெரியவர்களால் சில தகவல்களை சான்றுபடுத்திக் கூறப்பட்டாலும் கலிங்கமாகோன் ஆட்சிக்கு முற்பட்ட மட்டக்களப்பு சமூகமாக இவர்களைக் கருத முடியும்.

இதனிடையே சில சமூக ஆய்வாளர்கள் கரையார் சமூகம் என்பது பண்டைய நாகர் சமூகத்தின் பிரிவான குருகுல நாகர்

எனக்கருதவும் செய்கின்றனர். இதே கருத்தினை திருகோணமலை, தம்பலகாமம், குச்சவெளி பகுதியில் நம்மால் அவதானிக்க முடிந்தாலும் அப்பிரதேச மக்களுக்கும் இவர்களுக்கும் பாரம்பரிய தொடர்புகள் இருப்பதாக அறியமுடியவில்லை. எனினும் அமிர்தகழிப் பகுதியில் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் தொடக்க காலத்தே இங்கு வாழ்ந்தவர்கள் குருகுலக்கரையார் என்றே கொள்ளப்பட்டனர் எனவும் வேறு தொழிற்பிரிவு சமூகத்தினர் சிலர் பிழைப்பு நிமித்தம் இங்கு வந்து மீன் பிடித் தொழிலை மேற்கொண்டமையும் இவ்வாறு நுழைந்தவர்கள் நுழக்கரையார் எனப் பின்னர் அழைக்கப்பட்டமையும் காலப்போக்கில் இச்சமூகங்கள் ஒன்றையொன்று உள்வாங்கிக் கொண்டமையும் கள ஆய்வில் தெரிய வருகின்றது. இச்சமூகத்தில் வைத்தி வேலன்குடி, கம்பிளியார்குடி, ஆறுகாட்டியார்குடி, போற்றிக்குடி, வீரமாணிக்கன் குடி, முதலித்தேவன்குடி, விசிறிப்பத்திநாச்சி குடி என ஏழு குடிகள் மட்டக்களப்ப பூர்வீக சரித்திரத்தின் மூலம் அடையாளப் படுத்தப்பட்டாலும். வங்காளக் குடி, அலறித்தேவன் குடி, சம்மானோட்டி குடி, சிறப்பினார் குடி போன்ற மேலும் குடிப்பிரிவுகள் விரிவுபட்டு இருப்பதை அவதானிக்கமுடியும்.

பண்டைய வரலாற்றுச் சான்றுகள், இம்மக்களின் வாழ்க்கை முறை மற்றும் வழக்காறுகள், இச்சமூகத்தின் மூத்த அறிஞர்கள் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன கொண்டு பார்க்கின்றபோது இவர்கள் தொடர்பான சிந்தனைகள் மென்மேலும் அகலிக்கின்றன. இவர்களது குடிப்பெயர்களும் தொடக்க நிலைக்காரணிகளும் இவர்கள் மட்டக்களப்புக்கு ஒரு தனிப்பட்ட மீனவர் சமூகமாக வந்தவர்கள் அல்லர் என்பதுவும் தாங்கள் அழைத்துவந்த சில சமூகக்கூறுகளை தங்களுக்குள் உள்வாங்கிக் கொண்டவர்கள் என்பதுவும் புலனாகின்றது. இவர்களிடையே காணப்படும் சமூகக்கூறுகள் சங்ககால திணைவழிச் சமூகங்களின் தோற்றப்பட்டினை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

இதில் சம்மானோட்டி குடி, வங்கக் குடி(வங்காளக் குடி), ஆறுகாட்டியர் குடி ஒரு பிரிவினராகவும் முதலித்தேவன் குடி அலறித்தேவன் குடி, அருமைத்தேவன் குடி இன்னோர் பிரிவினராகவும் வைத்திவேலன் குடி, வீரமாணிக்கன் குடி, கம்பிளியார் குடி, சிறப்பினார் குடி, விசிறிப்பத்திநாச்சி குடி மற்றும் குடிகள் வேறொரு பிரிவாகவும் வைத்து ஒரு சமூகவியல் ஆய்வினை மேற்கொள்ள முடியும்.





இதில் முதல்பிரிவுக் குடிகள் நீர் நிலைகளொடு நேரடியாகச் சம்பந்தம் உள்ளவர்கள்பால் தென்படுவது அவதானிப்புக்குள்ளாகின்றது. இவர்களில் தோணி மற்றும் மரக்கலங்களை செலுத்துபவர்களும் வழிகாட்டி வந்தவர்களுமே பொதுவாக அடங்குவர். இரண்டாம் பிரிவு இவர்களது கடற்பயணத்தில் பாதுகாப்புக்கு வந்தவர்களை (மறவர்கள்) குறிப்பதாக உள்ளது. மூன்றாம் பிரிவு வீரமாணிக்கன் தலைமையேற்றவனாகவும் வைத்திவேலன் இவர்களுடன் வந்த மருத்துவராகவும் கொள்ள வழிபிறக்கின்றது. இதனடிப்படையில் பார்த்தால் இவர்கள் குடியேற்ற நோக்கில் ஒரு குழுவாக தோணிகள் கட்டுமரங்கள் போன்றவற்றில் வந்து இங்கு குடியேறியவர்களாகக் கொள்ளமுடியும். மண்முனையை உருவாக்கிய உலநாச்சியுடன் இவர்கள் இணைத்துப் பேசப்படுவதால் கி.பி 400 - 420 ற்கு இடைப்பட்ட காலமாக இவர்களது வரவைக் கொள்ளவும் வாய்ப்புண்டு.

இம்மக்களின் சிலர் கேரளதத்தில் (சேரநாடு) ஆலப்புளா, மலபார் பகுதிகளிலிருந்தும் சிலர் பாண்டிய நாட்டின் இராமநாதபுரம் பகுதியிலிருந்தும் வந்தவர்கள் எனவும் சொல்லப்படுவது மேலும் ஆர்வதத்தை தூண்டுவதாகவுள்ளது. ஆலப்புளையிலிருந்து பிற்பட்டு வந்து சமூக இணைப்புப் பெற்ற மக்களின் சந்ததியினர் ஆரையம்பதிப் பகுதியில் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இராமநாத புரத்தைச் சார்ந்தவர்களை முதலித்தேவன் அலரித்தேவன் போன்றவர்கள் எனக் கொள்ளலாம். இவர்களைத் தேவர் (முக்குலம) சமூகத்தைச் சார்ந்தவர்களாக கருதமுடியும். ஆறுகாட்டிக் குடியார் தொடர்பாக யாழ்ப்பாண வரலாற்றுத் தகவல்கள் கவனத்திற் கொள்ளப்படத்தக்கதாகின்றது. ஆறுகாட்டி மலையாளத்தவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்ததாக அவை கூறுகின்றன. எனவே இவர்களையும் சேரத்துக்கு குடியினர் எனக் கொள்ள முடியும். மட்டக்களப்பு மான்மியம் இவர்களது குல விருதாகத் தோணியையே குறிப்பிடுகின்றது. பிற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆரையம்பதியைச் சேர்ந்தவரான சோமநாதன் என்பவர் பிரதேச வன்னியனாகக் கடமையாற்றிய தகவலும் வரலாற்றில் பதிவு செய்யபட்டுள்ளது.

**சீர்பாதர்**

சீர்பாதர் எனப்படும் சமூகத்தினர் சோழநாட்டிலிருந்து நேரடியாக மட்டக்களப்புக்கு வந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரையில் சீர்பாதர் என்ற ஒரு சமூகம் அங்கு உள்ளமைக்கு எந்த ஆதாரமும் பெறப்படவில்லை. தென்னிந்திய மரபு வழிச் சமூகங்கள் குறித்து ஆய்வு செய்த தேர்ஸ்டனின் குறிப்புகளிலும் இது இடம்பெறவில்லை.அரசின் முன்னூறுக்கும் மேற்பட்ட சாதிப்பட்டியலிலும் சீர்பாதர் பெயர் இடம்பெறவில்லை. இவர்கள் குறித்துப் பேசப்படும் திருவொற்றியூர், கட்டுமாவடி, பழையாறு, பெருந்துறை போன்ற இடங்களில் வேறுசாதிப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே வாழ்கின்றனர். இச்சமூகத்தினரை சீர்பரவர் என்று குறிப்பிடுவாருமுளர். இதனை உறுதி செய்யப் போதுமான சான்றுகளும் இதுவரை கிடைக்கவில்லை. 1824 ல் ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட மட்டக்களப்பின் சாதிக்கணக்கெடுப்பில் முப்பதுக்கு மேற்பட்ட அனைத்துச் சாதிகளும் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் சீர்பாதர் என்ற சாதிப்பெயர் இடம்பெறவில்லை. எனினும் விவசாயம் செய்யும் பரவர் (Paraver – Cultivators) என ஒரு சாதியார் குறிப்பிடப்படுவதால் இதனை சீர்பாத சமூகத்தினர் எனக் கொள்ளவும் வாய்ப்புண்டு. வீரமுனையின் தொடக்க காலத்தே குடியேறிய இம்மக்கள் விவசாயத்தை மேற்கொண்டதாகவே கூறப்படுகின்றது. கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) ூ சித்தி விநாயகர் ஆலயத்தில் பெறப்படும் ஆவணங்களில் இச்சமூகத்தினர் சீர்பாத வேளாளர் எனக் குறிப்பிடப்படுவது நம் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. மட்டக்களப்பு முற்குகரிடையே கலிங் இளவரசி உலநாச்சி பெயரில் ஒரு குடி தோற்றம் பெற்றதைப்போல சோழ இளவரசி சீர்பாத தேவி பெயரில் சீர்பாத சமூகம் உருவானதாக கூறப்படுவது சமூகவியல் நோக்கில் ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

துறைநீலாவணைச் செப்பேட்டினை அடியொற்றியும் சீர்பாதர் வரன் முறைக்கல்வெட்டை துணைக் கொண்டும் தமிழறிஞர் அருள் செல்வநாயகம் சீர்பாத குல வரலாற்றை எழுதியுள்ளார்.தமிழ்நாட்டு ஆவணங்கள் சிலவற்றையும் யாழ்ப்பாண வரலாற்றையும் இதற்கு அவர் சான்றுபடுத்தியும் உள்ளார். சமூகவியல் ரீதியாக இதனை ஒரு முழுமைபெற்ற ஆய்வு நூலாகக் கொள்ள முடியாது போனாலும் இச்சமூகம் பற்றிய தேடலுக்கு அந்நூல் வழங்கும் தகவல்கள் மிகவும் காத்திரமானவையாகவே உள்ளன. இதில் மாருதப்பிரவாகவல்லி





கதை முக்கியத்துவம் பெறுவதைப் பார்க்கலாம்.இது தொடர்பில் சுவாமி ஞானப்பிரகாசர் தனது ஆய்வில் (யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - 1928) எழுப்பும் சந்தேகங்களும் ஆசுகவி வேலுப்பிள்ளை தனது யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918)யில் குறிப்பிடும் வாலசிங்க மகாராசா பற்றிய தகவல்களும் அவனது தமிழகத் திருமணம் மற்றும் அழைத்துவரப்பட்ட குடிகள் மற்றும் குடியேற்றம் தொடர்பில் சொல்லப்படும் தகவல்களும் சீர்பாதகுல வரலாற்றின் தகவல்களுக்கு மாறுபட்டிருப்பினும் மட்டக்களப்பு வரலாறு தொடர்பில் கி.பி. 8 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 9ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மட்டக்களப்பின் சோழநாட்டுக் குடியேற்றம் பற்றியும் அதுவே சீர்பாத சமூகத்தின் தோற்றுவாய் என்பதுவும் மறுக்க முடியாததாகவேயுள்ளது.

யாழ்ப்பாணத்தை (கந்தரோடை) இருக்கையாக்கி ஆட்சி செய்தவனாகக் கருதப்படுபவன் வாலசிங்கன். இவன் கலிங்க அரசன் உக்கிரசிங்கனுக்கும் சோழ அரசி மாருதப்புரவல்லிக்கும் மகனாவான். வாலசிங்கன் சோழ இளவரசி சீர்பாததேவியை மணம் செய்து திரும்பும் போது சோழ நாட்டில் பழையாறை, திருவொற்றியூர், பெருந்துறை, கட்டுமாவடி போன்ற இடங்களைச் சேர்ந்த சிந்தன், படையன், காங்கேயன், காலதேவன் என்பவர்களுடன் கூடவே கண்ணப்பமுதலி, முத்துநாயக்கன் செட்டி, சதாசிவச்செட்டி, சந்திரசேகர ஐயங்கார், அச்சுத ஐயங்கார் போன்றவர்களுடன் படகுகளில் ஏறி இலங்கையை வந்தடைந்ததாக இங்கு வழங்கும் கல்வெட்டுப்பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. யாழ்ப்பாண வரலாறு தரும் ஆசுகவி வேலுப்பிள்ளை யாழ்ப்பாண வாலசிங்க மகாராசா திருமணம் செய்யவேண்டி மதுரையிலிருந்து சாமுத்துகி என்ற பெண்ணை அறுநூறு வன்னிய வீரர்களின் காவலுடன் அழைத்து வந்ததாகவும் அவர்களை அங்கு குடியேற்றியதாகவும் குறிப்பிடுவது கி.பி 9ம் நூற்றாண்டுக்குரிய வடபகுதி வன்னியர் குடியேற்றம் பற்றியதாகவும் அமையலாம். எனினும் வடபகுதி வன்னியர் குடியேற்றம் பற்றிய இத்தகவல்கள் ஆய்வுகளில் இதுவரை உறுதி செய்யப்படவில்லை. சிலாபம் முன்னேஸ்வரம் தொடர்பான தகவல்களினும் யாழ்ப்பாணத்து வாலசிங்க மன்னன் இணைக்கப்படுவது தெரிகின்றது. இது பிற்பட்ட காலத்தையே (கி.பி 13 ம் நூற்றாண்டு) கொண்டுள்ளது என்பதால் இது பற்றிய தேடல் இங்கு அவசியமாகப்படவில்லை.

இச்சமூகம் பற்றிய பார்வையில் சீர்பாத தேவி தொடர்பான தகவல்கள் மட்டக்களப்பு பிரதேசத்தே பெருமளவு நம்பகத் தன்மை கொண்டிருப்பதை நிச்சமாக உணரமுடிகின்றது. ஆயின் இம்மக்கள் மட்டக்களப்பு வாவியின் தென் அந்தமான வீரமுனைக்கு வந்திறங்கியமைக்கு சொல்லப்படும் காரணம் நம்பிக்கையூட்டுவதாக அமையவில்லை என்பதால் இது பற்றிய அவதானிப்பும் தேடலும் மிகமிக முக்கியமாகின்றது. வீரர் முனை மட்டக்களப்பு (சம்மாந்துறை) அரசின் பிரதான இருக்கையின் அருகில் அமைந்த வளமான பகுதி. யாழ்ப்பாணத்தை ஆண்ட வாலசிங்கன் கலிங்க மன்னன் உக்கிரசிங்கனின் மகன். வீரர்முனைப் பகுதியும் மட்டக்களப்பை ஆண்ட கலிங்க அரசனின் பகுதியாகும். யாழ்ப்பாண நில அமைவு தமிழகக் குடியேற்றம் ஒன்றினை அமைக்கப் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை. இக்காரணத்தினால் இளவரசி அழைத்துவந்த சோழ நாட்டுக்குடிகள் வாலசிங்கனின் வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பு கலிங்க மன்னனால் வீரர் முனையில் குடியமர்த்தப்பட்டதாகக் கொள்ளலே பொருத்தமானதாகும்.

பொதுவாகக் குடியேற்றம் கருதி வருபவர்கள் தங்களது வழிபாட்டிற்குரிய விக்கிரகங்களை தங்களுடன் எடுத்து வருவது வழக்கத்திலிருந்தது. இவர்கள் வந்ததாக கருதப்படும் கி.பி 8ம் நூற்றாண்டு பிள்ளையார் வழிபாடு தமிழ் நாட்டில் விரிவடைந்த சோழராட்சிக்காலப்பகுதி. சிந்தாத்திரன் எனப்பட்ட சிந்தன் ஒரு காவல் பொறுப்பாளனாகக் கருதப்படக்கூடியவன். இவனை ஒரு மறவனாக (தேவர்குலம்) இது குறித்த தேடலில் அவதானிக்க கூடியதாகவுள்ளது. இவன் தனது கையில் வேல் வைத்திருப்பது (ஈட்டி)ஏற்றுக் கொள்ளப்படதக்கதாகின்றது. இதன் மூலம் இம்மக்களிடம் பிள்ளையார் வணக்கமும் வேல் (முருக) வணக்கமும் வர வாய்ப்புள்ளதை மறக்கமுடியாது. இதனிடையே சீர்பாதர் வரலாறு தொடர்பாகப் பெறப்பட்ட தகவல்களில் மாருதப்புரவல்லி தான் வைத்து வணங்கி அழகுருப்பெறக் காரணமாயிருந்த வேலினை தனது மகன் வாலசிங்கனுக்கு கையளித்ததாகவும் அதனையே சிந்தாத்திரன் கொண்டு வந்ததாகவும் பிறிதொரு தகவல் சொல்லப்படுவதுவும் கவனத்துக்குரியதாகின்றது.மேலும் ஆய்வாளர் மருதூர் மஜீத் தனது நூல்களில் சிந்தாத்திரன் யாத்திரையானது அரேபிய நாட்டினரான சிந்துபாத்தின் யாத்திரையை பின்புலமாகக்கொண்டு உருவானதாகக் கருதுவது





உறுதிசெய்யத்தக்கதாக அமையவில்லை. இது குறித்த விரிவான ஆய்வுகள் அவசியமானவையாகும்.

இங்கு வந்த இம்மக்கள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்ற சோழநாட்டுப்பகுதிகள் மற்றும் இவர்களது பெயர்கள் தமிழகத்தின் வேவ்வேறு சமூகத்தினராக இவர்களை அடையாளப்படுத்துவதைப் பார்க்கின்றோம். பொதுவாக மட்டக்களப்பின் முக்கிய சமூகங்கள் அனைத்தும் இத்தன்மை வாய்ந்தவையாகவே உள்ளன என்பதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

சீர்பாத சமூகம் தொடர்பாக பெறப்படும் தகவல்களும் அவதானிப்புக்களும் இம் மக்கள் தேவர் (மறவர்), முதலிகள், செட்டிகள், ஐயங்கார், ஐயர், வேளாளர் என விரிவுபட்ட சோழராட்சி சமூக அமைப்பினராக வந்தவர்கள் எனக் கொள்ள போதிய சான்றுகள் உண்டு. இக்காலம் சாதி அமைப்புக்கள் தமிழகத்தில் வந்தாலும் பெரிதளவு ஏற்றத்தாழ்வுகளை உண்டு பண்ணுகின்ற சாதி அடுக்கு முறைகளும் வலங்கை, இடங்கைப் பிரிவகளும் தோற்றம் பெறாத காலம். இம்மக்கள் மட்டக்களப்பு வீரர்முனையில் வந்திறங்கியதும் யாழ்ப்பாண மன்னனுடன் திரும்பாது அங்கே குடி பதிகளாகி ஆலயமொன்றினை அமைத்து இயற்றியமையும் வளமான அப்பிரதேசத்தின் ஏற்படுத்திய குடியேற்றமே என்பது தெளிவாகின்றது.

மண்டூர் ஆலயத்தில் பூசிக்கப்படும் வேல் இவர்களுடன் வந்த சிந்தனால் (சிந்தாத்திரன்) கொண்டுவரப்பட்டதாக கூறப்படுவது இவ்வாலயம் தொடர்பாகக் கிடைக்கின்ற ஏனைய வரலாற்று ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் ஒரு பூரண ஆய்வினுக்கு ஒப்பு நோக்கப்படுவது அவசியமானதாகும். ஒரு புறத்தில் தில்லை மரத்தில் தோன்றிய வேலினுக்கு இப்பகுதியின் ஆதிக்குடி வேடர்களான மண்டன், பாலன், கட்டன், சுனையன் (மண்டன் - மண்டூர், பாலன் - பாலமுனை, கட்டன் - கட்டாங்குளம், சுனையன் -சுனையன் திடல்) ஆகியோரால் வழிபாடியற்றியதாகக் கூறப்படுவதும் இன்றைய ஆலய நடைமுறைகளின் வழிபாட்டில் வேடர் குலத்தினருக்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவமும் கவனத்தில் எடுக்கப்படுகின்ற அதே நேரத்தில் இங்கு நிலைபதிகளாகிவிட்ட சீர்பாத குலத்தின் சித்தாத்திர குடிமக்களே இவ்வேலுக்கான பூசை புணற்காரங்களை மேற்கொள்ளும் சிறப்புரிமைகளைக் கொண்டிருப்பது சமூகவியல் தொடர்பான உரிமைவழி சார்ந்த

சிந்தனையைத் தூண்டுகின்றது. மேலும் மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள திருப்படைக்கோவில்களில் அன்றைய முற்குக வன்னிமைகளால் மட்டக்ளப்புச் சமூகங்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளும் கடமைகளும் மண்டூர் ஆலயத்தைப் பொறுத்தவரை சீர்பாத குல மக்களே முன்னீடாகவுள்ளதால் அதன் அர்த்தப்பாடு வெளிப்படவே செய்யும். கி.பி 8ம் நூற்றாண்டினை மையப்படுத்தியதாக வீரர்முனையில் ஏற்பட்ட இம்மக்களின் தொடக்க குடிவரவு பின்னர்விரிவுபட்டு துறைநீலாவணை, குருமன்வெளி, மண்டூர்,தம்பலவத்தை, நாவிதன் வெளி, சேனைக்குடியிருப்பு, அக்கரைப்பற்று என பரம்பி கரையாக்கந்தீவிலும் நிலைபெறச் செய்துள்ளது.

இச்சமூகத்தின் சிறப்பொன்றினை குருமன்வெளிக்கிராமம் வெளிப்படுத்துவது கள ஆய்வின் முக்கியத்துவம் பெறுவதாக அமைகின்றது. இச்சமூக இணைப்பில் ஐயர் பிரிவினரே இங்கு குடியேறியதாக நமது கள ஆய்வில கிராமப் பெரியவர்கள் பலர் ஒப்புதல் அளித்தனர். குருமண் வெளி (குரு - ஐயர்) ஊர்ப்பெயர்க் காரணத்தையும் இவர்கள் சான்றுபடுத்தினர். குருமன்வெளிக்கு மேற்குப் பாகத்தே வாவிக்கு இடைப்பட்ட விவசாயக்காணிகளில் சில பங்குகள் இச்சமூகத்திலுள்ள ஐயர்கள் பெயரில் அழைக்கப்படுவதும் நம் கவனத்தை ஈர்ப்பதாகும். பல்லாண்டுகளுக்கு முன்னரே இக்கிராமப் பெண்கள் குறித்து எழுதப்பட்ட குறிப்புகளில் (யாழ்ப்பாணக் குறிப்புகளிலும் கூட) மட்டக்களப்பின் அழகான பெண்களைக் குருமன் வெளியில் காணலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர். நீண்டகாலமாக இக்கிராமத்தில் புலால் உண்ணாத ஐயர் பரம்பரை ஒன்று வாழ்ந்தே வந்துள்ளது. பிற்காலத்தில் இவர்களில் ஒரு பிரிவினர் விபூதி தயாரித்து மட்டக்களப்பின் பிரதேசமெங்கும் விநியோகித்து வந்துள்ளனர். திருநீற்று ஐயர் என்று இவர்கள் அழைக்கப்பட்டமை நம் நினைவில் நிற்கவேசெய்கின்றது.

இதனிடையே மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் என்ற நூலில் தமிழறிஞர் சற்குணம் எழுதிய சமூகம் என்ற கட்டுரை இச்சமூகத்தினர் தொடர்பான பார்வையை தாழ்வு நிலைக்குள் திசைதிருப்பும் நோக்கம் கொண்டதாக அமைந்தது. இம்மக்கள் குறித்து அவரது நிலைப்பாடு சரியான அர்த்தப்பாட்டினைக் கொண்டதாக அமையவில்லை. மேலும் யாழ்ப்பாண வாரலாற்றுத் தளத்தில் கி.மு. 5ம் நூற்றாண்டை மையப்படுத்தும் இக்கருத்து





சீர்பாத சமூகம் பற்றியதாக அங்கு சொல்லப்பட்டதற்கு எதுவித சான்றுகளும் கிட்டவில்லை .மாறாக கீரிமலையில் மீன்பிடித்த ஒரு குழுவினர் பற்றியே அது குறிப்பிடுகின்றது. சீர்பாத சமூகத்தின் தோற்றுவாய் கி.பி 8ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டதாக அமைவதால் இக்குறிப்புக்கள் மட்டக்களப்பு வரலாற்றுத் தளத்தின் சமூக ஆய்வு தொடர்பான வரையறைக்கு அப்பாற்பட்டுச் செல்வதைப் பார்க்கின்றோம். மேலும் மட்டக்களப்பின் சமூக நிலைக்குள் விவசாயம், மீன்பிடி, மந்தைவளர்ப்பு, கட்டிட வேலைகள், தச்சுத் தொழில், கூலித்தொழிகள் போன்றவை சூழலின் பிரதிபலிப்பே தவிர சமூகப் பிரதிபலிப்பாக அமையவில்லை என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.மேலும் தமிழறிஞர் ஆ.மு.ஷரிப்புதீன் எழுதிய மருதமுனை வரலாற்றில் துறைநீலாவணை தொடர்பில் முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாகவுள்ளன:

மருதமுனையின் முக்கியப்படுத்தப்பட்ட வரலாறாக - துறைநீலாவணையில் வாழ்ந்த முஸ்லிம்கள் மருதமுனைக்கும் மருதமுனையில் வாழ்ந்த தமிழ் மீனவர்கள் துறைநீலாவணைக்கும் இடம் மாறியதாகச் சொல்லப்படுகின்ற தகவல் மிக்க அவதானத்துக்குரியது. மேலும் இரு கிராமத்து மக்களும் கர்ணபரம்பரையாகக் கூறி அதில் நம்பிக்கைகொண்டுள்ளதாகவும் இந்நூல் குறிப்பிடுகின்றது. இன்று இக்கருத்து சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளதையும் நாம் பார்க்கின்றோம். இந்நூலினை எழுதியிருக்கின்ற புலவர்மணி ஷரிபுத்தீன் ஒரு சாமானியரல்ல. பலராலும் மதிக்கப்பட்டவர் என்பதால் இது தொடர்பான தெளிவினை எட்டுவதற்கு அவ்விரு கிராமங்களையும் சார்ந்த கல்விமான்கள் முன்வரவேண்டும்.

இதில் ஒரு விடயம் தெளிவுறுத்தப்பட வேண்டியுள்ளது. அக்காலகட்டத்தே துறைநீலாவணையில் வாழ்ந்த அனைவரும் முஸ்லிம்களா? அல்லது அவர்களுடன் சீர்பாத சமூகத்தினரும் வாழ்ந்தார்களா? என்பதுவே அது. இதில் இதயசுத்தியுடனான அணுகுமுறை அவசியமாகின்றது. ஏனெனில் கி.பி 9ம் நூற்றாண்டைத் தொடர்ந்த காலத்தே வீரமுனையிலிருந்து நேரடியாக துறைநீலாவணைக்கு இடம்பெயர்ந்த சமூகத்தினராக சீர்பாத சமூகம் அடையாளப்படுத்தப்படுவதாலும் அச்சமூகத்தினர் விவசாயத் தொழிலையே மேற்கொண்டதாகக் கூறப்படுவதாலும்

மட்டக்களப்புப் பிரதேச சமூக வரலாற்றில் இது ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதுபோல் தென்படுகின்றது.

இம்மக்களிடையே சிந்தாத்திரன்குடி, போர் வீரகண்டன்குடி, காலதேவன்குடி, காங்கேயன்குடி, நரையாவிகுடி, வேளாவிகுடி, முடவன்குடி என குடிகள் வகுக்கப்பட்டதாக மான்மியம் கூறும். சில பாடல்கள் படையன், பரதேசி, பாட்டுவாழி, முடவன், ஞானி, காலதேவன், காங்கேயன் என்ற பெயரில் குடிப்பிரிவுகளைக் குறிப்பிடும். இம் மக்களது இடப்பெயர்வு, வயிற்றுவார் சார்ந்த குடிப்பிரிவுகளும் உண்டு. இவர்களின் குலவிருதுக் குறியாக தேரும் கொடியும் அமைகின்றது. எனினும் தொடக்க காலத்தே இவர்களுக்கு கமலமலர், செங்கோல், கொடி என்பவற்றை குலவிருதாக வாலசிங்க மன்னன் வழங்கியதாகச சொல்வதையும் பார்க்கின்றோம். கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் சீர்பாதர் குலம் மட்டக்களப்பின் ஒரு பண்டைய மரபுவழிச் சமூகம் என்பது உறுதியாகின்றது.

**செங்குந்தர் (முதலிகள் - கைக்கோளர்)**

மட்டக்களப்பில் வாழும் சமூகங்களில் குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய சமூகமாக செங்குந்தர் (முதலிகள்) உள்ளனர். தமிழகத்தில் நெசவுத் தொழிலை சமூகத் தொழிலாகக் கொண்ட இவர்கள் காஞ்சி, ஈரோடு, திருச்சி, மதுரை, கோவை, கரூர், தஞ்சை போன்ற மாவட்டங்களில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். கைக்கோளார் என்ற பெயராலும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். சோழ பாண்டியப் படைகளில் சிறந்த போர் வீரர்களாக இவர்கள் செயல்பட்டனர். இவர்களுக்குள்ளே தெரிந்த கைக்கோளார் படை என்ற படையினர் ஆபத்துதவிகள் என்ற பெயரில் முக்கிய பணியில் அமர்த்தப்பட்டிருந்தமையை தமிழக வரலாறுகள் தெரிவிக்கின்றன. தங்கள் மன்னனை இறுதிவரை பாதுகாக்கும் பொறுப்பு இப்படைகளைச் சார்ந்திருந்தது. வரலாற்றாசிரியர் தேர்ஸ்டனின் குறிப்புகளிலும் அபிதான சிந்தாமணி என்னும் பழந்தமிழிலக்கிய கலைச் களஞ்சியத்திலும் செங்குந்தர் பற்றி பல்வேறு தகவல்கள் கிடைக்கினறன. செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவரும் மூன்று சோழர் அவைகளில் ஆஸ்தான கவிஞராக விளங்கியவருமான ஒட்டக்கூத்தர் பாடிய நாலாயிரம் பிரபந்தம் மற்றும் ஈட்டி எழுபது போன்ற நூல்கள் செங்குந்தர் பெருமைபற்றிக் குறிப்பிடுகின்றன. முருகனின் சூரசம்காரப் போரில் கைக்கோளார்கள் வீரவாகுத் தேவர் தலைமையில் குந்தம்





(போர்வேல்) ஏந்திப் போராடியதாகவும் இதனாலேயே செங்குந்தர் என்ற பெயரைப் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. சோழராட்சிக் காலத்தே பன்னிரண்டு செங்குந்தத் தலைவர்கள் ஆற்றிய போர்ப்பணிகள் பற்றியும் தகவல்கள் கிடைக்கின்றன. பண்டைத் தமிழகத்தில் சோழியர், ராத்தர், சிறுதாலி, பெருந்தாலி, சீர்ப்பாடம், சேவகாவிர்த்தி என ஐந்து கோத்திரப் பிரிவுகளை இவர்கள் கொண்டிருந்தனர். இச்சமூகத் தலைவர்கள் மாநாட்டன் என்றே அழைக்கப்பட்டனர். ஆரம்ப காலத்தே தொண்டைமண்டல வேளாளரைக் குறித்த முதலியார் எனும் குலப்பெயர் சோழராட்சியில் செங்குந்தரையும் குறிப்பதாக அமைந்தது. இவர்கள் கி.பி 10 ம் நூற்றாண்டில் சோழர் படைகளுடன் வந்திருக்க வாய்ப்பிருந்தமையை நாம் கவனத்தில் கொள்ளலாம். சோழராட்சிக் காலத்தில் நெசவுப் பணிகளின் நிமித்தமும் இவர்கள் அழைத்துவரப்பட்டிருப்பர் என்பதுவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதே. மேலும் இவர்களில் ஒரு பிரிவினர் யாழ்ப்பாணத்திலிருந்து முள்ளியவளை ஊடாக மட்டக்களப்பு வந்தனர் என்பதற்கு ஆதாரப்படுத்தப்படும் தகவல்களை சில சமூகப் பெரியவர்கள் தெரிவித்திருக்கின்றனர். இம்மக்கள் நீண்டகாலமாகவே தங்கள் தனித்துவத்தைப் பேணிய சமூகத்தினராகவே மட்டக்களப்பில் வாழ்ந்து வந்துள்ளனர். ஆனைப்பந்தி ஆலயத்தில் இடம்பெற்று வந்த சூரன்போர் விழாவில் அன்மைக்காலம் வரை தாமரைக்கேணி இளைஞர்கள் முருகனின் பக்கத்து வீரர்களாக கலந்துகொண்டு சிறப்பித்து வந்தமை அவர்களது பண்டைய பெருமையை நிலைநிறுத்துவதாக அமைந்தது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் மற்றும் மாமாங்கேஸ்வரர் ஆலயம், ஆனைப்பந்தி ஆலயம் என்பவற்றிலும் கொடியேற்றுவதற்கான கொடிச்சீலை இவர்கள் மூலமே வழங்கப்பட்டிருந்தது. தற்போது மாமாங்கேஸ்வர ஆலய கொடியேற்றத்தின்போது வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொடிச்சீலையும் கொடிக்கயிறும் இவர்களாலேயே எடுத்துச் செல்லப்படுகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் இவர்கள் ஆரையம்பதி, கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு (தாமரைக்கேணி) பகுதிகளில் வாழ்ந்துவருகின்றனர். இங்கு நெசவு செய்யப்பட்ட ஆடைகள் முன்னர் கண்டிப்பகுதிக்கும் அனுப்பப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இவர்களுக்கு குலவிருதாக நூலச்சு குறிப்பிடப்படுவது கல்வெட்டுப் பாடல்களில் சேணியர்க்கு நூலாச்சு என வெளிப்படுகின்றது. 1824 ல் ஆங்கிலேயர் மட்டக்களப்பில் மேற்கொண்ட சாதிக் கணக்கெடுப்பில் கைக்கோளார் ஒரு முக்கிய

சாதியினராகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். மட்டக்களப்பின் பண்டைய சமூகச் சிறப்பினை வெளிப்படுத்தும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் இம்மக்களுக்கு உரிய சிறப்பினை வழங்கியுள்ளமை கவனத்தை ஈர்ப்பதாகும்.

**கோவிலார்**

கோவிலார் என்போர் ஆலயக் கடமைகள் நிமித்தம் வேளாளருடன் வந்தவர்கள் என்பதால் இது கி.பி 1ம் நூற்றாண்டின் பிற்பகுதியை குறித்ததாக அமைகின்றது. தமிழகத்தில் இக்கடமைகளைப் பண்டாரம் (பண்டாரப்பிள்ளை) எனும் சாதியினர் மெற்கொள்ளுவதை பரவலாகக் காணமுடியும். இவர்களது தோற்றுவாய் தமிழகத்தில் எந்தச் சமூகத்தைச் சார்ந்திருந்தது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும் பண்டைய மட்டக்களப்புத் திருப்படை ஆலயங்களான திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, கோவில்போரதீவு, மண்டூர் ஆலயங்களில் வேளாளருக்கு புறக்கடமையும் கோவிலாருக்கு உள்கடமையும் அளிக்கப்பட்டிருப்பது அச்சமூகத்தினரின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவே அமையும். இச்சமூகப் பெரியவர்களின் கருத்துப்படி அவர்கள் பொன்னாச்சி குடியைச்சார்ந்து வந்தவர்கள் எனக் கூறுவது மேலும் ஆய்வினுக்கு உட்படுத்த வேண்டியதாக அமைகின்றது. பொன்னாச்சி என்பது வேளாளரிடையே அடையாளப்படுத்தப்பட்ட ஒரு முக்கிய குடிப்பிரிவாகும். இவர்களது தொடக்க வரவு கி.பி 1ம் நூற்றாண்டில் திருக்கோவில் ஆலயத்தை தொடர்புபடுத்தியதாக அமையினும் கோவில் போரதீவுக் கோவிலாரைப் பொறுத்தவரை இது கி.பி. 9ம் நூற்றாண்டினை மையப்படுத்தியதாக கூறப்படுகின்றது. சித்திரவேலாயுதர் ஆலயத்திற்காக தாங்களும் சில பிராமணர்களும் தமிழகத்திலிருந்து செட்டிமாரால் நேரடியாக அழைத்து வரப்பட்டதாகவும் தங்களின் வழியினரே பின்னர் கொக்கட்டிச்சோலை மற்றும் மண்டூர் ஆலயத்திற்கு சோழராட்சியில் மட்டக்களப்பு கலிங்க மன்னனால் கொண்டு செல்லப்பட்டதாகவும் சில பாடல்களை ஆதாரப்படுத்தி இவர்கள் கூறுகின்றனர். தமிழக வேளாளரில் தாங்களே உயர்நிலை பேணியவர்கள் எனவும் அதனாலேயே தாங்கள் பிராமணருடன் உட்கடமையாளர்களாக ஆக்கப்பட்டனர் எனவும் வாதிடுகின்றனர். இங்கு இவர்களில் இரு வயிற்றுவார் காணப்படுகின்றனர். கங்காணி வயிற்றுவார், கபடாக்கார வயிற்றுவார் என பிரிவுபட்டு தங்கள் கோவில் கடமைகளை இவர்கள் மேற்கொள்ளுகின்றனர். கொக்கட்டிச்





சோலையில் எண்ணிக்கையில் அதிகமான இம்மக்களிடையே கிராம ஊர்ப்போடி முறையொன்று தனித்துக் காணப்படுவது இவர்களது சமூகச் சிறப்பின் வெளிப்பாட்டினை உணர்த்துவதாக உள்ளது. எவ்வாறாயினும் கோவிலின் உள்கடமை பேணும் ஒரு சமூகத்தின் சிறப்பியல்பென்பது அதன் முக்கியத்துவத்தை நிலை நிறுத்துவதாகவே அமையும். மட்டக்களப்பு பிரதேசத்தே இம்மக்கள் திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, கோவில்போரதீவு, மண்டூர் பகுதிகளில் பரவலாக வாழுகின்றனர். கமலமலர் இவர்களது குலவிருதாக வழங்கப்பட்டிருப்பது இங்கு ஒரு முக்கிய அம்சமாகும்.

**கம்மாளர் (கருமாளர்)**

கம்மாளர் சமூகத்தினர் மட்டக்களப்பில் பொற்கொல்லர் எனவும் தட்டார் எனவும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். கருமார் (கர்மார்) என்பதே கம்மாளர் என மருவியதென சமூக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் தங்களை விஸ்வகர்மா குலத்தினர் என்றெ குறிப்பிடுகின்றனர். பண்டைய தமிழகத்தின் புராதன தமிழருள் இடம்பெறும் இவர்கள் அங்குள்ள தென்னிந்திய சாதிப்படி நிலைக்குள் இன்று விஸ்வகர்மா பிரிவுக்குள்ளேயே அடங்குகின்றனர். பண்டைத் தமிழகத்தே விஸ்வகோத்திரம் ,சனகர் கோத்திரம், அதிமர் கோத்திரம், சனாதனர் கோத்திரம், உபேந்திரர் கோத்திரம் என ஐந்து கோத்திரங்கள் இவர்களிடையே இருந்ததெனவும் கி.பி 6ம் நூற்றாண்டின் பின்னர் இவர்கள் விஸ்வப்பிராமணர் என அழைக்கப்பட்டனர் எனவும் வரலாற்றாசிரியர் தேர்ஸ்டன் குறிப்பிடுகின்றார். சேர சோழ பாண்டிய மன்னர்களின் அரண்மனைகளிலும் இவர்கள் மிக்க சிறப்பொடு மன்னர்களால் மதிப்பளிக்கப்பட்டனர். இவர்களது கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட அழகிய நகைகள் தமிழகத்திலிருந்து சீனம், கிரேக்கம், ஜவனம், அரேபியா போன்ற நாடுகளின் அந்தப்புரங்களை அலங்கரித்ததாக வரலாறுண்டு.

இவர்கள் சோழப் பேரரசின் காலத்தில் இங்கு வந்திருப்பார்கள் எனக் கருதப்படுகின்ற போதும் தாங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தே ஈழத்தில் வாழுகின்ற சமூகத்தினர் என இச்சமூகப் பெரியவர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். இதற்கு மாந்தை (மாதோட்டம்) வரலாற்றையும் இவர்கள் சான்றுப்படுத்துகின்றனர். புராதன காலத்தே கர்மாக்களால் மேற்கொள்ளப்பட்ட ஐந்துவித தொழில்களான இரும்பு வேலை, மர வேலை, செப்பு வேலை, கல் வேலை, நகை வேலை(பொன்)

என்பவற்றை மையப்படுத்தியதாக மனு, மய, துவஸ்ட, சிற்பி, விஸ்வ என குலப்பிரிவுகளையும் அடையாளப்படுத்துகின்றனர். பண்டைய தமிழக வரலாறுகளிலும் இதற்கான சான்றுகள் வெளிப்படவே செய்கின்றன. ஈழத்தின் ஆதிச் சமூகமான இயக்கர் நாகருடன் தொடர்புபட்ட தன்மையினை இச்சமூகம் கொண்டிருப்பதற்கான பல்வேறு சான்றுகளை இச்சமூகப் பெரியவர்கள் தங்கள் வலுவான தேடல்களால் ஆதாரப்படுத்த முற்பட்டுள்ளனர். துவட்டாச் சாரியாரை முன்னிலைப்படுத்தியே மாதுவட்டா பெயர் அமைந்ததெனவும் அதுமருவி மாதோட்டம் ஆனதெனவும் கூறப்படுவது மேலும் ஆய்வினுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகின்றது. இப்பிரதேசத்தே அக்கரைப்பற்று, பாண்டிருப்பு, கல்லாறு, அன்னமலை, முனைத்தீவு, போரதீவு, ஓந்தாச்சிமடம், மட்டக்களப்பு, ஏறாவூர் போன்ற இடங்களில் இம்மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் பொதுவாக துர்க்கா(காளி) வழிபாட்டினையே முன்னிலைப்படுத்துபவர்களாக உள்ளனர். மட்டக்களப்பு சமூகநிலையில் தங்களுக்குள் ஒரு இறுக்கமான கட்டமைப்பை கொண்டுள்ள இம்மக்கள் தங்கள் தொழில் நிமித்தம் ஒரு முன்னேறிய சமூகமாகவே வாழ்கின்றனர். இவர்களிடையே சூரிய அடப்பன்குடி, சும்மாடுகட்டிக்குடி, தட்டாகுடி, பதஞ்சலிகுடி, முத்தன்குடி, ஆட்டுவள்ளிகுடி, ஆனந்திசாமிகுடி என ஏழு குடிகள் வகுக்கப்பட்டமை இச்சமூகம் பண்டைய மரபுவழிச் சமூகம் என்பதனை நிலை நிறுத்துவதாக அமைகின்றது. இவர்களது குலவிருதாக குறடு குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணுகின்றோம்.

**தனக்காரர்**

தனக்காரர் என அழைக்கப்படும் இம் மக்கள் தமிழகத்தில் தனக்காரச் செட்டி என்ற சாதிப்படிநிலைக்குள் அடங்குபவர்களாக உள்ளனர். இவர்கள் அங்கு புகையிலைச் செய்கை, புகையிலை பதனிடுதல், சுருட்டு தயாரித்தல், விற்பனை செய்தல் போன்ற தொழில்களைச் சமூகத் தொழிலாகக் மேற்கொள்வதை காணலாம். கோயம்புத்தூர் பகுதியில் சுண்டக்கா முத்தூர், பேரூர் செட்டிபாளையம், இராமசெட்டிபாளையும், செட்டிபாளையம் போன்ற இடங்களில் பரவலாக வாழும் இவர்கள் இத்தொழிலையே மேற்கொண்டுள்ளனர். சோழராட்சிக் காலத்தில் இவர்கள் மட்டக்களப்புக்கு வந்திருப்பார்கள் என்று கருதப்படும் நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாண வரலாற்று ஆவணங்களும் ஈழத்து இடப்பெயராய்வு (யாழ்ப்பாண மாவட்டம்) என்ற நூலும் இவர்களை மட்டக்களப்பில்





யானைகட்டிப் பராமரிப்பவர்களாகக் குறிப்பிடுகின்றது. எனினும் இம்மக்கள் இதனை இங்கு அவர்களது தொழிலாக மேற்கொண்டிருந்தமை பற்றி அறியமுடியவில்லை.

1824 ல் ஆங்கிலேயர் மேற்கொண்ட மட்டக்களப்பு சாதிக் கணக்கெடுப்பில் தனக்காரர் (Thanakkarar - Tabbaco Planters) புகையிலைச் செய்கையாளர்கள் என்றே குறிப்பிடுகின்றனர். எனினும் அம்மக்கள் ஏனைய மட்டக்களப்பு சமூகங்களைப் போன்று விவசாயம் மந்தைவளர்ப்பு போன்ற தொழில்களையும் கூடவே மேற்கொண்டு வந்துள்ளமை ஆதாரப்படுத்தப்பட்டேயுள்ளது. இவர்கள் செங்கலடி, பிள்ளையாரடி, மட்டக்களப்பு(கல்லடித்தெரு) நற்பிட்டிமுனை போன்ற இடங்களில் வாழுகின்றனர்.

**ஏனைய பிரதான சமூகங்கள்**

இதுவரை சொல்லப்படாத மட்டக்களப்பின் ஏனைய முக்கிய மரபுவழிச் சமூகங்களாகப் பின்வரும் சமூகங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

- செட்டிகள்
- வாணியர்
- திமிலர்
- பண்டாரம்
- பண்டாரப்பிள்ளை
- சாண்டார் (சான்றார்)
- குயவர்
- கொல்லர்
- பள்ளர்
- நழவர் (நம்பிகள்)
- வண்ணார்
- அம்பட்டர்
- பறையர்
- கோவியர்
- அமலர்
- தவசிகள்
- கடையர்

இவர்களும் பண்டைய தமிழகத்தின் புராதன தமிழர்கள் என்றே இனங்காணப்படுகின்றனர்.

இதில் செட்டிகளுக்கு தராசுபடியும் வாணியருக்கு செக்கும் பண்டாரப்பிள்ளைக்கு கைப்பிரம்பும் குசவருக்கு கும்பகுடமும் வண்ணாருக்கு கல்லும் அம்பட்டருக்கு கத்தரிக்கோலும் பறையருக்கு மேளமும் கடையருக்கு கூடையும் குலவிருதுக் குறிகளாக வழங்கப்பட்டுள்ளன. இச்சமூகத்தினர் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் நடைமுறைகளில் சமூகக் கடமைப் பங்காளிகளாக கி.பி. 13ம் நூற்றாண்டு முதல் செயல்பட்டே வந்தள்ளனர்.

பண்டைய மட்டக்களப்பின் ஆட்சி அதிகார நிலையிலிருந்தவர்களும் பிரதான சமூகங்களாகக் கொள்ளப்பட்டவர்களும் மேற்சொன்ன சமூகங்களின் முக்கியத்துவத்தை தொடக்கம் முதலே மதித்து வாழ்ந்தனர். இவர்களது சமூகப்பங்களிப்பு எல்லா நிலையினும் தேவைப்பட்டமைக்கு சமூகச் சிறப்பு வெளிப்பாடே காரணமாயிற்று.

இவர்களின் பங்களிப்பில்லாத சமூக நிகழ்வுகள் எவையும் குறைவுபட்டதாகவே அன்று கருதப்பட்டது. மட்டக்களப்பின் நீண்டகால பாரம்பரியத்துக்குட்பட்ட ஆலயங்களான திருக்கோவில் சித்திரவேலாயுதர், அக்கரைப்பற்று சித்திவிநாயகர், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர், மண்டூர் கந்தசுவாமி, சித்தாண்டி முருகன் ஆலயங்களில் இச்சமூகங்களின் மேம்பாடு இன்றும் உணரப்படுவதாகவே உள்ளது. மட்டக்களப்பு சமூக அமைப்பில் எந்தச் சமூகமும் ஒதுக்கப்பட்டோ ஒடுக்கப்பட்டோ வாழ்ந்ததாக வரலாறில்லை. சிறைக்குடிகள் என்பவை இங்கு சமூகக் கடமைகளுக்கும் சமூகங்களின் கட்டுப்பாட்டுக்கும் ஒரு இறுக்கத்தையே கொடுத்தவை என்பதே வரலாற்று உண்மையாகும். இதில் இன்று அடையாளப்படுத்தத்தக்க நிலையிலுள்ள பின்வரும் சமூகங்கள் பற்றிய தேடல் அவசியமாகின்றது.

பண்டாரப்பிள்ளைகள்

இப்பிரதேசத்தே வாழுகின்ற ஒரு முக்கிய சமூகத்தினராக பண்டாரப்பிள்ளைகள் விளங்குகின்றனர். தமிழக சமூக வரலாறுகளிலும் இவர்கள் ஒரு முக்கியத்துவம் பெற்ற சமூகமாகவே கணிக்கப்படுகின்றனர். சமூகக் கடமைகள் மாத்திரமன்றி பாதுகாப்பு கடமைகளிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தமைக்கான சான்றுகள் தென்படுகின்றன. போர்த்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தர்





ஆட்சிக்காலத்தில் இவர்களே கண்காணிப்புக் கடமையை மேற்கொண்டனரென யாழ்ப்பாண வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 1827ல் வெளியிடப்பட்ட மட்டக்களப்பின் சாதிக் கணக்கெடுப்பில் பண்டாரப்பிள்ளைகள் உள்ளூர்ப் பாதுகாவலர்கள் என்றே குறிக்கப்படுகின்றனர். எனினும் இடத்துக்கிடம் வேறுபட்ட இவர்களினது சமூகச் சிறப்பியல்புகளின் தன்மைகள் கவனத்தை ஈர்ப்பதாகவே உள்ளன.

பழுகாமம் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க கிராமம் நம் கவனத்தை ஈர்ப்பதாகும். பல பிரிவுகளைக் கொண்ட இக்கிராமத்தில் வாழும் பண்டாரப்பிள்ளைகள் வேடவேளாளர்களால் உள்வாங்கப்பட்டார்களா அல்லது வேடவேளாளர்கள் பண்டாரப்பிள்ளைகளால் உள்வாங்கப்பட்டவர்களா என்பதே நமது முக்கிய தேடலாகும். மட்டக்களப்புச் சமூகத்தளம் பெரும்பாலும் இத்தன்மையைக் கொண்டிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இம்மக்கள் தங்களை வேடவேளாளர் என அடையாளப்படுத்தவே பெரும்பாலும் அவாவுறுகின்றனர். இதற்காக அவர்கள் கூறும் காரணங்களும் சமூகவியலில் ஏற்புடையதாகவே உள்ளன. தங்களது மூதாதையரின் வாழ்விடமாக கரவெட்டிப்பகுதியைக் குறிப்பிடும் இவர்கள் கண்டி மன்னன் இராசசிங்கன் சுற்றுலா வரும்போது அங்கு வாழ்ந்த தங்கள் குல அழகியை விரும்பி அழைத்து வந்து பழுகாமத்தில் பண்டார வீட்டில் தங்கவைத்து அவளுடன் சில நாட்கள் இருந்ததாகவும் பின்னர் அடிக்கடி மட்டக்களப்பு வரும்போது அவளுடனே தங்குவதாகவும் இதனால் அவளின் உறவினர்கள் பழுகாமம் வரநேர்ந்ததாகவும் மன்னனால் வழங்கப்பட்ட 84 ஏக்கர் காணியும் அவளது ஏழு வாரிசுப்பிரிவுகளும் செய்கை பண்ணி வந்ததாகவும் தங்கள் குலப்பெண் பண்டாரப் பிரிவில் வாழ்ந்த தன்மையால் தாங்களும் பண்டாரப் பிள்ளைகளாக்கப் பட்டதாகவும் தெரிவித்தனர்.

நமது கள ஆய்வில் இராசசிங்கனின் ஆட்சிக் காலத்தில் கண்டி அரசின் வாசஸ்தலம் பழுகாமத்தில் இருந்ததோடு கரவெட்டிப் பகுதியினும் வேடர் குடியிருப்புகள் இருந்தமை உறுதியாகின்றன. மேலும் பழுகாமத்தின் பண்டாரப்பிள்ளைகள் என்போர் கடந்த காலங்களில் கொக்கட்டிச்சொலை தான்தோன்றீச்சரத்தின் திருவேட்டைத் திருவிழாவில், வில் அம்பு ஏந்தி பங்கேற்றதும் அவர்களது பிரேதக் கட்டிலில் வில்லம்பு, தளப்பத்து, சுரைக்(நாடை)

குடுகு கட்டுவதும் மாடுகளுக்கு சுடும் குறியில் வில்லம்பு இடுவதும் இவர்கள் வாழும் பகுதி வீரன்சேனை என அழைக்கப்படுவதும் ஒரு அர்த்தப்பாட்டினைக் கொண்டிருக்கவே செய்கின்றது. எது எவ்வாறாயினும் சமூகவரலாற்றில் வேடர்களோ அன்றேல் பண்டாரப் பிள்ளைகளோ புராதன சிறப்புக்குரியவர்களே என்பதனை மறுக்க முடியாது.

**சாணர் - சான்றார் (பத்தினாச்சி குடி)**

மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் பாரம்பரியம் மிக்க ஒரு சமூகமாகவே சாணர் அடையாளப்படுத்தப்படுகின்றனர். சாணாரே சாண்டார் எனப்பட்டனர். பண்டைய தமிழக வரலாறுகளில் ஈழவர், சாணார், நாடார், கிராமணிகள் என்போர் ஒரே தொழிற் பிரிவினராகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர். தமிழகத்தின் அன்றைய ஆட்சி நிர்வாகத்தில் சாணாரும் பங்கெடுத்தமைக்கு வரலாற்று ரீதியான சான்றுகள் உண்டு. அக்காலத்தே இவர்கள் சத்திரியப் பள்ளிகளை நிறுவி கல்வி புகட்டியதாக தேர்ஸ்டன் சான்றளிக்கின்றார். இம்மக்கள் இங்கு அழைத்துவரப்பட்ட அல்லது குடியேறிய காலமாக கி.பி 11ம் நூற்றாண்டின் முற்பகுதியை குறிப்பிடலாம். ஆலயக் கடமைகளுடன் சமூகக் கடமைகளும் வரையறை செய்யப்பட்டபோது தென்னம்பாளை, தென்னங்குருத்து போன்றவற்றை வழங்கும் கடமை இவர்களுக்கிருந்தது. எனவே அதனோடு தொடர்புபட்ட தொழிலையே மேற்கொள்பவர்களாக இவர்கள் அன்று இருந்திருப்பர். எனினும் 1827ல் வெளிவந்த சாதிக் கணக்கெடுப்பில் இவர்களும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தமை தெரியவருகின்றது. இவர்களுக்கு அளிக்கப்பட்ட சமூகச் சிறப்பு சிற்சில இடங்களில் முக்கியத்தவம் பெறுவது கள ஆய்வில் தெளிவாகி நிற்கின்றது.

மட்டக்களப்பின் பண்டைய ஆட்சி முறையில் ஆதிக்கம் மிக்கதாக கருதப்படுவது எருவில் கிராமமாகும். வன்னிமை, நிலமை, உடையார், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனத் தொடர்புபட்ட தலைவர்களை இது தந்திருக்கின்றது. தாயூரான எருவிலும் மகளூரான மகிளூரும் ஒரே சிறப்பியல்புகளைக் கொண்டவை. இங்குள்ள புகழ்பெற்ற இரு கண்ணகி அம்மன் ஆலயங்களிலும் முற்குகர் மற்றும் வேளாளர் கோவில் பங்காளிகளாயிருக்க சாணரே பூசை செய்கின்ற குருமாராய் உள்ளனர்.இவ்வுரிமைச்சிறப்பு 1807 ல் எருவில் உடையாராகவிருந்த கோபி குடி சின்னப்போடி உடையாராலும் பணிக்கனார்குடி காத்தமுத்து விதானையாராலும்





இவர்களது ஊர்த் தொண்டினைச் சிறப்பித்து இம்மக்களுக்கு வழங்கப்பட்டதென கள ஆய்வில் கூறப்பட்டாலும் சமூக ஆய்வு நோக்கில் இதனைபார்க்கும்போது மட்டக்களப்பின் சாதித் தெய்வக் கல்வெட்டில் நாடார்க்கு கண்ணகியாம் எனும் பாடல் அடிகளின்படி நாடாரும் சாணாரும் ஒரே சமூகமாக உள்ளமையால் சாணாருக்கும் கண்ணகியே குலதெய்வமாக கொள்ளப்படவும் அதன் பின்னணியாக பத்தினியாச்சி குடியே பத்தினாச்சி குடியாக மருவி வரவும் காரணமுள்ளதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளவே செய்வர்.

**நளவர் (நம்பிகள்)**

நளவர் தமிழக வராலாற்றில் ஒரு தொழில் பிரிவுச் சமூகத்தினராவர். மட்டக்களப்பின் நீண்டகால சமூகத் தளத்தினுள் முக்கிய இடம்பெறுகின்ற இவர்கள் மட்டக்களப்பு, ஏறாவூர், வந்தாறுமூலை, முறக்கொட்டாஞ்சேனை, நாவற்குடா, மாங்காடு போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் குறித்த தேடலின் போது பல்வேறு புதிய தகவல்கள் அவதானிக்கப்படுகின்றன. மட்டக்களப்பு மகா நரசிங்க வைரவர் ஆலயத்தின் பழைய ஆவணங்களிலும் முன்னைய சில காணிப் பதிவுகள் மற்றும் உரிமைப் பத்திரங்களிலும் இவர்களது பெயர்களின் பின்னால் நம்பி எனக் குறிப்பிடப்பட்டிருப்பது நமது கவனத்தை ஈர்ப்பதாகவுள்ளது. வாய்மொழித் தகவல்களின் அடிப்படையில் இவர்கள் கி.பி. 4ம் நூற்றாண்டில் உலகநாச்சி வரவுடனும் பின்னர் சோழராட்சியிலும் மாகோன் ஆட்சியிலும் வந்ததாகச் சொல்லப்படும்போது அதற்கும் முன்னதாக ஆடக சவுந்தரியோடு தொடர்புபட்ட பாடல் ஒன்றினைக் கூறி அவளது படையணியில் தாங்கள் இடம்பெற்றதாகவும் குறிப்பிடுகின்றனர். படையணி பற்றிய கருத்தினுக்குப் போதிய வலுவினை எம்மால் எட்டமுடியவில்லை. எனினும் இவர்கள் தொடர்பில் நம்பிகள், பற்றிய தேடல் முக்கியத்துவம் பெறுகின்றது. நம்பிகள் சோழர் காலத்திலும் மாகோன் காலத்திலும் இங்கு வந்தவர்களாக கருதப்படுகின்றனர். ஆலய நடைமுறைகளில் தீவெட்டி ஏந்தும் கடமை இவர்களுக்கு அன்று வழங்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் யாழ்ப்பாணத் தொடர்பு மற்றும் தொழில் வருமான இறக்கம், தொழில் நிலைச்சூழல் என்பனவும் நம்பி நளவர் சமூகக் கலப்புக்கு வழிகோலியது.

மட்டக்களப்பின் ஏனைய சமூகங்களைப் போன்றதான ஒரு சமூகக் கூட்டுத்தன்மையே இவர்களிடமும் அவதானிக்கமுடிகின்றது. பொதுவானதும் ஏற்புடையதானதுமான சில காரணங்களை

இவர்கள் கூறுவதன் மூலம் பெருமளவு நம்பிகள் சார்ந்த சமூகத்தினராவே தங்களை அடையாளப்படுத்த இவர்கள் முற்படுகின்றனர். வரலாற்று ரீதியாக நம்பிகள் மதிப்பு மிக்க ஒரு புராதன சமூகத்தினராவர். மட்டக்களப்பின் ப+ர்வீக சரித்திர ஏடுகளில் காணப்படுகின்ற .

**"நழுவிய நம்பிமாரை நழுவராய் வரிசைபண்ணி**
**வழுவிலா மதுவெடுக்கும் வருணமென்றியம்பினாரே"**

எனும் பாடலின் அர்த்தப்பாடு ஆய்வாளர் தம் கவனத்தை ஈர்ப்பதாகும். இவர்களது குலதெய்வமாக நரசிங்க வைரவர் விளங்குவதோடு குலவிருதாக கோதண்டமும் குறிப்பிடப்படுகின்றது.

**கடையர்**

மட்டக்களப்பின் சில பகுதிகளில் வாழுகின்ற பாரம்பரியம்மிக்க ஒரு மரபுவழிச் சமூகமாகக் கடையர் குறிப்பிடப்படுகின்றனர். தமிழக சாதி வரலாற்றில் கரையோரச் சமூகமான பரவரில் ஒரு பிரிவினர் என இவர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆரம்பகாலத்தே முத்துக்குளிப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்த இவர்கள் பின்னர் கட்டிட வேலைகளில் சுண்ணாம்பு (நீறு) முக்கியத்துவம் பெற்றபோது கிளிஞ்சல் (சுண்ணச்சிப்பி) சேகரிக்கவும் அவற்றை சுட்டு நீறாக்கவும் முற்பட்டதாக சமூக ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. கடைதலிலிருந்தே கடையர் எனும் பெயர் ஏற்பட்டதாகக் கூறுவாரும் உளர். இதுவே பின்னர் அவர்களது சமூகத் தொழிலாக மாறியது. இவர்கள் சோழராட்சியிலும் பின்னர் மாகோன் ஆட்சியிலும் அழைத்தவரப்பட்டவர்கள் எனக் கூறப்படுகின்றது. இவர்களது குலவிருதாக கூடை குறிப்பிடப்படுகின்றது.

**நாவிதர் (மருத்துவர்)**

மட்டக்களப்பு பிரதேசத்தில் முக்கியப்படுத்தப்பட வேண்டிய ஒரு சமூகத்தினராக நாவிதர் உள்ளனர். இவர்களின் சமூகப் பெயர் கூட்டிய இடங்கள் பல பண்டைய குடியிருப்புகளாக இன்று அடையாளப்படுத்தப்படுகின்றன. தொடக்ககாலத்தே இவர்களது குடியேற்றம் மண்முனையை (தாழங்குடா) மையப்படுத்தியதாக அமைந்தது. இது உலகநாச்சியின் காலமான கி.பி 4ம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 5ம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம்.





தமிழக வரலாறுகளிலும் தேர்ஸ்டனின் ஆய்வுக் குறிப்புகளிலும் இவர்களது பண்டைய சிறப்புக் குறித்து அறிய முடியும். இவர்கள் சவரத் தொழிலான அழகுக்கலையை தொழில் முறையில் மேற்கொண்டாராயினும் மருத்துவத் தொழிலே இவர்களின் சிறப்பியல்பை வெளிக்கொணர்ந்தது. ஆண்கள் பரியாரி எனவும் பெண்கள் மருத்துவிச்சி எனவும் பொதுவாக அழைக்கப்பட்டனர். பண்டைய தமிழகத்தின் கொங்கு வேளாளரின் திருமணத்தில் பெண்ணுக்கு மாங்கல்யம் எடுத்துக் கொடுக்கும் சிறப்புரிமை இவர்களுக்கிருந்தது.

மட்டக்களப்பிலும் இவர்களது சமூக பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றதாகவே உள்ளது. இவர்களது மருத்துவ மாந்திரிக மற்றும் கலைத்துறைசார் வித்தாண்மை சித்தாண்டி, மட்டக்களப்பு, எருவில், வவுணதீவு போன்ற புகழ் பெற்ற கிராமங்களுடாக வெளிவருகின்றன.தென்மோடிக் கூத்தின் முன்னோடிகளாக இவர்களே விளங்கினர். இச்சமூகம் சார்ந்த இவர்கள் மருத்துவக் குடியினர் என்றே அழைக்கப் படுகின்றனர். இவர்களது சமூகப்பங்களிப்புச் சிறப்பினை தான்தோன்றீச்சரம் வெளிப்படுத்தும். இவர்களது சமூகப்பிரிவுகளை மையப்படுத்தும் மண்முனை, மகிழடித்தீவு, சவளக்கடை, பாலமுனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று போன்ற இடங்களை ஆரம்பகால சமூகத்தளப் பரம்பலாக கொண்டுள்ள இவர்களுக்கு ஆலயங்களான மண்டூரிலும் சித்தாண்டியிலும் திருவிழா வழங்கப்பட்டமை ஒரு சிறப்பியல்பாகும்.

**வண்ணார் (புலவனார் குடி)**

பண்டைய தொழிற் பிரிவு சமூகங்கள் தோற்றம் பெற்ற காலம் முதலே இம்மக்களின் தோற்றுவாயும் தென்படுகின்றது. இப்பிரதேசத்திலும் நீண்டகால பாரம்பரியம் மிக்க சமூகத்தினராகவே இவர்கள் அடையாளப்படுத்தப் படுகின்றனர். தாழங்குடா இவர்களுக்கும் தொடக்கால குடியிருப்பாக சொல்லப்படுவதால் இது கி.பி 4ம் நூற்றாண்டின் பிற்பகுதியான மண்முனைக் குடியேற்றத்தை ஒட்டியதாக அமையலாம். இம்மக்களின் குடிப்பிரிவுகள் குறித்த கல்வெட்டுப்பாடல்கள் அவர்கள் பின்னர் குடியேறிய ஊர்களை மையப்படுத்தியதாகவே அமையும். தமிழகத்தில் இவர்களிடையே காணப்படும் இருபதுக்கு மேற்பட்ட சமூக படிநிலைக் கூறுகளும் இடங்களைக் குறித்தே உள்ளன. பண்டைய தமிழகத்தில் இவர்கள் ஈரங்கொல்லிகள் என்ற

சங்கத் தமிழால் அழைக்கப்பட்டனர் . ஆய்வாளர் தேர்ஸ்டனும் இவ்வாறே குறிப்பிடுவார் .மட்டக்களப்பில் பழைய ஆவணங்களில் காணப்படும் இப்பதம் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் குறிப்புகளிலும் தென்படுகின்றன. சில இடங்களில் இவர்கள் புலவனார் குடியினர் எனவும் பெரியதம்பிரான் குடியினர் எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

இம் மக்கள் பெரியதம்பிரானை வழிபாடு செய்வதற்கு வரலாறு இடம்விட்டிருக்கிறது. பெரியதம்பிரானுக்கு இச்சமூகத்தைச் சேர்ந்த நீலசோதையன் தலைமைத் தளபதியாக இருந்தான் என்பது ஆய்வுகளினும் முன்னெடுக்கப் படுவதாகின்றது. ஈழத்தின் பாண்டியநாடு நோக்கிய இரண்டு படையெடுப்புக்கள் குறித்த தகவல்களுடன் இவை சம்பந்தமுறுவதைப்பார்க்கலாம். நீல சோதையன் என்பவன் 9ம் நூற்றாண்டின் பிற்பகுதி குறிப்பிடும் அனுராதபுரியின் தலைமைத் தளபதி குட்டனாகவோ அன்றேல் பொலனறுவை ஆட்சிக்காலத்தின் 12ம் நூற்றாண்டின் பிற்பகுதியின் தலைமைத்தளபதி தண்டையனாகவோ இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இன்று இப்பிரதேசத்தே ஆயிரக்கணக்கான மக்கள் அருளாசி வேண்டி குழுமுகின்ற அருள் மிகு புன்னைச்சோலை அம்மன் ஆலய செயற்பாடுகளும் இவர்களின் பரிபாலனத்தின் கீழேயே உள்ளது. இச்சமூகத் தலைவர்கள் கட்டாடியார் எனவும் தண்டைக்காரன் எனவும் கௌரவமாக அழைக்கபட்டே வந்துள்ளனர். இவர்களது சமூகப்பங்களிப்புக்கள் தான்தோற்றீச்சரத்தின் ஊடாக வெளிப்படும் தன்மையில் சித்தாண்டி அக்கரைப்பற்று ஆலயங்கள் இவர்களுக்கு திருவிழா வழங்கிச் சிறப்பித்துள்ளன. மட்டக்களப்பு சமூகத் தளத்துள் இவர்களது பிணைப்பானது மிகவும் இறுக்கம் கொண்டதென்பது மறுக்க மடியாத ஒன்றாகும்.

**பறையர் (வள்ளுவர் குலம்)**

இச்சமூகத்தினர் மட்டக்களப்புப் பிரதேசத்தே நீண்டகால வரலாற்றைக் கொண்டவர்கள். தமிழகத்தினும் இம்மக்கள் தொல்பழம்பெரும் குடியினராகவும் புராதன தமிழர்களாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். பல்லவராட்சியின் ஆரம்பத்திலும் அதற்கு முற்பட்டும் இவர்கள் உயர் பதவிகளில் இருந்துள்ளனர். பல்லவர்களுக்கு புரோகிதர்களாகவும் இவர்கள் செயற்பட்டனர். இவர்களில் ஒரு பிரிவினரான வள்ளுவப் பறையர் புலால் உண்ணாதவர்களாக பூ நூல் அணிந்து கோவில் கடமைகளில் ஈடுபட்டனர். பிராமணரின் வருகைக்கு முன்னரே





பிராமணரின் அக்கிரகாரம் போன்ற பிரிவான பகுதி வாழ்வு இவர்களிடமே இருந்தது. பின்னர் இது சேரியானது. இவர்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட தேர்ஸ்டன் இவர்களுக்குள்ளே புரோகிதர், வேளாளர், நெசவாளர், மருத்துவர், வண்ணார், பம்பையர், உறுமிக்காரர், பறையடிப்போர் என பல்வேறு தொழிற் பிரிவினர் இருந்தமையை குறிப்பிடுகின்றார். முல்லை நில மக்களான இவர்கள் மத்திய தரைக்கடல் நாடுகளிலிருந்து வந்த திராவிடர்களுடனோ அல்லது பின் வந்த ஆரியர்களுடனோ கலப்புறாது வாழ்ந்தமையே இதற்கான காரணம் எனச் சமூகவியலாளர்கள் கூறுவர். புராதன தமிழர், திராவிடத்தமிழர், ஆரியத் தமிழர் என்ற முப்பிரிவில் இவர்கள் புராதன தமிழர்களாக இனம் காணப்படுகின்றனர். தென்னாட்டுக் கோவில்களில் தேர் இழுக்கும் உரிமையை முன்னர் பறையர் சமூகமே கொண்டிருந்தனர். திருவாரூர் ஆலயத்தில் இவர்களுக்கான சிறப்பு இன்றும் பேணப்படுகின்றது.அம்மனின் தாலி கூறைப் பெட்டியை யானையில் வைத்து இவர்களே கொண்டுவருவர்.

மட்டக்களப்பில் இவர்களது ஆரம்பகாலம் மண்முனைக் குடியேற்ற வரலாற்றுக் காலத்தைக் கொண்டிருப்பினும் சோழராட்சிக் காலத்தே இவர்கள் மேலும் இங்கு வந்திருக்க முடியும் எனக்கருதக் கூடியதாகவுள்ளது. தமிழகத்தில் காணப்படும் பத்துக்கு மேற்பட்ட சாதிப் படிநிலையில் ஏழு பிரிவுகள் மட்டக்களப்பில் தென்படுவதால் இக்கருத்து வலுப்பெறுகின்றது. இவர்கள் இங்கு சிறைக்குடிகள் என்ற வரையறைக்குள் உள்ளாக்கப்பட்டாலும் சமூக, ஆலயக் கடமைகளில் இவர்களுக்கான பங்களிப்பு முக்கியத்துவம் நிறைந்ததாகவே கொள்ளப்பட வேண்டியதாகின்றது. இச்சமூகத் தலைவர்கள் மூப்பனார் என அழைக்கப்படுவதும் திருப்படைக் கோவிலான கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் இம்மக்களுக்கு திருவிழா வழங்கப்பட்டுள்ளமையும் ஒரு சமூகச்சிறப்பாகவே கொள்ள வேண்டும். கோளாவில், களுதாவளை, வெல்லாவெளி, புன்னைக்குளம், ஆரையம்பதி, கல்முனை போன்ற இடங்களில் பரவலாக வாழும் இம்மக்கள் சமூகத் தளைக்குள் இருந்து விடுபட்டு படிப்படியாக கல்வி, பொருளாதார நிலைகளில் முன்னேறி வருவது பாராட்டப்படத் தக்கதாகிறது. இதே போன்ற மாற்றம் தமிழகத்திலும் இன்று தென்படுவதை குறிப்பிட வேண்டும்.

# மட்டக்களப்புச் சமூக அமைப்பிலிருந்து மாறுபடும் பண்டைய மரபுவழிச் சமூகங்கள்

மட்டக்களப்பின் சமூகநிலை அதன் புறவழித் தாக்கங்களினூடே காலத்துக்குக் காலம் சிற்சில மாற்றங்களை உள்வாங்க நேர்ந்தாலும் பொதுவாக அது சமதளத்தே எழுதப்பட்டதாகும். அதன் உறுதிமிக்க அத்திவாரம் மரபுவழி எனும் பாரம்பரிய சிறப்புத் தன்மையை, தளம்பாமல் கொண்டிருக்கும் இறுக்கத்தை இன்னும் காணவே செய்கின்றோம். எனினும் ஆட்சி அதிகார மாற்றங்கள், போரார் நடவடிக்கைகள், பிரதேச இணைப்புக்கள், இடைப்பட்ட குடியேற்றங்கள் என்பவை அவை சார்ந்த பிரதேசத்தே கொண்ட ஊடுருவல் தன்மையால் புறநடையான சில மாற்றங்களை அவற்றின்பால் தோற்றுவிக்கவும் செய்துள்ளன. அவற்றை முக்கியப்படுத்தும் தன்மையில் பின்வரும் பிரதேசங்களை அடையாளப்படுத்த முடியும்.

1. மட்டக்களப்பின் வடமேற்குப் பிரிவான மன்னம்பிட்டிப் பிரதேசம்
2. மட்டக்களப்பின் வடபிரிவான வாகரைப் பிரதேசம்.

**மன்னம்பிட்டிப் பிரதேசம்**

குறிஞ்சிக் குன்றுகள் குலவ மாவலியின் சீதளத்தில் மருதமும் முல்லையும் வனப்புக் கொள்ளும் வளமான பழந்தமிழர் பிரதேசம் மன்னம்பிட்டி. இதன் தோற்றுவாய் என்பது பொலனறுவையில் (ஜனநாதமங்கலம்)சோழராட்சி நிலைநிறுத்தப்பட்ட கி.பி 985ஐ மையப்படுத்திய காலமாகக் கொள்ளத் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. சோழர்களால் தங்களது ஆட்சி மற்றும் நிருவாகக் கடமைகளுக்காக அழைத்துவரப்பட்டவர்களில் பொலநறுவையிலிருந்து விரிவுபட்டவர்களை மன்னம்பிட்டியிலும்





சமூகக் கடமைகளின் நிமித்தம் அழைத்துவரப்பட்டவர்களை சமணன் பிட்டியிலும் குடியமர்த்தியதாக தகவல்கள் கூறுகின்றன. எனினும் மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்று ஆவணங்களில் இப்பிரதேசம் முன்கூட்டிய காலக்கணிப்பையே கொண்டிருக்கின்றது. பெறப்படும் பண்டைய தகவல்களில் இதனை அண்டிய முத்துக்கல் குறித்து விரிவாகப் பேசப்படுகின்றது. கி.பி. 4ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு மன்னன் அமரசேனனால் வீரமுத்து எனும் வன்னிச்சியும் அவள் குடும்பத்தினரும் குடியமர்த்தப்பட்ட இடமாக அவள் பெயரில் முத்துக்கல் வெளிப்படுத்தப்படுகின்றது. பிற்பட்ட காலத்தே முத்துக்கல் வன்னிமைப்பிரிவாகவும். உடையார் பிரிவாகவும் மிளிர்வதைக் பார்க்கின்றோம். சோழர் ஆட்சியில் ஆதிக்க நிலை பேணிய படையாட்சியர் (வேளைக்காரர்) மற்றும் அடப்பர் சமூக மக்களும் இங்கு பரவலாக வாழ்ந்தனர். தங்களைப் படையாட்சியரில் ஒரு பிரிவினராக கருதிவாழும் மன்னம்பிட்டிப் பகுதி அடப்பர் குல மக்கள் சோழர் தம் பிற்பட்ட வரலாற்றுக் குறிப்புகளில் தமிழகத்தின் தனிச் சமூகத்தினராகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர். சோழரின் படைப்பிரிவுகளிலும் இடம்பெற்ற இவர்கள் இங்கு சமூகக் கலப்புற்றமையையே இது தெளிவுபடுத்துகின்றது.

பிற்பட்ட காலத்தே இப்பிரதேசம் தம்பன்கடவை கிழக்கு, தம்பன்கடவை மேற்கு என இரு பிரிவுகளைக் கொண்டதாக விளங்கியுள்ளது. இது மகாவலி கங்கையை மையப்படுத்தியதாக அமைகின்றது. போர்த்துக்கேயரின் பின் தொடர்ந்து வந்த ஆட்சியாளரின் குறிப்புக்களிலும் தம்பான்கடவைப் பெயராலேயே இது அழைக்கப்பட்டுள்ளது. தம்பான்கடவை என்பது தோணிக்கடவை எனச் சொல்லப்படுகின்றபோதும் சோழராட்சியில் தம்பான் என்பவனது பெயரில் காவல் அரண் இங்கு இருந்ததாகவும் கூறப்படுகின்றது. மறுபுறத்தே மீனேரியில் (மின்னேரி) காவலரன் இருந்ததாக தமிழகத்தின் சோழராட்சிக் குறிப்பில் காணமுடியும். மன்னம்பிட்டிப் பகுதியில் தென்படுகின்ற தம்பான் கடவை, சொறிவில், கருப்பளை, சமணன்பிட்டி, முத்துக்கல், கண்டாக்காடு, திரிகோணமடு, கல்லூர், பிள்ளையாரடி போன்ற ஊர்ப்பெயர்களின் தன்மைகொண்டு இது ஒரு பழந்தமிழ் பிரதேசம் என்பது உறுதியாகின்றது. இதனிடையே சிறிஸ்துவுக்கு முற்பட்ட பண்டைய மட்டக்களப்பில் நாகர் வாழ்ந்த மகாவலி கங்கையை அண்டிய பகுதியொன்று ஆய்வாளர்களால் இங்கு அடையாளப் படுத்தப்படுகின்றது. இது நாகர்பொக்கனை எனச்

சொல்லப்படுவதால் நாமள்பொக்கண என இன்று அழைக்கப்படுகின்ற இடமாக இதனை கருதக்கூடியதாகவே உள்ளது.

பிற்பட்ட காலத்தே சோழராட்சி நலிவுற்றமைக்கு அவர்களது சமய நெறிகளும் ஒரு காரணமாய் அமைந்தன. தமிழகத்தில் வைஷ்ணவ வழிபாட்டினை முன்னெடுப்பதில் பிராமணர் காட்டிய ஆர்வம், ஆட்சி நிலை ஊடாக ஈழத்திலும் வலுப்பெற முனைந்தமை சிவவழிபாட்டினை முதன்மைப்படுத்திய மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. வருடந்தோறும் தஞ்சை இராஜராஜேஸ்வரத்தோடு (பெரிய உடையார் கோவில்) விழாக்கண்ட பொலநறுவை சிவாலயம் பிற்பட்டு அதன் சிறப்பினை இழந்தாலும் விஜயபாகுவின் ஆட்சி தொடர்ந்த காலத்தே வாழ்ந்த இப்பிரதேச மக்கள் மீண்டும் அதன் சிறப்பை நிலைநாட்டவே செய்தனர். மாகோன் ஆட்சிக்காலத்தே பெரும் சிறப்புற்ற இவ்வாலயம் மீண்டும் பொலநறுவை ஆட்சியின் பௌத்த முன்னெடுப்பால் தளர்வுற்றாலும் அண்மைக்காலம் வரை மன்னம்பிட்டி பிரதேச மக்களின் செயற்பாடுகள் இவ்வாலயத்திற்குக் கிடைக்கவே செய்துள்ளன. மட்டக்களப்புப் பகுதிகளிலிருந்தும் பெருமளவு மக்கள் பொலநறுவை சிவாலயத்திற்கும் சுமார் 350 ஆண்டுகள் பழமைபெற்ற மன்னம்பிட்டி சிறிசித்திரவேலாயதர் ஆலயத்திற்கும் அடிக்கடி சென்று வழிபாடியற்றி வந்துள்ளமைக்கு போதிய சான்றுகள் தென்படவே செய்கின்றன. பொதுவாக இப்பிரதேச குடியேற்றங்களில் மூன்று கட்டங்களில் நிகழ்ந்தவை தமிழ் நாட்டுக் குடியேற்றங்களாகவும் ஆங்கிலேய ஆட்சியின் இறுதிக்காலத்தே மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரிபட்டு பொலநறுவை மாவட்டத்துடன் இப்பிரதேசம் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பாரிய குடியேற்றங்கள் சிங்களவரின் குடியேற்றங்களுமாகவே அமைந்துள்ளன. கி.பி 4ம் நூற்றாண்டுக்குரிய முத்துக்கல் வன்னிச்சி குடியேற்றம் கி.பி. 10ம் நூற்றாண்டுக்குரிய சோழநாட்டுக் குடியேற்றம் கி.பி 13ம் நூற்றாண்டுக்குரிய தமிழகத்தின் கலிங்கமாகோன் குடியேற்றம் ஆகிய குடியேற்றங்களை பண்டைய குடியேற்றங்களாகக் கொள்ளலாம். பிற்பட்ட குடியேற்ற வாசிகளின் பெரும்பான்மைத் தன்மையானது மரபுவழித் தாயகமாய் கருதப்பட்ட தமிழரின் இப்பிரதேசத்தில் அவர்களது அதிகாரநிலை, சொத்துடமை என்பவை பறிக்கப்படவும் தொடர்ந்து அச்சுறுத்தல்களால் ஒரு குறுகிய காலத்தே மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில்





தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு இவர்களை இடம் பெயரவும் செய்தன.

பொதுவாக 1960 வரை இப்பகுதியின் அரசுப் பதவிகள் தமிழர் வசமே இருந்துள்ளன. ஆங்கிலேயரின் பிற்பட்ட காலத்தே வாழ்ந்த முத்துக்கல் குலசேகரம்பிள்ளை உடையார், முத்துக்கல் காத்தமுத்து உடையார், முத்துக்கல் வண்டையா உடையார் போன்றவர்கள் இதில் அடங்குவர். களுவாஞ்சிக்குடியில் மணம்புரிந்த வண்டையா உடையார் தாய்வழித் தமிழராவார். விதானை, வட்டவிதானைப் பதவிகளையும் இவர்களே வகித்துள்ளனர். 1965 காலப்பகுதியில் திரு.கதிர்காமத்தம்பி என்பவர் மன்னம்பிட்டி கிராமசபைத் தலைவராக கடமையாற்றியுள்ளார்.

மட்டக்களப்புப் பிரதேசத்துக்குரித்தான நீண்டகால போடிப்பரம்பரை முறையானது மன்னம்பிட்டியிலும் நிலைபெற்றிருந்தமை தெரிகின்றது. எனினும் இவர்கள் போடிப் பெயராலும் தனித்தனிக் கூறுகளாலும் அடையாளப்படுத்தப்பட்ட தன்மை வெளிப்படவில்லை. மேலும் இவர்களிடையே மூத்த உடையார் பரம்பரை, சின்ன உடையார் பரம்பரை போன்ற பதவி வழிப்பிரிவுகளும் முதலிக்குடி, விதானைக்குடி, கமக்காரன்குடி, வாலிக்குடி போன்ற குடிப்பிரிவுகளும் தென்படுவது தெரிகின்றது. மட்டக்களப்பின் கலைப் பண்பாட்டுக் கோலத்தில் சிறப்பிடம் வகிக்கும் கொம்புமுறி விளையாட்டு கருப்பளை, மன்னம்பிட்டி, சொருவில் கிராமங்களில் இடம்பெற்று வந்தமையும் மன்னம்பிட்டி மக்களால் வதனமார் வழிபாடு செய்யப்பட்டமையும் மட்டக்களப்பின் மரபுவழி கூத்துக்கள் ஆடப்பட்டமையும் கவனத்தை ஈர்ப்பதாகும். மட்டக்களப்பின் நான்கு திருப்படைக் கோவில்கள் எவ்வாறு சிறிசித்திர வேலாயுதர் ஆலயம் எனக் குறிப்பிடப்படுகின்றதோ அதே பெயரையே மன்னம்பிட்டி ஆலயமும் கொண்டுள்ளது. மட்டக்களப்புக்குரித்தான கண்ணகி வழிபாடு மன்னம்பிட்டி, முத்துக்கல், சொருவில், கருப்பளை ஆகிய கிராமங்களில் நீண்ட காலமாகவே இடம்பெற்று வந்துள்ளது.

மன்னம்பிட்டிக் கிராமத்தின் வேளைக்கார - அடப்பனார் பரம்பரை குறித்த சிறப்புத்தன்மை ஒன்று கள ஆய்வில் விசேட கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. இங்கு பெறப்பட்ட தகவல்களும்

வரலாற்றுச் சான்றுகளும் மிகவும் பெறுமதி வாய்ந்தவையாகவே கொள்ளப்படவேண்டும்.

குல சூரியன் என்ற தளபதி சோழராட்சிக்குப் பிறகும் கண்டி (பொலநறுவை) மன்னனின் தளபதியாக நியமிக்கப்பட்டதாகவும் அக்காலத்தே அவன் எதிரிகளின் படையெடுப்புக்களை முறியடித்து நீண்டகாலம் அரசை நிறுவத் துணைபுரிந்தான் எனவும் இதனால் மன்னன் பிற்காலத்தே குலசூரியனின் சேவையை கௌரவித்து அவனுக்கு கொடி, குடை, ஆலவட்டம் என விருது வழங்கி மாத்தளைப் பகுதயில் உள்ள அம்பனை என்ற இடத்தை (ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலம்) குலசூரியனுக்கும் அவனது சந்ததியினருக்கும் செப்புப் பட்டயம் எழுதிக் கையளித்ததாகவும் பின்னர் குலசூரியனின் சந்ததியினர் மாத்தளை அம்பனையில் குடியேறியதாகவும் அதில் ஒரு பிரிவினர் மன்னம்பிட்டிக்குத் திரும்பிவர அதுமுதல் கொண்டு மன்னம்பிட்டிக்கும் அம்பனைக்கும் திருமணத் தொடர்பு ஏற்பட்டதாகவும் காலப்போக்கில் அங்கு வாழ்ந்த பரம்பரையினர் வர்ணகுல சூரியவம்சய என அழைக்கப்பட்டதாகவும் அண்மைக்காலம் வரை இவ்வம்சத்தினரின் தொடர்பு இருந்து வந்தள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டது. செப்புப் பட்டயத்தை ஆங்கிலேயர் எடுத்துச் சென்றபோது அதற்கான ஆவணப் பிரதிகளை மாத்தளைக் கச்சேரியில் கையளித்து அவை பேணப்பட்டு வந்ததாகவும் இப்போதும் அதற்கான தகவல்கள் அங்கு பெறக்கூடியதாக உள்ளமையும் தெரியவந்தது. (மத்தளைக் கச்சேரியால் உறுதிசெய்யப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் எம்மிடம் உள்ளன). செப்புப்பட்டயம் இலண்டன் அருங்காட்சியகத்தில் இருப்பதுவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மன்னம்பிட்டி அடப்பனார் மகள் காளியம்மை என்பவர் பெயரிலிருந்து சுமார் ஆயிரம் ஏக்கர் காணியை அரசு சுவீகரித்து பங்கீடு செய்த தகவல்களும் பெறப்படுகின்றன. இது பட்டயத்தில் உள்ள காணியின் ஒரு பகுதி எனவும் காளியம்மையின் சந்ததியினர் பிற்பட்டும் மன்னம்பிட்டியில் வசித்துள்ளமையும் தெரிகின்றது.(30.01.1907ல் மேலதிக நில அளவை அத்தியட்சகரால் ஒப்பமிடப்பட்ட- பட்டயத்தில் குறிப்பிடப்படும் முழுக் காணியினதும் நில அளவைப் படம் மறுபுறம் இணைக்கப்படுகின்றது)





மாத்தளை மாவட்டம் அம்பனையில் மன்னன் விஜயபாகு தளபதி குலசூரியத்தரையனுக்கு கி.பி 11ம் நூற்றாண்டில் வழங்கிய நிலக்கொடையின் நில அளவைப்படம்



இது குறித்த நமது தேடலில் இன்னும் பலவேறு பக்கச்சான்றுகள் துணை செய்வதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். சோழரின் பிற்கால ஆட்சி என்பது அவர்கள் ஆதிக்கம் செலுத்திய எல்லா நாடுகளிலும் தளம்பல் தன்மையின் மொத்த வடிவமாகவே தென்பட்டது. ஈழத்தில் முதலில் உரோகணத்தை இழந்தவிட்ட அவர்களுக்குப் பின்னர் பொலனறுவையில் தொடர்ந்து தாக்குப் பிடிக்கத்தக்க படைப்பலமும் இருக்கவில்லை. மக்களுக்கும் நிறைவான வாழக்கை கிட்டவில்லை. இதனால் அரசுக்கு எதிரான உள்ளூர்க் குழப்ப நிலையும் தோற்றம் பெற்றது. இதைச் சாதகமாக்கியே முதலில் விஜயபாகு ஆட்சியைப்பிடித்தான். சோழர் படைகளுக்கும் (வேளைக்காரர்) தோல்வியை அனுசரித்துச் செல்வதை தவிர வேறு வழி தென்படவில்லை. இதனால் வேளைக்காரப்படை சண்டையைத் தொடராது விஜயபாகுவின் ஆதரவுப்படையாக செயற்பட்டது. இதன்பின்னர் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக விஜயபாகுவின் ஆட்சி நீடித்ததாகச் சொல்லப்படுகின்றது. இவனது நீண்டகால ஆட்சிக்குப் பெரும் துணை புரிந்தவனாக குருகுல சூரியத்தரையன் எனும் வன்னியனை சோழநாட்டு திருமுக்கூடல் கல்வெட்டு சிறப்பித்துக் கூறுகின்றது. பனாக்கடுவைச் செப்பெடு விஜயபாகு சோழரது வன்னியப் படைகளை தன்னுடன் இணைத்துக் கொண்டமையை வெளிப்படுத்துகின்றது. சூளவம்சத்தின் ஐம்பதாவது அத்தியாயமும் இதனை உறுதிசெய்வதைப் பார்க்கின்றோம். பேராசிரியர் எஸ்.பரணவிதானையும் தனது ஆய்வுக் குறிப்பில் சோழமன்னர்களைப்போல பொலநறுவை விஜயபாகு மன்னனும் வன்னியர்களது சேவையைப் பாராட்டி நிலக்கொடை அளித்து இங்கேயே தங்கவைத்தமை பற்றி (The Polanaruwa Inscription of Vijayabahu I EI XVIII P.337) குறிப்பிடுகின்றார்.

இதன் அடிப்படையில் மன்னம்பிட்டிப் பகுதி கள ஆய்வில் பெறப்படும் தகவல்கள் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றன.

**அவர்களால் குறிப்பிடப்படும் கண்டி அரசன் என்பவன் உரோகணத்தையும் உள்ளிட்டு பொலநறுவையில் ஆட்சி செய்த 1ம் விஜயபாகு என்பதுவும் சோழநாட்டு திருமுக்கூடல் கல்வெட்டில் குறிப்பிடப்படும் குருகுல சூரியத் தரையன் எனும் வேளைக்காரப் படைத் தலைவனே குலசூரியன் என்பதுவும் இவனது சேவையைப் பாராட்டியே விஜயபாகு மாத்தனை அம்பனையில் நிலக்கொடை அளித்தான் என்பதுவுமே அது.அரையர் எனும் பதம் வன்னியரைக் குறிப்பதாகும்.**





இவ்வாறு மட்டக்களப்பு வரலாற்றுத் தளத்துள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கும் இப் பிரதேசம் மட்டக்களப்பு மாநிலத்திலிருந்து பிரிந்து சென்றது முதலாக தனது தனித்துவத்தையும் மண்வாசனையையும் படிப்படியாக இழக்கவே செய்தது. ஒரு குறிப்பிட்ட காலத்தினுள்ளேயே இதன் பிரதிபலிப்பு வெளிப்பட்டமை தமிழினத்தின் சாபத்தீடே. எவ்வாறாயினும் மன்னன்பிட்டி என்பது மட்டக்களப்புத் தமிழகத்தின் நுழைவாயில் என்ற அதன் பண்டைய பெருமையை வரலாற்றில் நிலை நிறுத்திக்கொண்டேயிருக்கும்.

**வாகரைப் பிரதேசம்**

மட்டக்களப்புத் தமிழகத்தின் முக்கிய பகுதியாக விளங்குகின்ற வாகரைப் பிரதேசம் நீர்வளம், நிலவளம், வனவளம் என நெய்தல் மருதம் முல்லைப் பண்போடு கூடியதான மக்களைக் கொண்டிலங்கும் வளம் நிறைந்த வாழ்விடமாகும். இதன் பண்டைய கிராமங்களாகக் கொள்ளப்படும் பனிச்சங்கேணி , கதிரைவெளி, வெருகல் என்பவை சுமார் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மட்டக்களப்பின் வரலாற்றோடு இணைக்கத்தக்கவை. மட்டக்களப்பில் நிலை கொண்டிருந்த ஆதிச் சமூகங்களில் ஒன்றான திமிலருக்கும் அப்போது கலிங்கத்திலிருந்து இங்கு வந்த குக மரபினருக்கும் ஏற்பட்ட மேலாதிக்கப் போட்டி திமிலரை வெருகலுக்கப்பால் இட்டுச் செல்ல வைத்தது. எனினும் இம் மக்கள் வெருகல் கங்கையின் இரு கரையிலும் பரவி மீன்பிடி, மந்தை வளர்ப்பு, பயிர்செய்கை ஆகிய தொழில்களில் ஈடுபடவே செய்தனர். இவர்களோடு கூடவே இங்கு தனிச் சமூகமாக வாழ்ந்த இன்னுமோர் ஆதிக் குடியினரான வேடரும் இங்கு விரிவு படலாயினர். இவ்விரு சமூகங்களுடன் பின்னர் முக்குகரும் (படையாட்சியர்) இப்பகுதியின் ஆதிக் குடிகள் என்பது வரலாற்றில் நிலை நிறுத்தப்படுவதாகும்.

கி.பி 4ம் நூற்றாண்டை மையப்படுத்தியதாக முத்துக்கல்லில் வீரமுத்து வன்னிச்சியை முதன்மைப்படுத்தி ஒரு குடியேற்றம் நிகழ்கின்றது. இதன் பிற்பட்டு முத்துக்கல் வன்னியப் பரம்பரையை சேர்ந்த ஒரு பெண் பனிச்சங்கேணியில் குடியேறிய தகவல் பரவலாக பெறப்படுகின்றது. இது குறித்த காலம் சரியாக அறியப்படவில்லையென்றாலும் இப் பகுதியில் ஆய்வுகளை

மேற்கொண்ட பலர் பனிச்சங்கேணி வன்னிச்சி குறித்து தங்கள் ஆய்வுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் இவளின் பின்னர் இச்சமூக வெளிப்பாடோ அல்லது வேறு குடியேற்றங்களோ ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் வரை இடம்பெற்றமைக்கான வலுவான சான்றுகள் கிட்டவில்லை. இதனடிப்படையில் பார்க்கின்றபோது இப் பிரதேசத்தே இன்று நிலைபதிகளாகிவிட்ட ஏனைய சமூகங்கள் மிகப் பிற்பட்ட காலத்தவையாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன. தொடக்க காலத்தே இங்கு வாழ்ந்தவர்களாகக் கருதப்படும் முற்குகரும் காலப்போக்கில் மட்டக்களப்பின் உள் பகுதி நோக்கி (தெற்கு) நகர்ந்திருப்பர் என்றே கருத வேண்டியுள்ளது. இடைப்பட்ட நீண்டகாலத்தே இங்கு வேடுவர் சமூகமும் திமிலர் சமூகமும் விரிவாக்கம் பெற்றே வந்திருப்பர். இதனூடே அவர்கள் சார்ந்த தொழில்களான வேட்டையாடல், மந்தை வளர்ப்பு, சேனைப் பயிர், மீன்பிடி, விவசாயம் போன்றவையும் விரிவுபட்டேயிருக்கும்.

பண்டைய கிராமங்களான வெருகல்(விழாங்குடா) பனிச்சங்கேணி, கதிரவெளியைத் தொடர்ந்து கட்டுமுறிவு நம் கவனத்தை ஈர்ப்பதாகவுள்ளது. இங்கே காணப்படும் அழிபாடுகளுக்கான தடயங்களும் தட்டையான செங்கற்களும் பொலநறுவைச் சோழராட்சிக் காலத்திற்குரியதான தெளிவைத் தருகின்றன. அக் காலத்தே இப்பகுதியில் மக்கள் பரவலாக வாழ்ந்து விவசாயத்தை சிறப்பாக மேற் கொண்டிருப்பர் என்பதை இதன்மூலம் உறுதி செய்யமுடியும். காலப்போக்கில் இம் மக்களிடையே ஏற்பட்ட தொழில்மாற்றங்கள் மற்றும் சமூக உள் வாங்கல்கள் மட்டக்களப்பின் ஏனைய சமூகங்களுக்குள் நிகழ்ந்ததான ஒரு மாற்றத்தை இப் பகுதியினும் ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடியும்.வெள்வேடர் அல்லது வேட வேளாளர் எனும் வேளாண் தொழிலோடு ஒட்டிய ஒரு வளர்சியுற்ற சமூக அமைப்பு சமூக ஆய்வில் நம் கவனத்தை ஈர்க்கின்றது.

இன்று சுமார் 510 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்பில் வெருகல் தெற்கு, கதிரவெளி ,கட்டுமுறிவு ,கண்டலடி, வாகரை, பனிச்சங்கேணி ,மாங்கேணி, கிரிமிச்சை, மதுரங்கேணிக்குளம், காயங்கேணி ,புணானை கிழக்கு என விரிவுபட்ட கிராமங்களின் பல்வேறு தன்மையாலும் முதன்மையும் முக்கியத்துவமும் பெற்று இப் பிரதேசத்தை மையப்படுத்தும் வாகரை கி.பி 1800க்குப் பிற்பட்ட காலத்தை அதன் தோற்றுவாயாகக் கொண்டிருப்பினும் கள ஆய்வில் பிரதேசச் சிறப்பியல்புக்கும் உரித்தாவது தெரிகின்றது.





வடபால் வல்வெட்டித் துறையிலிருந்து வந்த கிறிஸ்தவரான அந்தோனிப் பிள்ளைக்கும் முத்துக்கல் படையாட்சி வன்னிமை வழிவந்த நாச்சியம்மைக்கும் மணவினையால் ஏற்பட்ட வாரிசுகளின் விரிவாக்கம் சுமார் 200 ஆண்டுகளில் ஒரு புதிய சமூக வெளிக்காட்டலை மட்டக்களப்பு சமூக வரலாற்று தளத்துள் பதிவு செய்திருக்கின்றது. வடமராட்சி கப்பலோட்டிக்கரையார் சமூகத்துக்கும் மட்டக்களப்பின் பண்டைய மரபினரான படையாட்சியருக்கும் தோற்றம் பெற்ற இச்சமூகம் பின்னர் வேறு சில சமூகங்களையும் உள்வாங்கிக் கொண்ட தன்மையும் வெளிப்படவே செய்கின்றது. கப்பங்கட்டி உடையார், பட்டங்கட்டி விதானை என்ற சமூக சிறப்புப் பதவிகளையும் இப் பிரதேசத்தில் இவர்கள் வகித்தவர்களாகின்றனர். இப் பகுதியில் கிறிஸ்தவத்தை பரப்ப பெரிதும் முன்னின்ற பேதுருப்பிள்ளை உடையார் பெருமதிப்புப் பெற்றவராக பெரிதும் மதிப்போடு பேசப்படுகின்றார்.

வாகரைப் பிரதேசம் தனது சமூகக் கட்டமைப்பில் நீண்டகாலமாகக் கரையார், திமிலர், வேடவேளாளர், (வெள்வேடர்) வேடர் என்ற ஒன்றுபட்ட முக்கிய தளத்தை பேணிவரும் தன்மையானது அப் பிரதேசச் சிறப்பியல்பின் வெளிப்பாடாகவே கருதப்படும்.

# பண்டைய மத வழிச் சமூகங்கள்

தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் மதத்தினை மரபு வழியாக்கி வாழுகின்ற இரண்டு சமூகங்களை இப் பிரதேசம் கொண்டுள்ளது.

01. முஸ்லிம் சமூகம் (இஸ்லாமியர்)
02. பறங்கியர் சமூகம்

**முஸ்லிம்கள் (இஸ்லாமியர்) :**

மட்டக்களப்பு பிரதேசத்தில் இஸ்லாம் மதத்தினை மரபு வழியாக கொண்டு வாழுகின்ற முக்கியத்துவம் பெற்ற சமூகமாக முஸ்லிம்கள் விளங்குகின்றனர். கி.பி 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகோனின் சமூக வரையறைக்குள் முஸ்லிம்கள் இனம் காணப்படாமையால் ஏற்கனவே அறியப்பட்ட பட்டாணியர் தொடர்பான தேடல்கள் அவசியமாகின்றது. வியாபார நோக்கில் வந்த பட்டாணியர் பற்றியும் அவர்களது போர்க்கலைகள் பற்றியும் மட்டக்களப்பில் சொல்லப்படும் தகவல்களைப் போன்றே முற்குகர் பெருமளவில் வாழ்ந்த புத்தளப் பிரதேசத்திலும் மற்றும் சிங்களப் பிரதேசங்களிலும் பரவலாக பேசப்படுகின்றன. தமிழ் நாட்டில் குறிப்பாக திருநெல்வேலிப் பகுதிகளிலும் கேரளத்தின் கரையோரப் பகுதிகளிலும் இது போன்ற தகவல்கள் பெருமளவு கிடைத்திருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பாரசீகர்களும் அராபியர்களும் வணிகம் மற்றும் அரசியல் ரீதியான தொடர்புகளைக் கிறிஸ்துவுக்கும் முற்பட்ட காலம் முதலே மிக நெருக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பது அறியப்பட்டதே. எனினும் அவர்களது அன்றைய தமிழகத்தின் சமூக நிலை தொடர்பில் வரலாற்று ரீதியாக எதனையும் அறியமுடியவில்லை.

நீண்ட காலமாக மட்டக்களப்பில் தமிழருடன் இரண்டறக் கலந்து கிடக்கும் மக்களின் வரலாறு பற்றிப் பலர் புதுப்புது அக்கறையின் பால் வெவ்வேறுபட்ட தகவல்களை வரலாறாகப் பதிவு செய்ய முனைகின்றனர். இது தொடர்பாகத் தென்னிந்திய ஈழ வரலாற்றாசியர்களின் கருத்துக்கள் ஆழமாக கவனிக்கத் தக்கவையாகின்றன. கிறிஸ்துவுடன் தொடர்ந்த காலத்தே இந்திய உப கண்ட வர்த்தகத்தில் பாரசீகர்களும் அராபியர்களும் இடைநிலை வர்த்தகர்களாகச் செயல்பட்டனர். கி.பி 3ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் கிரேக்க ரோமானிய





வர்த்தகர்களும் நுழைந்து கொண்டனர். இவர்கள் இந்தியாவுக்குள் வருவதற்கு இலகுவான தரைப்பாதை அராபிய பாரசீக நாடுகளுக்கூடாக இருந்ததால் அராபியர்களும் பாரசீகர்களும் தங்கள் நாட்டுப் பாதைகளை கட்டுப்படுத்தினர். இதனால் அரேபியக் கடல் மார்க்கப் பாதை ஒன்றினை கிரேக்கரும் ரோமானியரும் உருவாக்க வேண்டியதாயிற்று. இதன் பின் இரு சாராருக்கும் இடையில் வர்த்தக துறையில் பெரும் போட்டி நிலவலாயிற்று. கி.பி 4ம் நூற்றாண்டில் கிரேக்க ரோமானியர்களின் எதிரியாக கருதப்பட்ட சஸ்ஸானிய மரபினர் பாரசீகத்தில் மேலாதிக்கம் பெற்றதும் கிரேக்க ரோமானிய வர்த்தக சந்தைகள் பெரும் வீழ்ச்சி கண்டன. கி.பி 5ம் நூற்றாண்டுக்குப் பின்னர் இந்திய உபகண்ட வர்த்தகத் துறையை பாரசீகர்கள் தங்கள் ஆதிக்கத்தினுள் வைத்திருந்தனர். இவர்கள் நெஸ்ரோரிய கிறிஸ்தவத்தை சார்ந்தவர்கள். இவர்களையே தென்னிந்திய நாடுகள் பட்டாணியர் என்ற பெயரில் அழைக்கலாயினர். தமிழகத்தின் பண்டைய குறிப்புகள் இதனை முழுமையாக சான்றுபடுத்துபவையாகவே உள்ளன. கழகத் தமிழ் அகராதியும் உருது மொழி பேசும் பாரசீகரே பட்டாணியர் என விரித்துக் கூறுகின்றது.

கி.பி 6ம் நூற்றாண்டில் கொஸ்மஸ் என்பவரால் எழுதப்பட்ட பயணக்குறிப்புகள் இலங்கையில் பாரசீகரின் வர்த்தக குடியிருப்புகள் இருந்தமையை உறுதி செய்கின்றன. இக் குடியிருப்புகள் கி.பி. 4ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக அனுராதபுர பகுதியில் இருந்தமைக்கு அவை சான்றளிக்கின்றன. எனவே அங்கிருந்த பாரசீக வர்த்தகர்கள் மட்டக்களப்பு உட்பட இலங்கை முழுவதிலும் அக்காலத்தே வர்த்தக மையங்களை நிறுவி செயல்பட்டனர் என்பதனை மறுக்க முடியாது. கி.பி 4ம் நூற்றாண்டினைக் கொண்ட பாரசீகரின் குடியிருப்பு ஒன்று அனுராதபுரத்தில் இருந்தமை வரலாற்று துறையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கண்டெடுக்கப்பட்டதான சிலுவைச் சின்னம் தாங்கிய கற்சிற்பம் பண்டைய பாரசீக நெஸ்ரோரிய கிறிஸ்தவர்களது வாணிபம் இலங்கையில் இடம்பெற்றமையை ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுத்துவதாக அமைகின்றது. யாழ்ப்பாண அரசிருக்கையான கந்தரோடையில் பெறப்பட்ட சிலுவைச் சின்னம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயமும் இதனையே வலியுறுத்துவதாக அமைகின்றது. கி.பி 6ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரேபியரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இஸ்லாம் மதம் கி.பி. 7ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மத்திய ஆசியாவில் எழுச்சி பெற்றபோது பாரசீகர்கள்

நெஸ்ரோரிய கிறிஸ்தவத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு உருது மொழியோடு நபிகள் பெருமானது தூய குர் - ஆனையும் முழுமையாக ஏற்றுக் கொண்டனர். இதன்பின் பாரசீகரும் அராபியரும் அபிசீனியரும் (மூவினம்) இணைந்த இஸ்லாமிய வர்த்தக மையங்கள் இலங்கையில் இடம்பெறலாயின.

அக்கால சேர நாட்டு (கேரளா) வாணிபக் குறிப்புகளின்படி அவர்களது வர்த்தக கப்பல்கள் கொல்லம் துறைமுகத்துக்குச் சென்று பின்னர் இரு மார்க்கமாகப் பிரிந்து ஒன்று மன்னார் குடா வழியாகவும் மற்றது இலங்கையின் தென்வழியாக காலித்துறை மற்றும் கிழக்கு வழி சென்று பின்னர் கங்கைச் சமவெளி முகத்துவாரங்களில் தரித்திருக்கின்றன. இவர்கள் இதனூடே நாட்டின் உள்ளூர்த் துறைகளினும் தங்கள் வாத்தகத்தை மேற்கொண்டனர். மட்டக்களப்பில் பன்குடாவெளித்துறை, தீர்வைத்துறை (ஆரையம்பதி - காத்தான்குடி), அம்பிளான் துறை, மண்டூர்துறை, கிட்டங்கித்துறை, சம்மாந்துறை என்பவை இதில் முக்கியத்துவம் பெற்ற உள்ளூர்த் துறைகளாகும். வரலாற்றாசிரியர் திரு.செ. கிருஸ்ணராசாவும் இஸ்லாமியரின் உள்ளூர் வர்த்தகத் துறையாக அம்பிளான்துறை , சம்மாந்துறை என்பவை விளங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பன்னெடுங்காலமாகத் தென்னிந்திய வரலாற்றோடு ஈழத்து வரலாறு பின்னிப் பிணைந்து கிடப்பதால் அங்கே முஸ்லிம்கள் தடம் பதித்த காலமும் நமக்கு அவசியமாகின்றது. கி.பி 1311 ல் டில்லி அலாவுதீன் கில்சியின் தளபதியான மாலிக்கபூர் தலைமையில் நிகழ்ந்த தமிழ் நாட்டின் மீதான படையெடுப்பு வெற்றிபெற்றதும் தொடர்ந்து நிலைபெறவில்லை. அதன்பின் கி.பி 1318 ல் டில்லி சுல்தான் முபாரக் காலத்தில் தளபதி குஸ்ருக்கான் தலைமையில் நடந்த படையெடுப்பானது பாண்டி நாடு வரை முன்னேறினாலும் ஆட்சியைக் கைப்பற்றி தக்க வைக்க அவனால் முடியவில்லை. கி.பி 1324 ல் முகம்மது பின் துக்ளக் என அழைக்கப்பட்ட உலூக்கான் டில்லியிலிருந்து தெற்கு நோக்கி படையெடுத்தான். தேவகிரியை வெற்றி கொண்டு தெலிங்கானாவில் புகுந்து வாராங்கல்லைத் தாக்கிய பின் தமிழகத்துக்குள் நுழைந்தான். பாண்டிய நாட்டை கைப்பற்றி பராக்கிரம பாண்டியனை கைது செய்தான். உலூக்கான் முகம்மது பின் துக்ளக் என்ற பெயரில் டில்லி சுல்தானாகி தனது மதுரைப் பிரதிநிதியாக சலாவுதீன் அஸன்சாவை நியமித்தான். கி.பி 1333ல்அஸன்சா டில்லியிலிருந்து பிரிந்து மதுரையில் தனது சுய





ஆட்சியை நிறுவினான். கி.பி 1386 வரை 53 ஆண்டுகள் மதுரை முஸ்லிம்கள் வசமிருந்தது. இக் காலத்தில் சமயச் சார்பு ஆட்சி முறை பாண்டி நாட்டில் பெருமளவு இந்துக்களை இஸ்லாமை தழுவ வைத்தது. இதனைத் தொடர்ந்து வியாபாரம் மற்றும் இடப்பெயர்வு போன்ற காரணங்களால் இம் மக்கள் ஈழத்தின் வடமேற்கு பிரதேசத்துள் வரலாயினர் எனத் தமிழக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக் காலத்தே புத்தளப் பிரதேசத்தில் முற்குகரிடையே ஏற்பட்ட மத மாற்றங்களும் நம் கவனத்திற்கு வருகின்றன. புத்தளம் முற்குக வன்னியன் குஞ்சித்தம்பி சிங்கள வன்னியன் ஒருவனுடன் ஏற்பட்ட தகராறை அடுத்து முஸ்லிம்களின் உதவி பெற்று தனது புத்தளத்து வன்னிமை உரிமையினை நிலை நாட்டியபின் தனது உறவினர்களுடன் இஸ்லாத்தை தழுவி குஞ்சித்தம்பி சேகு லெவ்வை வன்னியன் என அழைக்கப்பட்டதாக புத்தளத்து தகவல்கள் கூறுகின்றன. போர்த்துக்கீசர் புத்தளம்(சிலாபம்) பிரதேசத்தைக் கைப்பற்றிய காலத்தே சிலாபம் முனீஸ்வரம் கோவிலுக்குரித்தான 64 தமிழ் கிராமங்கள் இருந்ததாகத் தங்கள் தோம்பில் பெயர் விபரங்களை எழுதியுள்ளனர். இவர்கள் கிறிஸ்தவத்தை கட்டாயப்படுத்தி பரப்ப முற்பட்டபோது அங்குள்ள தமிழர்களால் நெருக்கமாக கருதப்பட்ட இஸ்லாமிய தமிழர்களின் அரவணைப்புக் காரணமாக மீண்டும் இஸ்லாத்தை தழுவினர். இதன் காரணத்தாலும் தங்கள் வர்த்தகத்துக்கு முஸ்லிம்களால் ஏற்பட்ட பெரும் இடையூறு காரணமாகவும் வலுக்கட்டாயமாக முஸ்லிம்களை வெளியேற்றும் வேலையில் போர்த்துக்கீசர் தீவிரம் காட்டினர். இதனால் அல்லலுற்ற முஸ்லிம்கள் குருநாகலூடாக மத்திய கண்டியை நோக்கிப் பயணமாகினர்.

போர்த்துக்கீசரை எதிர்த்துக் கொண்டிருந்த கண்டி மன்னன் செனரதன் இவர்களது கோரிக்கைகளை அனுதாபத்துடன் ஏற்று சிலரை மத்திய பகுதிகளில் குடியமர்த்தினான். ஏனையவர்களை தனது நட்புக்குரிய முற்குக வன்னியர்களின் துணை கொண்டு மட்டக்களப்பில் குடியேறச் செய்தான். இதில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் கி.பி. 1626 ல் குடியேறியதாக தகவல்கள் உள்ளன.

இதனிடையே ஏறாவூரில் குடிபதிகளான பட்டாணியர் எனப்பட்டவர்களது பண்டைய மரபினரின் மட்டக்களப்பு முற்குக

மணவினை வாரிசுகள் தொடர்ந்தும் பல ஆண்டுகள் விரிவாக்கம் பெற்றே வந்திருப்பர் என்பதனை வரலாற்றில் குறிப்பிட்டே ஆக வேண்டும். கி.பி 8ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட அராபிய பாரசீக அபிசீனிய பிணைப்பினை இச்சமூகம் பெற்றதா என்பது குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும் இதற்கான வாய்ப்புக்கள் அன்று இருந்ததாகவே கொள்ளவேண்டும்.

இவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரை குடிவழி மரபினை இறுக்கமாகப் பற்றியிருந்தமை தெரிகின்றது. அம்பாரை - மட்டக்களப்பு பிரதேச முஸ்லிம்களிடையே காலிங்காகுடி, உலகிப்போடி குடி , படையன் குடி, பணிக்கன் குடி, கச்சிலான்குடி, எனப்படும் முற்குகக் குடிப்பெயர்களும் வடக்கன்குடி, மாந்தராகுடி, பொன்னாச்சிகுடி, வரிசைநாச்சிகுடி, பூமாலைக்குடி முகாந்திரம்நாச்சிகுடி போன்ற வேறு குடிகளும் தென்படுவதைக் காணுகின்றோம். இவர்களுக்கான குல விருதாக தொப்பி அடையாளப்படுத்தப்படுகின்றது. இதனிடையே இப் பிரதேச முற்குகர்கள் தங்கள் மத அனுஷ்டானங்களில் பட்டாணியர் மடை என ஒரு மடை வைப்பதுவும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தைப் போன்று காத்தான்குடியின் பண்டைய ஜீம்மாப் பள்ளியான மீரா பள்ளியில் 12 புனித நிகழ்வுகள் இடம்பெறுவதும் தொடக்க நிகழ்வில் தான்தோன்றீச்சர நிருவாகிகள் கலந்து கொள்வதும் தான்தோன்றீச்சர திருவிழா முதல் வைபத்தில் மீரா பள்ளி நிருவாகிகள் பன்னிருவரும் தான்தோன்றீச்சரம் சென்று உப்பு வழங்கி கௌரவம் பெறுவதும் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நடைமுறையாக தொடர்ந்து வந்துள்ளது. இதே போன்ற நடைமுறைகள் அக்கரைப்பற்று , சம்மாந்துறை கரவாகு ஏறாவூர் பகுதிகளிலும் பரவலாக தென்பட்டன. இத் தொடர்புகள் அறுந்த தன்மையே மட்டக்களப்பின் பிணைப்புற்ற இரு சமூகத் தளத்துள் கீறல்களை உண்டுபண்ண ஏதுவாக அமைந்தது.

மட்டக்களப்புப் பிரதேச முஸ்லிம்கள் பற்றி இவ்வத்தியாயத்தை நிறைவு செய்யுமுன் காத்தான்குடி தமிழறிஞர் எம்.எம்.எம்.மஹ்றூப் ஹரீம் அவர்களது ஆய்வுக் கட்டுரையிலிருந்து (மட்டக்களப்பு சாகித்திய விழா மலர் - 1993) சில பகுதிகளைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக அமையும்.

கொக்கட்டிச் சோலை கோயில் தேர்த் திருவிழாவில் தேர்வடத்தை பிடித்து தொடக்கிவைக்க முஸ்லிம் ஒருவருக்கு இடம்





கொடுப்பதும் கோயில்களில் மடை வைக்கும்போது பட்டாணியர் மடை என்ற ஒரு மடை வைக்கப்படுவதும் முற்குகர்கள் முஸ்லிம்களை எவ்வாறு மதித்தார்கள் என்பதற்குச் சான்றாக அமைகின்றன.

வியாபார வர்த்தக சமயக் கலாசாரத் தொடர்பால் இந்தியாவின் கரையோரப் பட்டனங்களான காயல் பட்டனம், அதிராமப் பட்டனம் , கீழ்க்கரை , ஏர்வாடி, கொச்சி முதலிய இடங்களிலிருந்து முஸ்லிம்கள் இங்கு வந்து குடியேறினர்.

கி.பி. 1626 ல் இலங்கையின் மேற்குக் கரைப்பகுதியில் வியாபாரம் செய்து வந்த முஸ்லிம்களை போர்த்துக்கேயரின் வியாபாரத்திற்கு இடையு+று செய்வதாகக் கூறி முஸ்லிம்கள் மிகவும் இம்சிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இவ்வாறான முஸ்லிம்கள் கண்டிய அரசன் செனரதனிடம் சரண்புகுந்தனர். அவன் அவர்களை அன்புடன் பெறுப்பேற்று கண்டியிலும் மட்டக்களப்பிலும் நாலாயிரம் பேர்கள் வரை குடியமர்த்தினான் என அறியக்கிடக்கின்றது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தில் 12 நாட்களுக்கு குடிமுறைத் தேர்த்திருவிழா நடைபெறுவதைப்போன்று காத்தான்குடியின் ஜீம்மாபள்ளிவாசலான மீராபள்ளியிலும் 12 நாட்களுக்கு அதே மரபை ஒட்டித் தாய் வழி தொடர்பால் வரும் 12 குடி மௌலிது ஊதிக் காணிக்கை நேர்சை வழங்கும் மரபும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

அரேபிய முற்குகத் தொடர்பால் முஸ்லிம்களிடமும் தமிழ்ப் பெண்களைப்போன்ற ஆடை ஆபரணம் அணியும் வழக்கத்துடன் திருமண சம்பிரதாயங்கள் பலவும் பின்பற்றப்பட்டு இன்று அருகி வருகின்றன.

இருதயத்தின் ஈரிதழ்போல் இந்துமுஸ்லிம் யாம்
ஒருவயிற்றுப் பாலகர் போலுள்ளோம்- அரசியலிற்
பேராசை கொண்டோர் பிரித்துநமை வேறாக்கி
ஆராயார் செய்வார் அறிவு

என்ற புலவர்மணி பாடலையும் தனது கட்டுரையில் ஜனாப் ஹரீம் இணைந்துள்ளார்.

### பறங்கியர் சமூகம்

போர்த்துக்கேயர் மட்டக்களப்பை 1622 ல் கைப்பற்றியதாக தகவல்கள் கூறுகின்றன. இதன் பின்னரே பறங்கியர் சமூகம் இங்கு தோற்றம் பெறலானது. இவர்களில் போர்த்துக்கல்லில் இருந்து வந்தவர்கள் போர்த்துக்கீசர் என்றும் ஒல்லாந்திலிருந்து வந்தவர்கள் ஒல்லாந்தர் என்றும் பிரிவுறுத்தப்பட்டனர். பறங்கியர் என்ற பதம் இந்தியாவில் (தமிழ் நாட்டில்) இருந்து வந்ததாகும். கத்தோலிக்க மதம் சாராத கிறிஸ்தவர்களான ஒல்லாந்தப் பறங்கியர் ஆரம்ப காலத்தே இங்கு பெருமளவில் வாழ்ந்தனர்.ஆங்கிலேயர் ஆட்சியில் இருவேறு சமூகக் கூறுகளை இவர்கள் கொண்டிருந்தனர். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியதும் போர்த்துக்கீசரை அடிமைப்படுத்தி நடத்தினர்.அவர்கள் போர்த்துக்கேயரை ஒல்லாந்தரின் அடிமைகள் என்றே அழைத்தனர். 1827 ல் ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் ஒல்லாந்தர் அடிமைகள் (போர்த்துக்கீசர்) 78 பேரும் ஒல்லாந்தர் 215 பேரும் வாழ்ந்தமை குறிப்பிடப்படுகின்றது. போர்த்துக்கேயர் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாயிருந்தமையால் ஆங்கிலேயரும் ஒல்லாந்தரைப் போன்று இவர்கள்மேல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களாகவே செயல்பட்டனர். காலப்போக்கில் பெருமளவு ஒல்லாந்தர் இங்கிருந்து வெளியேறியதும் போர்த்துக்கேய சமூகத்தினர் எண்ணிக்கையில் கூடியவர்களாகவும் தனித்துவம் மிக்கவர்களாகவும்மாறினர். மட்டக்களப்பில் பரவலாகவும் மற்றும் கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ,சின்ன முகத்துவாரம் பகுதிகளில் வாழும் இவர்கள் தங்களுக்குரிய மதமான ரோமன் கத்தோலிக்க மதத்தையே இன்றும் இறுக்கமாகப் பற்றியுள்ளனர். போர்த்துக்கேயரது ஆட்சி மிகக் குறுகிய காலமாக இருந்தாலும் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சில பழக்கவழக்கங்களும் அவர்களது பல சொற்பிரயோகங்களும் நமக்குள்ளும் நமது மொழிக்குள்ளும் கலந்து விட்டிருக்கின்றன. பெரும்பாலும் இம் மக்கள் தங்களுக்குள் தங்கள் மொழியையே பேசி வந்தாலும் இப்போதைய தலைமுறையினர் பலர் பக்கச் சூழலின் நிமித்தம் அதில் பெரிதளவு அக்கறை கொண்டவர்களாகத் தெரியவில்லை. இம் மக்கள் தங்களது பிரதான தொழிலாக தச்சுத் தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பலர் அரசுத் தொழில்களிலும் வாகனங்கள் திருத்துதலிலும் (மெக்கானிக் தொழில்) அவற்றை கொள்வனவு செய்வதிலும் விற்பனை செய்வதிலும் இரும்பு வேலை (கொல்லவேலை) துவக்கு திருத்துதல் போன்றவற்றிலும் ஈடுபட்டிருக்கின்றனர். ஆடம்பரம் மிக்க நாகரீக





வாழ்க்கையும் சமய நிகழ்வுகளையும் குடும்ப நிகழ்வுகளையும் சிறப்பாகக் கொண்டாடும் தன்மையும் இம்மக்களிடம் இறுக்கமாகவேயுள்ளது. இவர்கள் தங்களது திருமண உறவை பெரும்பாலும் தங்களுக்குள்ளே வைத்துக் கொண்டாலும் சிலர் தற்போது சிங்கள மக்களுடனும் தமிழ் மக்களுடனும் இணைந்து கொண்டுள்ளனர். மதக் கடமைகளை இறுக்கமாகப் பேணும் இம் மக்கள் ஞாயிறு தினத்தை இதற்கென முக்கியப்படுத்தியுள்ளனர். இத் தினத்தில் திருமணம் போன்ற நிகழ்வுகளை இவர்கள் மேற்கொள்வதில்லை. இவர்களுக்கான முக்கியத்துவம் புளியந்தீவு மாதாகோவில் நிகழ்வில் அவதானிக்கப்படுகின்றது. இறுதியான எட்டாம் பிரசங்கம் இம் மக்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இச் சமூகத் தனித்துவத்தைப் பேணுவதற்கும் முன்னெடுப்பதற்கும் என ஆர்வலர்கள், பெரியவர்கள், புத்திஜீவிகளை கொண்ட சமூக அமைப்பொன்று( Batticaloa Burgurs Union) இவர்களிடையே செயற்படுவதையும் காணுகின்றோம். இம் மக்கள் பிற மட்டக்களப்பு சமூகங்களுடன் அன்னியோன்னியமாகவே நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்

### 1827 ல் வெளியிடப்பட்ட சாதிக் கணக்கெடுப்பு

ஆங்கிலேயர் ஆட்சியில் சேர் எட்வேட் வார்ன்ஸ் என்பவர் இலங்கையின் மகாதேசாதிபதியாக கடமையாற்றிய காலத்தில் 1824 ல் மேற்கொள்ளப்பட்ட சாதிக் கணக்கெடுப்பு 1827 ல் திருத்தத்துடன் வெளியிடப்பட்டதில் மட்டக்களப்பில் பின்வருமாறு எண்ணிக்கை அமைகின்றது. இதில் நாடுகாடுப் பற்று (வேகம் - விந்தனை) பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 01. ஐரோப்பியர் | - | 05 |
| 02. ஆங்கிலேயர் (றூாவைந) | - | 290 |
| 03. ஒல்லாந்தர் | - | 215 |
| 04. ஒல்லாந்த அடிமைகள் (போர்த்துக்கீசர்) | - | 76 |
| 05. செட்டி | - | 216 |
| 06. வேளாளர் | - | 4485 |
| 07. மலையாளி | - | 56 |
| 08. தெட்டி | - | 80 |
| 09. பரதேசி | - | 141 |
| 10. தனக்காரர் | - | 508 |
| 11. முற்குகர்(நாடுகாடு பற்று உட்பட) | - | 9907 |
| 12. கரையார் | - | 1553 |

| | | |
|---|---|---|
| 13. மூர்ஸ் (முஸ்லிம்) | - | 8288 |
| 14. கம்மாளர் | - | 513 |
| 15. நாவிதர் | - | 252 |
| 16. வண்ணார் (ஈரங் கொல்லி) | - | 470 |
| 17. பரவர்(விவசாயம்) | - | 166 |
| 18. நளவர் | - | 210 |
| 19. மீன்தூக்கி | - | 355 |
| 20. கைக்கோளர் | - | 145 |
| 21. கடையர் | - | 82 |
| 22. சாயக்காரார் | - | 69 |
| 23. பறையர் | - | 152 |
| 24. சாண்டார்( பல்லக்கு தூக்குதல், விவசாயம்) | - | 479 |
| 25. பிராமணர் | - | 87 |
| 26. வேடர் | - | 169 |
| 27. பண்டாரப்பிள்ளை (உள்நாட்டு வீரர்கள்) | - | 1026 |
| 28. கோவிலார் | - | 356 |
| 29. வன்னியர் (வன்னியர்களின் வாரிசுகள்) | - | 259 |
| 30. ஆண்டிகள் | - | 32 |
| 31. சிற்பிகள் | - | 26 |
| 32. சாலிகள் | - | 12 |
| 33. தட்சர் | - | 13 |
| 34. சிங்களவர் | - | 2026 |
| **மொத்தம்** | - | **32690** |

| | | |
|---|---|---|
| உரோமன் கத்தோலிக்கர் | - | 1993 |
| புரட்டஸ்தாந்தினர் ஏனையோர் | - | 2208 |
| இஸ்லாம் | - | 8288 |
| இந்து | - | 18175 |
| பௌத்தர் | - | 2026 |
| **மொத்தம்** | - | **32690** |

இதில் சிங்கள மக்கள் தனியாக உள்ளனர். அவர்களது சனத்தொகை வெவ்வேறு சாதிகளின் அடிப்படையில் 2026 ஆகும்.





## சிங்களவர்:

இன்று இப் பிரதேசத்தே வாழுகின்ற சிங்கள மக்களை இருவேறு பிரிவாக அடையாளப்படுத்த முடியும்.

1. மட்டக்களப்பின் மரபுவழிச் சமூகம்
2. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட குடியேற்றச் சமூகம்.

### மரபுவழிச் சமூகம்

இம்மக்களது வரலாறு ஆரம்ப காலம் முதலே குகமரபினரோடு இணைவு பட்டுச் செல்வதை அவதானிக்க முடியும். வட கலிங்கமான சிங்கபுரம் சார்ந்துவந்து மட்டக்களப்புப் பூர்வீக சரித்திர ஏடுகளில் சிங்கர் என அடையாளப்படுத்தப்படுகின்ற மக்கள் பற்றிய கவனம் நம் களஆய்வில் முக்கியத்துவம் பெறுவதாயுள்ளது. ஏற்கனவே குகமரபின் ஒரு பிரிவினராகவும் சிவ வழிபாட்டினைக் கொண்டவர்களாகவும் அறியப்பட்ட இம் மக்கள் உன்னரசுகிரி தோற்றம் பெற்ற காலத்தே அச்சிற்றரசுக்கு உட்பட்டும் பின்னர் நாடுகாடுப்பற்று, நாதனைப்பற்று வன்னிமைப் பிரிவுகளிலும் அதன் பின்னர் வேகம் பற்று விந்தனைப்பற்று பிரிவுகளிலும் வாழ்ந்த மக்களின் ஒரு பிரிவினராக கொள்ளப் போதிய சான்றுகள் தென்படுகின்றன.

இலங்கையில் முக்கியப்படுத்தப்பட்ட மகேஸ (சிவ) வழிபாட்டில் தேவநம்பிய தீஸனின் ஆட்சியில் பௌத்தம் புகுந்தபோது மட்டக்களப்புப் பிரதேசம் அம்மாற்றத்திற்கு உட்பட்டதாக வரலாறில்லை. எனினும் சோழராட்சிக்கு முற்பட்டே மகாகந்தக்குளம் (திகவாவி) பேசப்படுவதால் அதனை அண்டி வாழ்ந்த மக்கள் பௌத்தத்தை தழுவியிருப்பர் என்பதை மறுப்பதற்கில்லை. மாகோன் ஆட்சிக் காலத்திற்கு முன்னதாகவும் பிற்பட்டும் பௌத்த மதம் இப் பிரதேசத்தில் வேர்விட ஆட்சி முறையில் சாதகமான சூழலே இருந்துள்ளது. மகா ஓயா உதயகிரி போன்ற பண்டைய பௌத்த வழிபாட்டுத்தலங்கள் இக் காலத்தே தோற்றம் பெற்றமை தெரிகின்றது. வழிபாட்டுத் தன்மையில் இந்துவும் பௌத்தமும் பெருமளவு ஒத்த தன்மையைக் கொண்டிருந்தமையால் மட்டக்களப்புப் பிரதேசத்தே வாழ்ந்த சிங்கள மக்கள் இந்துக் கோவில்களிலும் வழிபாடு செய்பவர்களாயினர். அத்துடன் சுதந்திரத்திற்கு முற்பட்டு வாழ்ந்தவர்கள் தமிழில் சரளமாக பேசும் ஆற்றலுடையோராய் இருந்தனர். மேலும் இப் பகுதியல் வாழ்ந்த வேடர் சமூகத்தினரும் தமிழ் மக்களுடன் இணைப்பு பெற்றதை போன்றே சிங்கள மக்களும் இணைப்புப் பெற்றனர். காலப்போக்கில்

இம் மக்கள் கதிர்காமம், கட்டகாமம், மூற்பனை (மொனராகலை) அத்தி மலை, பாணமை , பொத்துவில், அக்கரைப்பற்று, தமணை, அம்பாரை, உகனை, கோம்பானை , பக்கி எல்லை (பழையது), மகாஓயா, மன்னன்பிட்டி, முத்துக்கல், தம்பன்கடவை, திரிகோணமடு என விரிவுபடலாயினர். அக்காலத்தே தமிழர்களுடன் இவர்கள் கொண்டிருந்த உறவுமுறைகளின் தழும்பு இப்பகுதிகளில் இன்னும் மாறாமலேயுள்ளது. எதிர்மன்னசிங்க வன்னியன் , உகன வன்னியன், முத்துக்கல் வண்டையா உடையார், கோம்பானை சபாரத்ன உடையார், ஜெயசுந்தர உடையார் போன்றவர்களின் வாரிசுகள் இன்னும் இதனை அடையாளப்படுத்துபவர்களாகவே உள்ளனர். இங்கு முக்கியம் பெறுகின்ற தமிழ் சமூகங்களில் சிங்களக்குடி என ஒரு மரபினர் இன்றும் நிலை பெறவே செய்கின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சியின் முதலாவது கணக்கெடுப்பில் வேகம் விந்தனை உள்ளிட்டு வாழ்ந்த சிங்கள மக்களின் தொகை 2026 ஆகவே அறியப்படுகின்றது. இவர்களே பண்டைய மட்டக்களப்பின் புராதன சிங்கள சமூகத்தினர்ஆவர். இம்மக்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஈற்றுப் பெயர்களைக் கொண்டவர்களாகவே உள்ளனர். நவீன பெயர்களை தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டினாலும் ஈற்றுப் பெயர்களை இவர்கள் மாற்ற விரும்புவதில்லை. பண்டா, காமி, மாத்தயா, றாள, கோன், நாயக்க, வன்னி, விதான, பதி, முதலி, என ஆண்களும் மெனிக்கே, நோனா, காமினே, வதி என பெண்களும் பெரும்பாலும் ஈற்றுப் பெயர்களை கொண்டிருப்பது தெரிகின்றது. இதன்மூலம் தங்களை இவர்கள் உடபலாத்த (உயர்பிரிவு) சிங்களவர் என வெளிக்காட்டவே பெரிதும் அவாவுறுகின்றனர்.

மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்று ஆவணங்கள் இவர்களை சிங்கர் என குறிப்பிடுவதை ஆதாரப்படுத்தும் சிங்களப் பாடல்களை இவர்கள் பாடிக் காட்டுகின்றனர். கள ஆய்வில் சந்தித்த வயோதிபப் பெரியவர்கள் சிலர் சிங்கள ஒலி வடிவில் தமிழை அழகாகப் பேசுவதும் மட்டக்களப்பின் மறுகா, ஒண்ணா, கிறுகி ,வில்லங்கம் ,சும்மா, ஊடு (வீடு) ,வட்டை (வயல்) ,கடப்பு, புள்ளை ,ஆணம் ,எழுவான், படுவான் போன்ற சொற்கள் அவர்கள் பேச்சில் தென்பட்டதும் நமது கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. புத்தருடன் விஷ்னு, கந்தசாமி , காளி போன்ற தெய்வங்களை குல தெய்வமாக வீட்டின் முன் பந்தலமைத்து வழிபடும் தன்மையும் இவர்களிடம் தென்படுவதை காணமுடிந்தது. மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தோடு





தென்படுவதை காணமுடிந்தது. மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தோடு தங்களுக்கிருந்த பண்டைய தொடர்பான ஈடுபாட்டினை (உகனை, கோணாகொள்ளை, கோம்பானை, வீரக் கொடை) இவர்கள் ஆர்வத்தோடு வெளிக்காட்டினர்.

சுதந்திரத்திற்கு பிற்பட்டு பரவலாகக் குடியேறிய சிங்கள மக்களை வந்தவர்களாக கருதும் பொதுவான மனோபாவம் இவர்களிடம் இன்னமும் தென்படவே செய்கின்றது. அவர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வதைத் தவிர்த்த பல சந்தர்ப்பங்களை இவர்கள் கள ஆய்வில் வெளிப்படுத்தினர். கண்டி போன்ற உடரட்ட பகுதிகளில் மண உறவு கொள்வதிலே இவர்கள் ஆர்வம் இப்போதும் தென்படுகின்றது. இலங்கை சுதந்திரமடைகின்றபோது பிரதேச உள்ளூராட்சித் தலைவர்களாக இருந்த மகா ஓயா I.C. அப்பு காமி, ,தமணை K.M. களு பண்டா, பாணம S.T. புஞ்சி மாத்தையா, உகனை B.M. முத்துப்பண்டா போன்ற சமூகத் தலைவர்கள் சிங்களவர் - தமிழரது உறவு முறை வாரிசுகள் என்பது அங்கு பெறப்பட்ட தகவல்களில் உறுதி செய்யப்படுகின்றது. பிரதேசத் தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணவேண்டுமெனும் ஆர்வம் இவர்கள் பலரிடம் தென்படுவது இவ் அர்த்தப்பாட்டினைப் பிரதிபலிப்பதாகவுமிருந்தது.

ஆங்கிலேயரின் ஆட்சியின் தொடக்க காலமான 1824 ல் மேற்கொள்ளப்பட்டு 1827ல் வெளியிடப்பட்ட சாதிக் கணக்கெடுப்பில் இப் பிரதேசத்தே வாழ்ந்த 32690 மொத்தச் சனத்தொகையில் இம் மக்களின் எண்ணிக்கை 2026 ஆக இருந்தது. நாடு சுதந்திரம் அடைவதற்கு சற்று முற்பட்ட கணக்கெடுப்பில் 202987 ஆன பிரதேச சனத் தொகையில் இவர்கள் 11,891 ஆக இருந்தார்கள். அக்காலத்தே வேகம் -விந்தனை மற்றும் பாணமை பகுதிகளில் பரவலாக வாழ்ந்த இவர்கள் சுமார் 6 வீதம் எனக் கணிக்கப்பட்டனர்.

**சுதந்திரத்திற்குப் பிற்பட்ட குடியேற்றங்கள்.**

கல்ஓயா அணை கட்டப்பட்டு சேனநாயக்க சமுத்திரம் உருவாகிய 1950 ஐ தொடர்ந்து மட்டக்களப்பின் தென்மேற்குப் பிரதேசம் பாரிய குடியேற்றத் திட்டத்துள் கொண்டுவரப்பட்டபோது நாட்டின் தென் பகுதிகளிலுமிருந்து ஆயிரக் கணக்கான சிங்கள மக்கள் அரசின் வசதி வாய்ப்புக்களோடு குடியேற்றப்பட்டனர். இதே நிலை மட்டக்களப்பின் வடமேற்கு பகுதிகளிலும் (வெலிக்கந்தைபகுதி) ஏற்படலாயிற்று. ஏற்கனவே மாத்தளை

மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட விந்தனைப்பகுதி பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட மன்னன்பிட்டி வெலிக்கந்தை பகுதிகள் உட்பட்ட தம்பன் கடவைப் பிரதேசம் போக மீதியான மட்டக்களப்புத் தமிழகம் மட்டக்களப்பு மாவட்டம், அம்பாரை மாவட்டம் எனக் கூறுபோடப்பட்டது. கடைசியாக 1981 ல் மேற்கொள்ளப்பட்ட அதிகார பூர்வமான கணக்கெடுப்பில் 1947 ல் 6 வீதமாகவிருந்த சிங்கள் மக்கள் 34 ஆண்டுகளில் 22 வீதமாக உயர்ந்தனர். இன்று அது இன்னும் உயர்ந்தேயுள்ளது.இது சுதந்திரத்திற்குப் பிறபட்ட குடியேற்றங்களின் பிரதிபலிப்பாகவே உள்ளது



சுதந்திரத்துக்குப் பின்னர் பறிபோன மட்டக்களப்புப் பிரதேசம் அடையாளமிடப்பட்டுள்ளது





## சான்றுகள்

(ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்ட நூல்களும் பிற ஆவணங்களும்)


01. Story of civilization – Will Durant
02. Dravidan origion and the west - Dr. N.Lahovary
03. Proceedings. I.H.C Bhuvanewar – R.S. Sharma
04. National Seminar on Epigraphy- Kerala University – 1995
05. Dravidan – S.K. Chatterji
06. Vedic Age – S.K. Chatterji
07. Caste in Tamil culture – Bryan Baffen Beryer
08. A History of Kerala – K.V. Krishna Iyer
09. History of later chola – T.V.S, Pandarathar
10. History of Tamil Nadu– Dr.N.Subramanian
11. Dravidan culture and it Diffusion – T.K. Krishnamenan
12. Jurnal of Kerala studies – Trivandrum- S.R. Panikkar
13. Kanchipuram in early south Indian history - T.V.Mahalingam
14. Mukkuvar Vannimai – Dennis B mc Gilvary
15. Monograph of the Batticaloa District -. S.O. Kanagaretnam
16. History of kingship in Ceylon – Hettiarachi
17. Administration Report of Ceylon - 1776
18. Administration Report of Ceylon - 1827
19. Administration Report of Ceylon - 1901
20. Administration Report of Ceylon - 1911
21. Administration Report of Ceylon - 1927
22. Administration Report of Ceylon - 1947
23. Mahavamsa (மகாவம்சம்) – Wilhem Geiger Tr.
24. Culavamsa (சூளவம்சம்) – Wilhem Geiger Tr
25. Pujavaliya (பூஜாவலிய) – A.R. Suraweera Tr.
26. Rajavaliya(ராஜாவலிய) – B.Gunasegara Tr.

27. தொல் பழங்காலமும் தமிழ்ப் பண்பாடும் - ச. குருமூர்த்தி
28. பண்டைத் தமிழகத்தின் சமுதாய உருவாக்கம் - வே.தி.செல்லம்
29. தமிழக வரலாறும் பண்பாடும் - வே.தி.செல்லம்
30. அகநானூறு (அகம் 251 , 269 – மாமுலனார்)
31. குறுந்தொகை ( 75 : மோசிகீரனார்)
32. காரவேலர் அதிகும்பா கல்வெட்டு – கி.மு. 165 – எஸ்.புகழேந்தி
33. அசோகரின் பாறைக்கல்வெட்டு - கி.மு. 2ம் நூற்றாண்டு- எஸ்.புகழேந்தி
34. பௌத்தமும் சமணமும் - மு. ஆரோக்கியசாமி
35. தென்மொழி – கா.அப்பாத்துரை
36. கூத்தத் தாளநூல் - யோசியார் பதிப்பு
37. மட்டக்களப்பு மான்மியம் - எவ்.எக்.சி.நடராசா
38. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா
39. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி – கே.தனபாக்கியம்
40. மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் -தொகுப்பு எவ்.எக்.சி.நடராசா
41. மட்டக்களப்பு குகன் குல முற்குகர் வரலாறு – ஞா.சிவசண்முகம்
42. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி சி.மௌனகுரு
43. மாகோன் வரலாறு – க.தங்கேஸ்வரி
44. தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் - வெல்லவூர்க் கோபால்
45. யாழ்ப்பாண வைபவ கௌமுதி – ஆசுகவி வேலுப்பிள்ளை
46. அக்கரைப்பற்று வரலாறு – A.R.M. சலீம்
47- கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் -வெல்லவூர்க் கோபால்





48. ஈழத்து இடப்பெயராய்வு - பேராசிரியர் இ. பாலசுந்தரம்
49. இந்திய வரலாறு 1 - பேராசிரியர் கோ.தங்கவேல்
50. யாழ்ப்பாண வைபவ மாலை – கே.சபாநாதன்
51. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - சுவாமி ஞானப்பிரகாசர்
52. கொச்சின் பழங்குடிகளும் சாதிகளும் - அனந்த கிருஷ்ண ஐயர்
53. திருவாங்கூர் பழங்குடிகளும் சாதிகளும் - அனந்த கிருஷ்ண ஐயர்
54. ஈழத் தமிழர் வரலாறு – க.குணராசா
55. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு – பேராசிரியர். க.சிற்றம்பலம்
56. குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு – கா. அப்பாத்துரை
57. இலங்கை வரலாறு – செ.கிருஷ்ணராசா M.A
58. மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம் - கலாநிதி க. குணராசா
59. சீர்பாத குல வரலாறு – அருள் செல்வநாயகம்
60. கீழைத்தேய மரபு வழிச் சட்டங்கள் - எஸ்.பாவேந்தன்
61. மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை- மருதூர் ஏ.மஜீத்
62. அரியலூர் மழவராயர்கள் - ஆர்.ராமேஷன்
63. இலங்கைத் தமிழர் வரலாறும் இன்றைய நிலமையும் - பூ.ம. செல்லத்துரை
64. பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் - நா.நவநாயகமூர்த்தி
65. பல்துறை ஆய்வுகள் - ம.சற்குணம் M.A
66. தேரோட்டம் - தான்தோன்றீச்சரம் கும்பாபிஷேக மலர் 1998

67. ஆரையூர்கந்தன் - கும்பாபிஷேக மலர் -1998
68. மத்தியதீபம் (மட் / மெ.ம.கல்லூரி 175ம் ஆண்டுமலர்)
69. கலைச் செல்வி (1993 ) மட்டக்களப்பு
70. தமிழக ஈழ சமுகங்களின் விரிவாக்கம் - வெல்லவூர்க் கோபால்(பூபாளம் -2001 கட்டுரை – தமிழ்நாடு)
71. ஆய்வாளர் ரி.சிவராம் கட்டுரைகள்
72. மட்/ சாகித்திய விழாமலர் 1993 -கட்டுரை எம்.எம். மஹ்ரூப் ஹரீம்
73. மட்/ சாகித்திய விழாமலா 1993 -கட்டுரை எம்..உதுமாலெவ்வை
74. கல்வெட்டுக் காலாண்டிதழ் - கட்டுரை -திருவாலங்காட்டு செப்பேடுகள் நடன காசி நாதன்
75. அபிதான சிந்தாமணி (தமிழிலக்கிய களஞ்சியம்) – ஆ.சிங்காரவேலு முதலி
76. தேர்ஸ்டனும் தென்னிந்திய சமுகங்களும் - எஸ்.புகழேந்தி
77. மட்/ சாகித்திய விழாமலர் 1993 - கட்டுரை வெல்லவூர்க் கோபால்
78. இலங்கையின் விஸ்வகர்மா – பூ.ம.செல்லத்துரை
79. கிழக்கில் ஒரு கிராமம் (வாகரை வரலாறு) – வாகரை வாணன்
80. புத்தள வரலாறும் மரபுகளும் - ஏ.என்.எம்.ஷாஜஹான்
81. இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமுக வழமைகளும் -பேராசிரியர் சி.பத்மநாதன்
82. யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை
83.The Cult of Goddess Pattini - Prof. Gananath Obeyasegara
84.East Cost SriLankan Tamil Temple - Prof. Mark P.Whitakar
85.Palm Fringed Coast- Fr.Jhon W.Lange





## ஆலோசனைகளும் தகவல்களும் (இலங்கை)

பேராசிரியர் சி.மௌனகுரு – கிழக்குப் பல்கலைக் கழகம்
திரு.க.ஆறுமுகம் J.P. (மக்கள் வங்கி) கன்னன்குடா
பேராசிரியர் மா.செல்வராஜா, கிழக்குப் பல்கலைக் கழகம்
திரு.செ.எதிர்மன்னசிங்கம் , ஓய்வு பெற்ற கலாசாரப் பணிப்பாளர் மட்டக்களப்பு
திரு.க.மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்) மகிழடித்தீவு ,
திரு.ஞா.தில்லைநாதன் விரிவுரையாளர், களுதாவளை
திரு. வ.குலசேகரம் (தலைமைக் கூட்டுறவு பரிசோதகர்) நற்பிட்டிமுனை
திரு.கஇ.நாராயணபிள்ளை , சட்டத்தரணி, கோவில்போரதீவு
திரு.சி.சாமித்தம்பி , கமநல சேவை துணை ஆணையாளர் , சித்தாண்டி
கவிஞர் திமிலை மகாலிங்கம் , மட்டக்களப்பு
சைவப்புலவர்.எஸ்.தில்லைநாதன் , உதவிக் கல்விப் பணிப்பாளர், மண்டூர்
திரு.காசுபதி நடராசா , ஓய்வு பெற்ற பதில் உ.உ.ஆணையாளர், கல்லடி
மண்டூர் இ.பாக்கியராசா , ஊடகவியலாளர் , மட்டக்களப்பு
திரு.பூ.ம.செல்லத்துரை J.P. ஆய்வாளர் , பெரியபோரதீவு
திரு.த.விவேகானந்தம் அதிபர் , வெல்லாவெளி
திரு.ஞா.சிவசண்முகம் ,J.P. ஆய்வாளர் , மட்டக்களப்பு
ஆசிரிய சிரோன்மணி த.செல்வநாயகம் , மட்டக்களப்பு
கலாசூரி வெ.விநாயகமூர்த்தி (பங்குடாவெளி) மட்டக்களப்பு
திரு.க.பரராசசிங்கம் , ஓய்வு பெற்ற அதிபர், குருமண்வெளி
திரு.க.அமரசிங்கம் (ஆரையூர் அமரன்) ஆரையம்பதி
திரு.சி.சிவஞானமூர்த்தி J.P. ஊர்ப்போடியார் , அக்கரைப்பற்று
திரு.க.ஐயாத்துரை , முன்னாள் ஊர்ப்போடியார் , கரவாகு
பண்டிதர்.க.நல்லரெத்தினம் , மண்டூர்

திரு.கே.இராமநாதன், வீரமுனை
சிவஸ்ரீ.இ.சிவஞான செல்வக்குருக்கள் ,அக்கரைப்பற்று
திரு.இ.சுந்தரன் (70) ஓய்வு பெற்ற அதிபர் தம்பிலுவில்
திரு.மு.கணபதிப்பிள்ளை , (மூனாக்கானா ) (75) ஆரையம்பதி
திரு.கே.செல்லத்தம்பி (ஆரையூர் இளவல்) ஆரையம்பதி
திரு.மா.சதாசிவம் J.P. புதுக்குடியிருப்பு
திரு.க. தம்பிராசா (75) பனங்காடு
திரு.ச.பேரின்பநாயகம், J.P. மரணவிசாரணை அதிகாரி , எருவில்
திரு.த.வ.வி. கதிராமப்போடி , முன்னாள் வண்ணக்கர், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
திரு.அ. இராசதுரை , தலைவர், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
திரு.வ.குணசுந்தரம் , வண்ணக்கர் , மண்டூர் முருகன் ஆலயம்
திரு.ப. மயில்வாகனம், வண்ணக்கர் , சித்தாண்டி முருகன் ஆலயம்
திரு.வ.தெய்வராசா, வண்ணக்கர் , பழுகாமம்
திரு.இ.ஆத்மலிங்கம் ஓய்வு பெற்ற சிரேஸ்ட விவசாய போதனாசிரியர், களுவாஞ்சிகுடி
திரு.வி.சொக்கலிங்கம் , அதிபர், மன்ன்பிட்டி
திரு.கோ.அருளானந்தம் , அதிபர், மன்னன்பிட்டி
திரு.வாகரைவாணன், வாகரை
திரு.ச.இராயப்பு (ஓய்வு பெற்ற கிராம அதிகாரி ) வாகரை
திரு.அ.கி. பிரான்சிஸ் ஆசிரியர் , வாகரை
திரு.காசுபதி தெய்வநாயகம் நற்பிட்டி முனை
திரு.பொ.பொன்னுத்துரை முன்னாள் , கி.ச. தலைவர், வெல்லாவெளி
திருமதி.இ.தங்கம்மா , (99) மண்டூர்
திரு.சா.தங்கராசா மண்டூர்
திருமதி. R.M. பொடிமெனிக்கே (85) பொத்துவில்
திரு.ச.அழகையா (88) திருக்கோவில்
திரு.மா.வேலாப்போடி (94) கன்னன்குடா





திரு.பா.நாகமணிப்போடி (88) சாளம்பைக்கேணி
திரு.இ.குமாரசாமி (82) கிரான்குளம்
திரு.மா. அமரசிங்கம் J.P. , மகிழடித்தீவு
திரு.சி.கிருஷ்ணபிளளை J.P காயான்மடு
திரு.அ.சுந்தரம் , ஊர்ப்போடியார் , கோவில்போரதீவு
வித்துவான் என்.நாகலிங்கம் தாமரைக்கேணி , மட்டக்களப்பு
திரு.க.சத்திதாஸ் , தலைவர், மகாநரசிங்கவைரவர் ஆலயம், மட்டக்களப்பு.
திரு.க.கலாமோகன் , சீலாமுனை , மட்டக்களப்பு
திரு.சி.சோமசுந்தரம் (86) வாழைச்சேனை
திரு.சி.சந்திரப்பிள்ளை எருவில்
திரு.மா.வயிரமுத்து (88) கங்காணியார் ) கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம்
திரு.G.ஸ்பொக் (80) ஓய்வு பெற்ற அரச அலுவலர், மட்டக்களப்பு
திரு.B. அவுட்ஸ்கோன் (85) கல்முனை
திரு.B.M. களுபண்டா (86) உகனை
திரு.D.M. முத்து பண்டா றஜகல
திரு.R.M. அப்புசாமி (80) மகாஓயா
திரு.க.சோமசுந்தரக்குருக்கள் (80) எருவில்
திரு.தம்பிமுத்து மாணிக்கம் எருவில்
திரு.அ.தம்பிப்பிள்ளை (85) வாழைச்சேனை
திரு.க.செல்லத்துரை (82) பாணமை
திரு.R.தர்மதாஸ (86) பாணமை
திரு.க.தம்பிராசா (85) காரைதீவு
திரு.ம.கந்தப்போடி (82) ஓய்வு பெற்ற அதிபர், பங்குடாவெளி

## இந்தியா

| | | |
|---|---|---|
| பேராசிரியர் எஸ்.ராதகிருஷ்னப் பணிக்கர் | - | கேரளா |
| முனைவர் யோசப் அன்ரனி | - | கேரளா |
| முனைவர் ரி.சபாநாதன் | - | கேரளா |
| குருவாயூர் சோதிடமணி எம்.கேசவப்பணிக்கர் | - | கேரளா |
| முனைவர் பிரஹாஷ் மேனன் | - | கேரளா |
| பேராசிரியர் ஆர்.சுப்பிரமணியன் | - | தமிழ்நாடு |
| முனைவர் வி.குழந்தைவேலு | - | தமிழ்நாடு |
| முனைவர் -வழக்கறிஞர் கே.எஸ்.முருகேசன் | - | தமிழ்நாடு |
| முனைவர் - எஸ்.பாவேந்தன் | - | தமிழ்நாடு |
| பேராசிரியர் எஸ்.இ.பாலகிருஷ்னன் | - | தமிழ்நாடு |
| பேராசிரியர் -வே.இராமகிருஷ்னன் | - | தமிழ்நாடு |
| முனைவர் காட்பாடி எம்.யோசேப் | - | தமிழ்நாடு |
| பேராசிரியர் நடன காசிநாதன் (முன்னாள் தொல்லியல்துறைப் பணிப்பாளர்) | - | தமிழ்நாடு |
| முனைவர் எஸ்.சுந்தரேசன் | - | தமிழ்நாடு |
| பேராசிரியர் காயத்திரி வைத்தியநாதன் | - | தமிழ்நாடு |
| பேராசிரியர் தஞ்சை வளவன் | - | தமிழ்நாடு |
| முனைவர் சத்திய ஹரத் பண்டாரி | - | ஒரிசா |
| திரு. மோகன்சிங் முண்டா | - | ஒரிசா |
| திரு. பத்ரி பிரசாத் | - | ஒரிசா |
| சிறி கோவிந்த ஜெகந்நாத் | - | ஒரிசா |





## நூலாசிரியரின் படைப்புக்கள்:

01. கன்னிமலர் (கவிதைகள்) - 1964 (சாகித்திய மண்டலச் சிறப்பு விருது - இளைஞர் பிரிவு)
02. முல்லை (குறுங்காவியம்) - 1968
03. ஒரு கண்ணீர்க் காவியம் - 1972
04. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் - 1992 (கலாசார அமைச்சின் அறநெறி விருது)
05. முற்றுப்பெறாத காவியம் - 1995 (வடகிழக்கு சாகித்திய விருது - கவிதை இலக்கியம்)
06. இதய சங்கமம் (கவிதைகள்) - 1998 (இந்தியா)
07. நெஞ்சக் கனல் (காவியம்) - 2002 (இந்தியா)
08. தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் (ஆய்வு) - 2003
09. சுனாமி ஒரு மீள்பார்வை (அறிவியல்) - 2005
10. மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் (ஆய்வு) - 2005 (வட கிழக்கு சாகித்திய விருது)
11. மலையாள நாடும் மட்டக்களப்பும் (ஆய்வு)- 2007
12. வெல்லவூர்க் கோபால் கவிதைகள் - 2009
13. முழுமை பற்றிய சிந்தனைகள் (தத்துவம்) - 2009
14. கண்ணீரால் எழுதுகின்றேன் (இரங்கல்) - 2010
15. கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள் - 2011

# எழுத்துலகில் நூலாசிரியருக்கு வழங்கப்பட்ட கௌரவம்:

01. கலாபூஷணம் (இலக்கியம்) - கலாசார அலுவல்கள் அமைச்சு 2010
02. முதல்வர் விருது (ஆய்வு) - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு 2010
03. கவிக்கோ விருது - கொங்குநாடு இலக்கிய அமைப்புகள், தமிழ்நாடு 2000
04. சிறந்த கலைஞர் கௌரவம் - திருச்சி நுண்கலைக் கல்லூரி, தமிழகம்- 2002
05. அறநெறி விருது - இந்து கலாசார அமைச்சு 1995
06. சாஹித்திய மண்டல விருது (மாணவர் பிரிவு) 1965
07. சிறந்த ஆய்வாளர் விருது - மட்டக்களப்பு கலாசார பேரவை 2006
08. மாநகர பௌர்ணமிக் கலைநிகழ்ச்சி அமைப்பாளர் சேவையின் பாராட்டு விழா - மட்டக்களப்பு இலக்கிய அமைப்புகள் 1973
09. கவிதை இலக்கியத்திற்கான சாகித்திய விருது - வடக்குக் கிழக்கு மாகாணகல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு 1996
10. ஆய்வு இலக்கியத்திற்கான சாகித்திய விருது - வடக்குக் கிழக்கு மாகாணகல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு 2006
11. தேனகக் கலைச்சுடர் விருது - மண்முனை வடக்கு கலாசாரப்பேரவை 2010
12. இலங்கையின் சிறந்த தமிழ் இலக்கிய கர்த்தா - கவிதை, ஆய்வு (விக்கிப்பீடியா இணையத்தளம் - wikipedia,the free encyclopedia - List of srilankan tamils)

மட்டக்களப்புப் பிரதேச ஆட்சிமுறை அதுசார்ந்த நிர்வாகக் கட்டமைப்புக்கள் போன்றவற்றை பதிவு செய்யும் தன்மையிலும் அப்பிரதேசத்தே பரந்து வாழுகின்ற மட்டக்களப்பின் பண்டைய சமூகங்களை வரலாறாக்கிப் பார்ப்பதிலும் கோபால் கொண்டுள்ள மிகுந்த அக்கறையானது இன்றும் கூட தமிழகத்தின் சாதியக் குட்டைக்குள் ஊறிக் கிடக்கின்ற நமது ஆய்வாளர் பலருக்கு பெரிய சாட்டை அடியாகும். தமிழ் நாட்டின் பிற்படுத்தப்பட்ட சமூகங்களாகவும் தலித்துக் களாகவும் இங்கு பட்டியலிடப்பட்டுள்ள தமிழ் மண்ணின் உரிமைக் காரர்களான புராதன தமிழர்களை ஈழத்தே குறிப்பாக தனது மட்டக்களப்பு பிரதேசத்தில் கோபால் இனங்காண்பது காய்தல் உவத்தலற்ற அவரது உள்மன வெளிப்பாடாகவே கருதப்படும். சமூகங்கள் பற்றிய தனது தேடல்களை பதிவாக்கிக் கொள்வதில் அவர் கொண்டுள்ள நிலைப்பாடு ஆய்வாளனுக்கும் அப்பால் ஒரு சிந்தனையாளனாக அவரை அடையாளப்படுத்துகின்றது.

பேராசிரியர் இரா. சந்திரசேகரன்
M.Sc, M.A, M.Lit.Ph.D
புது டில்லி – இந்தியா